மங்கையர் மலர்



MANGAYAR MALAR செப்டம்பர் 1996 விலை ரூ. 9


சம்பந்தம் கூடி வரும்
வேளையிலே
சாரதா'ஸ் அழைக்குதம்மா
சேலையிலே!
தொட்டுப்பார்த்த உடை
கட்டிப்பார்க்கையிலே
என்ன இன்பசுகமோ!
சாரதா'ஸ்
827, அண்ணா சாலை,
தாம்பில்டிங், சென்னை - 2
போன் : 852 11 77
32, என்.எஸ்.பி.ரோடு,
திருச்சி - 2
போன் : 27077



என் முகஅழகு கூட கூட, அவருக்கு என்மேல் ஆர்வமும் கூடுகிறது.
NIVEA
VISAGE
Specific Care
NIVEA VISAGE
FAIRNESS CREAM
கொஞ்சம் நிவியா விசாஜ் ஃபேர்னெஸ் க்ரீம் தடவுங்கள். இதன் இயற்கையான லிகோரைஸ் பாமுலேஷன் உங்கள் சருமத்தை கருமைப்படுத்தும் மெலானினை கட்டுப்படுத்தி நாலு அல்லது ஆறு வாரங்களில் உங்கள் அழகை கூட்டுகிறது. இரட்டை யூ.வி சன்ஸ்கிரீன், உங்களை யூ.வி. கதிர்களிடமிருந்து பாதுகாத்து, அதன் ஈரத்தன்மை சருமத்தை வளமையாக்கி மென்மை, மிருது ஆக்குகிறது. இதில் பிசுபிசுப்பு, வெடிப்பு இல்லை. மென்மையான பராமரிப்பே உள்ளது. உலகின் உன்னதமான சருமப் பராமரிப்பு என்றாலே, நிவியா விசாஜ் தான். இனி, அவரின் அன்பு மழையில் நனையுங்கள்.
நாட்கள் செல்லச்செல்ல அழகு மென்மையாக
ஜே. எல். மோரிசன் (இ) லிட்டின் ஒரு தரமான தயாரிப்பு
SPEER 488 96 TM

வந்துவிட்டது தமிழ்நாட்டிற்கு !

வாசு புளியோதரை



அம்மா பண்றா மாதிரியே!

பழைய கால முறைப்படி கலந்த
18 சுத்தமான
இயற்கையான
பொருட்கள்



வெறும் சாதத்துடன் கலந்தால் போதும்
காரசாரமான, வாய் மணக்கும்,
கலாசார ருசியான உணவு
இதுடன் உப்பும் தாளிதமும் உள்ளது.

சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு
நீடித்து நிற்குமளவான பைகளில்
நிரப்பப்பட்டுள்ளது.

Vasu

தயாரிப்பாளர் : வாசு ஹெல்த் ப்ராடக்ட்ஸ் ப்ரைவேட் லிமிடெட், சென்னை - 600 097

RESOURCE / VHPL / 3 / 8 / 99

மங்கையர் மலர்

இளம் மாணவர்க்கும், அவர்களின் பெற்றோருக்கும் வழிகாட்டும் தகவல்கள்...

என்ன கோர்ஸ், எங்கு படிக்கலாம்? — 69

நம் உயர்வை நாம் உணர்வோம் — 94
(நேரடிக் கலந்துரையாடல்)



உள்ளத்தைத்தொடும்...

கட்டிடம் கட்டிய கல்லூரி மாணவியர் — 36

சிறுவாச்சூர் மதுர காளி — 38

வார்த்தைகளில் தேன் தடவி... — 56

எப்போது இந்தப் பெண்கள் மாறுவார்கள்? — 75


அழகாக வாழ்வோம் — 107

ருசித்துப் பார்ப்போம் நட்பை — 121

சாதனையாளரின் பேட்டிகள்...

ஸ்ரீசக்ரா ஒரு நாள் உலகையே ஆளப்போகிறது — 51

கடின உழைப்பு என்பது... — 83



சமையலுக்கு....

இம்மாத இல்லத்தரசி — 61

குணுக்கு சாப்பிடலாமா குணுக்கு! — 133


வாசகர்களின் விருப்பமான தொடர்கள்...

21-ஆம் நூற்றாண்டின் குழந்தைகளுக்காக — 27

வாஸ்து எனும் புதையல் — 45

மலர் : 16 செப்டெம்பர் ' 96 இதழ் : 8

புக்ஷெல்ஃப் — 113
வாழ்வை வளமாக்குமா அதிர்ஷ்டக்கல் — 135
இந்த மாதம் எப்படி? (ராசி பலன்) — 141
மணப்பெண் சிறப்பு அலங்காரம் — 147
வாழ்வின் வண்ணங்கள் — 151
ரம்யா (தொடர்கதை) — 165



உடல் நலத்திற்கு....

கருப்பை நீக்கம் செய்த பின்பு... — 79
முகப்பருக்கள் — 117
முடிஉதிரல், வழுக்கைக்கு யுனானி மருத்துவம் — 127
வீட்டிலேயே கைவைத்தியம் செய்யலாமே — 159

சிறுகதைகள்...


தேடித் தேடி இளைத்தேனே — 20
தெய்வ தரிசனம் — 88

மற்றும்....

சில பிரச்னைகள்; சில வார்த்தைகள் — 7



நவராத்திரி சிறப்பிதழ் அறிவிப்பு — 10
தங்கமான அனுபவங்கள்! — போட்டி — 11
வருணனுக்கு வரவேற்பு — 119



எங்கள் ஊரில் பட்டதாரியான நான்கு இளைஞர்கள் சேர்ந்து 'கிரீன் வேலி குரூப்ஸ்' என்ற குழுவை ஆரம்பித்தனர். வீடு வீடாகச் சென்று புதிய காய்கறிகள் விநியோகம் செய்வதுதான் அது. வேலைக்குப் போகும் சகோதரிகள் மற்றும் உடல் நலம் சரியில்லாமல் மார்க்கெட்டுக்குப் போக முடியாதவர்களுக்கு இந்த முறை உபயோகமாக இருக்கிறது. முதலில் தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டு தாங்கள் வீடு எடுத்துக் கொண்டுள்ள விஷயத்தைச் சொல்லி தங்கள் வியாபாரத்தை எடுத்துச் சொல்லி தாங்கள் கொடுக்கப் போகும் காய்கறிகள் பட்டியலையும் காட்டி அவர்கள் மூலம் வாங்கிக் கொள்ள சம்மதம் கேட்டார்கள். சம்மதம் சொன்னவுடன் எங்களுக்கு ஒரு நம்பர், ஒரு பிளாஸ்டிக் கூடை மற்றும் எழுத லெட்டர் பேட் மாதிரி சிறியது ஒன்றும் தந்தார்கள். மாலை சுமார் 6 மணி அளவில் வந்து சீட்டில் எழுதிக் கொடுத்த லிஸ்ட் வாங்கிப் போவார்கள். கூடை, லிஸ்ட்டுடன். மறுநாள் காலை சுமார் 8 மணி அளவில் காய்கறிகள் வரும். அன்றன்றைக்குத் தேவையானதை வாங்கிக் கொள்ளலாம். காய்கறிகள் மட்டுமல்லாது பிரெட், முட்டை, பழங்கள், வெற்றிலை இலைகளையும் வாங்கித் தருகின்றனர். சென்னை போன்ற பெரிய நகரங்களில் வேலையில்லா பட்டதாரிகள் இதைச் செய்யலாம்.

— ஆர். சியாமளா, வேலூர் - 9

வேலை வாய்ப்புகளில் புதிய கதவுகள் திறக்கிறது
உங்கள் வேலை வேட்டையில் வெற்றி கிடைக்கிறது

.... உங்கள் ரெபிடெக்ஸ் மூலம்

வேகமாய் மாறி வரும் இந்த உலகத்தில்

- ஆங்கில அறிவும் கம்ப்யூட்டர் அறிவும் இல்லாமல் நல்ல வேலையை எதிர்பார்க்க முடியுமா ?

இப்பொழுது அந்த கவலையை விடுங்கள் !


இவற்றில் உங்களை கைதேர்ந்தவராக்க, கோடிக்கணக்கான வாசகர்கள் நாடும் இரண்டு ரெபிடெக்ஸ் கோர்ஸ்கள் உங்களை நிபுணனாக மாற்றிவிடும்.

ரெபிடெக்ஸ் கம்ப்யூட்டர் கோர்ஸ்

(கம்ப்யூட்டர் ஆப்பரேஷன் முழுவதையும் சுலபமாக கற்கும் வகையில் ஒரு கோர்ஸ்)
பெரிய சைஸ், 512 பக். விலை: ரூ. 120/- ரூ. 148/- (டிஸ்க்குடன்) தபால்: ரூ. 12/-
(ஆங்கிலத்தில் மட்டும்)

ரெபிடெக்ஸ் இங்கிலீஷ் ஸ்பீக்கிங் கோர்ஸ்

(நடைமுறையில் ஆங்கிலம் பேசுவதற்கும் பயனுள்ள எளிய கோர்ஸ்)
பெரிய சைஸ், 400 பக். விலை: ரூ. 72/- தபால்: ரூ. 10/-



ரெபிடெக்ஸ் - உங்கள் குடும்பம் முழுவதற்கும் பொருத்தமான வீட்டு வாத்தியாரர் !


MONACO
மொனாகோ ஃப்ளேவர் நம். #1
MONACO
MONACO
PARLE
MONACO
FRESH SALTED BISCUITS
New 75 g pack!
இலவசம்
இயல்பாகவே சுவைமிக்கது. டாப்பிங்குடன் இணையில்லாதது
கச்சிதமான உப்பு பிஸ்கட்

சில ப்ரச்னைகள்; சில வார்த்தைகள்:

மகிழ்ச்சியுடன் இருப்போமே!

சமீபத்தில் ஒரு திரைப்படம் (பெயர் வேண்டாமே) டி.வியில் காண்பித்தார்கள். அந்தப் பெண் பாரதப் பண்பாட்டின் சகல அம்சங்களையும் (?) கொண்டவளாக இருப்பதாகவும், கொடுமைகளின் உச்சம் வரை சகித்து விட்டுப் பிறகு வீறு கொண்டு எழுந்து வீட்டை விட்டு வெளியேறுவதாகவும் முடிந்தது.

அந்தப் பெண் 'குடும்பப் பெண்' எனக் காட்ட எப்போதும் இழுத்துத் தோளோடு போர்த்திய தலைப்போடுதான் காட்சியளித்தார். சீரியஸான 'உம்'மென்ற முகம். யாரோடும் கலகலப்பாகப் பேசாத சுபாவம். அவள் கணவன் மிகுந்த பெருமையோடு தன் நண்பர்களிடம் சொல்லிக் கொள்கிறான்.

"என் பெண்டாட்டி நெருப்பு மாதிரி. அவளை யாரும் பார்த்ததே கிடையாது" என்று.

இப்படி சில கோடுகள், சில வரைமுறைகள் வைத்து இவர்கள் என்றால் 'இப்படித்தான்' என அழுத்தந் திருத்தமாகச் சட்டம் போட்டுப் படமாக நம் சமுதாயத்தில் மாட்டி வைத்திருப்பதைத்தான் இது காட்டுகிறது.

குடும்பப் பெண் என்றால் அவள் கலகலப்பாகச் சிரித்து, நாலு பேரோடு பழகக் கூடாது. எப்போதும் 'சீரியஸாக' முகத்தை வைத்திருக்க வேண்டும். நன்கு சிரித்துப் பேசும் பெண் என்றால் அவள் ஒரு மாதிரி. ரிலாக்ஸ்டாக, ஜாலியாகவெல்லாம் இருந்தால் எளிதில் வசப்படக் கூடியவள். இப்படியெல்லாம் சைகாலஜி சொல்கிறார்கள்.

'பொம்பள சிரிச்சாப் போச்சு; புகையிலை விரிச்சா போச்சு'

இப்படிப்பட்ட பழமொழிகள் எல்லாம் இருளாலதான் சொல்லி வைத்திருக்கிறார்கள். இதைச் சொல்லும்போதே பக்தி, ஆன்மீகம் பற்றி மக்கள் மனதில் இருக்கும் கருத்துக்கள் கூட நினைவுக்கு வருகிறது. நெற்றியில் குங்குமப் பொட்டு, அதற்குக் கீழே சிறிய அர்ச்சனைக் குங்குமம், எப்போதும் முணுமுணுக்கும் ஸ்லோகம், பட்டுப்புடவை இவைதான் பக்தியின் சின்னம்.

சாதாரணமாகச் சின்ன 'ஸ்டிக்கர்' பொட்டுடன், நன்கு உடலை மெயின்டெய்ன் செய்து சிறந்த டைப்பிஸ்ட்டாகவோ எக்ஸிகியூட்டிவாகவோ மொபட்டில் அல்லது காரில் பறக்கும் நாகரீகப் பெண் சிறந்த ஆன்மீகவாதியாக



மஞ்சுளா ரமேஷ்

இருக்க முடியாதா என்ன?

'இப்படித்தான் இருக்க வேண்டும் பொம்பள' என பாட்டுப் பாடும் குரல்கள்தான் பெரும்பான்மையான மக்களின் மனோபாவங்களை வழி நடத்திச் செல்கிறது. ஓர் இல்லத்தரசி இழுத்துப் போர்த்திய தலைப்புடன் சுடுஞ்சொல்லால் சாடும் மாமியாரையும், நாத்தனாரையும் மௌனமாகக் கடைசி வரை சகித்துக் கொள்ள வேண்டும் என்று எந்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. அதற்குப் பிறகு பொங்கியெழுந்தாள். கண்ணகியாக எனக் கைதட்டுவதால் என்ன பிரயோஜனம்?

சரி, ஏதோ பொழுதுபோக்கு அம்சங்களுக்காகச் சொல்கிறார்கள். நம்ம வாழ்க்கையைப் பார்ப்போம். வாழ்க்கைக்கென்று நாம் வைத்துக் கொள்ளும் சில குறியீடுகளை மாற்ற முயற்சி செய்வோம்.

மருத்துவர்களே சொல்கிறார்கள், மனம் விட்டுப் பேச வேண்டும், மனம் விட்டுச் சிரிக்க வேண்டும்; அதுதான் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது என்று. குறிப்பாக இன்றைய பரபரப்பான வேக வாழ்க்கைக்கு 'பாலன்ஸ்' செய்ய நமக்கு எல்லாமே தேவைதான். அதை எந்த அளவு மிகச் சரியாக 'மிக்ஸ்' செய்கிறோம் என்பதில்தான் ருசி கூடுவதோ குறைவதோ ஆகிறது. மிகச் சரியாக புளிப்பு, உப்பு, காரம் போட்டு மனதில் அக்கறை, அன்போடு செய்யப்படும் சமையல் ருசியாக குடும்பத்தவரின் ஆரோக்கியத்திற்கு நல்லதாக இருப்பதில்லையா? அதே போலத்தான் வாழ்க்கையும்.

பக்தியும், ஞானமும், கடமையைச் செய்யும் வேகமும், பொறுமையும், கோபமும் மகிழ்ச்சியும் குதூகலமும் எல்லாமும் சேர்ந்ததுதான் வாழ்க்கை. ஒவ்வொரு பெண்ணுக்கும் இவை எல்லாமே சமச்சீராக இருக்க வேண்டும்.

கலகலப்பாகப் பழகினால் அவள் 'காமுகி' அல்ல. நாகரீகமான உடை உடுத்திக்கொண்டால் அவள் 'சரி'யானவள் அல்ல என நினைப்பது சரியல்ல. மகிழ்ச்சியாக இருந்தால் தவறில்லை. சிரித்துப் பேசினால் பாபமில்லை.

ஆனால் அது எந்த அளவிற்கு என்பதில் பேதங்கள் வரும்போதுதான் தொல்லை வருகிறது. நம்முடன் பழகும் சக ஊழியரோ, அக்கம்பக்கம் உள்ளவர்களோ எப்படிப்பட்டவர்கள் என்பதைப் பொறுத்து இருக்கிறது. அப்படித் தவறானவர்களை கண்களாலும், சிறிய வார்த்தைகளாலுமே ஒரு எல்லைக்கு நிறுத்தி வைக்க முடியுமே?

பொதுவான நார்மலான வாழ்க்கை என வரும்போது சோர்வு, எரிச்சல் என்றெல்லாம் வரும்போது அதிலே மூழ்கிப் போய்விடாமல் இருக்க நமக்குப் பெரிதும் உதவுவது குதூகலமும், மகிழ்ச்சியும்தான். எனவே அந்த மாதிரி சமயங்களில் நீங்களே மகிழ்ச்சியை நாடிச் செல்லுங்கள். டிரம்ஸ் அதிர குதூகலமாகப் பாடப்படும் பாடல்களைக் கேளுங்கள். கொஞ்ச நேரம் கழித்து உங்களுக்கே தோணும், 'ஐயே, இந்தச் சின்ன விஷயத்துக்கா இவ்வளவு வருத்தப்பட்டோம்' என்று

நம் கையில் உள்ளது ஒரே வாழ்க்கை.

அதை முடிந்தவரை மகிழ்ச்சியாக, குதூகலமாக வாழ்வோமே!

- பக்.11ல்


உங்கள்
குழந்தைக்குப்
அன்புடன்
அளிப்பீர்
ஒரு பர்சனல்
பாக்கெட்
டிக்ஷனரி
COLLINS
MINIGEM
Complan
WORD
POWER
ENGLISH
DICTIONARY
NEW EDITION
FREE WITH EVERY 500 GM. COMPLAN
இலவசம்
காம்ப்ளான் வேர்டு பவர்
டிக்ஷனரி, ஒவ்வொரு
500 கிராம் காம்ப்ளான்
பேக்குடனும்
காம்ப்ளான் வழங்கும் அறிவுப்பரிசு
Complan

மங்கையர் மலர்

அடுத்த இதழ்

அருள் மணக்க ... பக்தி மணம் கமழ,

நாம் உயர்வு படுத்திக் கொள்ளும்

— ஆமாம், உங்கள் அன்புத்தோழி 'மங்கையர் மலர்' புத்துணர்வோடு பண்டிகைக் காலத்திற்கேற்ற எழில் கோலத்தோடு வருகிறாள்!

வழி காட்டிகள் :

இளம் மாணவ உலகிற்குச் சிறந்த வழிகாட்டும் வகையில் அமைந்துள்ள பல்வேறு கல்வி வகுப்புகள் பற்றி அதிக பக்கங்கள்

தங்கமான அனுபவங்கள்

புடவை சம்பந்தமாக ஒன்பது மாதம் வைத்த போட்டி மிகப் பெரும் வெற்றியடைந்தது. 'புடவை' எனச் சாதாரணமாகச் சொல்லி விட முடியாத அளவு, அதனைச் சுற்றிதான் எத்தனை வாழ்வியல் சம்பவங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. மனிதர்களின் குணங்களைப் புரிந்து கொள்ள முடிந்தது!

அந்த வகையில் ஒரு 'தங்க'மான போட்டி ஆரம்பமாகிறது. நகைகள் சம்பந்தமாக எத்தனை எத்தனை சம்பவங்கள் வாழ்க்கையில் ஏற்படுகிறது! அந்த மறக்க முடியாத சம்பவங்களை எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு,

நவராத்திரி,

ஏராளமான செய்திகள்,

உலகியல்ரீதியாக நம் சக்தியை வகையில் தயாராகி வருகிறது.

'ARC ஜுவெல்லர்ஸ்' மாயவரம் சென்னை - 34

மாதம் ரூ. 3000/- மதிப்புள்ள தங்க நகையினை பரிசாக அளிக்க இருக்கிறார்கள். ஒவ்வொரு மாதம் ஒவ்வொரு நகையை வைத்துப் போட்டி அறிவிக்கப்படும். அதில் மிகச் சிறந்த கட்டுரை தேர்ந் தெடுக்கப்பட்டு ஏ.ஆர்.சி ஜுவெல்லர்ஸ் உரிமையாளர் திருமதி சீதா (114, கோடம்பாக்கம் ஹைரோடு, சென்னை - 34) ஒரு தங்க நகையினை பரிசளிக்கிறார். மற்றும் சில கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மங்கையர் மலரில் பிரசுரமாவதுடன், அதற் கான வழக்கமான சன்மானத் தொகையும் வழங்கப்படும்.

இனி முதல் மாதக் கட்டுரைப் போட்டியின் தலைப்பு —

'தோடு'

- காதுத் தோடு சம்பந்தமாக உங்கள் வாழ்வில் நடந்த சுவையான சம்பவத்தை எழுதி அனுப்புங்கள்.
- கட்டுரை ஒரு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- போட்டிக் கட்டுரையினை ARC ஜுவெல்லர்ஸிற்கோ, மங்கையர்மலருக்கோ அனுப்பலாம். இரண்டு இடத்திற்கும் ஒரே கட்டுரையை அனுப்ப வேண்டாம்.

கொலு பற்றிய யோசனைகள்.

- சிறந்த கட்டுரைக்கு ARC ஜுவல்லர்ஸ் ரூ. 3000/- மதிப்புள்ள தங்க நகையினை பரிசாக அளிக்கிறது.
- முதல் மாதப் போட்டிக்குக் கட்டுரை அனுப்ப கடைசி தேதி 20.9.'96
- போட்டியின் முடிவுகளில் ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

வாழ்வின் வண்ணங்கள் போட்டியினை மங்கையர் மலர் வாசகிகளோடு பகிர்ந்து கொண்ட செண்பகம் சில்க்ஸ் உரிமையாளர் திருமதி. ஜம்பகம் ராம சாமி நவராத்திரியை நமது வாசகிகளோடு கோலாகலமாகக் கொண்டாட விரும்புகிறார். நவராத்திரி ஒன்பது நாட்களுக்கும் செண்பகம் சில்க்ஸ் (30-பி, லஸ் அவின்யூ, சென்னை - 4) கடைக்கு வரும் வாசகியருக்கு 'நவாரத்திரி தாம்பூலம்' தருவதுடன் ஒரு போட்டியும் வைக்கப் போகிறாராம். அது நவராத்திரி சம்பந்த மானதாகவே இருக்கும். ஒவ்வொரு நாள் ஒவ்வொரு தலைப்பில் அவரவர்களுடைய கருத்துக்களை எழுதச் சொல்லப் போகிறார். அவற்றில் சிறந்ததைத் தேர்ந்தெடுத்து....

ஒவ்வொரு நாளைக்கும்,
முதல் பரிசு - ரூ 1000/-
மதிப்புள்ள புடவை
9 ஆறுதல் பரிசுகள் -
ரூ.200/-
மதிப்புள்ள சீட்டின் முதல்
மாதத்திற்குத் தள்ளுபடி
என வழங்க இருக்கிறார்.
விஜயதசமியன்று
தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப்
பரிசுகள் வழங்குகிறார்!

1997ஆம் ஆண்டு ராசி பலன் ரூ. 12.00



மணிமேகலைப் பிரசுரத்தில் கடந்த 14 வருடங்களாக ராசிபலன் நூல்களை வெளியிட்டு வருகிறோம். வாசகர்களிடமிருந்து சிறந்த வரவேற்பு! காரணம், 80% பலன்கள் பொருந்தி வருவதுதான்! 12 ராசிகளுக்கும் சேர்த்து ஒரே புத்தகம். மாத வாரியாகப் பலன்கள். அடுத்த வருடம் நமக்கு எப்படி இருக்கப் போகிறது என்பதை இப்போதே அறிந்துகொள்வது சுவையான விஷயம் அல்லவா? **இதர நூல்கள் :** சனிப்பெயர்ச்சிப் பலன்கள் (16.4.98 வரை) 15.00; மணிமேகலைத் தூய திருக்கணிதப் பஞ்சாங்கம் 1996 முதல் 2000 வரை 45.00; 1926 முதல் 1995 வரை 70 வருடங்களுக்கு 5 புத்தகங்கள் ரூ. 400.00; மணிமேகலை வாக்கியப் பஞ்சாங்கம் 1996 முதல் 2000 வரை 45.00; 1926 முதல் 1995 வரை 70 வருடங்களுக்கு ரூ. 415.00; பதஞ்சலி நாடி ஜோதிடம் பாகம் - 1 ரூ. 72.00; பாகம்-2 ரூ. 51.00; அகத்தியர் நாடி ஜோதிடப்படி 12 ராசிகளுக்கு தனித்தனி புத்தகம் – ஒரு செட்டின் விலை ரூ. 282.00; கைரேகை சாஸ்திரம் (250 படவிளக்கங்களுடன்) 87.00, அதிர்ஷ்ட நம்பர்கள் 47.00; வாழ்வில் உயர அதிர்ஷ்ட எண்களைப் பயன்படுத்தும் முறைகள் 14.00; உங்கள் நிறுவனத்திற்கு அதிர்ஷ்டப் பெயர் வைக்க வேண்டுமா? 9.50; உங்கள் குழந்தைகளுக்கு அதிர்ஷ்டப் பெயர்கள் சூட்டுவது எப்படி? 13.00.

ஆறு மொழிகளில் ஆயிரம்வரை எழுதுவது எப்படி? ரூ. 33.00

தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய ஆறு மொழிகளில் எண்களை எழுதும் முறையைச் சொல்லித்தரும் வித்தியாசமான நூல் இது. 99 என்பதைத் தமிழில் எழுத்தால் எழுத நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? **இதர நூல்கள் :** ஹிந்தி கற்றுக்கொள்ளுங்கள் 50.00; ஹிந்தியில் பேசுவது எப்படி? பாகம்-1 ரூ. 32.00; பாகம்-2 ரூ. 17.00; தமிழ் மூலம் ஹிந்தி இலக்கணம் 50.00; ஆங்கிலம் கற்றுக் கொள்ளுங்கள் 34.00; ஆங்கிலத்தில் பேசுவது எப்படி? பாகம்-1 ரூ. 28.00; பாகம்-2 ரூ. 36.00; தமிழ் மூலம் ஆங்கில இலக்கணம் 40.00; பிழையில்லாமல் தமிழ் எழுதுவது எப்படி? 28.00; எளிமைத் தமிழ் இலக்கணம் 22.50; **Learn tamil through English** (ஆங்கிலம் மூலம் தமிழ் கற்றுக்கொள்ளுங்கள்) 27.00; தெலுங்கு கற்றுக்கொள்ளுங்கள் 34.00, தெலுங்கில் பேசுவது எப்படி? 37.00; மலையாளம் கற்றுக்கொள்ளுங்கள் 24.00; மலையாளத்தில் பேசுவது எப்படி? 26.00; கன்னடம் கற்றுக்கொள்ளுங்கள் 28.50; கன்னடத்தில் பேசுவது எப்படி? 14.00; ஆங்கில-ஆங்கில-தமிழ் அகராதி 87.00; தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி 65.00, ஹிந்தி-தமிழ்-ஆங்கில அகராதி 26.00; தமிழ்-தமிழ் அகராதி 112.00.

8 எட்டு எட்டு
Eight எய்ட்
आठ ஆட்
എട്ടു எட்டு
ఎనిమిది எனிமிதி
ಎಂಟು என்ட்டு

வர்மக் கலையைக் கற்றுக்கொள்ளுங்கள் ரூ. 27.00

'இந்தியன்' படத்தில் திரு. கமல்ஹாசன் பயன்படுத்தும் இந்த உத்தி, நம் நாட்டின் பழமையான தற்காப்புக் கலையாகும். வம்புச் சண்டைக்குப் போக வேண்டியதில்லை; வந்த சண்டையிலிருந்து தப்பித்து எதிராளியிடமிருந்து விலக இக் கலை பெரிதும் பயன்படும். நிறைய பட விளக்கங்கள். பயனுள்ள புத்தகம். **இதர நூல்கள் :** கராத்தே கற்றுக்கொள்ளுங்கள் பாகம்-1 ரூ. 25.00; பாகம்-2 ரூ. 36.00; ஜூடோ கற்றுக்கொள்ளுங்கள் 21.00; குங்ஃபூ கற்றுக்கொள்ளுங்கள் 18.50; குத்துச்சண்டை கற்றுக்கொள்ளுங்கள் 18.00, சிலம்பம் கற்றுக்கொள்ளுங்கள் 25.00; உடம்பு உறுதியாக இருக்க வேண்டுமா? 13.00, உடல் உறுதி பெற உடற்பயிற்சி முறைகள் பாகம்-1 ரூ. 15.00; பாகம்-2 ரூ. 33.00; பெண்களுக்கான எளிய உடற்பயிற்சிகள் 14.00; ஒல்லியாக இருக்கும் நீங்கள் குண்டாக விரும்புகிறீர்களா? 8.00; உடல்பருமனைக் குறைக்கச் சுலபமான வழிகள் 15.00; சிவப்பாக ஆக வேண்டுமா? 12.00; முகப்பருவைப் போக்க முப்பது வழிகள் 9.00; யோகாசனம் கற்றுக்கொள்ளுங்கள் 30.00; பெண்களுக்கான யோகாசனம் 16.00.

கவிதைகள் எழுதுவது எப்படி? ரூ. 16.00

சொல்லிக் கொடுத்து எழுதப்படுவதா கவிதை? இல்லை. நம்மில் பலருக்குக் கவித்துவச் சிந்தனைகள் உள்ளன. இவற்றை எப்படி அழகுற வெளிப்படுத்துவது? நெறிப்படுத்துவது என்பதை இந்நூல் விரிவாகத் தெரிவிக்கிறது. **இதர நூல்கள் :** மனுஷ்யபுத்திரனின் கவிதைகள் 6.50; கண் இமையில் மறைந்த கனவுகள் (புதுக்கவிதை) 9.00; உலகத்துச் சிறந்த வசன கவிதைகள் 19.00; பல்வேறு வைபவங்களுக்கான வாழ்த்துக் கவிதைகள் எழுதுவது எப்படி? 21.00; உயிரின் முன்னுரை (புதுக் கவிதை) 31.00; சிறந்த இந்தியக் கவிதைகள் 17.00; மன்னிக்க முடியாத மனிதர்கள் 12.00; தமிழா சரியா சொல்லு? 34.50.

மேற்கண்ட புத்தகங்களுள் தேவையானவற்றை வி.பி.பி.யில் பெறக் கடிதம் எழுதுங்கள். பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறோம். தபால்காரர் புத்தகங்களை உங்களிடம் தரும்போது பணம் செலுத்தினால் போதும். [தபால் செலவு தனி]. சென்னையில் இருப்பவர்கள் நேரில் வந்து வாங்கிக்கொள்வது சிக்கனம். ஷோரூம் விற்பனை நேரம் : காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை. ஞாயிறு விடுமுறை. கடிதம் எழுத வேண்டிய முகவரி:

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண் : 1447, 4, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 4342926 தொலைநகல் : 044-4346082

பட்டர்ஃப்ளை

அறிமுகப்படுத்துகிறோம்



உலகெங்கும் கொடிகட்டிப் பறக்கும் நான்-ஸ்டிக் பாத்திரங்கள் இப்போது இந்திய சமையலுக்குத் தயார். பட்டர்ஃப்ளை அறிமுகப்படுத்துகிறது.

உயரிய ஜெர்மானிய தொழில்நுட்பத்துடன்

BETA

பட்டர்ஃப்ளை நான்-ஸ்டிக் பாத்திரங்கள் சர்வதேச சிறப்பு வாய்ந்த ஜெர்மானிய க்ரிப்லான் பேட்டா தொழில்நுட்பத்தில் தயாராகின்றன. ஒவ்வொரு பாத்திரமும் உங்கள் தேவையறிந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. நான்-ஸ்டிக் கோட்டிங் நெடுநாட்கள் உழைக்க மும்முறைப்பூச்சு! நீங்கள் சுலபமாக சமைக்க, உபயோகிக்க கழுவிட, நுணுக்கமான டிசைன்கள்; கண்ணைப் பறிக்கும் கவர்ச்சி...

...கருத்தைக் கவரும் நான்-ஸ்டிக்கின் அற்புத குணங்கள். இதுவே பட்டர்ஃப்ளை நான்-ஸ்டிக்.

தோசை



நிறைவான சுவைக்கு எளிய செய்முறை

1 உங்கள் பட்டர்ஃப்ளை நான்-ஸ்டிக் தவாவினை அடுப்பில் இளஞ்சூட்டில் வைத்து ஒரு கரண்டி தோசை மாவை இடுங்கள். இதமாக, அழகிய வட்டமாகப் பரப்புங்கள் (இப்போது ரேடியோவுடன் நீங்களும் பாட ஆரம்பிக்கலாம்).

2 ஓரிரு நிமிடங்கள் கழித்து, இரண்டே சொட்டு எண்ணையை தோசையைச் சுற்றி இடுங்கள். (இப்போது புடவை தலைப்பு, தலை முடியை சரி செய்து கொண்டு, வரவிருக்கும் பாராட்டுகளுக்குத் தயாராகுங்கள்).

3 ஒரு மரக்கரண்டியால் மொறுமொறு தோசையை சுலபமாகத் தவாவிலிருந்து எடுத்து பெருமையுடன் குடும்பத்தாருக்குப் பரிமாறுங்கள் (கூடவே சட்னியுடன் கொஞ்சம் புன்சிரிப்பையும் சேர்த்து).



பட்டர்ஃப்ளை

நான்-ஸ்டிக் பாத்திரங்கள்.

சமையலறை அற்புதம். உங்கள் வீட்டிற்கு வந்து விட்டதா?

பட்டர்ஃப்ளை நான்-ஸ்டிக் பாத்திரங்கள், தவா, ஃப்ரை பேன், சாஸ் பேன், டக்க் போன்ற பல ரகங்களில் உங்கள் புன்னொடு சமையல் தோசைக்கும் ஏற்றவாறு தயாரிக்கப்பட்டுள்ளன.






கங்காதரம் அப்ளையன்சஸ் லிட். வழங்கும் 'தர உறுதி' பெற்ற தயாரிப்பு.
272, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

Seagull-GAL-193/TAM/MM



கொடுத்துப் பாருங்கள்

மகிழ்ச்சி வரும்

உணவுப் பண்டங்கள் மீந்து போயிருந்தால், அதை எப்படி வேறு உணவாக மாற்றி உட்கொள்ள முடியும் என்பது முதல், பழைய புடவைகளை திரைச் சீலைகளாக மாற்றுவது, குழந்தைகள் பழைய உடைகளை மாற்றி நாப்கின்களாகவும், குஷன் உறைகளாகவும், ஏப்ரன்களாகவும், டஸ்டர்களாகவும் மாற்றி தைப்பது வரை பல யோசனைகள் சொல்கிறார்கள். வசதி குறைவானவர்கள் ஓரளவு இது போல் சிக்கனமாக இருப்பதை ஒப்புக் கொள்ளலாம்.

ஆனால் வசதி படைத்தவர்கள் மீந்து போன உணவை அப்படியே குப்பைத் தொட்டியில் எறிந்து விடுகின்றனர் அல்லது ஃப்ரிட்ஜில் வைத்துக் கொண்டு, சூடு பண்ணி பல நாட்கள் சாப்பிடுகின்றனர். புடவை மற்றும் துணி மணிகளை பாத்திரக்காரனுக்கு போட்டு பிளாஸ்டிக் மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள் வாங்குவதைப் பார்க்கிறோம்! மிஞ்சினால் வீட்டு வேலைக்காரிக்கும் அவருடைய குடும்பத்திற்கும் ஓரிரு துணிகள் கொடுப்பார்கள். வீடு நிறைய பிளாஸ்டிக் பக்கெட்டுகளும் எவர்சில்வர் பாத்திரங்களும் நிறைந்திருக்கும்போது, மேலும் அவைகளைச் சேர்த்து வைப்பதில் என்ன லாபம்?

வாரத்தில் ஐந்து நாட்கள் பள்ளிச் சீருடைகள் போட்டுக் கொள்வதில், மீதமுள்ள இரண்டு நாட்களுக்குக் குழந்தைகள் எத்தனை உடை போட்டுக் கொள்ள முடியும்? ஆனாலும் குழந்தைகள் புதிது புதிதாக அணியவே விரும்புகிறார்கள். அதற்கேற்றார்போல இப்போது பலவித வண்ணங்கள், பலவித டிசைன்களில் கண்ணைக் கவரும் வண்ணம் ரெடிமேட் உடைகள் கடைகளில் அணிவகுக்கின்றன. இவை தவிர அவ்வப்போது வாங்கி வரும் வெளிநாட்டு உடைகள் வேறு. திரும்பிப் பார்ப்பதற்குள் குழந்தைகள் வளர்ந்து விடுகிறார்கள். சிறிதும் மெருகுகுலையாமல் உடைகள் சின்னதாகி விடுகின்றன.

வசதி குறைந்த நம் உறவினர் அல்லது நண்பர்களின் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். எத்தனையோ அனாதை இல்லங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு உங்கள் குழந்தைகளின் அழகிய விலையுயர்ந்த உடைகள் எவ்வளவு அபூர்வம் தெரியுமா? ஒரே ஃப்ளாட்டில் வசிக்கும் சில பெண்மணிகளோ, ஒரே அலுவலகத்தில் பணிபுரியும் பெண்கள் சிலர் ஒன்றுகூடியோ, அவரவர் வீட்டுக் குழந்தைகளின் உடைகளை ஒன்று சேர்த்து ஒரு அனாதை இல்லத்திற்குச் சென்று கொடுக்கலாம். இது போல்

கொடுப்பதற்கு முன் ஒரு பாலிதின் பைகளில் அடைத்துக் கொண்டு போய் அப்படியே கொடுக்காமல், சிறு கிழிசல்கள் இருந்தால் தைத்து, பட்டன், கொக்கி ஆகியவை பிய்ந்து போயிருந்தாலும் தைத்து, நன்கு துவைத்து இஸ்திரி செய்து கொண்டு போய்க் கொடுங்கள்.

சின்னதாகிப் போன ஷூக்கள், விளையாடி அலுத்துப் போன பொம்மைகள், மழைக்கோட்டுகள், பள்ளிக்கு எடுத்துச் செல்லும் பைகள், வாட்டர் பாட்டில்கள், நோட்டுப் புத்தகங்கள், கதைப் புத்தகங்கள், பெண் குழந்தைகளுக்கு மணி, காதணிகள், வளையல்கள இப்படி கொடுப்பதற்கு எத்தனையோ இருக்கின்றன.

சிலர் வேண்டாத பொருட்களை அப்படியே வீட்டில் நிறைய சேர்த்து வைத்துக் கொண்டு மேலும் மேலும் புதிதாக வாங்கி வீடு நிறைய பொருட் களை அடைத்து வைத்திருப்பார்கள். தேவையில்லாத பொருட்களை தேவைப்பட்டவர்களுக்குக் கொடுப்பதால், உங்கள் வீடும் சுத்தமாகிறது. அந்தப் பொருள் யாரோ ஒருவருக்கு உபயோகமாகிறது. அதே சமயம் கொடுப்பதால் உங்களுக்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. கொடுத்துப் பாருங்கள் அதன் சுகமே தனி.

திருமணங்கள் மற்றும் பெரிய விசேஷங்களில் ஏராளமான சாப்பாடு மற்றும் இனிப்பு வகைகள் மீந்து போய், எப்படி செலவழிப்பது என்று தெரியாமல் வீணாகி குப்பையில் போய்ச் சேருகிறது. இது போன்ற சமயங்களில், வீணாக் காமல் ஏதேனும் அனாதை இல்லங் களுக்குக் கொடுக்கலாம். அவர்களுக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தாலே வந்து எடுத்துச் செல்வார்கள். நீங்கள் அழைத்திருந்த விருந்தாளிகளை விட இந்தக் குழந்தைகள் சாப்பிட்டு விட்டு உங்களை மனமார வயிறார வாழ்த்துவார்கள்.

தெருவோரங்களில் கூறு கட்டி பழங்கள் கறிகாய்கள் விற்கும் சிறு வியாபாரிகள், ரிக்ஷாக்காரர்கள், மெக் கானிக் ஷாப்பில் வேலை செய்யும் சிறுவர்கள், இப்படி உங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள எத்தனையோ பேர்கள் இருக்கின்றனர். மழை மற்றும் குளிர்காலங்களுக்கு முன்பு வீட்டி லுள்ள பழைய துணிகளை இப்படி பட்டுவாடா செய்யுங்கள். இதனால் உங்கள் வீட்டிலுள்ள வேண்டாத சாமான்களும் குறையும், குளிரில் கஷ்டப்படும் ஏழைகளும் பயன்பெறுவார்கள்.


மேலும், இப்படிச் செய்யும்போது உங்கள் குழந்தைகளையும் உடன் அழைத்துச் செல்லுங்கள். இதனால் அந்த ஏழைகளின் கண்களில் தெரியும் மகிழ்ச்சியையும் நன்றியையும் அவர் களும் உணர்ந்து கொள்வார்கள். அடுத்த முறை உடை சிறியதாகிப் போகும் போது அவர்களே அதைக் கொடுக்கலாம் என்று கூறுவார்கள். இந்தப் பழக்கம் சிறு வயதிலிருந்தே அவர்களுக்கு வரும்.

- கலா

தோசை மாவு, கொஞ்சம் சேமியா இரண்டையும் ஒன்றாகக் கலந்து வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, உ. பருப்பு, பெல்லாரி, பச்சை மிளகாய், கருவேப்பிலை போட்டு தாளித்து தோசை வார்த்தேன். தோசையிலும் டிசைன் வந்து விட்டதா? வித்தியாசமான டேஸ்ட்டாக இருக்கிறதே என்று பாராட்டினார்கள்.

- பி. ஜானகி

தேடித் தேடி



விடிந்ததிலிருந்தே மனதுக்குள் ஒரு பிராண்டல். இன்றோடு நான்கு நாட்கள்- என்னதான் ஆச்சு என் வீட்டுக்காரருக்கு? ஏனிந்த மாற்றம்? வீடே நிசப்தமாய்... அமைதியாய்... போர் அடித்துக் கொண்டு... எக்சைட்மென்ட் இன்றி...

ஒரு நாளைக்கு நான்கு முறையாவது கேட்கும் அபாய அறிவிப்பின்றி...

ஏனோ குக்கர் விசில் சத்தத்தையும், கைப் பம்ப்பு எழுப்பும் தாளத்தையும், தாயம்மா பாத்திரங்களை உருட்டும் சப்தத்தையும், 'கத்ரீகாய் பீக்கெங்காய்... கிரேய்ய்ய்...' ராகத்தையும், என் மாமியாரின் ''கஜானனம், பூதகணாதிசேவிதம்'' அபஸ்வரத்தையும் மீறி வீடு அசாத்தியத்திற்கு அமைதியாய் இருப்பது போல ஒரு பிரமை!

திடீரென்று ஒரு புது வித பயம் என்னை 'கப்'பென்று பிடித்துக் கொண்டது.

ஏதோ விபரீதம் நடக்கப் போகிறதோ? முன்பொருமுறை ஐந்து நாட்கள் ஓடின அபாய அலறல் இன்றி... வந்தது ஆபத்து. வைத்தா மாமா குடும்ப சமேதராய் வந்து டேரா போட்டார்!

போன தடவை சரியாக நாலு நாட்கள் பதினேழு மணி நேரங்கள் முப்பத்தி மூன்று நிமிடங்கள் பரபரப்பின்றி ஓடின. வந்தது ஜூன் மாதத்தில் ஒரு பயங்கரப் புயல். காலனியிலுள்ள வீடுகளுக்குள் மழை நீர், மற்றும் இதர வகை நீர்கள் நுழைந்து ஹால்களைத் தற்காலிக நீச்சல் குளமாக்கின...

இம்முறை என்னவாகுமோ?

சீனு வேறு எல்லாப் பிள்ளையார்களையும் ஊர்வலமாய்க் கொண்டு கடலில் சேர்க்கப் போகிறானாமே.. ஒரு வேளை... கடல் பொங்கி ஊருக்குள் வந்து விடுமோ? பிள்ளையாரே ஜாலியாக அலையில் சவாரி செய்தபடி வங்கக் கடலுக்குள் போய் விடுவாரோ? வானம் வேறு மூட்டமாய் இருக்கிறதே! கவலையில் கை தவறி காப்பிக்குக் கடுகு தாளித்துக் கொட்டப் போகும்போதுதான்,

'நித்யா... ஏய், நித்தி.. எங்கே என் ஃபைல்? மனுஷன் ஒருமணி நேரமாய் தேடறேனே... கேட்க நாதி இல்லையா...'' கணீரென்ற தன் குரலால் எட்டு மணி அபாய சங்கை ஊதினார் என் கணவர், நான்கு நாட்களுக்குப் பிறகு...

''எந்த ஃபைல்?''

''இங்கே வந்து கேட்டா ஆகாதோ? என் பச்சை ஃபைலை பார்த்தியா? மசமசன்னு நிக்காம தேடேன்.'' சோப்பு மூஞ்சியுடன் எரிந்து விழுந்தார்.

சிலர் பாடப் பிறந்தவர்கள்... சிலர் ஆடப் பிறந்தவர்கள்... நான்தேடப் பிறந்தவள்! என் கணவர் கைமறதியாய் வைத்த சாமான்களைத் தேடுவதற்காகவே அவதரித்தவள்!

ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு ஹாபி! என்



இளைத்தேனே

உஷா ஸ்ரீகுமார்

கணவரின் மாபெரும் பொழுதுபோக்கு தன் பொருட்களை எங்கெல்லாமோ மறதியாய் வைத்து விட்டு ஆபீஸ் போகும் அவசரத்தில் என்னைத் தேடச் சொல்லிப் பறக்கடிப்பது...

இவருடைய இந்த விசித்திர விளையாட்டு ஆசையை தனியொருத்தியாய் சமாளித்துக் களைத்து விட்டதால் இப்போதெல்லாம் என் குடும்பத்தினர் அனைவரையும் பார்ட்னராக ஆக்கிக் கொண்டு இந்தத் 'தேடல்' ஆட்டத்தை ஆடுகிறேன்.

சப்தம் கேட்ட வுடனேயே அவரவர்கள் ஆஜர்.

"என்ன டாடி காணோம்?" டூத் பிரஷ்ஷும் கையுமாக அஷ்வினி.

"எதுடா காணோம்?" காலைப் பேப்பரு டன் மாமனார். இவர் அவ்வப்போது மூக்குக் கண்ணாடியை அணிந்து கொண்டே வீடு முழுவதும் மூக்குக் கண் ணாடியைத் துழாவுபவர்!

"பூஜை பண்ண விடாம ஏண்டா கத்தறே?" இது மாமியார். விஷயம் சுருக்க மாக விளக்கப்பட்டவுடன்...

அஷ்வினி சமர்த்தாக ஹால் சோபாவுக்குக் கீழே.. செருப்பு அலமாரி, ஷோகேஸுக்குப் பின்னே, டைனிங் டேபிள் மேலே என்று அவள் ஏரியாவை சல்லடை போட்டுத் தேட ஆரம்பிக்க...

மாமனார் புக் ஷெல்ஃப், மருந்து டிராயர், பழைய பேப் பர் கட்டு, டீவியின் மேலே/ கீழே என்று அலச...

மாமியார் சமையலறை, பூஜை அலமாரி, ஸ்டோர் ரூம், தாழ்வாரம் என்று துழாவ...

நான் படுக்கையறை, கட்டி லுக்கும் சுவற்றுக்கும் இடையே... தலையணைகளுக் கடியே, துணி பீரோ, டிரெஸ் ஸிங் டேபிள் டிராயர்களை சலித்தெடுக்க ஆரம்பித்தேன்.

நேரம் பி.டி. உஷாவாய் ஓட...

"ஹர்ர்ரி அப். டைம் ஆச்சு.. ஜி.எம். வர்றான்... ஃபைலைக் காணோம்னா என்னை வீட்டுக்கு அனுப்பிச் சுடுவான். அப்புறம் கதை கந்தல். ஆட்டம் க்ளோஸ்!"

என்றபடி தேலினும் இனிய வார்த்தைகளால் எங்களை உற்சாகப்படுத்தியபடி முகத்திற்கு 'ஆஃப்டர் ஷேவ் லோஷன்' தடவிக் கொண் டார் கணவர்.

அடுத்த பதினேழு நிமிடங்களில் பற்பல புதையல்கள் கண்டெடுக்கப்பட்டன.

"மம்மி.. இதென்ன ஒரே எறும்பு." சோபாவுக் கடியில் எறும்பு மூடிய ஒரு உருண்டை வஸ்து...

"யாரு நேற்று கொழுக்கட்டையை கீழே போட்டது. நீயா, பப்புவா?"

"இது நேத்துப் பண்ணின கொழுக்கட்டை மாதிரியில்லை. வரலட்சுமி நோன்பிற்கு செஞ்ச கொழுக்கட்டையோ?" என்ற மாமியாரை முறைத்தபடி பழைய துணி யடைத்த டிரங்க்கைக் குடைய ஆரம்பித்தேன்.

அதிலிருந்து எட்டிப் பார்த்தது. சப்பாத்திக் குழவி- இரண்டு மாதங்களாய் என் கண்ணில் படாதது... எப்படி அது எழுந்திருந்து இறங்கி நடந்து போய் பீரோமேலிருக்கும் டிரங்க்குக்குள் பழைய புடவைக்குள் ஒளிந்து கொண்டது என்பது ஷெர்லாக் ஹோம்ஸாலும் விடுவிக்க முடியாத மர்மம்.

''இதென்ன காயிதம் பாரு நித்யா'' என்றபடி என் மாமியார் வந்தார்.

போன மாதம் நான் என் அக்காவுக்கு எழுதிய கடிதம். ''நான் வாக்கிங் போறப்போ மறக்காம போஸ்ட் பண்ணறேன்'' என்றபடி என் மாமனார் வாங்கிக் கொண்ட கடிதம்! அது எப்படி இந்த விஷ்ணு சகஸ்ரநாமப் புத்தகத்துக்கடியில்?

ஃபைல் வேட்டை தொடரத் தொடர...

''இதோ இஞ்ச் டேப்...'', ''இங்கே பாருப்பா என் பழைய பென்சில் பாக்ஸ்...'', ''அடேடே... சண்டே பேப்பர் இதனடியில் கிடக்கா..''

''அப்பாவோட சாக்ஸ் என் ஸ்கர்ட்டோட இருக்கே...''

''யாரு என் 'டை'யை எடுத்து புளிமூட்டையை கட்டினா?''

சாமான்களைத் தொலைப்பது இந்தக் குடும்பத்தின் கல்யாண குணம்! ஏதேதோ... எப்போதோ தொலைந்து போய், ஃபைல் க்ளோஸ் செய்யப்பட்ட பொருட்களெல்லாம் எட்டிப் பார்க்க ஆரம்பித்தன.

ஆனால் பச்சை ஃபைல் மட்டும்... ஊஹூம்!

''மத்த குப்பைகளை குடையாம என் ஃபைலை தேடி எடுங்கனேன். லேட்டாய் போனா கைமேலே 'மெம்மோ' குடுப்பான். அப்புறம் வேலையே போயிடும். ஏன் தான் வைச்ச பொருள் வச்ச இடத்தில் ஒரு நிமிஷம் கூட இருக்க மாட்டேனென்கிறது இந்த வீட்டில்?''

''எல்லா இடத்தையும் தேடியாச்சு, விச்சு. பரண் தான் பாக்கி. நீ வேணா அந்தப் பழைய ஒங்கிலைக் கட்டிண்டு ஏறிப் பார்த்துடு.'' சலிப்பின் எல்லையில் இருந்தார் மாமனார்.

''எப்போ அந்த ஃபைலை கடைசியாக எடுத்தீங்களாம்?''

''என்னை கேள்விகேட்டு மடக்காம தேடித் தர்ற வழியைப் பார்.' அதோ... அந்த ஸ்டீல் பீரோவுக்குள்ளே பார்த்தியா?''

''அதைத் திறந்தே ஒரு வாரமாச்சு... எப்படிப் போயிருக்கும் அதுக்குள்ளே?''

''எதிர் கேள்வி கேட்காதே திறந்து பார்!''

உத்தரவு மகாராஜா...

ஸ்டீல் பீரோவுக்குள் வெள்ளிப் பாத்திரங்


இனி கண்ணீர் இல்லை. ஜான்ஸன்ஸ் பேபி ஷாம்பூ. 1 சதவீதம் தான் ஷாம்பூ. 99 சதவீதம் இதம்.
Johnson & Johnson

களும் நகைகளும் உள்ளதால் அதன் சாவியை பத்திரமாய் மர பீரோவில் புடைவைகளுக் கடியில் வைத்திருப்பது வழக்கம். (திருடர்கள் கவனிக்காதீர்கள்!)

சைனா சில்க் புடவைக்கடியே என் கை வழுக்கிக் கொண்டு போய் துழாவியபோது- என்ன, சாவி அகப்படவில்லையே... இப்போது ஃபைல் தேடப் போய் சாவி தொலைந்து விட்டதா.

"நேரமாச்சே... க்விக். பீரோவைத் திற... வாட்! சாவியைத் தொலைச்சிட்டியா?"

அவர் தொண்டை நரம்புகள் புடைக்க...

"சத்தாதேடா, மாடி வீட்டு ஏகாம்பரம் ஒரு பெரிய்ய மாஸ்டர் கீ கொத்து வைச் சிருக்கார். அதிலுள்ள சாவிகளால் திறக்க முடியாத பூட்டே கிடையாது."

அபயஹஸ்தம் அளித்தார் மாமியார்.

அஷ்வினி மாடிக்கு ஓடிப்போய் எண்ணை தேய்த்து ஊறிக் கொண்டிருந்த ஏகாம்பரம் அங்கிளை சாவிக்கொத்தும், இடுப்பில் துண்டுமாய் கையோடு இழுத்து வர..

ஏகாம்பரம் ஒவ்வொரு சாவியாய் போட்டு திறக்க முயற்சி செய்ய... பீரோவோ... அதன் பாஷையில் "பெப்பே..." என்றது.

"அந்தக்கால மேக்...நல்ல ஸ்ட்ராங்கான பீரோ..." என்று சர்டிபிகேட் கொடுத்தவாறு ஒரு துருப்பிடித்த சாவியை 'நேக்'காக உள்ளே விட்டுத் திருப்ப, சாவி எக்குத்தப்பாய் சிக்கிக் கொண்டது.

அஷ்வினியும், மாமனாரும் பீரோவை அமுக்கிப் பிடிக்க ஏகாம்பரம் சாவியைப் பிடித்து இழுக்க...

'தொபேல்' என்று பீரோவுக்கடியில் சாஷ்டாங்கமாக விழுந்த ஏகாம்பரம் தரையை எண்ணையால் மொழுகினார்!

அப்போது சொல்லி வைத்தாற்போல டெலிபோன் அலற...

"எனக்கே தான். எவனாயிருந்தாலும் ஆபீசுக்கு கிளம்பிப்போயாச்சுன்னு சொல்லு...."

"ஹலோ..."

போனில் பேசிவிட்டு சந்தோஷமாய் வந்தேன்.

"யாரு? யாரு?"

"நீங்க அதிருஷ்டக்காரர். இன்னிக்கு ஆபீஸ் லீவாம். உங்க 'எம்.டி.'யோட பாட்டி செத்துப் போனதுக்காக.. ரங்கமணி சொன்னார்."

"பிள்ளையாரப்பா!"

"ஐய்யய்யோ... இடுப்பு போச்சே..." என்று அனர்த்திய ஏகாம்பரத்தை மாடிக்கு அனுப்பி விட்டுத் திரும்பியபோது...

வாசலில் சீனு...

"பிள்ளையார் ரெடியா, ஆன்ட்டி? நம்ம காலனி பிள்ளையார்களை ஊர்வலமாய் அழைச்சுண்டு போய் கடலில் கரைக்கப் போறோம்" என்று நினைவூட்டினான்.

என் மாமியார் எருக்கம்பூமாலையும், குடையுமாய் இருக்கும் மண் பிள்ளையாரை பிரியா விடை கொடுத்து அனுப்ப,

"ஆன்ட்டி மாலை வாங்க வீட்டுக்கு அஞ்சு ரூபாய் தரணும்." நினைவு படுத்தினான்.

"என் பர்ஸ் பீரோவுக்குள்ளே மாட்டிண்டு இருக்கு. உங்ககிட்டே சேஞ்சு இருக்கா?"

"அந்த ப்ரீஃப் கேசை இப்படிக் கொண்டா... பர்ஸை எங்கேயோ வச்சுட் டேன்..."

நம்பர் லாக்கை திருகி பெட்டியைத் திறந்தால்.

"ஆ...ஆ...ஆ..."


"ஏண்டி அலர்றே?"

"என்னம்மா ஆச்சு?"

"தேள், கீன் கொட்டிடுத்தா?"

"ஃபை...ஃபை...ஃபைல். பச்சை ஃபைல்."

ப்ரீஃப்கேசுக்குள் இருந்து சமர்த்தாகப் பார்த்துச் சிரித்தது அந்தப் பொல்லாத ஃபைல்! 'தொப்'பென்று விழுந்தேன். (சோபாவில் தான்.) என்னவோ 'நறுக்'கென்று குத்த... பீரோ சாவி! பிள்ளையாரப்பா...



ஒரு சகோதரி மசாலா தோசை செய்யும் போது முதலில் தேங்காய் சட்னியை பரவலாக தேய்க்கும்படி எழுதியிருந்தார். அதற்குப் பதில் வெறும் பொட்டுக் கடலை, சிவப்பு மிளகாய், உப்பு வைத்து (தேங்காய் சேர்க்காமல்) அரைத்து தோசையில் பரப்பி பிறகு மசாலா வைத்து மடிக்க சூப்பர் ருசியாக இருக்கும்.

- ராகினி தியாகராஜன்

சரவணா ஸ்டோர்ஸ்

ரெங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை 600 017.

உயர்தரமான தங்க நகைகள்
வெள்ளி பாத்திரங்களுக்கு

செய்கூலி இல்லை



22 CT. தங்கம்

1 கிராம் விலை ரூ. 470.00
(விலை மாற்றம் உண்டு)

பட்டுப்புடவைகளுக்கு
10% தள்ளுபடி

ஜவுளிகள்,
ரெடிமேட் ஆடைகள்,
பாத்திரங்கள்,
T.V., டேப்ரிக்கார்டர்,
ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின்,
ஃபேன், கிரைண்டர்,
மிக்ஸி, சூட்கேஸ்

FIXED DEPOSIT
24%
PER ANNUM

ஞாயிறு விற்பனை உண்டு.

'ஒரு திருடன் பல இடங்களில் திருட்டுந் தொழிலைச் செய்து வாழ்ந்து வந்தான். ஒரு நாள் ஓரிடத்தில் திருடும்போது தப்பிப்பதற்காக முயற்சி செய்தபோது ஒரு கொலை செய்ய நேர்ந்தது. கொலைக்குற்றம் சாட்டப் பட்ட அவனுக்கு இதற்குமுன் செய்த குற்றங்களுக்காகவும் சேர்த்து மரண தண்டனை விதிக்கப்பட்டது. தூக்கிலிடப் போகும் முன் நாள், சிறை அதிகாரிகள் அவனது கடைசி ஆசையைக் கூறுமாறும், முடிந்தால் நிறைவேற்றி வைப்பதாகவும் கூறினார். தன் வய தான தாயைப் பார்க்க ஆசைப்பட்டான். நியாயமான அந்த ஆசையை சிறை அதிகாரிகள் நிறைவேற்றினர். தாய் அருகில் வந்ததும், அந்தத் திருடன் தாயின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். சிறை அதிகாரிகள் திடுக்கிட்டு தடுத்தனர். காரணத்தைக் கேட்டபோது,

[illegible] "நான் மூன்று வயது குழந்தையாக இருந்தபோது, என் தாயின் தோள் மீது அமர்ந்து தெருவில் சென்றபோது, பக்கத்தில் மாம்பழக் கூடையைச் சுமந்து சென்ற ஒருவரிடமிருந்து இரு மாம்பழங்களைத் தெரியாமல் எடுத்து வைத்துக் கொண்டேன். வீட்டிற்கு வந்து தாய் என்னை இறக்கியதும் மாம்பழங்களை அவரிடம் கொடுத்தேன். அப்போது என் தாய் என் கன்னத்தில் அடித்திருந்தால் அந்தத் தவறை மீண்டும் செய்திருக்க மாட்டேன். அதற்கு மாறாக என் சாமார்த்தியத்தை மெச்சி கொஞ்சியதால், திருடுதல் ஒரு சாமார்த்தியமான செயல் என எண்ணி சிறிய திருடுகளை தொடர்ந்து தெரியாமல் செய்து, பெரியவனானதும் பெருந் திருடனானேன். ஆகவே இன்று நான் தூக்கு மேடைக்கு போவதற்குக் காரணம் அன்று என் தாயார் கண்டிக்காமல் விட்டதுதான். அதை என் தாய்க்கும் மற்றவர்களுக்கும் உணர்த்தவே இவ்வாறு செய்தேன்"

என்று கூறி நிம்மதியாக தூக்குமேடையை நோக்கி நடந்தான். பல இடங்களில் தாய் குழந்தைகள் அறியாமல் செய்யும் பல தவறுகளைக் கண்டு கொள்வதேயில்லை. அப்படியே இருந்தாலும் அதைத் திறமையென புகழ்வதால் குழந்தைகள் படுகுழியில் விழக் காரணமாகின்றனர். சிலருக்குக் குழந்தைகள் செய்யும் தவறை சுட்டிக் காட்டவே பயம், குழந்தை தன்னை வெறுக்குமோ என்று. குழந்தை வெறுத்தால் என்ன? ஒதுங்கினால் என்ன? குழந்தையை நல்லவழியில் செலுத்த வேண்டியது தாயின் கடமை. விருப்பு வெறுப்புகளுக்கு இடம் தரக் கூடாது. இன்று வெறுக்கும் குழந்தை பிற்காலத்தில் உண்மையை உணர்ந்து பெருமிதம் அடையும்.

இங்கு ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன். 7 (அ) 8 வயது குழந்

படம் : ஜிகரேஷ்



இருபத்தோராம் நூற்றாண்டின் குழந்தைகளுக்காக...


இல்லதரசிகளுக்கு புதிய துணை
சமையல் கலையில் திருப்புமுனை
மில்க் பாய்லர், இட்லி குக்கர்,
வாட்டர் ஃபில்டர், குழிகரண்டி
எல்லாம் தந்திடும்
Murugan
முருகன் மெட்டல் என்றாலே
முகம் மலரும் தன்னாலே
முருகன் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ்
21, பொன்னப்ப செட்டி தெரு, சென்னை-3.
போன் : 5350182, 5343412

தையாக நான் இருந்தபோது எங்கள் வயலில் வேலை செய்த ஒரு மூதாட்டியை 'போடி கிழவி' என எதற்கோ கூறிவிட்டேன். இதைக் கேட்ட என் தந்தை இவ்வாறு பெரியவர்களிடம் மரியாதைக் குறைவாகப் பேசுவது தவறாதலால் அந்த அம்மையாரிடம் மன்னிப்பு கேட்கும்படி கூறினார். நாம் தரும் கூலியைப் பெற்று வாழும் அவரிடம் நான் மன்னிப்பு கேட்க மறுத்துவிட்டேன். அதற்கு என் தந்தை கோபப் படாமல் அன்புடன், "சரிம்மா, நான் இப்போது உன்னை வற்புறுத்தவில்லை. ஆனாலும் நீ செய்தது தவறு. ஆகவே அந்த பாட்டியிடம் நீ மன்னிப்பு கேட்கும் வரை உனக்குச் சாப்பாடு இல்லை. குழந்தையாகிய நீ சாப்பிடாததால் நானும் சாப்பிட மாட்டேன்" என்றார். அந்த மூதாட்டி என் தந்தையிடம் என் சார்பாக எவ்வளவோ சமாதானம் கூறினார். "குழந்தைக்கு என்ன தெரியும், அதற்கு தண்டனையா" என கேட்டுப் பார்த்தார். அப்போதும் என் தந்தை சிரித்துக் கொண்டே, அவ்வாறு பேசுவது தவறு என புரிய வைக்கவே தண்டனை என்றார். அன்று மாலை வரை தாக்குப் பிடிக்க முடிந்தது. பிறகு பசியும், நம்மால் தந்தையும் சாப்பிடாமல் இருக்கிறாரே என்ற எண்ணமும் சேர்ந்து என்னை மன்னிப்பு கேட்க வைத்தது. என் தந்தை எனக்கு மகிழ்ச்சியுடன் ஊட்டிய பின் தானும் சாப்பிட்டார்.

திட்டாமல், அடிக்காமல் திருத்திய விதத்தை தந்தையிடமே கற்றுக் கொண்டேன். சிறுவயதில் தவறு செய்தால் தாயும் இவ்வாறு கண்டித்ததால்தான், ஓரளவு பயனுள்ள வாழ்க்கையை நான் வாழ்கிறேன் என்பதை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

தாய் குழந்தைகளை மதித்துப் பழக வேண்டும். சிறியவர்கள்தானே என அலட்சியப்படுத்தாமல் அவர்களிடம் பெருந்தன்மையுடன் பழக வேண்டும். தவறு செய்தாலும் மேற்கண்டவாறு திருத்த வேண்டும். நம்மால் முடியும்போது குழந்தைகளை அடித்தால், அவர்களால் முடியும்போது அவர்கள் நம்மை அடிப்பார்கள். இது தவறா? ஆகவே குழந்தையை தாய் மதித்து நல்ல பண்புகளைக் கற்றுத் தர வேண்டும். இவ் வயதுக் குழந்தைகளின் பாடங்களை பள்ளியில் கற்றுக் கொடுப்பதே போதும். தாயும் வீட்டில் அந்தப் பாடங்களை திரும்பவும், கற்றுத் தருவதை விட்டு விட்டு, பண்புகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும். எப்போதாவது ஓரிரு முறை கண்டிக்க நேர்ந்தாலும் அந்தக் கண்டிப்புக்குக் காரணம், அதன் நல்ல எதிர்காலத்திற்கு தான் என்பதை குழந்தைக்குப் புரிய வைக்க வேண்டும்.

இந்த வயதில் தாய் தந்தை குழந்தையிடம் எதில் ஆர்வத்தைத் தூண்டுகிறார்களோ அந்த ஆர்வமே பிற்காலத்திலும் தொடரும். குழந்தைகளை அடிக்கடி சுற்றுப்பயணம் அழைத்துச் சென்று சொற்ப மகிழ்ச்சிக்காக பணத்தை வாரியிறைத்து, செலவு செய்து கஷ்டப்படும் குடும்பங்களைப் பார்க்கிறோம். இறையுணர்வை ஊட்டும் பயணங்களும், கல்விச் சுற்றுலாக்களும் அவசியமானவை. பிறவற்றைக் குறைத்து, வருடம் ஒரு முறையாவது அனாதை ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்று உதவும் பழக்கத்தைக் குழந்தையிடம் ஏற்படுத்தினால் இரட்டிப்பு பலன் கிடைக்கிறது. அவர்களை பெற்றோர்களுடன் வாழச் செய்த இறைவனிடம் மேலும் நன்றியுடையவர்களாகின்றனர். இரண்டாவதாக, தேவையானவர்களுக்கு உதவி செய்ததால், ஏற்பட்ட மனநிறைவை அனுபவிக்கின்றனர். இத்தகைய மனநிறைவும், மகிழ்ச்சியும் உல்லாசப் பொழுதுபோக்கில் கிடைக்காது.

Holiday என்றால் Joliday என்ற நிலை வளரும் குழந்தைகளிடத்தே காணப்படுகிறது. பொதுவாக எல்லா இடங்களிலும் ஞாயிறு விடுமுறை தினமாகும். வாரத்தின் முதல் நாளாகக் கருதப்படுவதும், நாட்காட்டியில் இருப்பதும் ஞாயிற்றுக் கிழமைதான். வாரத்தின் முதல்நாளை இறை வழிபாட்டுக்கு ஒதுக்க வேண்டும் என முன்னோர்கள் (பிறநாட்டவர்) Sunday என்றால் Holyday எனக் குறிப்பிட்டு இறைவழிபாடு செய்து அந்த வாரத்தைத் துவக்கி, அடுத்து வரும் நாட்களில் தம் கடமைகளைச் செவ்வனே செய்தனர். நாளடைவில் Holy day என்பது Holiday என மருவியது.

முற்காலத்தில் விடுமுறை தினம் என்பது இறைவழிபாட்டுக்காகவே விடப்பட்டது. ஆனால் பெரும்பாலான இடங்களில் விடுமுறை தினம் என்றால் ஜாலியாக பொழுதைப் போக்கும் தினம் என்ற நிலை

மசால்வடை செய்யும்போது, அரைத்த மாவில், அரைமணி ஊறிய ஒரு பிடி ஜவ்வரிசியையும், 1 பிடி பயிற்றம் பருப்பையும் பிழிந்து போட்டுக் கலந்து வடை தட்டுங்கள். மொறு மொறுப்பாகவும் சுவையாகவும் இருக்கும்.

-கீதாஞ்சலி

வீட்டில் பூண்டு அதிகம் வாங்கி விட்டேன். அதை அப்படியே ஒரு தட்டில் பரப்பி வைத்தேன். என்ன ஆச்சரியம்! நான் பூண்டு வைத்த அலமாரியில் ஒரு ஈ, எறும்பு, பல்லி எதுவும் அண்டவில்லை.

-மீனா சம்பத்

உருவாகிறது. விடுமுறை தினங்களில் முழுவதுமாக வெளியில் சுற்றுவதோ, டிவியில் வரும் எல்லா நிகழ்ச்சிகளையும் தொடர்ச்சியாகப் பார்த்து உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வதோ கூடாது.

இறையுணர்வையும், நல்ல பண்புகளைக் கற்றுக் கொள்வதையும் விடுமுறையின் நோக்கமாக வைத்து அவரவர் வசதிப்படி திட்டமிட்டு விடுமுறையைக் கழிக்க வேண்டும். குடும்பத்தாருடன் கலந்துரையாடல் மிக மிக அவசியம். குழந்தைகளைப் பாச வலையில் பத்திரமாக இவ்வயதில் இருக்கும்படிச் செய்யாவிடில் தானே வெளியேறி, உலக அனுபவம் குறைந்த இவ்வயதில் தீயோரிடம் சிக்கித் தவிக்க நேரிடும். தக்க பருவம் வந்ததுமே, தம் பாச வலையிலிருந்து வெளியில் விட்டால் அவர்கள் மனத்தெளிவுடன் நடந்து வாழ்வில் முன்னேறுவர்.

5-10 வயதுக் குழந்தைகளுக்குத் தாய் கல்வியைக் கற்றுத் தரும் வேலையை செய்ய வேண்டாமே தவிர, கல்வி கற்கும் ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

மற்ற எல்லாச் செல்வங்களையும் விட சிறந்த செல்வம் இவ்வுலகில் கல்விச் செல்வமே என்பதை உணரச் செய்தால் குழந்தைகள் ஊக்கத்துடன் கல்வி கற்று, ஆசிரியர்கள் துணையுடன் முன்னேறி, தன்னம்பிக்கையுடன் வாழ இயலும்.

'வைப்புழிக் கோட்படா, வாய்த்தீயிற்
கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வார்
எச்சம் எனவொருவன் மக்கட்குச்
செய்வன
விச்சை, மற்றல்ல பிற'

என்பதை தாய், தந்தை உணர்ந்து எதிலும் அழியாத, எவராலும் நம்மிடமிருந்து கைப்பற்ற இயலாத கல்விச் செல்வத்தை அளிப்பது பெற்றோரின் கடமை எனச் செயல்பட வேண்டும். குழந்தைகள் தங்கள் திறமைகளை தாமாகவே தெரிந்து கொண்டும். அதனை விரும்பிக் கற்கும் எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும். கல்வியைத் திணிக்கக் கூடாது. குழந்தைகள் தங்கள் திறமைகளை தாமாகவே தெரிந்து கொண்டும் அதாவது வெளிப்படுத்தி வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தி ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வயதுக் குழந்தைகளிடம் இதைச் செய், இதைச் செய்யாதே என்று கூறினால் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அது இயற்கை. ஏன் செய்ய வேண்டும் அல்லது ஏன் செய்யக் கூடாது என விளக்கினால் நிச்சயம் குழந்தைகளிடத்தில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். இதற்குத் தேவை பொறுமையான அணுகுமுறைதான். தீயவை எவை எவை எனக் கூறிவிட்டு, அவற்றைச் செய்தால் தீய பலனே ஏற்படுமாதலால் தீய செயல்களை தீயை விடக் கொடியதாகக் கருதி, அஞ்சி செய்யாமல் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.

புலால் உணவை அதிகம் உண்ணக் கூடாது அல்லது அறவே உண்ணக் கூடாது என்று விரும்பினால் குழந்தையிடம் அதை கட்டளையாகக் கூறாமல், நெய் ஊற்றி ஆயிரம் வேள்விகள் செய்வதைவிட ஒரு உயிரைக் கொன்று உண்ணாமல் இருத்தல் நன்மையைத் தரும் என விளக்கினால் குழந்தை நிச்சயம் புலாலைத் தவிர்க்கும்.

10 வயது முதல் 20 வயது வரை

பிரச்னைகளைத் தரும் வயது என ஏறக் குறைய அனைவராலும் சொல்லக்கூடிய வயது இது. இவ்வயதில் குழந்தைகளுக்கு பல ஐயங்கள் ஏற்படுகின்றன. மேலும் வீட்டை விட்டு வெளியே சென்று நிறைய நேரத்தைக் கழிக்க வாய்ப்புகள் உள்ளதால் பலருடன் பழக நேரிடுகிறது. மாறுபட்ட கருத்துகள் ஏற்படுகின்றன. அதற்காகக் குழந்தையை வீட்டிலேயே வைத்திருக்க முடியாது. குழந்தை செல்லுமிடங்களிலெல்லாம் தாய் செல்லவும் முடியாது. என்ன செய்வது?

மனதைக் கட்டுப்படுத்த முடியாத வயது இது. இதைக் கட்டுப்படுத்த வல்லது தியானம்தான். இதற்குத் தினசரி ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கித் தவறாமல் தியானம் செய்து வர மனதை ஓரளவு கட்டுப்படுத்த முடியும். தியானம் செய்ய, பக்குவமான நிலை வர ஜெபமும், மந்திரங்களும், பக்தி ததும்பும் பாடல்களும் அவசியம். இந்த


"என்னுடைய ஃபெவிக்ரில் ஃபாப்ரிக் கிளிட்டர்ஸ் பொருள்களை உயிர்த்தெழச் செய்கின்றன!"
Fevicryl
Fabric Glitters
For Fabric / Art Painting
புத்துணர்ச்சியூட்டும் வண்ணங்கள். உங்கள் உடைகளுக்கு பளபளப்பையும், மினுமினுப்பையும் சேர்க்கும். சாதாரண உடைகளையும் அசாதியானதாய் ஒளிரச் செய்யும் ஃபெவிக்ரில் ஃபாப்ரிக் கிளிட்டர்ஸ். பாட்டிலிலிருந்து நேரடியாக துணி மீது உபயோகிக்க கூடியது. அதன் பிறகு, துணியின் பின்புறம் சற்று இஸ்திரி செய்ய வேண்டியது தான். ஃபெவிக்ரில் ஃபாப்ரிக் கிளிட்டர்ஸ்ஸை உங்களுக்கு விருப்பமான ஃபெவிக்ரில் அக்ரிலிக் வண்ணங்களுடன் உபயோகித்தால், உங்கள் டிசைன் மேலும் சிறப்பாகத் திகழும்.
சாதாரண தோற்றத்தை கண்கவர் ஒன்றாக்கிடுங்கள் !
பிடிலைட்
ஃபெவிக்ரில்
ஃபாப்ரிக் கிளிட்டர்ஸ்
ஃபாப்ரிக்/ஆர்ட் பெயிண்டிங்கிற்
பிடிலைட் தயாரிப்

ஷு பாலிஸ் தீர்ந்துவிட்டதா? கவலையை விடுங்கள். சிறிது மண்ணெண்ணை அதே அளவு தேங்காய் எண்ணெய் கலந்து ஒரு காட்டன் துணியினால் துடைத்தால் 'ஷு' பளபளாதான். இதையே கொண்டு லெதர் பேக், லெதர் பெல்ட், லெதர் பெட்டி போன்றவைகளையும் துடைத்துப் பாருங்கள். புதியதுபோல் மின்னும்.

-ஹலீமா ஹாஜிபீர்



மூன்றில் ஒன்றிருந்தாலும் போதுமானதே. இறைவனிடம் முழு நம்பிக்கை வைத்து தன் கடமைகளைச் சரியாகச் செய்ய தாய் வழி காட்ட வேண்டும். வெற்றி, தோல்வியைப் பற்றி கவலைப்படாது நேர்மையாக உழைத்து முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வயதில் குழந்தையிடம் அதிக மாற்றத்தை ஏற்படுத்தும் திறன் உடையன இரண்டு. அவை புத்தகங்கள், நண்பர்கள். 'நீ படிக்கும் புத்தகங்கள் என்ன, உன் நண்பர்கள் யார் எனக் கூறினால். நீ எப்படிப்பட்டவன் என்பதைக் கூற முடியும்' என்பது பெரியோர் கருத்து. எத்தகைய நல்ல சூழ்நிலையில் வளரும் குழந்தைகளையும் மாற்றும் திறன் கொண்டவை இவை. பெரியவர்கள் எதைப் படித்தாலும் அதிக பாதிப்பு இராது. பொழுதுபோக்கிற்காகப் படிப்பது என்ற நிலைதான் இருக்கும். ஆனால் அதே புத்தகங்களை இந்த வயதினர் படிக்கும் போது மனம் சஞ்சலப் பட வாய்ப்புண்டு. ஆகவே மனதைப் பண்படுத்தும் ஆன்மீக புத்தகங்கள், அறிவுத் திறனை வளர்க்கும் புத்தகங்கள், நல்ல பொழுதுபோக்குப் புத்தகங்கள் தவிர கேடு தருபவை வீட்டில் இல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். பெரியவர்களும் படிக்கக் கூடாது. வெளியில் அத்தகைய புத்தகங்களை படிக்கிறதா இல்லையா என்பதைக் குழந்தையிடம் ஏற்படும் மாற்றத்திலிருந்து பேச்சிலிருந்து புரிந்து கொள்ளலாம். தேவையற்ற புத்தகங்களைப் படித்தால் அது நம்மைக் கீழான பாதையில் அழைத்துச் செல்லும் என்பதைப் பக்குவமாக எடுத்துச் சொல்லி இருக்க வேண்டும்.

தன் குழந்தைகளின் நண்பர்கள் யார், யார் குழந்தைகள் தேவையற்ற புத்தகங்களைப் படிக்கின்றனரா என்பதைத் தாய் தவறாது கண்காணிக்க வேண்டும். தீயோரின் நட்பு ஏற்படும்' சூழ்நிலையைக் கண்டிப்பாக மாற்ற வேண்டும். அல்லது நம் குழந்தையின் மன உறுதியை வளர்த்து எந்தத் தீய சக்தியும் பாதிப்பை ஏற்படுத்தாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக உடன் பயிலும் மாணவர்கள் டி.வி., சினிமா, நிகழ்ச்சி களையோ அல்லது பிறரைப் பற்றியோ பேசி அரட்டை அடித்து மகிழும்போது, அதில் கலந்துகொள்ளாதவர்களை வம்புக்கு இழுப்பார்கள்.

"தைரியம் இல்லாதவன். டி.வி. அதிகம் பார்ப்பதற்குக்கூட உரிமை இல்லாத வீட்டில் அடிமை வாழ்வு வாழ்பவன்" என்றெல்லாம் கூறி கேலி செய்யும் போது குழந்தையின் மனம் மிகவும் பாதிக்கும். பெற்றோரின் மீது கோபம் வரும். எதிர்த்துப் பேசத் துவங்குவர். குழந்தை தீய வழியில் போவதைத் தடுக்க தாய் கட்டுதிட்டங்களை விதிக்க, முடிவு ஒரே போராட்டம்தான். தன் நண்பர்கள் மிகவும் சுதந்திரமாக இருப்பதாகவும், தன் பெற்றோர் கள் தன்னை அடக்கி ஆள்வதாகவும் குழந்தை கற்பனை செய்து கொண்டு பெற்றோர்களை வெறுக்க ஆரம்பிக்கிறது. அந்தச் சமயத்தில் தன்னிடம் போலி அன்பைக் காட்டுபவர் களையும்கூட மிகவும் நம்பி அவர்கள் வழியே செல்ல ஆரம்பிக்கிறது. இதைத் தடுக்க ஒரே வழி பெற்றோர்களும், குழந்தைகளும் கலந்துரையாடி, வீட்டின் பொருளாதாரம், அவரவர் வேலையின் தன்மை ஆகிய வற்றிற்கேற்ப திட்டமிட்டுச் செயல்படுத்துவது தான். பணத்தையும், அதைவிட முக்கியமாக காலத்தையும் செலவிட திட்டமிட வேண்டும்.

பள்ளி நாட்களில் தினம் ஒரு மணி நேரமும் விடுமுறை நாட்களில் 2 அல்லது 2½ மணி நேரமும் அதிக பட்சமாக டி.வி. பார்க்கலாமா என குழந்தைகளிடம் கேட்டு. அவர்கள் பார்க்க விரும்பும் நிகழ்ச்சிகளையே தாங்களும் பார்க்கப் போவதாய் பெரியவர்கள் குழந்தைகளிடம் கூறும்போது குழந்தைகள் எவ்வளவு பெருமிதத்துடன் எந்தெந்த நிகழ்ச்சிகள் பார்க்கத் தகுந்தன, பயனுள்ளவை என யோசித்துச் செயல்படுவார்கள்.

அடுத்ததாக விளையாட்டு. சில குழந்தைகள் எப்போதுமே விளையாட நினைக்கும். 10- வயது முதல் ஒவ்வொன்றிலும் திட்டமிட்டுச் செயல்பட்டால்தான் எதிர்காலத்திலும் சிறப்பாக வாழ முடியும் என விளக்கினால் நிச்சயம் குழந்தை கேட்கும். பள்ளி நாட்களில் மாலையில் ஒரு மணி நேரம் ஓடி விளையாடுதல் உடல் நலத்திற்கு மிக அவசியம். விடுமுறை நாட்களில் 1½ மணி நேரம் விளையாடலாம். அதை விடுத்து எப்போதும் விளையாடிக் கொண்டிருந்தால் வாழ்வின் அஸ்திவாரமான கல்வியைக் கற்க நேரமில்லாமல் போய் விடும்.

கோடைவிடுமுறையில் கற்பதற்கு ஒன்றுமே இல்லை என பல குழந்தைகள் அதிக நேரத்தைத் தூக்கத்திலும். டி.வி. நிகழ்ச்சிகளைப் பார்ப்பதிலும், அரட்டையடிப்பதிலும் செலவிடுகின்றனர். குழந்தைகள் பயிற்சி பெறக்கூடிய பல வேலைகள், பல கலைகள் உள்ளன. அவரவர் வசதிக்கேற்ப அவற்றைச் செய்யலாம். சில காலம் நம் உடம்பை சோம்பலாக இருக்க அனுமதித்தால், எப்போதும் அப்படியே இருக்க விரும்பும். நாம் உழைக்க வேண்டும் என விரும்பினாலும் முடியாத நிலை ஏற்படும். ஆகவே எப்போதும் சுறுசுறுப்பாக பயனுள்ள வேலைகளைச் செய்து கொண்டேயிருக்க வேண்டும். ஒரு நாளைக்கு இவ்வயதுக் குழந்தைகளுக்கு 6 முதல் 7 மணி நேரத் தூக்கமே போதுமானது. இந்தத் தூக்கமும் ஏறத்தாழ ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இருக்க வேண்டும். 9 மணிக்குத் தூங்கினால் காலையில் 4 மணிக்கும், பத்து மணிக்குத் தூங்கினால் காலை 5 மணிக்கும் எழுந்திருக்கும் பழக்கம் குழந்தைகளிடையே இருத்தல் சாலச் சிறந்தது. அதை விடுத்து ஒரு நாளைக்கு ஏதாவது ஒரு நிகழ்ச்சியை நடுநிசி வரை பார்த்துவிட்டு, 6 அல்லது 7 மணிக்கு எழுந்திருப்பது சிறந்ததல்ல.

வாழ்வின் முக்கிய கட்டத்தில் இருக்கும் இவ்வயதுக் குழந்தைகள் காலையில் பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து திட்டமிட்டு தன் வேலைகளைச் செய்தால், இறைவன் அவர்களுக்கு நிச்சயம் உடனிருந்து உதவி அவர்கள் நிம்மதிக்கு வழி வகுப்பார். இதே போல சாப்பிடும் நேரங்களும் தினமும் ஒரே மாதிரி இருந்தால் உடல்நலத்துடன் இருக்கும் என்பதைத் தாய் அன்புடன் வலியுறுத்த வேண்டும். ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு நேரத்தில் சாப்பிட்டால் நாளடைவில் உடல் நலம் கெடும்.

மல்லிகா பலராமன்

(தொடரும்)

தேவையான பொருட்கள் அனைத்தையும் சரியாக அளந்து பயன்படுத்தினீர்கள். சரியான நேரத்துக்கு சமைத்தீர்கள். கிளறிக் கொண்டே இருந்தீர்கள். பிறகு எப்படி சில இடங்களில் கரிந்தது?

சாதாரண நான்-ஸ்டிக் பாத்திரத்தை வாங்கிப் பார்த்தீர்கள்.


இதற்கு விளக்கம் உங்கள் சாதாரண நான்-ஸ்டிக் குக்வேரின் அடிப் பாகத்தில் உள்ளது. ஆமாம்,

உங்கள் சமையல் திறமைக்குக் களங்கம் வந்தது!

தரம் குறைந்த நான்-ஸ்டிக் குக்வேரின் விலையும் குறைவாக இருக்கலாம் : ஆனால் பிரெஸ்டீஜ் பிரீமியம் நான்-ஸ்டிக் குக்வேரின் தரத்துக்கு முன் இது நிற்கவே முடியாது.

பிரெஸ்டீஜ் பிரீமியம் உங்கள் சமையலறையில் நீண்ட நாள் உழைக்க டிசைன் செய்யப்பட்டது.

இதன் உலகத் தரமுள்ள டெஃப்லான்[2] நான்-ஸ்டிக் பூச்சு - பல தலைமுறை சமையலுக்கு - சப்பாத்திகள், காய்கறிகள், எதுவாயினும் - நீடித்திடும். வெளிப்புறப் பூச்சான சிவப்பு இபோக்ஸி நீண்ட நாள் நின்றிடும். இதன் உறுதியான அலுமினியமோ அடுப்பில் எத்தனை மாதங்கள் வைத்தாலும் வளைந்து நெளியாமல் இருக்கும். ஸாட்டே பேன்களின் அடியில் உள்ள ஆர்க்கிமிடிஸ் ஸ்பைரலும், தவாக்களின் அடியிலுள்ள தெர்மோரேயும்™ உணவு கரியாமல் பார்த்துக் கொள்ளும். உயர்தரமுள்ள கைப்பிடிகள் சுடவே சுடாது. இவற்றுடன் 2 வருட உத்திரவாதமும் உண்டு!



2 வருட உத்திரவாதத்துடன் வரும் இந்தியாவின் ஒரே நான்-ஸ்டிக்.

நான்-ஸ்டிக் புதிதாக வாங்கிப் பார்ப்பதாக இருந்தாலும் உங்கள் புகழுக்குக் களங்கம் ஏற்படுத்தாத பிரெஸ்டீஜ் பிரீமியத்தையே வாங்குங்கள். என்றென்றும் மனம் நிறையச் செய்யும்படி இது அப்படியே இருக்கும்.

Prestige PREMIUM NON-STICK COOKWARE

வாழ்வில் என்றும் நீடிக்கும் சந்தோஷங்களில் ஒன்று.

O&M 5249TAM

தவாக்கள் • ஃப்ரை பேன்கள் • சாஸ் பேன்கள் • ஸாட்டே பேன்கள் • வாணலிகள்



கல்லூரி மாணவிகள் என்றாலே திரைப் படங்களில் அரைநிஜாரும், நுனி நாக்கு ஆங்கிலமும் என அலங்காரப் பதுமைகளாக வருவார்கள் எனக் காட்டிக் கொண்டு இருக்கிறார்களே. இவர்களெல்லாம் திண்டுக்கல் எம்.வி.முத்தையா அரசினர் மகளிர் கலைக் கல்லூரி மாணவியர்களை வந்து பார்க்க வேண்டும். மாணவியர்கள் 35 பேர் கல்லையும், மண்ணையும் சுமந்து, சித்தாள் வேலை புரிந்து கண் பார்வையற்றோருக்காக ஒரு தொழிற்கூடத்தைக் கட்டி இருக்கிறார்கள்!

திண்டுக்கல்லில் இருந்து 25 கி.மீ தொலைவில் உள்ளது வேடசந்தூர். இங்கு ஞானஒளி கண்பார்வையற்றோர் சங்கம் ஒன்று இயங்கி வருகிறது. கூடை, நாற்காலிகள் தயாரித்தல், ஓம வாட்டர் தயாரித்தல் போன்ற சிறு தொழில்களை பார்வையற்றோருக்கு கற்றுத் தருகிறது இச்சங்கம். ஆனால் இதற்குக் கட்டிட வசதி இல்லாமல் ஓலைக் குடிசைகளில் செயல்பட்டது. மழை பெய்தால் போதும் பார்வையற்ற இவர்கள் வீட்டில் விறகு எரியாத நிலை.

இவர்கள் திண்டுக்கல் எம்.வி.எம் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அதிகாரிகளையும், சமூக சேவையில் ஈடுபாடு கொண்டவருமான பேராசிரியை.சரோஜினியை உதவி கேட்டு அணுகினர். இவர்களுடைய நிராதரவான நிலை கண்டு, இவர்களுக்கென ஒரு தொழிற்கூடம் கட்டித் தர திட்டமிட்டார் சரோஜினி.

நாட்டு நலப் பணித் திட்ட மாணவியர்களை இந்த நல்ல பணியில் ஈடு படுத்தக் கருதினார். ஆனால் கட்டுவதற்கு இடம் வேண்டுமே? வேடசந்தூர் தாசில்தார் பெருமாளை அணுகினார்.

அரசு புறம்போக்கு நிலம் ஒன்றை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் டி.பிச்சாண்டி உதவினார். இடம் கிடைத்து விட்டால் போதுமா? அதுவும் இடத்தைத் தேர்வு செய்து அனுமதி பெறவே பல மாதங்கள் ஆகி விட்டன. இதில் உள்ளூர் பிரச்னைகள் வேறு.

ஒரு வழியாக இடப் பிரச்னை முடிந்தவுடன் கட்டிடம் கட்ட நன்கொடைகள் வசூலிப்பதில் இறங்கினார். கட்டிடப் பொருட்களாகவே நன்கொடையாளர்களை தரும்படி மாணவிகள் நேரில் சென்று கேட்டுக் கொண்டனர்.


இதன்பிறகு எந்தக் கடினமான பணியையும் செய்யத் தயாராக இருந்த 35 மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டனர். நாட்டு நலப் பணித் திட்டத்தைச் சேர்ந்த இவர்கள் பேராசிரியை சரோஜினியின் தலைமையில் வேடசந்தூரில் முகாமிட்டனர்.

முதலில் புதர் மண்டிக் கிடந்த இடத்தைச் சுத்தம் செய்து அஸ்திவாரம் தோண்டினர். மிகக் குறைந்த எண்ணிக்கையில் கொத்தனார், கட்டிடப் பணியாளர்கள் பணியில் அமர்த்தப் பட்டனர். கல், மண் சுமத்தல், செங்கற்களைச் சுமத்தல் போன்ற அனைத்துப் பணிகளையும் மாணவிகளே செய்தனர்.

தலையில் சும்மாடு கட்டிக் கொண்டு சித்தாள்களைப் போல் பணிபுரிந்து மிகக் கடுமையாக உழைத்தார்கள்.

செங்கற்களைச் சூளையில் இருந்தே

கட்டிடம் கட்டிய









மாணவிகள் லாரியில் ஏற்றிக் கொண்டு வந்தனர்.

குவாரியில் இருந்து கருங்கல்லைச் சுமந்து கொண்டு மாணவியர்கள் லாரிக்கு வரும் போது, கல்யாணி என்ற மாணவி கால் தவறி விழ, காலில் விழுந்த கல்லால் 6 தையல்கள் போடும் நிலை ஏற்பட்டு விட்டது.

ஆனால் இதற்கெல்லாம் மனம் தளர்ந்து விடாமல் இரவு 10 மணி வரை அயராது உழைத்த மாணவிகளுக்கு 500 சதுர அடி பரப்பில் கட்டிடம் உயர்ந்து வந்ததைக் கண்ட போது மகிழ்ச்சி பொங்கியது.

15 நாள் முகாமில் பணிகள் நிறைவு பெறாத நிலையில், அதன் பிறகு வார விடு முறை நாட்களில் வந்து பணியைத் தொடர்ந்தனர்.

கவர் மட்டம் வந்துவிட்ட நிலையில் சண்முகவேல் டெக்ஸ் டைல்ஸ் அதிபர் வேலுச்சாமி அதற்கு மேல் கூரை நன்கொடை யாக தர முன் வந்தார். மாணவி களின் நெஞ்சங்கள் மகிழ்ச்சியில் நிறைந்தது.

6 மாதங்கள் கழிந்த நிலையில் கட்டிடம் நிறைவடைந்து, கடந்த சில தினங்களுக்கு முன்பு புதிய மாவட்ட ஆட்சியர் சி.சந்திர மௌலி கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

சுமார் 1.5 லட்சம் மதிப்பில் அழகுற அமைக்கப்பட்டுள்ள இந்தப் பார்வையற்றோர் தொழிற் கூடத்தைத் திறந்து வைத்து மாவட்ட ஆட்சியர் பேசும்போது, "பொதுவாக நாட்டு நலப் பணித் திட்டத்தில் மாணவியர்கள் மதிப் பெண்களுக்காக சேருவார்கள். அப்படிச் சேரும்போது கடமைக்காக மரங்களை நட்டு, அறிக்கை சமர்ப்பித்து விட்டால்கூட போதும். மார்க் கிடைத்து விடும். ஆனால் இங்குள்ள மாணவியர் வித்தியாசமானவர்கள். பார்வை யற்றோர் வாழ்விலே ஒளி ஏற்றி வைத்துள்ளார் கள். இதுதான் உண்மையான சேவை. இவர்களை மனமார பாராட்டுகிறேன்" என்றார்.

-கட்டுரை + புகைப்படங்கள்

- எஸ்.ஜெயச்சந்திரன்

கல்லூரி மாணவியர்

சிறுவாச்சூர் மதுரகாளி

காளி...!

என்று சொன்னால் ஏதோ கோபக்காரி, உக்ர தெய்வம், பயத்தைத் தருபவள் என்றெல்லாம் நினைக்கிறோம். காளி அசுரனை அழிக்க அவதாரம் கொண்டவள். அதாவது நன்மைகளை நிலைநாட்ட வேண்டி தீமைகளை அழிக்க உக்ரகோலம் கொண்டவள். கதியற்றவர்களுக்கு 'அஞ்சேல் நானிருக்கிறேன்!' என அபயஹஸ்தம் தந்தவள். நன்மை களைத் தரவே தாயாகி நின்றவள். இவள் எப்படி அஞ்சத் தகுந்தவளா வாள்? அதுவும் அதே காளி மதுரகாளியாகி, மதுரமான காளியாக, லலிதமான காளியாகி அழகு மிளிர செவ்விதழில் புன்னகையோடு அபயக்கரம் காட்டினால்...?

அப்படித்தான் திருச்சிக்கு ஐம்பது கிமீட்டர் தூரத்தில் பெரம்பலூர் அருகே சிறுவாச்சூர் எனும் ஊரில் மதுரகாளியாக அழகின் எல்லையாக, அலகிலா விளையாட்டுடையாளாக அபயம் நாடி வரும் பக்தர்களுக்காக அருள் காக்கும் விழிகளோடு அமர்ந்திருக்கிறாள்.

கோயில் சிறிதெனினும் கீர்த்தி பெரிது. இக்கோயில் மிகப்பழமையானது என்பதற்கு இங்கிருக்கும் சுற்று தேவதைகளும், மற்ற தெய்வங்களுமே சாட்சி. இக்கோயிலில் எட்டு குடும்பங்கள் பரம்பரையாக பூசித்து வருகிறார்கள். அதில் சுந்தரம் பூசாரியும், கோனமுத்துப் பூசாரியும் நாம் போயிருந்தபோது அங்கிருந்தார்கள். கிராமத்தவர்களுக்கே உரிய தன்மையில், அந்த 'ஆயியையே' தங்களுக்குக் கண்ணினும் மேலாக தங்களுக்குள் ஒருத்தியாக பந்தப்படுத்திப் பேசுகின்ற தன்மையில் பக்திப் பரவசத்துடன் பேசினார்கள். மதுரகாளியை மதுரைகாளியாக்கி இவர்கள் சொல்லும் கதை நாட்டு வழக்கில் இருக்கிறது...


"மதுரையை எரிச்ச கண்ணகி அங்கேந்து நடந்தே இங்க வந்திருக்கா. அப்போ இங்க செல்லியம்மன்தான் இருந்தது. நா இங்க ஒரு ராத்திரி தங்கிக்கிறேன்னு கேட்டப்ப செல்லியம்மன் ஒத்துக்கிச்சாம். ராத்திரி வந்த அசுரன் கதவைத் தட்டியிருக்கான். கண்ணகியம்மா கதவ தெறக்கலே. உடனே கதவ உடைச்சிருக்கான். கோபம் வந்தது சூலாயுதம் எடுத்து அசுரனை குத்திக் கொன்னுட்டா. இதோ இந்த பலிபீடம்தான் அது.

யாருக்கும் அடங்காம திரிஞ்ச அசுரனையே கண்ணகி அழிச்சுட்டதால 'நீ இங்கியே இருந்துக்க. நான் மலையிலே இருக்கேன்னு' போயிட்டா செல்லியம்மன். அதனாலதான் இப்பவும் கற்பூர தீபாராதனை

• மாவிளக்கேற்ற மாவிடிக்கிறார்கள்







• மதுரகாளி

பண்றப்போ மலையில் இருக்கிற செல்லியம்மனுக்குக் கற்பூரத்தைத் தூக்கிக் காண்பிச்சுட்டு அப்புறந் தான் இந்த அம்மனுக்குக் காமிப் போம். காப்பு கட்டும்போதும் செல்லியம்மனுக்கு மொத காப்பு. அப்புறம்தான் இவங்களுக்கு..."

கோபுரம் தாண்டி பிரதான மண்டபத்தில் நுழையும்போது பலீபீடம் தாண்டி இரண்டு பக்க மும் பல சிலை ரூபங்கள் இருக் கின்றன. அவை பெரியசாமி, செல்லியம்மன், கிணத்தடி ஐயன், நாககன்னி எனப் பல தெய்வங்கள் என்கிறார்கள் இவர்கள்.

இது ஆதிசங்கரர் வழிபட்ட ஸ்தலம். உக்ரகோலம் கொண் டிருந்த மதுரகாளிக்கு ஸ்ரீ சக்ர மஹாயந்த்ரம் ஸ்தாபித்து சாந்த ஸ்வரூபியாக்கி லலிதையாக்கினார் அந்த மகான் என்கிறார்கள்.

சிறுவாச்சூர் மதுரகாளியம்மன் கோயில் திங்கள், வெள்ளி இரண்டு நாட்கள் மட்டும் காலை ஒன்பது மணிமுதல் ஒரு மணி வரை திறந்திருக்கிறது. தஞ்சாவூர் கும்பகோணத்திலுள்ள பல குடும் பங்களுக்கு இவ்வம்மையே குல தெய்வமாக அமைந்திருக்கிறாள். இவர்களெல்லாம் கல்கத்தா, டில்லி என எந்த ஊர்களுக்குக் குடி பெயர்ந்திருந்தாலும் வருடத்திற்கு ஒருமுறை வருவதை வழக்கமாகக் கொண்டு இருக்கிறார்கள்.

குடும்பமாக வருகின்றவர்கள்

• அங்கப்ரதட்சணம்





பத்து இலட்சத்திற்கும் மேலான இந்தியக் குடும்பங்கள் கடைக்குச் செல்லாமலே யூரோக்ளீன் வேக்யூம் க்ளீனர் வாங்கியுள்ளனர்.



இன்று, ஒரு வாஷிங் மெஷின் அல்லது ஃப்ரிட்ஜைப் போல அத்தனை அத்தியாவசியமாகி விட்டது ஒரு வேக்யூம் க்ளீனர். ஆனால் ஒரு கேள்வி எழுகிறது: சரியான ஒன்றை ஒருவர் எவ்வாறு வாங்குவது? இந்தக் கேள்விக்கான விடையை நாங்கள் உங்களுக்காக எளிதாக்குகிறோம். நீங்கள் உங்களையே இந்த நான்கு கேள்விகளைக் கேட்டுக் கொள்வதே மிகச் சிறந்ததாகும்.

கே: **உங்கள் இல்லத்தில் இதன் நேர்முறை விளக்கம் செய்யப்படுகிறதா?**

முழுமையான நேர்முறை விளக்கத்திற்குப் பிறகே ஒரு வேக்யூம் க்ளீனர் வாங்கப்பட வேண்டும். நீங்கள் ஒரு கடையில் வாங்கினால், அதன் நேர்முக இயக்கத்தை உண்மையில் நீங்கள் காண முடிவதில்லை. உங்கள் இல்லத்தில் செய்யப்படும் நேர்முக விளக்கம் உங்களுக்குத் திருப்தி அளிக்கும்.

கே: **வாங்குவதற்கு முன் நீங்கள் அதைச் சோதித்துப் பார்க்க முடியுமா?**

சிநேகபூர்வமான யூரேகா ஃபோர்ப்ஸ் நபர் யூரோக்ளீனை, நீங்கள் உங்கள் இல்லத்தில், உங்கள் கைப்படவே சோதித்துப் பார்க்க அனுமதிப்பார்.

கே: **பத்து இலட்சத்திற்கும் மேலான குடும்பங்களின் விருப்பத் தேர்வாக இது உள்ளதா?**

உண்மை என்னவெனில் யூரோக்ளீன் வேக்யூம் க்ளீனர் முற்போக்கான, பன்முகத் திறன் கொண்ட மற்றும் உங்கள் தேவைகளுக்கான சக்திமான படைப்பாக விளங்குகிறது. எனவே பத்து இலட்சத்திற்கும் மேலான குடும்பங்கள் இதை விரும்புவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

கே: **காலதாமதம் இல்லாத, விற்பனைக்குப் பிந்திய பணிச்சேவை, வசதியாக உங்கள் இல்லத்திலேயே கிடைக்கும் என்பதற்கான உறுதி நிச்சயம் உண்டா?**

நினைவிருக்கட்டும், சிநேகபூர்வமான யூரேகா ஃபோர்ப்ஸ் நபர் மட்டுமே, தாமதமில்லாத, விற்பனைக்குப் பிந்திய பணிச்சேவையை, 48 மணி நேரத்திற்குள் உங்கள் இல்லத்தில் வழங்க முடியும்.

அனைத்து கேள்விகளுக்கும் இப்போது சரியான விடை உங்களுக்குக் கிடைத்துவிட்டது. சிநேகபூர்வமான யூரேகா ஃபோர்ப்ஸ் நபரிடமிருந்து ஒரு வேக்யூம் க்ளீனரை வாங்குவதை பெரும்பான்மையான குடும்பங்கள் ஏன் விரும்புகின்றன என்பது தெள்ளத் தெளிவாகி விட்டதல்லவா?

[illegible]
யூரோக்ளீன் வேக்யூம் க்ளீனர் இல்லத்தில்
இலவச நேர்முக விளக்கம் பெற, சிநேகபூர்வமான யூரேகா ஃபோர்ப்ஸ் நபரை இன்றே அழைக்கவும்.

EUREKA FORBES LTD.

Friends for life

A subsidiary of Forbes Gokak Ltd.

MUMBAI : TEL : 4301725, 4301718. **DELHI** : TEL: 6427401, 6427415. **MADRAS** : TEL: 4348328, 4348304.
BANGALORE : TEL: 5536362, 5536383.



• சுற்றுப்புறத் தேவதைகள்

பெண்களை இங்கேவிட்டுவிட்டு ஆண்கள் மட்டும் மலை மேலுள்ள பெரியசாமியைத் தரிசிக்கச் செல்கிறார்கள். மலைமேல் பெண்கள் போகக் கூடாதாம். கோயிலில் தங்கும் பெண்கள் அங்கேயே குளித்து மடியுடுத்தி அங்கேயே இருக்கும் உரலில் மாவிளக்கேற்ற மாவு இடிக்கிறார்கள். அதனைச் சலித்து மாவாக்கி தட்டிலே தீபமேற்றத் தயாராகும் போது ஆண்களும் திரும்பி விடுகின்றனர். பிறகு அவர்களும் குளித்துத் தயாராகி அவர்களின் கண் கண்ட தெய்வமான அன்னைக்கு மாவிளக் கேற்றுகிறார்கள். நிறைய பேர் அங்கப்ரதட்சணம் செய்கின்றனர்.

"இந்த அம்மனோட மகிமை சொல்ல முடியாது. கேட்டா கேட்ட வரம் கொடுக்கும் அம்மா இவள். எங்க அக்காவோட மாமனார் வீட்டுக் குல தெய்வம் மதுரகாளி. என்னோட ஹஸ்பெண்ட் மஞ்ச காமாலையிலே படுத் துண்டப்போ இந்த அம்மனுக்கு வேண்டிக் கச் சொன்னா அக்கா. அவருக்கு நல்லா தேவலையாச்சு. இதையே நான் பக்கத்தில் இருக் கிறவங்களுக்கும் சொல் னேன். அருமையா பெத்த பிள்ளைக் குழந்தைக்கு அடிக்கடி உடம்பு வந்து படுத் தினதுன்னு என் ஃபிரெண்ட் வேண்டிக் கிட்டா. எங்க வேண் டுதல்கள்ளாம் நிறை வேறி இப்போ மாவிளக் குப் போட வந்திருக் கோம்..."


என்கிறார்கள் விஜயா, ரேவதி, சீதா லக்ஷ்மி.

விஞ்ஞானத்தால் தீர்க்க முடியாத குறை அன்னையிடம் வந்து சொல்லப்படுகிறது. மனி தர்களில் ராட்சசர் களாக இருப்பவர்களால் பாதிக்கப்பட்டு மனம் நலிந்தவர்கள் ஓடோடி வந்து 'அம்மா நீயன்றி யார் துணை' என அழுகிறார்கள். பால் குடம் எடுக்கிறார்கள். மனிதர்களின் உறவுகளின் மீதும் மனம் கசந்து போகும் போது அன்னை மட்டுமே தன் பங்கயக் கண்கள் திறந்து ஆறுதலளிக்க முடியும் எனதான் ஓடோடி வருகிறார்கள். அப்படி வந்து அவள் திருவடி சரணம் எனச் சரண் புகுந்தவர்களைத்தான் அங்கு நிறைய காண முடிந்தது.

இந்த முறை கோயிலுக்கு செண்பகம் சில்க்ஸ் உரிமையாளர் ஜம்பகம் ராமசாமியும் உடன் வந்திருந்தார். அவருடைய தாயாரின் குலதெய்வமாம் மதுரகாளி.

"அப்போதெல்லாம் இங்கே ஒரே காடா இருக்கும். ரொம்ப கட்டு திட்டங்கள் உண்டு. அம்மன் மது ரையை எரிச்சு இங்க வந்ததாலே ரொம்ப கோபமா இருக்கா அப்படின்னு பயப்படுவாங்க. பூசாரி ...ன் கூட நைவேத்யம் ...ரம் செய்யும்போது ...ாயக் கட்டிகிட்டு ...ான் செய்வாங்க. ...ந்துகிட்டு வர்றவங்க ...ட்லேருந்து ரெடி ...மடா கொண்டு வர்ற ...தெல்லாம் கூடாது. இங்கே வந்து குளிச்சு மாவிடிச்சுதான் மா ...ளக்கு ஏத்தணும்" ...ன்றார். அவருடைய ...கோதரரும் இந்த அம் மனின் வரம்தரும் ...ாங்கை நிறையவே சொல்லிக் கொண் ...ருந்தார். சென்னை ...ில் இந்த அம்மன் ...பெயரில் ஒரு அசோசி ...யேஷனே இருக்கிறது. ...அவர்கள் வருடத்திற்கு ...ருமுறை இங்கே வந்து

• மதுரகாளி



• சுந்தரம் பூசாரி





• மாவிளக்கேற்றும் விஜயா, ரேவதி, சீதாலக்ஷ்மி

மிகச் சிறப்பாக பூஜைகள் செய்கிறார்கள் என்றார் அவர்.

அவளின் பிரபாவங்களைக் கேட்டுக் கொண்டு மண்டபம் தாண்டி உன்னே சந்திதிக்குப் போகிறோம். சின்ன உருவத்தில், அமர்ந்த வாக்கில் அந்தச் சிம்மவாஹினி வீற்றிருக்கும் அழகே அழகு! மஞ்சள் காப்பு அணிந்து செவ்விதழ்களில் இளநகை ததும்ப, வில் போன்ற புருவங்கள் வளைந்து மேல் செல்ல, அருள் பொழியும் கண்ணால் நம்மை அமுதத் தாலாட்டுகிறாள் அன்னை. ஒரு கையிலே உடுக்கையும், மற்றொரு கையிலே சூலாயுதமும், இன்னொரு கையிலே பாசாங் குசமும், பிறிதொரு கையிலே அமுதக் கிண்ணமும் தாங்கி நமக்கு அருள் பாலிக்கிறாள்.


பூசாரி அன்னையின் திருநாமங்களைச் சொல்லி பூசித்து, மேலே இருக்கும் செல்லியம்மனுக்குக் கற்பூரத்தை உயர்த்திக் காட்டி பின்னர் மதுர காளிக்கும் ஆராதனை செய்கிறார். அதே போல நைவேத்யம் செய்யும் போதும் உரத்த குரலிலே, 'இன்னார் வந்திருக்கிறார்கள், சுற்றுப் பரிவாரங்களுடன் அமர்ந்திருக்கும் மதுரகாளி அருள்பாலிக்க வேண்டும்' என வேண்டுகோளாக மண்டபத்திலிருந்து குரல் கொடுக்கிறார்கள் இவர்கள்.

திங்கள் வெள்ளி மட்டுமே அரைநாள் கோவில் திறந்திருக்கும். மற்ற நாட்களிலே அன்னை நிஷ்டையிலே ஆழ்ந்து விடுவாளாம். அந்தச் சமயங்களில் எந்தச் சத்தமும் இங்கே கேட்கக் கூடாது என்பதில் கண்டிப்பாக இருக்கிறார்கள் இவர்கள்.

கோயில் ஒன்பது மணிக்குத் திறந்தவுடன் பூஜை ஆரம்பிக்கிறது. அபிஷேகத்திற்கு எத்தனை பேர் பால் கொண்டுவந்தாலும் அவை அனைத்தும் ஒன்றாகக் கொட்டப்பட்டு பதினோருமணிக்கு அபிஷேகம் செய்கிறார்கள். ஒரு மணிக்கு மஹா தீபாராதனை நடைபெறுகிறது. அதற்குப் பின் நடைசாத்தி விடுகிறார்கள். வருடப் பிறப்பு, நவராத்திரி பத்து நாட்கள், தீபாவளி, கார்த்திகை தீபநாள், எனச் சில நாட்களிலும் விசேஷமாகக் கோயில் திறக்கப்படுமாம்.

சித்திரை திருவிழா மிகப் பெரிய அளவில் இங்கு கொண்டாடப் படுகிறது. சித்திரை அமாவாசை தொடங்கி பதினைந்து நாட்கள் இவ்விழாவில் காப்பு கட்டுதல், பூச் சொரிதல், மலைக் கோயிலில் விழா என பிரம்மாண்டமாக நடைபெறுமாம்.

இவள் காவல் தெய்வமோ, எல்லைத் தெய்வமோ, குல தெய்வமோ... ஆனால் இன்றும் பலருக்கும் கண் கண்ட தெய்வமாக விளங்குவதை வந்து நவியும் பக்தர்களின் வாய் மொழியாகவே அறிந்து கொள்ள முடிகிறது.



- மஞ்சுளாரமேஷ்
படங்கள் : ஜி. சுரேஷ்

3M

புதிய மேம்படுத்தப்பட்ட ஸ்காட்ச் பிரைட.
முப்பது நாட்களும் மின்னலடிக்கும் புன்னகை.



கூடுதல் சக்திவாய்ந்த ஸ்காட்ச் பிரைட் ஸ்கரப் பேட் இப்போது இந்தியச் சமையலறைகளுக்காகவே உறுதியான, புதிய ஃபைபரில் விசேஷமாக உருவாக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக இருமடங்கு தடவைகள் சிறப்பாகச் சுத்தம் செய்யப் பயன்படுத்தலாம். விலையோ ரூ. 5.00* மட்டுமே. அதாவது நாளொன்றுக்கு 17 பைசா செலவில் முழுமையான சுத்தம், முழுமையான சுகாதாரம், முழுமையான பாதுகாப்பு. மாதம் முழுவதும்.



*Maximum retail price for 7.6 cms x 7.6 cms Scotch Brite scrub pad.

வாஸ்து எனும் புதையல்

நாம் வசிக்கின்ற இந்த பூமியானது தன்னைச் சுற்றிலும், தன்னகத்தேயும் நம் கண்களுக்குப் புலப்படாத சக்தியையும் அதிர்வுகளையும் கொண்டுள்ளது. இதே போல் மனிதனுக்கே புலப்படாத சக்தியும், அதிர்வுகளும் அவனுள் இருக்கின்றது. இந்த பூமியிலிருக்கும் சக்தியும், மனிதனுக்குள் இருக்கும் சக்தியும் இணைந்து பெரிய மாற்றங்களைத் தந்து மனிதனை வாழ வைக்கின்றது. பூமியில் உள்ள பஞ்ச பூதங்களாகிய வானம், பூமி, காற்று, நீர் மற்றும் நெருப்பு பல ரூபங்களில் மனிதனுள் சக்திகளை ஏற்படுத்துகின்றது.

மனிதன் தான் வசிக்கும் வீடு, தான் தொழில் செய்யும் இடம் அனைத்தும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நம்




முடைய வாஸ்து சாஸ்திரம் கூறுகின்றது. சாஸ்திரப்படி அமைந்தால் மனிதன் சொர்க்கத்தை இங்கேயே இந்த உலகிலேயே காணலாம். இதற்கு மாறாக அமைகின்ற பொழுது மனிதனுக்குச் சொல்லில் அடங்காத அனேகத் தொல்லைகள் ஏற்படுகின்றது. (இப்படி என்னுடன் தொடர்பு கொண்டு எழுதிய பல வாசகர்கள் இருக்கிறார்கள். உங்களுக்கும் ஐயங்கள் இருக்குமானால் 13, பாரதி நகர் 2-வது தெரு பீளமேடு, கோவை – 4 தொ: 577917 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்)

இந்த இதழில் நாம் வீட்டின் தலைவாசலை எங்கு அமைப்பது என்பதை தெரிந்து கொண்டு நம் வீட்டின் தலைவாயிலை சரிசெய்து கொள்வோம். அனேகர் இன்று தன்னுடைய ராசிப்படி வீட்டின் தலைவாசலை பல திக்குகளில் அமைத்துக் கொள்கின்றனர். இது சாஸ்திரப்படி சரி என்றாலும், கட்டிடம் கட்டியவர் இறந்த பிறகு அவரது சந்ததிகளும் அதே வீட்டில் வாழ்வதால், கீழ்க்கண்ட ஆராய்ந்து அறிந்த நடைமுறையை பின்பற்றுவதும் சாஸ்திரப்படி ஏற்புடையதாகும். நாம் எந்தத் திசையில் வாயிற்படி அமைத்தாலும் அந்தப் பகுதியை 9 சம பாகங்களாக பிரித்துக் கொள்ள வேண்டும். வெளியிலிருந்து வீட்டிற்குள் நுழையும் பொழுது வலது பாகத்தில் 5 பாகங்களையும் இடதுபாகத்தில் 3 பாகங்களையும் விட்டு விட்டு மீதி பாகத்தில் தலைவாசல் வைக்க வேண்டும். வீட்டிலிருந்து வெளியில் செல்லும் பொழுது அந்த பாதை வடக்கு திசையையோ, கிழக்கு திசையையோ பார்த்துச் செல்லுமானால் மிகவும் விசேஷமானதாக அமையும். வடக்கு; வடகிழக்கு பாகத்தில் தலைவாசல் அமைந்தால் மிகவும் நன்மை தருவதுடன் பண வருமானங்கள் பெருகும். கிழக்கும், வடகிழக்கும் நன்மை தருபவைகள். இந்த பாகத்தில் தலைவாசல் அமைந்தால் பிரகாசமான வாழ்க்கை அமையும். தெற்கும் தென்கிழக்கும் அவ்வளவாக சரியாக இல்லாவிட்டாலும் சிறந்த வாஸ்து வல்லுனர்களைக் கொண்டு சரியான இடத்தில் வாசல் அமைத்து அதற்கு இணையாக எதிர் திசையில் மற்றொரு வெளி வாசல் தவறாமல் அமைக்க வேண்டும்.



• பி.ஜே.ரவிராஜ்


மேற்கும் வடமேற்கும் வாழ்வில் சிறந்த வெற்றியை தரும். வடக்கும் வடமேற்கும்


SILENCE PLEASE

வாழ்வின் நிலையற்ற தன்மையை கொடுத்து விடும். கிழக்கும் தென்கிழக்கும் வாழ்க்கையில் கடினமான விளைவுகளை ஏற்படுத்திவிடும். தெற்கும் தென்மேற்கும் பணத்தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதுடன் பெண்களின் உடல்நல பாதிப்பை ஏற்படுத்தும். மேற்கும், தென் மேற்கும் பண நஷ்டத்துடன் மான அவமானங் களை ஏற்படுத்தி மனிதனை கீழ் நிலைக்குக் கொண்டு சென்று விடும். கீழ்க்கண்ட வரை படத்தைக் கொண்டு எங்கு தலைவாசல் அமைக்கலாம் என்பதனை அறிந்து கொள்ள லாம்.

இந்த விஷயங்கள் அனைத்தும் மனிதன் நன்கு அறிந்து கொண்டு தான் வசிக்கும் வீட்டின் நிலையை நன்கு அறிந்து தன் வீட்டின் தலைவாசலை மாற்றிக் கொள்ள வேண்டும். மனிதன் சகலவிதமான இன்பங் களையும் அனுபவிக்க வேண்டும் என்பதற் காகவே படைக்கப்பட்டவன். அவனுக்காகவே இந்த உலகம் படைக்கப்பட்டது. இயற்கையின் விதிகளை நன்கு அறிந்து தனக்குச் சாதக மாக்கிக் கொள்ளவே மனிதனுக்கு சாஸ்திரங் கள் கொடுக்கப்பட்டுள்ளது.

1. கொடுமையான நோய் தாக்குதலுடன் மரணமும், கோர்ட் வழக்கும் ஏற்படும்.
2. எதிரிகள் அதிகமாவார்கள்.
3. எல்லா வகையிலும் சந்தோஷம் ஏற்படும்.
4. தடங்கல் அற்ற வாழ்வும் லாபங்களும் ஏற்படும்.
5. நல்ல பொருள் வரவும் அதிக நண்பர்கள் உறவினர்கள் வருகை.
6. நன்மைகள் விளையும்.
7. நல்லதல்ல.
8. முன்னேற்றங்கள் ஏற்படாது.
9. நன்மைகள் விளையாது.
10. பெண்களின் ஆதிக்கம் பெருகும்.
11. எல்லா வகையிலும் முன்னேற்றம் ஏற்படும்.
12. நிலையான நல்ல வருமானங்கள் ஏற்படும்.
13. சண்டை சச்சரவுகள் ஏற்படும்.
14. அவப்பெயர் ஏற்படும்.
15. மன உளைச்சலும் உடல் உபாதைகளும் ஏற்படும்.
16. நகைகளும், பணங்களும் தொலைந்து போகும்.
17. தீ விபத்தும், ஆண் குழந்தைகளின் உடல்நலமும் பாதிக்கும்.
18. தீயகுணங்கள் ஏற்பட்டு ஆண்கள் நடத்தை கெட்டுப் போவார்கள்.



19. சில்லரை தொல்லைகளும், அவப்பெயரும் ஏற்படும்.
20. நன்மை தரும்.
21. நன்மைகள் விளையாது.
22. தவறான நடவடிக்கைகள் ஏற்படும்.
23. பணத்தட்டுப்பாடு ஏற்படும்.
24. மகனின் படிப்பும், உடல்நலனும் பாதிக்கும்.
25. பணநஷ்டத்துடன் ஆண்களுக்கு விபத்துக்கள் ஏற்படும்.
26. நேர்மை அற்றவர்களாக மாறி விடுவர்.
27. பணத்தட்டுப்பாடு ஏற்படும்.
28. நல்ல குணநலன்கள் ஏற்படும்.
29. நன்மைகள் ஏற்படும்.
30. வேலையிழந்து, தொழில் பாதித்து பெயர் கெட்டு விடும்.
31. நன்மைகள் ஏற்படும்.
32. உடல்நிலை பாதிக்கும்.



'சுட்ட எண்ணையைத் தொடாதே வறுத்த பயிரை விடாதே' என்பது ஒரு பழமொழி. சுட்ட எண்ணெயை மறுபடியும் உபயோகிப்பதனால் வயிற்றுக் கோளாறு மற்றும் பல நோய்கள் வருகிறது.


'வறுத்த பயிர்' ஊட்டச் சக்தி மிகுந்தது. எத்தனை நாள் வைத்து உபயோகித்தாலும் கெடுதி ஏற்படாது.

— எஸ்.விஜயா சீனிவாசன்

புதுமையான மோர்க் குழம்பு

உடைத்த கடலை, சீரகம், ப.மிளகாய், தேங்காய் போட்டு அரைத்து, மோரில் கலக்கி கொதிக்க வைத்தேன். மோர்க் குழம்பு ரொம்ப நன்றாக இருந்தது.

– சித்ரா



3, 4, 5, 6, 10, 11, 12, 20 மற்றும் 29 ஆகிய பகுதிகள் மட்டும் முக்கிய வாசல் அமைப்பது எல்லா வகையிலும் சிறப்பாக அமையும்.

மேலும் கதவுகள் எப்பொழுதும் வீட்டில் இரட்டைப் படையிலேயே இருக்க வேண்டும். 2, 4, 6, 8, 12 ஆக இருக்கலாம். 10 தவிர்ப்பது நல்லது. இதில் சுற்றுச் சுவர் கதவுகளை கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது. வீட்டின் அறைகளில் கதவுக்கு நேராக ஜன்னல்கள் சரியான இடத்தில் அமைய வேண்டும். வடக்கையும், கிழக்கையும் பார்த்த வீட்டில் ஒரே கதவையும், தெற்கையும், மேற்கையும் பார்த்த வீட்டில் தலைவாசலுக்கு நேர் எதிர்த் திசையில் அவசியம் கதவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நான்கு பகுதியிலும் வாசல் அமைத்துக் கொள்வது மிகவும் நன்மைகள் விளையும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இன்றைக்கு பாதுகாப்பைக் கருத்தில் கொண்டால் இவை நடைமுறைக்கு முரண்பாடாக மாறிவிடும்.

தலைவாயில் வெளியிலிருந்து வரும்பொழுது எப்பொழுதும் வீட்டின் உள்முகமாகவே திறக்கப்பட வேண்டும். இடதுபுறம் மட்டுமே திறக்கப்பட வேண்டும். வீட்டின் மத்தியப் பகுதியில் அமையாமல் இருப்பது நல்லது. எதிர்வீட்டுத் தலைவாசலும், நம் வீட்டுத் தலைவாசலும் எதிர், எதிராக அமையக் கூடாது. இப்படி அமைத்தால் இரண்டு வீட்டிற்கும் பாதிப்பு ஏற்படும். தலைவாசலுக்கு நேராக எந்தவிதமான குத்தும் இருக்கக் கூடாது. வழி, மரம், கட்டிடம், கதவு முனை, கிணறு, கோவில், தூண், படி முதலியன கிரஹ தோஷங்களை ஏற்படுத்தும். இவைகள் அப்படி இருந்தாலும், வீட்டின் உயரத்தைப் போல் இரண்டு மடங்கு தூரம் நம் வீட்டை விட்டுத் தள்ளி இருந்தால் இவைகளின் பாதிப்பு நீங்கி விடும். இவை அனைத்தும் தலை வாசல் கதவிற்கு மட்டுமே பொருந்தும். பின் வாசல் கதவிற்குப் பொருந்தாது.

தலைவாசல் அமைக்கின்ற பொழுது ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் வீடு கட்டுபவர்களின் ஜாதகத்தை ஜோதிட ஞானம் பெற்ற, ஆராய்ந்து அறிந்த ஆராய்ச்சியாளர்களின் ஆலோசனையின் பேரிலேயே, காலநிலைகளை அறிந்து தலைவாசல் அமைக்கப்பட வேண்டும். அப்படி அமைக்கின்ற பொழுது வாஸ்து வல்லுனர்களின் ஆலோசனைப்படியே அமைக்கப்பட வேண்டும். தலைவாசல் மனிதனின் தலை எழுத்தை நிர்ணயிக்கின்ற வாசல். வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ள பிரம்மஸ்தானத்தை சிறப்பாக அமைக்க வேண்டும். வீடு கட்டுகின்ற பொழுது சிறு சிறு விஷயங்களையும் நன்கு யோசித்தே செயல்பட வேண்டும். அதே போன்று பழைய வீடுகளை வாஸ்துவின்படி சரிசெய்யும் பொழுது மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும்.

பலர் நினைக்கக்கூடும் நான் அடுக்கு மாடி கட்டிடத்திலிருக்கின்றேனே! அல்லது நான் வாடகை வீட்டில் குடியிருக்கின்றேனே! எனக்கு விமோசனமே கிடையாதா! எனக்கு இருக்கின்ற சொந்த வீட்டில் கூட தற்பொழுது மாற்றங்கள் செய்ய பணம் இல்லையே என்ற மனக்குமுறல் இருக்கும். இவர்களுக்கும் விடைகூறுகின்றது வாஸ்து. யந்திரா, தந்திரா, மந்திரா ஆகிய மூன்று வழிகளில் நிச்சயமாக விமோசனம் கிடைத்து வாஸ்துவின்படி செயல்பட வழிவகுத்து விடும். யந்திரம் என்றவுடன் இன்றைக்குப் பலர் விளம்பரப் படுத்திச் செய்வது போல் அல்லாமல் தெய்வீகக் குறியீட்டு வரைபடங்கள் மனிதனின் நிலைகளை மாற்ற நல் பாதையை வகுக்கும். இன்னும் சைனீஸ் ஓட்டல்களில் பார்ப்போமேயானால் இவைகள் இருக்கும். தந்திரா என்பது ஒரு விதமான பூஜையை குறிக்கும். இதனால் இயற்கை வழியே தெய்வீக வழி காட்டுதலை அறிதல். இந்த வழிபாடும் மனிதனின் நல்வழிப் பாதைக்கு வழிகாட்டும். மந்திரம் என்பது ஏதோ விபரீதம் என்று எண்ண வேண்டாம். வேதங்களில் உள்ள சுலோகங்களை சரியான உச்சரிப்புடன் நம்முடைய உடல் அதிர்வுக்கு ஏற்ற சுலோகங்களை அறிந்து சொல்வது. சரியாக இதில் ஆராய்ந்து அறிந்த வல்லுனர்களின் ஆலோசனைபடி இதில் ஏதேனும் ஒன்றைக் கடைபிடித்தாலே நாம் 'வாஸ்துவின்'படி செயல்பட வழிவகுத்து விடும். சாஸ்திரத்தைப் பின்பற்றி நாம் மேலும் புதையலை நோக்கிச் செல்வோம்.

-பி.ஜே.ரவிராஜ்

(தொடரும்)


இதோ அனைத்திலும் அதிக
உலர்வான, அதிக மெல்லிய டயாப்பர்:
புதிய ஹகிஸ் அல்ட்ராட்ரிம்.
புதிய ஹகிஸ் அல்ட்ராட்ரிம்
அனைத்திலும் அதிக உலர்வான, அதிக மெல்லிய டயாப்பர்
Ogilvy&Mather 1134 TM

நம்முடைய முன்னோர்களின் பெருமையும் சிறப்பும் அளவிடற்கரியது. அவர்கள் படைத்த அற்புதங்களில் ஒன்று ஸ்ரீசக்ரா வடிவம். இதனுடைய ஆற்றலை நான் தெரிந்து கொண்டது தற்செயலாகத்தான். இதன் பெருமையை நான் உணர உணர எனக்கு வியப்பாகத்தான் இருக்கிறது...."



என்கிறார் முத்துகிருஷ்ணன் எனும் இளைஞர் "நான் பலன் சொல்லச் சொல்ல அது சரியாக நடக்க, என்னை ஏதோ மந்திரவாதி, தந்திரவாதி, சாமியார் மாதிரி பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். அதெல்லாம் ஒன்றுமேயில்லை. கணக்கை அடிப்படையாக வைத்துத்தான் நான் இத்தனையையும் செய்கிறேன்" என்கிறார்.

என்ன செய்கிறார் இவர்?

ஸ்ரீசக்ரா ஒருநாள் உலகையே ஆளப்போகிறது!

நம்முடைய முன்னோர்கள் வகுத்து ஆதிசங்கரரால் ஆற்றல் மிகுந்த முறையில் பயன்படுத்தப்பட்ட ஸ்ரீசக்கர வடிவத்திற்கும் மனிதனுடைய வாழ்க்கைக்கும் தொடர்பு உண்டு என்பது இவருடைய தியரி. மனிதருடைய வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை அவனுடைய பிறந்த தேதி, கையெழுத்து இவற்றிலுள்ள கோடுகள் முக்கோணங்கள் இவற்றைக் கொண்டு, ஸ்ரீசக்கரத்திலுள்ள வடிவங்களோடு ஒப்பிட்டு இவர் வரையறுக்கிறார். எதிர்காலத்தைச் சொல்கிறார்.

"நான் ஜோஸ்யனோ, எண் கணிதம் கூறுபவனோ, ஆன்மீகவாதியோ, அல்ல" எனத் திட்டவட்டமாக மறுக்கும் இவர்,



"இது முழுக்க முழுக்க கணிதத்தின் அடிப்படையில் வருகிறது. அந்த வியப்பான உண்மை என்னை வந்து அடைந்தது வேண்டுமானால் ஆச்சரியம் என்று சொல்லலாம்..." என்கிறார்.

இப்போது சென்னை மந்தைவெளி, என்.1. சடையப்பன் தெருவில் (தொலைபேசி: எண்.1937182) வசிக்கும் இவர் மதுரைப் பக்கத்தைச் சார்ந்த கம்பளத்து நாயக்கர் பரம்பரையைச் சேர்ந்தவர். கம்பளத்து நாயக்கர்கள் தாந்த்ரீகத்திற்குப் பெயர் போனவர்கள் என்பார்கள். சோழியை உருட்டிப் போட்டுக் கச்சிதமாகப் பலன் சொல்வார்களாம். இவருடைய தாத்தாக்கள் இப்படியெல்லாம் செய்ததுகூட இவருக்குத் தெரியும் என்கிறார் இவர்.

"ஆனால் நான் கடவுளை நம்பாதவன் என்றால் ஏதோ நாத்திகவாதி அல்ல. நான் கடவுளைப் பார்க்கவில்லை, நம்பவில்லை, அவ்வளவுதான். ஜி.டி.நாயுடு கல்லூரியில் டிராப்ட்ஸ்மேன் கோர்ஸ் படித்தேன். அப்போதே இந்தக் கோடுகளும், முக்கோணங்களும்,



தான் உலகையே ஆளுவது போல எனக்குத் தோனும். இதைப் பற்றி நிறைய படித்துக் குழப்பிக் கொண்டிருந்தேன். நாம் ✡ எனும் சிம்பலை முருகனுக்கு உரியதாக வைத்திருக் கிறோம். இதையே ஜெர்மனியின் கொடியில் வைத்திருக்கிறார்கள். நாம் போற்றும் 'ஸ்வஸ்திக்'கை ஹிட்லர் பயன்படுத்தி இருக்கிறார். எல்லாம் கோடுகள், முக்கோணங் கள், சதுரங்கள். மொழி வேறுபட்டாலும் முருகனுக்கும், ஜெர்மனிக்கும் அடிப்படையில் தொடர்பு இருந்திருப்பதைப் பார்க்க முடி கிறது. இப்படித்தான் மூளையைப் போட்டு கசக்கிக் கொண்டிருந்தேன்.

ஒரு தடவை கபாலீஸ்வரர் கோயிலில் உட் கார்ந்து கொண்டிருந்தபோது யாரோ தூக்கிப் போட்ட ஒரு ஹிந்து பேப்பரின் பக்கம் என்னை நோக்கிப் பறந்து வந்தது. அதில் 'ஸ்ரீசக்ரா'வைப் பற்றி ரஷ்யாவில் ஆராய்ச்சி செய்த விஞ்ஞானி கூறுகின்ற தகவல்கள் இருந்தன. அந்த ஸ்ரீசக்ரா என்னை வியப்பில் ஆழ்த்தியது. ஹிந்து மூலமாக முகவரி கண்டு பிடித்து அவருக்கே எழுதினேன். பதிலும் கிடைத்தது. மேலும் நிறைய ஆராய்ச்சி செய்தேன்.

'ஸ்ரீசக்ரா'வின் ஒவ்வொரு கோட்டிற்கும் ஒரு அர்த்தம் இருப்பதை உணர ஆரம் பித்தேன். இதே கோணங்கள் மனிதனின் வாழ்க்கையிலும் இருக்கிறது. இரண்டையும் ஒப்பிட்டு என்னால் ஒரு மனிதனின் எழுச்சி வீழ்ச்சிகளை சொல்ல முடிந்தது. இதை ஒரு பரிசோதனையாகத்தான் ஆரம்பித்தேன். நான் சொல்லச் சொல்ல பல விஷயங்கள் உண்மை யாக ஆவதைப் பார்க்கப் பார்க்க வந்து பலனடைந்தவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள், நான் ஆச்சரியப்பட ஆரம்பித்தேன்....'' என்கிறார் முத்துகிருஷ்ணன்.

"ஏனென்றால் எனக்கு ஒரு விஷயம்தான் புரியவில்லை. நான் சொல்வது 60% உண்மை யாக இருக்கிறது. மேலும் பயிற்சி செய்து 60% லிருந்து 80% நோக்கி முன்னேறிக் கொண்டு இருக்கிறேன். 100% என்னால் துல்லியமாகச் சொல்ல முடியாது. அதற்குக் காரணம் மனி தன் பிறந்த பிறகு பெயரிட்ட பிறகு அவனுக்கு ஏற்படுகின்ற கோணங்களைக் கொண்டே நான் சொல்ல முடியும். ஆனால் அவன் உயிர் தரித்துத் தாயின் கர்ப்பத்தில் வாழும் அந்தக் காலக் கட்டத்தைப் பற்றி யார் கணிக்க முடியும்? இதனால் என்னால் 100% சரியாகக் கணிக்க முடியாது என்று தெரியும்.

தவிர இப்படி நான் சொல்வது கணித அடிப்படையில். எனக்குள் என் முன்னோர் களின் தவ வலிமை ஏதாவது இருக்கிறதா அல்லது ஏதாவது தெய்வச் செயலா என எனக்கே புரியவில்லை'' எனத் தலையைச் சொரிந்து கொள்கிறார் இவர்.

''பின்னிரண்டாக இருப்பதை நானே விரும்பவில்லை. ஏனென்றால் அப்படி இருக்குமானால் என்னோடு இந்த அற்புதக் கலை மறைந்து விடும். கணிதத்தின் அடிப் படையில் இது முழுமையானது என்றால் நான் மற்றவருக்குச் சொல்லிக் கொடுத்து அழியாமல் காக்க முடியும் அல்லவா? ஆனால் கணிதம்தான் இதற்கு அடிப்படை என்றால் ஒரே நேரத்தில் பிறந்த இருவரின் எதிர்காலம் ஒரே மாதிரியாகத் தானே இருக்க வேண்டும்? அதுதானே நியாயம்? ஆனால் அவர்களின் கையெழுத்து வித்தியாசப்படுவது ஏன்? இருவரின் வாழ்வும் வித்தியாசமானவை என்பதை என்னால் கணித்துச் சொல்லப் படுகிறதே ஏன்?'' என்கிறார் இவர்.

இவருக்குள் ஏதோ ஒன்று ஓயாமல் இயங்கிக் கொண்டு இவரைத் தவிக்க வைத்துக் கொண்டு இருக்கிறது என்பதை இவருடைய பேச்சிலிருந்து நன்றாகவே உணர முடிகிறது. இவர் ஆராய்ச்சி நிலையில் தவித் துக் கொண்டிருந்தாலும் பல சமயங்களில் இவர் சொல்வதெல்லாம் நடந்து கொண்டு வந்திருக்கிறது.

அனைவரும் ராஜீவ்காந்தி பெரும்பான்மை யான பலம் பெற்று மீண்டும் பிரதமர் ஆவார் என்றபோது முத்துகிருஷ்ணன் மட்டும் காங்கிரஸ் ஆட்சி வரும். ஆனால் ராஜீவ்காந்தி பிரதமராக வர மாட்டார் என பத்திரிகை களில் பேட்டி அளித்தார். அது எப்படி எனக் குழம்பியவர்களுக்கு 91 மே மாதம் விடை கிடைத்ததே! அதேபோல நரசிம்மராவிற்கு 96ம் வருஷம் வீழ்ச்சி இருக்கும் என்று கணித்துச் சொல்லி இருக்கிறார். இதுவும் பல பத்திரிகைகளில் வந்திருக்கிறது.

"இதையெல்லாம் ஒரு நாட்டின் நிலைமை

ரவா தோசைக்கு அரிசி மாவு, ரவை இரண்டையும் சம அளவில் கலந்து, அத்துடன் ஒரு மேஜை கரண்டி கடலை மாவு அல்லது வறுத்து, அரைத்த உளுத்தம் பருப்பு மாவை கலந்து தோசை வார்க்கவும். தோசை மொறு மொறு வென்று தனிச்சுவையுடன் இருக்கும்.

-வயலூர் ஆர். பார்த்திபன்



"THE VISIBLE DIFFERENCE" HERBAL BEAUTY CLINIC & SCHOOL OF COSMETOLOGY

"தி விஸிபிள் டிபரன்ஸ்" ஹெர்பல் பியூட்டி கிளினிக் அண்டு ஸ்கூல் ஆஃப் காஸ்மெட்டாலஜி

Vasundhra
(M.A., Dip, BTHD. Cosmetologist)

2 MONTHS COMPLETE BEAUTICIAN COURSE FOR PROFESSIONALS

SKIN CARE,
FACIALS,
MANICURE,
PEDICURE,
WAXING
,MEHNDI,
BRIDAL DRESSING,
HAIR CARE,
HAIR CUTS,
EXERCISE
HAIR & BEAUTY CARE
GALVANIC,
THERMOLYSIS TREATMENT
LATEST FACIALS, ,
LATEST TECHNIQUE IN BRIDAL DRESSING AND THERAPEUTIC TREATMENT FOR PIMPLES, SCARS
DERMABRASION.
AROMA THERAPY

[YOGA & EXERCISE CLASSES CONDUCTED]

3, BALAJI AVENUE I STREET, T. NAGAR,
[OPP. VIDYODAYA SCHOOL, NEAR VALLUVAR KOTTAM],
MADRAS - 600 017. Ph : 8254079

பாரம்பரியமிக்க புதிய பொலிவுடன்

WE WELCOME YOU TO THE WONDER WORLD OF KARISHMA CHURIDARS READYMADE BLOUSES AND COTTON SAREES

AALURI SAREES

OUR PRODUCTS

- KARISHMA CHURIDARS
- KARISHMA SAREES
- ANDHRA POCHHAM PALLI COTTON SAREES
- LACHAS AND ALL OTHER FANCY VARIETY SAREES AND CHURIDARS.

OUR LATEST INTRODUCTION LARGEST VARIETIES OF READYMADE BLOUSES INCLUDING SILK BLOUSES

The Shop exclusively for Ladies only



AALURI SAREES


(DEALER OF KARISHMA CHURIDARS & SAREES)
WHOLESALE & RETAIL
4/24, R.K. Mutt Road, Luz Bazaar.
Mylapore, Madras - 600 004.
(Next to Srinivas Silk) Phone : 4935791

INAUGURAL OFFER 10% From 1.9.96 To 7.9.96

WE WELCOME CITIBANK CARDS

வாசனை சோப்புகளைச் சுற்றி வரும் வெண்ணிறமான அட்டையை கண் போன்ற வடிவத்தில் வெட்டி டெலிபோன் உள்பாகத்தில் செல்லோடேப் வைத்து ஒட்டிவிட்டால் கமகமவென மணக்கும். வாரத்திற்கொருமுறை மாற்றிப் புதிதாக வைக்கலாம்.

-பிரேமாராவ்



என்ற நிலையில்தான் கணித்தேன். பலருக்குத் தனிப்பட்ட முறையிலும் எதிர்காலத்தைக் கணித்துச் சொல்கிறேன். ஆனால் எனக்கு மிகவும் பிடித்திருப்பது தொழில்துறையில் ஸ்ரீ சக்கரத்தைப் பயன்படுத்தி வெற்றி பெறச் செய்ய வைப்பதுதான். தொழிலதிபர்களின் பெயர், அவர்களுடைய கையெழுத்து, அவர்களுடைய சிம்பல் இவற்றைக் கொண்டு அவர்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். அவர்களுடைய சிம்பலிலோ, கையெழுத்திலோ மாறுதல் செய்து தருகிறேன். என்னால் அந்தத் தொழிலில் எப்போது பொற்காலம், சிரம காலம் என்பதைக் கணிக்க முடியும். அதை வைத்து பொற்காலத்தில் அதிகம் பயன்பெறுவது எப்படி, வீழ்ச்சியில் அதிக நஷ்டப்படாமல் தப்பித்துக் கொள்வது எப்படி, என்பதையெல்லாம் ஸ்ரீசக்ரா துணை கொண்டு சாதிக்க முடியும். சாதித்தும் இருக்கிறேன்'' என்கிறார்.

இன்றைக்கு மிகப் பிரபலமாக இருக்கும் ஒரு நிதி நிறுவனம், ஆரம்பித்து ஐந்தாண்டுகள் ஆகியும் பிரபலமாகாமல் இருந்தது. இவர் அதன் சிம்பலை மாற்றிக் கொடுத்து இருக்கிறார். இன்று கோடிக்கணக்கில் மூலதனம். ஷேர் மார்க்கெட்டில் பிரபலமான ஒருவர் இவரால் பயனடைந்தவர். வாழ்க்கையில் நொடித்தே போன ஒருவர் தன்' கன்சல்டன்ட் சர்வீஸின் லோகோவை முத்துகிருஷ்ணனின் ஆலோசனைப்படி மாற்றி இருக்கிறார். நல்ல வளமாக இருக்கிறார் இப்போது.

''இதையெல்லாம் கேள்விப்பட்டு நிறைய பேர் வந்து என்னை மந்திரவாதி மாதிரி பார்த்து மாயமந்திரத்தால் நான் ஏதோ வரவழைத்துக் காட்டுவேன் என என்னையே பார்க்கிறார்கள். 'நான் அதெல்லாம் இல்லைய்யா' என்றால்கூட நம்ப மாட்டேன் என்கிறார்கள்'' என்று சிரிக்கும் இவர்,

''ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும் பணத்தைக் கடவுள் படைக்கவில்லை. உணவு, காய்கறிகளையெல்லாம் படைத்ததைப் போல பணத்தைப் படைக்கவில்லை. இது மனிதனால் படைக்கப் பட்டது. எப்படி விஞ்ஞானத்தால் ஒன்றைப் புதியதாக அதிகமாகக் கண்டுபிடிக்க முடியுமோ ஆக்க முடியுமோ அதே போல ஸ்ரீசக்ரா எனும் கணித முறை யின்படி என்னால் பணத்தை ஆகர்ஷிக்க முடியும். இது நம்முடைய நாட்டிற்கே நல்லதல்லவா? அதனால்தான் இதை நான் விரும்பிச் செய்கிறேன்'' என்கிறார்.

உலக அளவில் தொலைபேசியில் தொடர்பு வைத்திருக்கும் இவருடைய ஃபீஸ் தலையைச் சுற்ற வைக்கிறது. ''என்ன ஸார் இப்படி? நொடித்துப் போனவர்கள்தானே உங்களிடம் வருவார்கள்?'' என்றோம்.

''இப்படி வச்சாத்தான் உன்னைப் போட்டு மொய்க்க மாட்டாங்க என்று கத்திருக்கிற வங்க செஞ்சு வச்சிருக்காங்க. நான் வசதியில்லாதவங்களுக்கும் சொல்லுவேன். 'நீ அவங்ககிட்டே பதிஞ்சுகிட்டு வந்துடு. அப்பதான் உன்ன விடுவாங்க. நீ எங்கிட்ட பேசு. அப்புறமா உன்னால கொடுக்க முடிஞ்சத கொடு' என்பேன்'' என இவர் மதுரை கிராமத் தமிழ் வாடையில் பேசுவதைக் கேட்கும்போது சுவையாக இருக்கிறது.

இவர் தன்னுடைய வாழ்க்கை இலட்சியமாக மிகப்பெரிய ஒன்றை வைத்திருக்கிறார். அது எகிப்திற்குச் சென்று பிரமிடுகளை ஆராய்வது!

''அதுவும் கோடுகள், முக்கோணங்கள் அடிப்படையில் அமைந்தது. நிச்சயம் ஸ்ரீசக்ராவிற்கும் அதற்கும் தொடர்பு உண்டு. நான் அதனைப் போய் ஆராய்ந்து, என்னுடைய அனுமானத்தின்படி நான் நினைப்பது உண்மையாக இருக்குமானால் உலகிற்கே நம்முடைய நாடு ஒரு முன்னோடியாக இருக்கும். ஸ்ரீசக்ராவால் உலகையே வெற்றி காண முடியும் என்பதை அப்போது நிரூபிப்பேன். நிச்சயமாக நான் அதை சாதிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது'' என்கிறார் இந்த இளைஞர்.

-புவனா

படம் : ராஜு நாராயண்



வார்த்தைகளில் தேன் தடவி...

ஒரு வாரத்திற்கு முன் தற்செயலாக என் தோழி ராதாவின் மாமியாரை கோவில் பிரகாரத்தில் சந்தித்தேன். "என்ன ஆன்ட்டி சௌக்கியமா? ராதா எப்படி இருக்கா?" என்று விசாரித்தேன்.

"ஏதோ உன் பிரண்ட் ராதா புண்ணியத்திலே சௌக்கியமா இருக்கோம்" இழுத்தவாறு அவர் சொன்னவிதத்திலிருந்து அவர்கள் உறவில் முன்பிருந்த கலகலப்பு மாறி, ஏதோ சலசலப்பு ஊடுருவி இருப்பதை என்னால் ஒருவாறு ஊகிக்க முடிந்தது.

ராதாவை சந்தித்து அதிக நாட்கள் ஆகி விட்டபடியால், ராதா மாமியாரது வார்த்தைகளும் மனத்தில் ஒலிக்க, இரண்டு நாட்களுக்கு முன் ராதாவை சந்திக்க அவள் வீட்டிற்குச் சென்றேன். நான் சென்ற நேரம் ராதாவின் மாமியார் வீட்டில் இல்லை.

அதிக நாட்கள் பார்த்துக் கொள்ளாத நெருங்கிய தோழிகளின் அரட்டை பற்றிக் கேட்க வேண்டுமா? பேசிப் பேசித் தீர்த்தோம். பிரியாவிடை பெற்றுத் திரும்பினேன்.

நான் வீட்டிற்கு வந்தபிறகும் ராதா வீட்டில் நடந்த ஒரு சிறு சம்பவம் என் மனத்தில் நிழலாடியது. நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது. அங்கு அவள் வீட்டில் நெடுநாட்களாக வேலை செய்யும் வேலைக்காரி தனம் ராதாவிடம் வந்து, "அம்மா நாளைக்கு ஒருநாள் லீவு வேணும். குலதெய்வம் கும்பிடறோம்" என்று தயங்கியவாறே கேட்டாள். "சரி... சரி நாளை ஒருநாள் லீவு தர்றேன். நாளை மறுநாள் காலையிலே டாண்ணு வேலைக்கு வந்துடணும். இல்லேன்னா நீ இங்கே வேலைக்கு வர வேண்டியதே இல்லை. அடிக்கடி லீவ் எடுத்தா சீட்டைக் கிழிச்சுடுவேன்" படபடவென அந்த வயதான அம்மாளிடம் பொரிந்து தள்ளினாள் ராதா.

அவள் விஷயத்தைப் பொறுத்தவரை எனக்குள் ஒன்று தெளிவாகப் புரிந்தது. அவள் வீட்டில் நிலவும் சலசலப்பிற்குக் காரணம் முழுக்க முழுக்க ராதாதான். ராதாவின் வாயிலிருந்து வரும் வார்த்தைகள்தான். உண்மையில் ராதா மிகவும் நல்லவள். தன் குடும்பத்தைக் கோவிலாகவும், தன் கணவரை குலதெய்வமாகவும், கணவரைச் சார்ந்த உறவினர்களை சுற்றுப் பிரகார தெய்வங்களாகவும் பூஜிப்பவள்தான். அதில் சந்தேகமில்லை. அவளிடம் உள்ள ஒரே குறை, வார்த்தை அம்புகளை ஆளை நோக்கி நேராக சர்ரென்று விட்டு விடுவாள். அது ஒன்றுதான் அவள் செய்யும் தவறு. வார்த்தை அம்புகளில் கொஞ்சம் தேன் தடவி விட்டுப் பார்த்தால், அந்த அம்புகள் மலர்க்கணைகளாகி, மாலையாய் விழுந்து கேட்பவரை மகிழ்வூட்டும் என்னும் நடைமுறை

வாழ்க்கைக்கு மிகவும் தேவையானது அக்கலையின் அரிச்சுவடியை. அவன் அறிந்திருக்கவில்லை. இந்தக் கலையை அவன் அறிந்து கொண்டு கடைப்பிடித்தால் வாழ்க்கைப் பாதை பூத்துக் குலுங்கும் பூந்தோட்டம்தான்.

பாலில் தேன் கலந்திருக்கிறோம். பலாச்சுளையை தேனில் நனைத்திருக்கிறோம். வார்த்தைகளில் தேன் தடவுவதா? எப்படி என்கிறீர்களா?

ரொம்ப சுலபம். அதிகாரத் தோரணையுடனும், ஆணவத் த்வனியுடனும் உங்கள் வார்த்தைகள் வெளிவராமல் சொல்ல வேண்டிய கருத்தை பணிவாக, பதமாக இதமாக



மொத்தத்தில் இனிமையாக.. தேனைப் போல இனிமையாக உங்கள் வார்த்தைகள் வெளிப்படுமாறு பார்த்துக் கொள்ளுங்கள். உதாரணங்கள் சிலவற்றைப் பார்ப்போமா?

எங்காவது அவசரமாக வெளியே கிளம்பிக் கொண்டிருப்பீர்கள். அப்போது சமையல் வேலையும் சேர்ந்து கொள்ள, "மாமியார் செய்தால் என்ன?" என்று நீங்கள் நினைக்க, 'நீங்கள் சமைத்து விட்டுப் போனால் என்ன' என்று உங்கள் மாமியார் நினைக்க அப்போது பிரச்னை தலை தூக்குவது இயற்கை. அந்த நேரம் பார்த்து உள்ளூர் நாத்தனார் திடீரென்று விசிட் கொடுத்தால் பிரச்னை டபிள் மடங்காகி விடுவதும் இயற்கையே.

'அத்தை அவசரமா கிளம்பறேன். நீங்களே இன்னிக்கு சமையலைப் பார்த்துக்குங்க' என்று பட்டென்று சொல்லும்போது, "என்னால முடியாது. ஏதோ ஒண்ணு சமைச்சுட்டுப் போற வழியைப் பாரு" என்று அடுத்த நிமிடமே பட்டென்று உங்கள் மாமியாரிடமிருந்து பதில் வரும். இந்த நேரத்தில் உங்கள் வார்த்தைகளில் தேன் தடவி சொல்லிப் பாருங்கள்.

"அத்தை அவசரமா கிளம்ப வேண்டியிருக்கு. கிளம்பறதுக்குள்ளே எப்படியும் சாம்பார் ஆயிடும். நேரம் இருந்தா கறி பண்ணிடறேன். நீங்க



சிரமப்பட வேண்டாம்" என்று சொல்லிப் பாருங்கள். உங்கள் கனிவான வார்த்தைகளில் மனம் குளிர்ந்த மாமியார், "நீ அப்படியே கிளம்பு. நான் சாதம் வடிச்சு ஒரு கறி பண்ண மாட்டேனா?" என்று உங்களை மனமுவந்து வழியனுப்பி வைப்பார்.

அதே போல, "அத்தே... நீங்க ஊட்டினா தான் உங்க பேத்தி இரண்டு வாய் கூட சாப்பிடறா." "அத்தே, பாட்டி சுட்டால்தான் தோசை ரோஸ்ட் மாதிரி வரது. பாட்டி தோசை ஊத்தினாதான் சாப்பிடுவேன்னு உங்க பேரன் ஒரே அடம்" என்று உங்கள் வார்த்தைகளில் இனிமை சேர்த்து சொல்லிப் பாருங்கள். உங்கள் மகனுக்கு மட்டுமல்ல. உங்கள் மாமியார்

கட்ட ரோஸ்ட் தோசை உங்களுக்குக் கூட இரண்டு கிடைக்கும்.

வேலைப்பளு முழுவதுமாக தாக்காத பட்சத்தில் இம்மாதிரி கவடு தெரியாமல் நீங்கள் கனிவாகச் சொல்லும் சின்னச் சின்ன வேலைகளை நிச்சயம் உங்கள் மாமியார் பொருட்படுத்த மாட்டார்.

உங்கள் மாமனார் அப்போதுதான் ஒரு மாதம் கழித்து ஊரிலிருந்து வருகிறாரா? வந்தவுடன், "மாமா, இன்னிக்கு ஃபோன் பில், கரண்ட் பில்லுக்கு லாஸ்ட் டேட். எப்படியாவது இன்னிக்கே கட்டிடுங்க" என்று சொல்ல முடியுமா? வார்த்தை அம்புகளை தேனில் நனைத்து விட்டுப் பாருங்கள்.

"மாமா நீங்க இல்லாமே வீடு வீடா இல்லே. கரண்ட் பில், ஃபோன் பில் ஒண்ணும் கட்ட முடியாம எனக்கு ஒரு கை ஒடிஞ்ச மாதிரி ஆயிடுச்சு" என்று சொல்லுங்கள். "அதனா லென்னம்மா... நான்தான் வந்துட்டேனே இன்னிக்கே கட்டிடறேன். என்னிக்கு லாஸ்ட் டேட்?" என்று அவராகவே முன்வருவார். உண்மையில் வெளிவேலைகளை கவனித்து உங்கள் வசதுகரமாக மாமனார்



உங்கள் சமையலறையில் உள்ள பாட்டில்கள், சம்புடங்கள், பாத்திரங்கள் பளீர் என்று பிரகாசிக்க வேண்டுமா? 'ஈரக் கையால் எதையுமே தொட மாட்டேன்' என்ற ஒரு சின்ன பிரதிக்ஞை போதுமானது.

-மு.கஸ்தூரி

செயல்படுபவராக இருந்தால் உங்கள் நன்றிகலந்த பாராட்டை கனிவான வார்த்தைகளில் வெளிப்படுத்துவதற்குத் தயங்க வேண்டிய தில்லை.

இந்த வார்த்தைத் தேன் அம்புகளை மாமனார் மாமியாரை நோக்கித்தான் எய்ய வேண்டும் என்பதில்லை. பெருமளவு பலிப்பது கணவரிடம்தான். உங்களுக்காக. உங்களுக்காக மட்டுமே உழைத்துப் பொருள் திரட்டி உற்சாகப்படுத்தும் உங்கள் கணவரிடம் பேசும்போது வார்த்தைகளில் தேன் தடவி... ஸாரி, வார்த்தைகளை தேனில் நனைத்துப் பேசுவதில் என்ன தயக்கம்? இவ்வாறு பேசிப் பார்த்து, அவர் பொழியும் அன்பு மழையில் நீங்கள் நனைவதை அனுபவத்தால் உணர்ந்து கொள்ளுங்கள்.

நம்மில் பலருக்கு ஒருநாள் வேலைக்காரி வராவிட்டால் அல்லது ஒருநாள் லேட்டாக வந்தால் கூட எல்லா புரோகிராமும் அப்ஸெட், இல்லையா? 'ஏன் இன்னிக்கு லேட்' என்று ஒரே அதட்டலாக அதட்டாமல், 'ஏம்மா லேட்? லேட்டாவே வர மாட்டியே! டாண்ணு 5.30 மணிக்கு பெல்அடிப்பே, என்ன ஆச்சு இன்னிக்கு?' என்று கனிவாக விசாரியுங்கள். அடுத்த நாள் 5.30 மணிக்கு வரும் உங்கள் வேலையாள் 5 மணிக்கே வந்து காலிங் பெல்லை அடித்து உங்களை எழுப்புவாள்.

அடுத்து வார்த்தைகளில் தேன் தடவிய அம்புகளை நீங்கள் பிரயோகிக்க வேண்டியது உங்கள் குழந்தைகளிடம்தான். "எங்க கண்ணனுக்கு படிப்புதான் முதல்லே. டீ.வி. பார்க்க மாட்டான்! எங்க குழந்தைங்க வீட்டைச் சுத்தப்படுத்தற மாதிரி யாராலும் செய்ய முடியாது" இந்த மந்திர வார்த்தைகள் எப்படி உங்கள் குழந்தைகளை மாற்றுகிறது என்று பாருங்கள்.

வாய் வார்த்தைகளை வெறும் வாய் வார்த்தைகள்தானே என அலட்சியப்படுத்தாதீர்கள். உங்களைப் பற்றி மற்றவர் மனத்தில் மதிப்பெண்களைப் போட வைக்கும் விடைத்தாள்களே உங்கள் வாய் வார்த்தைகள் என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள். உங்களைச் சுற்றியுள்ளோர் உள்ளத்தில் உங்களைப் பற்றிய மதிப்பெண்கள் உயர உயர, உங்கள் வாழ்க்கைத் தரமும் உயர்ந்து, வாழ்வில் நீங்கள் உன்னத நிலையை அடையலாம்!

- கீதா தெய்வசிகாமணி

சபரி
சூப்பர் இங்கிலீஷ் கோர்ஸ்



இப்பொழுது
மாபெரும்
சலுகை விலையில்

ரூ. 126 மட்டுமே
(ஒரு நிலை)

ஆடியோ கேசட் இலவசம்

இச்சலுகை செப்டம்பர் 21 வரை மட்டுமே.

எல்லா புத்தகக்கடைகளிலும் கிடைக்கிறது

'சபரி' என்று கேட்டு வாங்குங்கள்

SABHARI
Education Private Limited

QUALITY EDUCATION FOR 20 YEARS

Corporate Office: 1 Velders Street (Near LIC) Mount Road, Madras - 600 002

நேர்முகப் பயிற்சி மையங்கள்:

சென்னை : மவுண்ட் ரோடு : Ph :849069/840733, **அடையார் :** Ph : 4917396
அண்ணாநகர் : Ph : 429643 **அம்பத்தூர் :** Ph : 6350719 **கோடம்பாக்கம் :** Ph : 4842647 **தாம்பரம் மேற்கு :** Ph : 2366747 **கோயம்புத்தூர் :** Ph : 234450 **திருநெல்வேலி :** Ph : 24833.

EFFICIENT

கருமையான கூந்தல் வளர்ச்சிக்கு

"ஆனந்தாவின்"

நீலி பிருங்காதி தைலம்




எல்லா கடைகளிலும் கிடைக்கும்.



ஆனந்தா வைத்திய சாலை,
புது தாராபுரம்ரோடு, பழனி, தமிழ்நாடு.

கிரைண்டர் வாங்கும் தாய்மார்களுக்கு சில குறிப்புகள்!



- அதில் தரமான மோட்டார் பொருத்தப்பட்டிருக்கிறதா!
- மோட்டார் குறைந்த மின் அழுத்தத்திலும் வேலை செய்யுமா!
- விற்பனைக்கு பின் மோட்டாருக்கு சிறந்த சேவை கிடைக்குமா!
- மின் அழுத்தம் கூடி, குறையும் போதும் மோட்டார் நிற்காமல் வேலை செய்யுமா!
- இரண்டு பால்பேரிங்குகள் பொறுத்தப்பட்ட மோட்டாரா!
- மோட்டார் துருபிடிக்காமல் இருக்க பாலியூரிதின் பெயிண்ட் செய்யப்பட்டதா!
- இவை அனைத்தும் கொண்ட கேதான் மோட்டார் பொருத்திய கிரைண்டரா என்று பார்த்து வாங்குங்கள்!!

கேதான்

பெயர் ஒன்றே போதும்

இம்மாத இல்லத்தரசி



• கீதா

• விசாலம்



• புவனேஸ்வரி



• பூர்ணிமா





• ஜெயந்தி

பொருள் : மாநில உணவுகள்

முதல் பரிசு ரூ. 300/-

இடிச்சக்கைப் பொடித்தூவல் (கேரளா)

பலாக்காய் - 1 சின்னது (சிறு துண்டங்களாக நறுக்கி வைத்துக் கொள்க.

தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய்.

கேரள சமையலில் தேங்காய் தூக்கலாக இருக்கும். காய் துண்டங்கள் அளவுக்கேற்றாற்போல் எடுத்துக் கொள்ளவும்) தேங்காயுடன், பச்சை மிளகாய், காரம் எத்தனை வேண்டுமோ அதுபோல் வைத்து 'மிக்ஸி'யில் ஒரு சுற்று சுற்றி (அதிகம் நைஸாகக் கூடாது) வைத்துக் கொள்க.

பலாக்காய் துண்டங்களை தண்ணீர் விட்டு, அடுப்பில் வைக்கவும். மஞ்சள் பொடி, உப்பு, ருசிக்கேற்றபடி சேர்த்து வேகவைத்துக் கொள்க. வெந்தபின் தண்ணீரை வடி கட்டி, அம்மியில் வைத்து ஒன்றிரண்டாக நசுக்கிக் கொள்க. உதிர் உதிராக இருக் கட்டும்.

வாணலியை அடுப்பில் வைத்து, சிறிது எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு, மிளகாய் வற்றல், கறிவேப்பிலை இவற்றைச் சேர்த்துத் தாளித்துக் கொள்க. அதில் பலாக்காய் பிசறல்களையும்; தேங்காய்ப் பொடியையும் சேர்த்து, நன்றாகக் கிளறி வைக்கவும்.

இந்தப் பொரியல் வகை சாம்பார், மோர்க்குழம்பு, ரசம் இவைகளுக்கு இணையாக சாப்பிட ருசியாக இருக்கும்.

பனஸக்காய்க்கூரா (ஆந்திரா)

பலாக்காயை சிறு சிறு துண்டங்களாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். துண்டங்கள் அளவுப்படி, புளியைக் கெட்டியாகக் கரைத்துக் கொள்ளவும்.

வாணலியில் எண்ணெய் சிறிது விட்டு, கடுகு, உ. பருப்பு, வெந்தயம், சிவப்பு மிளகாய், பச்சை மிளகாய் இவற்றைச் சேர்த்துத் தாளிக்கவும். அதில் பலாக்காய்களை சேர்த்துப் புளித் தண்ணீரை விட்டு, சிறிது மஞ்சள் பொடி, உப்பு சேர்த்து வேகவைத்துக் கொள்ளவும். கெட்டியானதும் இறக்கி கறிவேப்பிலை, கொத்துமல்லியைப் பொடியாக நறுக்கிச் சேர்க்கவும்.

இந்தக் கூட்டு பருப்பு சாதம், தோசை, சப்பாத்தி, பரோட்டா இவற்றுடன் சாப்பிட நன்றாக இருக்கும்.

"கட்டல் கீ பக்கோடீ" (பஞ்சாப்)

பலாக்காய்களை அதிக கனம் இல்லாமல் சதுரமாக நறுக்கி, உப்புத் தண்ணீரில் போட்டு அதிகம் குழையாது வேகவைத்து தண்ணீரை வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

பூண்டு, இஞ்சி, பச்சை மிளகாயை அரைத்து நைஸாக விழுதாக்கிக் கொள்ளவும். எலுமிச்சம் பழம் பிழிந்து சேர்க்கவும்.

கடலை மாவில் பூண்டு விழுது, மிளகாய்ப் பொடி, உப்பு, சிறிது சோடா சேர்த்து

'பஜ்ஜி' மாவு செய்து கொள்ளவும்.

வாணலியில் எண்ணெயைக் காயவைத்து, பலாக்காய் துண்டங்களை கடலை மாவில் தோய்த்து எண்ணெயில் பொரித்து 'பஜ்ஜி'யாக செய்து கொள்ளவும்.

மாலை வேளைகளில் காப்பி, டீயுடன் சாப்பிட சிறந்த சிற்றுண்டி.

கட்டல் கீ அச்சார் (மத்தியபிரதேஷ்)

முற்றிய பலாக்காயை சின்ன துண்டங்களாக நறுக்கிக் கொள்ளவும். கொதிக்கும் நீரில் 5 நிமிடம் வேகவிட்டு, வடிகட்டி, நிழலில் ஒரு துண்டில் உலரவிடவும். ஈரப்பசை இருக்கக் கூடாது.

துண்டங்கள் - 1 கிலோ,
மஞ்சள் பொடி - 2 டேபிள் ஸ்பூன்,
வெந்தயம் - 100 கிராம்,
சோம்பு - ¼ கிலோ,
மிளகாய்ப் பொடி - 200 கிராம்,
'கலோஞ்சி' வெங்காய விதை - 3 டேபிள் ஸ்பூன்,
கடுகுப் பொடி - 100 கிராம்,
பெருங்காயம் - 2 டீஸ்பூன்,
கடுகு எண்ணெய் - துண்டங்கள் மூழ்கும் அளவு.

செய்முறை :

எண்ணெயைப் பொங்கக் காய்ச்சி, மஞ்சள் பொடி, பெருங்காயப் பொடி சேர்க்கவும். துண்டங்களில் உப்பு, கலோஞ்சி, கடுகு, மிளகாய், வெந்தயப் பொடிகள், சோம்பு இவற்றைக் கலந்து பிசிறிக் கொள்க.

எண்ணெய் ஆறியபின், துண்டங்களை சேர்த்து, ஜாடியில் இட்டு குலுக்கி வைக்கவும்.

இந்த ஊறுகாய் புலாவ், பரோட்டா போன்றவைகளுக்குச் சிறந்த கூடுதல் தரும் ருசியுள்ளது. கடுகு எண்ணெய்க்குப் பதில் நல்லெண்ணெய் சேர்க்கலாம்.

- விசாலம் நாராயணஸ்வாமி,
கோவை - 2.

இரண்டாம் பரிசு
ரூ. 200/-

உருளைச் சட்டி (அ) வெங்கலப்பானை ஒரட்டி

தமிழ்நாட்டில் செட்டியார்களில் ஒரு பிரிவினரால் காலை டிபனுக்கு இட்லியை விட விரும்பப்படும் சிற்றுண்டி ஒரட்டி. ருசியும், போஷாக்கும் மிக்கது.

தேவையான பொருட்கள் :
புழுங்கல் அரிசி - 400 கிராம்,
துவரம் பருப்பு - 100 கிராம்,
பச்சை மிளகாய் - 15,
சின்ன வெங்காயம் - 15,
முட்டைக்கோஸ் - 150 கிராம்,
மல்லித்தழை.

செய்முறை :

புழுங்கல் அரிசி, துவரம் பருப்பு இரண்டையும் ஊறவைத்துப் பின்னர் ஒன்றாக உரலில் இட்டு பருபரு என அரைக்க வேண்டும் (நைஸாக அரைத்தல் கூடாது) மாவு கட்டியாக இருக்க வேண்டும். தண்ணீர் அதிகம் ஊற்றி அரைக்கக் கூடாது.

பச்சை மிளகாய், சின்ன வெங்காயம், முட்டைகோஸ் முதலியவைகளை பொடியாக அரிந்து இரும்புச் சட்டி போட்டு மல்லித்தழை சேர்த்து நன்கு வதக்கியவுடன் மாவுடன்

உங்களை 'அட்டை' கடித்து விட்டால்... அதைப் பிடுங்கி எறிவதற்குப் பதில் அதன் மேல் சிறிது உப்பைத் தூவினால் அது சுருங்கி விழுந்து விடும். ரத்த சேதமும் குறைவாக இருக்கும்.

- உஷா

குஜராத் எம்போரியம்

GUJARAT EMPORIUM

(குஜராத் அரசு சார்பு நிறுவனம்)

குஜராத் காட்டன் (Tie & Dye) சேலைகள், அப்ளிக், பிரிண்டட் சேலைகள், கட்ச் பெட்ஷீட்கள், கைவினைப் பொருட்கள், தோரணம், பொம்மைகள், வால்பீஸ், தலையணை உறை, பைல்கள், பிளவுஸ் துணிகள் கிடைக்கும்.

குஜராத் ஸ்கர்ட், பஞ்சாபி செட், துண்டு, கைப்பைகள், நகைப் பெட்டிகள், பரிசு பொருட்கள் மற்றும் குஜராத்தின் ரகங்களும் கிடைக்கும்.

H.O. : ஆமதாபாத்

Show Rooms

சென்னை : 67, ராயப்பேட்டை ஹைரோடு, மயிலாப்பூர், சென்னை - 600 004.
போன் : 847079, 852440

மதுரை : 15, வடக்கு சித்திரை வீதி, மதுரை - 1
போன் : 623804

பெங்களூர் : 118, 12வது மெயின் ரோடு, 2வது பிளாக், ராஜாஜி நகர், பெங்களூர் - 10.

15-09-1996 வரை தள்ளுபடி
10% கைத்தறி ஆடைகளுக்கும்
10% கைவினை பொருட்களுக்கும் உண்டு.

சேர்த்துப் பிசைந்து கொள்ள வேண்டும். பின்னர் அடுப்பில் உருளைச் சட்டி அல்லது வெங்கலப்பானை வைத்து அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்தவுடன் நடுவில் மாவை உள்ளங்கை அளவுக்குத் தட்ட வேண்டும். பின் சுற்றி ஆறு எண்ணிக்கை அளவு உள்ளங்கை அளவு தட்ட வேண்டும். இதை மூடி வைத்து விட வேண்டும். சிறிது நேரம் கழித்து வெந்தவுடன் தோசை கரண்டி கொண்டு எடுக்க வேண்டும். மிகவும் முறுகலாக மொறு மொறுப்பாக அபாரிமிதமான சுவையுடன் இருக்கும்.

முக்கிய குறிப்பு : இட்லிக்கு வேண்டுவது போல் இதற்கு சட்னி, சாம்பார் பொடி எதுவும் வேண்டாம். அப்படியே சாப்பிட்டாலே சுவையாக இருக்கும். ஏதாவது தொட்டுக் கொள்ள வேண்டும் என விரும்புகிறவர்கள் தக்காளி சட்னி தொட்டுக் கொள்ளலாம்.

உருளைக் கிழங்கு வேகவைத்து நசுக்கி வதக்கும் போது சேர்த்து வதக்கி மாவுடன் பிசைந்து தட்டலாம். இவை சுவைக்கு சுவை ஊட்டுவது போல் மிகவும் அருமையாக இருக்கும்.

– என். புவனேஸ்வரி, மதுரை – 1.

மூன்றாம் பரிசு
ரூ. 100/-

வாழைக்காய் கோஃப்தா டால் ரொட்டி

தேவையான பொருட்கள் :
வாழைக்காய் – 2,
உருளைக்கிழங்கு – 1,
ஆம்சூர் பொடி – ¼ டீஸ்பூன்,
காரப்பொடி – ½ டீஸ்பூன்,
உப்பு – தேவையான அளவு,
சர்க்கரை – ¼ டீஸ்பூன்
பொடியாக நறுக்கிய வெங்காயம் – 1 டேபிள் ஸ்பூன்,
பொடியாக நறுக்கிய கொத்துமல்லி– 1 டேபிள் ஸ்பூன்.
கோஃப்தாக்களை பொரித்து எடுக்கத் தேவையான அளவு எண்ணெய்.

செய்முறை :

முதலில் வாழைக்காய், உருளைக் கிழங்கு இரண்டையும் பிரஷர் குக்கரில் வைத்து வேக வைக்கவும். வெந்த பிறகு தோலுரித்து ஆம்சூர் பொடி, காரப்பொடி, உப்பு, சர்க்கரை, வெங்காயம், கொத்துமல்லி சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். கையில் எண்ணெய் தடவிக் கொண்டு சிறு சிறு உருண்டைகளாக உருட்டிக் கொண்டு எண்ணெயில் பொரித்து எடுக்க வேண்டும்.



எறும்பு, மற்ற சிறு பூச்சிகள் கடித்து வீக்கமும் வலியுமாய் இருக்கும்போது கடிவாயில் நறுக்கிய வெங்காயத்தைத் தேய்க்கவும். உடனடியாக வலி விட்டு விடும்.
– உஷா

க்ரேவி செய்ய தேவையான பொருட்கள் :
எண்ணெய் – 3 டேபிள் ஸ்பூன்,
பட்டை – 2 துண்டு,
கிராம்பு – 2 துண்டு,
ஏலக்காய் – 2,
வெங்காயம் பெரியது – 2,
கோத்ரெஜ் டொமடோ ப்யூரி – 4 டீஸ்பூன்,
அல்லது 2 தக்காளி.
இஞ்சி – 1 துண்டு,
பூண்டு – 4 பல்,
மஞ்சள் பொடி – ½ டீஸ்பூன்,
சீரகப் பொடி – ½ டீஸ்பூன்,
தனியாப் பொடி – 1 டீஸ்பூன்,
காரப் பொடி – ½ டீஸ்பூன்
உப்பு – தேவையான அளவு.

வெங்காயத்தை அரைத்துக் கொள்ள வேண்டும். இஞ்சி, பூண்டையும் விழுதாக அரைத்துக் கொள்ள வேண்டும்.

செய்முறை :

முதலில் கடாயில் எண்ணெய் விட்டு கிராம்பு, பட்டை, ஏலக்காய் தாளிக்க வேண்டும். பிறகு அரைத்த வெங்காயத்தைப் போட்டு வதக்க வேண்டும். பொன்னிறமான பின்பு இஞ்சி, பூண்டு விழுதைப் போட்டு வதக்க வேண்டும். பின்பு தக்காளி ப்யூரியை அல்லது அரைத்த தக்காளியை விட்டு, மஞ்சள் பொடி, தனியா, சீரகப் பொடி, காரப் பொடி போட்டு நன்றாகக் கொதிக்க விட வேண்டும். க்ரேவி தளர இருப்பதற்குச் சிறிது தண்ணீர் விட்டுக் கொள்ளலாம். உப்பு சேர்க்க வேண்டும்.

பச்சை மிளகாய்
பசுமையாக
இருக்க
காம்பைக் கிள்ளி
எறிந்து விட்டு ஒரு
பிளாஸ்டிக் டப்பாவில்
போட்டு ஃபிரிட்ஜில்
வைத்தால் ஒரு
மாதமானாலும்
கெடாமல் இருக்கும்.
- சியாமளா

பரிமாறுவதற்கு முன்னால் ஒரு பாத்திரத்தில் கோப்தாக்களை எடுத்துக் கொண்டு அதன் மேல் சூடான க்ரேவியை விட்டு கொத்துமல்லி போட்டு அலங்கரிக்க வேண்டும். கிரேவியில் கோஃப்தாக்களைப் போட்டால் உடைந்து விடும்.

டால் ரொட்டி :

தேவையான பொருட்கள் :

கோதுமை மாவு – ¼ கிலோ,
வெந்த பாசிப்பருப்பு – 1 கிண்ணம்,
காரப் பொடி – 1 டீஸ்பூன்,
உப்பு – தேவையான அளவு.

செய்முறை :

கோதுமை மாவில் பருப்பு, காரப்பொடி, உப்புப் பொடி சேர்த்துத் தேவையான அளவு நீர் சேர்த்துப் பிசைந்து, சிறு சிறு உருண்டைகளாக உருட்டிக் கொள்ள வேண்டும். பிறகு கல்லில் இட்டு அடுப்பில் போட்டு இரண்டு பக்கமும் எண்ணெய் விட்டு எடுக்க வேண்டும். இந்த டால் ரொட்டியுடன் கோஃப்தா அற்புதமாக இருக்கும்.

– ஜெயந்தி, சென்னை – 90.

ஆறுதல் பரிசு ரூ. 50/-

அல்லம் தொக்கு (ஆந்திரா)

தேவையான பொருட்கள் :

அல்லம் அதாவது நார் அதிகம் இல்லாத இஞ்சி – ½ கிலோ,
வர மிளகாய் – 100 கிராம்,
வெல்லம் – 100 கிராம்,
புளி – 100 கிராம்,
நல்லெண்ணெய் – ¼ லிட்டர்,
தாளிதம் செய்ய கடுகு – 1 டேபிள் ஸ்பூன்,
கடலை பருப்பு – 1 டேபிள் ஸ்பூன்,
வெந்தயம் – 1 டேபிள் ஸ்பூன்,
உப்பு – தேவையான அளவு.

செய்முறை :

முதலில் இஞ்சியை நன்றாக மண் போக அலம்பிக் கொள்ள வேண்டும். பின்னர் தோலியை சீவி எடுத்துத் துளி கூட தண்ணீர் இல்லாமல் துடைத்துக் கொண்டு பொடிப் பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும். புளியைக் கொட்டை, நார் நீக்கிச் சிறிதளவு தண்ணீரில் ஊறவைத்துக் கொள்ளவும். பின்னர் நறுக்கி வைத்துள்ள இஞ்சி, வரமிளகாய், புளி, வெல்லம் ஆகியவற்றைச் சிறிதளவு நீர் சேர்த்து மசிய மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும்.

வாணலியில் எண்ணெய் ஊற்றவும். நினைவிருக்கட்டும் இந்தத் தொக்கு மாதக்கணக்கில் கெடாமல் இருக்க வேண்டுமானால், நல்லெண்ணெய் மட்டுமே பயன்படுத்த வேண்டும். எண்ணெய் காய்ந்ததும் கடுகு போட்டு வெடித்த பின் கடலைப் பருப்புப் போடவும். பின்னர் வெந்தயத்தைப் போடவும். சிவந்து மணம் வந்தபின் அரைத்து வைத்துள்ள விழுதைப் போடவும். அரைக்கும் போது சிறிதளவே தண்ணீர் சேர்க்க வேண்டும். தேவையான அளவு உப்பு சேர்க்கவும். தொக்கு நன்றாக கண்டி எண்ணெய் மேலே தனியாக தெரியும் பதம் வந்தவுடன் இறக்கி வைத்து ஆறியவுடன் பாட்டிலில் போட்டு இறுக மூடிவைக்கவும்.

இந்தத் தொக்கு அதிக காரம் இல்லாமலும், வெல்லம் சேர்த்து உள்ளதால் இனிப்பு, புளிப்பு, உப்பு காரம் என அனைத்துச் சுவையும் கொண்டதோடு இஞ்சியின் சத்தும் கூடி குழந்தைகளுக்கு உணவு நன்கு ஜீரணமாவதோடு பசியையும் தூண்டக்கூடியது.

இந்தத் தொக்கை சாதத்தில் பிசைந்து சாப்பிடலாம். இட்லி, தோசை, பொங்கல், சப்பாத்தி, பூரி, தயிர்சாதம் என எந்த வகை உணவுக்கும் தொட்டுச் சாப்பிட உபயோகிக்கலாம்.

– பூர்ணிமா மோகன், பெங்களூர் – 70.

ஆறுதல் பரிசு ரூ. 50/-

குஜியா (உத்திரபிரதேசம்)

தேவையான பொருட்கள் :

மைதா மாவு - ½ கிலோ,
ரவை - ¼ கிலோ,
சர்க்கரை - ½ கிலோ,
பாதாம் பருப்பு - 50 கிராம்,
சாரை பருப்பு - 50 கிராம்,
கசகசா - 50 கிராம்,
உலர்ந்த திராட்சை - 50 கிராம்,
துருவிய கொப்பரை - 50 கிராம்,
ஏலப்பொடி - 1 தேக்கரண்டி,
பால்கோவா - 150 கிராம்,
நெய் அல்லது டால்டா - 150 கிராம்,
ரிபைன்டு எண்ணெய் பொரித்தெடுக்க தேவையான அளவு.

செய்முறை :

மைதா மாவை நன்கு சலித்துக் கொள்ளவும். 150 கிராம் ரவையையும் அதில் கலந்து வெதுவெதுப்பான சூட்டில் நெய் அல்லது டால்டா விட்டு சிறிது தண்ணீர் சேர்த்துப் பிசையவும். பிசைந்த மாவை ஒரு ஈரத் துணியினால் மூடி ஒரு மணி நேரம் வைக்கவும்.

வெறும் வாணலியை அடுப்பில் வைத்து மீதியுள்ள 100 கிராம் ரவையை பொன்னிறமாக வறுக்கவும். அதை ஒரு பாத்திரத்தில் கொட்டி விட்டு பால் கோவாவையும் நன்றாகப் புரட்டி எடுக்கவும். வறுத்த ரவையையும் சர்க்கரையையும் 'மிக்ஸி'யில் நன்றாக பொடி செய்து கொள்ளவும். பாதாம் பருப்பையும் சன்னமாக பொடித்துக் கொள்ளவும். ஒரு பெரிய பாத்திரத்தில் இந்தக் கலவையைப் போட்டு, அதில் பால் கோவா, சாரைப் பருப்பு, கசகசா, திராட்சை, கொப்பரைத் துருவல், ஏலப் பொடி எல்லாவற்றையும் போட்டு நன்கு கலக்கவும். இதுவே குஜியாவுக்குள் அடைக்கும் கலவை.

முன்பே பிசைந்து வைத்துள்ள மாவை சிறு சிறு உருண்டைகளாக்கி, சிறிய வட்டமாக இட்டு அதில் இரண்டு தேக்கரண்டி மேற்படிச் சொன்ன கலவையை வைத்து மூடி சிறிது தண்ணீர் தொட்டுக் கொண்டு ஓரத்தை மடிக்கவும். பிறகு குஜியா கரண்டி எனப்படும் சக்கரம் வைத்த தேக்கரண்டியினால் ஓரத்தை வெட்டி அழகுபடுத்தவும்.

மிதமான சூட்டில் எண்ணெயைக் காய வைத்துப் பொரித்து எடுக்கவும்.

இந்த குஜியா எனப்படும் உத்திரப்பிரதேச பலகாரம் ஹோலிப் பண்டிகையின் மிக விசேஷமான பலகாரம் ஆகும்.

- பா. கீதா, செகந்திராபாத் - 9.

இம்மாத இல்லத்தரசி


சமையல் கூப்பன்

பொருள் : குழம்பு **கடைசி தேதி : 15.9.96**


என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

சாரதாவின் நவராத்திரி "கொலு" படிகள்



நவராத்திரியில் போது
கொலுப்படியாக



சாதாரண நாட்களில்
"அலமாரியாக"

சாரதா ஏஜென்சீஸ்

781, அண்ணா சாலை (ஆர்ட்ஸ் காலேஜ் அருகில்) சென்னை - 600 002 தொலைபேசி: 852 0727	284, அண்ணா சாலை (தேனாம்பேட்டை சிக்னல் அருகில்), சென்னை - 600 018 தொலைபேசி: 459015/450341	193, ராயப்பேட்டை நெடுஞ்சாலை (ஜாம்பி பில்டிங்ஸ் எதிரில்) சென்னை-600 004 தொலைபேசி: 4991135

ஒவ்வொரு நவராத்திரி கொலுப்படி செட்டுடன் ஒரு அற்புதமான அன்பளிப்பு வழங்கப்படும்.

காபி, டிபன், பிராமணாள் உணவு, தங்குமிடம் உள்பட 3TIER ரயில் சுற்றுலாக்கள்.

• ஜெய்ப்பூர்-ஆக்ரா-மதுரா-டெல்லி- ஹரித்வார்-ரிஷிகேஷ்-சகஸ்ரதாரா-முஸௌரி-டேராடூன்-அயோத்யா-காசி-சாரனாத்-வியாசகாசி-கயா-புத்தகயா-திரிவேணி-12.9.96 முதல் 15 நாட்கள் ரூ. 3590. இத்துடன் கூடுதலாக 5 நாட்கள் சேர்த்து கேதார்நாத் & பத்ரிநாத் பார்த்து வர ரூ. 4590.

• **SIMLA-VAISHNODEVI-** டெல்லி-குருசேத்ரம்-அமிர்தசரஸ்-ஜம்மு-வைஷ்ணதேவி-ஜ்வாலாமுகி-காங்டாதேவி-சிந்தபூரணி-சாமுண்டாதேவி-சண்டிகார்-சிம்லா 4.10.96 முதல் 16 நாட்கள் ரூ. 3690.

• **தீபாவளி** கங்காஸ்நானம்-திரிவேணி-சித்ரகூடம்-நைமிசரண்யம்-அயோத்தியா-காசி-சாரனாத்-வியாசகாசி-கயா-புத்தகயா-கல்கத்தா-பூரி-கோனார்க்-புவனேஸ்வர்-சிம்மாசலம்-விஜயவாடா 7.11.96 முதல் 14 நாட்கள் ரூ. 3390

• **AMIRITSAR-** ஜெய்ப்பூர்-ஆக்ரா-டெல்லி-அமிர்தசரஸ்-ஹரித்வார்-ரிஷிகேசம்-காசி-கயா-திரிவேணி 21.11.96 முதல் 16 நாட்கள் ரூ.3690.

* **NEPAL-** திரிவேணி-காசி-அயோத்யா-கல்கத்தா-பூரி- கோனார்க்-புவனேஸ்வரம் 4.10.96 முதல் 16 நாட்கள் ரூ.3690.

குமரன் டிராவல்ஸ்

20, வடக்கு சித்திரைவீதி,
மதுரை - 625001. போன் 621519.

...கள் வழிகாட்டிகள் வழிகாட்டிகள் வழிகாட்டிகள் வழிகாட்டிக
...டிகள் வழிகாட்டிகள் வழிகாட்டிகள் வழிகாட்டிக
...காட்டிகள் வழிகாட்டிகள் வழிகாட்டிக
...ழிகாட்டிகள் வழிகாட்டிக
...ள் வழிகாட்டிக

சென்ற இதழில் 'வழிகாட்டிகள்' போட்டியை அறிவித்தது பற்றிப் பெருமிதப்படும் வகையில் நிறைய வாசகிகள் மிகப் பயனுள்ள கல்வி வகுப்புக்களைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். இவற்றைப் பத்திரப்படுத்திக் கொண்டே வாருங்கள். கல்வியாண்டில் பயனுள்ளதாக இருக்கும். மற்றவர்களுக்கும் தரலாமே, வழிகாட்டலாமே! (வாசகர்களுக்கு ஒரு வார்த்தை – இது ஒரு வழிகாட்டும் தகவல் பகுதி மட்டுமே. கோர்ஸ் அல்லது கோர்ஸ் நடத்தும் நிறுவனங்களின் நிறைகுறைகளை அவரவர்கள்தான் ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். நம் நிறுவனம் அதற்குப் பொறுப்பாகாது.) (ஆ-ர்)

முதல் பரிசு ரூ. 500/- பெறும் வழிகாட்டித் தகவல்

என் தந்தை மகாதானபுரம் வி. ராஜாராம். கிராமத்தை நகர்ப்புறத்தை விட உயர்ந்ததாய் முன்னேற்ற வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் கிராமத்திலேயே இருந்து அரிய பல சாதனைகளை நிகழ்த்தி வருபவர். என்னையும் என் இரண்டு அக்காக்களையும் கிராமத்துப் பள்ளியிலேயே பிடிவாதமாய் படிக்க வைத்து, இப்போது என் இரு அக்காக்களும் நல்ல நிலையில் இருக்கிறார்கள். நான் +2 முடித்து விட்டு சி.ஏ. பவுண்டேஷன் கோர்ஸ் முடித்து விட்டு சி.ஏ. படித்துக் கொண்டு இருக்கிறேன்.

நாக்பூர், பம்பாய், டெல்லியிலுள்ள எங்கள் உறவினர்களே இந்த சி.ஏ. ஃபவுண்டேஷன் கோர்ஸைப் பற்றிக் கேட்பதால் அனைவருக்கும் பயன்படும்படி விரிவாகவே எழுதியுள்ளேன்.

என்ன கோர்ஸ்? எங்கு படிக்கலாம்?



முன்பெல்லாம் ஏதாவது ஒரு பட்டப் படிப்பு படித்திருந்தால்தான் சி.ஏ. படிக்க முடியும். ஆனால் ஏப்ரல் 92 லிருந்து சி.ஏ. பவுண்டேஷன் கோர்ஸ் என்ற 1 வருட பிரீ-புரொபஷனல் கோர்ஸை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே +2 முடித்த உடனேயே இந்த 1 வருட கோர்ஸை முடித்து விட்டால் நேரிடையாக சி.ஏ. படிக்கலாம். மேலும் பி.காம். அல்லது வேறு ஏதாவது பட்டப் படிப்பையும் அஞ்சல் வழியாகவோ அல்லது மாலை நேரக் கல்லூரியில் சேர்ந்தோ முடித்து விடலாம். ஆக +2 முடித்து விட்டு மூன்று வருடம் பட்டப்படிப்பு, மூன்று வருடம் சி.ஏ. என்பதற்கு பதிலாக, நான்கு வருடத்தில் இரண்டையும் முடித்து விடலாம்.

இந்தியாவில் சார்டர்ட் அக்கவுண்டன்ஸ் புரொபஷன்ஸை ரெகுலேட் பண்ணுவதற்காக பாராளுமன்றத்தில் அமுல்படுத்தப்பட்ட The chartered Accountants Act, 1949-ன் கீழ் ஜுலை மாதம் 1949-ம் ஆண்டு உருவாக்கப்பட்டதுதான் "The Institute of Chartered Accountants of India". இதன் தலைமையகம் புதுடில்லியில் உள்ளது. ஐந்து ரீஜினல் கவுன்ஸில்கள் மும்பாய், சென்னை, கல்கத்தா, கான்பூர், புதுடில்லி ஆகிய இடங்களிலும் அது தவிர இந்தியாவில் 81 பிராஞ்சுகளும் உள்ளன.

+2 முடித்தவுடன் சி.ஏ. பவுண்டேஷன் கோர்ஸ்

வழிகா...
வழிகாட்டிகள் வழி...
வழிகாட்டிகள் வழிகாட்டிக...
வழிகாட்டிகள் வழிகாட்டிகள் வழிகாட்டி
வழிகாட்டிகள் வழிகாட்டிகள் வழிகாட்டிகள் வழி...
வழிகாட்டிகள் வழிகாட்டிகள் வழிகாட்டிகள் வழிகாட்டிகள...
வழிகாட்டிகள் வழிகாட்டிகள் வழிகாட்டிகள் வழிகாட்டிகள் வழிகாட்டி...

படிக்க விரும்புபவர்கள் இன்ஸ்டிடியூட்டுக்கு விண்ணப்பித்து அதன் Board of studies wing-ல் ரெஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும். அவர்கள் மெட்டீரியல்ஸ் அனுப்பி விடுவார்கள். வருடத்தில் ஜூன் மற்றும் டிசம்பர் மாதத்தில் தேர்வுகள் நடக்கும். ரெஜிஸ்டர் செய்ததிலிருந்து 12 மாதம் கழித்து ஜூன் அல்லது டிசம்பரில் தேர்வு எழுதி பாஸ் செய்து விட்டால் சி.ஏ. படிக்கலாம்.

இவ்வாறு சி.ஏ. பவுண்டேஷன் கோர்ஸ் ஒரு வருடம் முடித்தவர்கள் அல்லது ஏதாவது ஒரு பட்டப் படிப்பு முடித்தவர்கள் சி.ஏ. படிக்கலாம். சி.ஏ. என்பது மூன்று வருட கோர்ஸ். பிராக்டிகல் டிரெயினிங் மற்றும் Theoritical education இரண்டும் இந்த மூன்று வருடத்தில் முடிக்க வேண்டும். அதாவது, பிராக்டீஸ் செய்து கொண்டிருக்கும், ஒரு சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட்டிடம் பிராக்டிகல் டிரெயினிங்காகவும், இன்ஸ்டிடியூட்டின் Board of studies இடம் Theoritical educationகாகவும் ரெஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும்.

பிராக்டிகல் டிரெயினிங்கில் நிறைய அனுபவம் கிடைக்கும். மேலும் stiphend உண்டு.

Theoritical Education-ஐ பொறுத்தவரை இண்டர், ஃபைனல் என்று இரு தேர்வுகள் எழுத வேண்டும். சி.ஏ. பவுண்டேஷன் கோர்ஸ் மாதிரியே இதற்கும் மெட்டீரியல்ஸ் (புத்தகம்) அனுப்பி விடுவார்கள். பிராக்டிகல் டிரெயினிங்கும் எடுத்துக் கொள்வதால் புக்மெட்டீரியல்ஸை நாமே படித்து எளிதாக புரிந்து கொள்ளலாம். தவிர மதுரை, கோவை, சென்னை ஆகிய இடங்களில் இன்ஸ்ட்டிடியூட்டிலேயே கோச்சிங் க்ளாஸஸ், 3 மாதம் அல்லது 6 மாதம் இப்படி நடத்துகிறார்கள். அதில் படித்தும் பயன்பெறலாம்.



• தாங்கிணி

இண்டர் தேர்வு மே மற்றும் நவம்பரில் வரும். ரெஜிஸ்டர் செய்து கொண்டதிலிருந்து 12 மாதம் கழித்து மே அல்லது நவம்பரில் இண்டர் எழுத வேண்டும். பிறகு 18 மாதம் கழித்து ஃபைனல் தேர்வு எழுத வேண்டும். ஃபைனல் தேர்வு பாஸ் செய்து விட்டு பிராக்டிகல் டிரெயினிங்கும் முடிந்து விட்டது என்றால் இன்ஸ்டிடியூட்டில் மெம்பராகி, சர்ட்டிபிகேட் ஆஃப் பிராக்டிக்ஸ் பெற்றுக் கொண்டு பிராக்டிஸ் செய்ய ஆரம்பிக்கலாம். அல்லது வேறு எங்கும் வேலைக்குச் செல்லலாம்.

பட்டப் படிப்பு முடித்துவிட்டு மேலே என்ன செய்வது என்று குழம்புபவர்களும், +2 முடித்துவிட்டு மற்ற புரொபஷனல் கோர்ஸ்கள் கிடைக்கவில்லையே என்று வருந்துபவர்களும் இந்த அருமையான புரொபஷனல் கோர்ஸில் சேர்ந்தால் வளமான எதிர்காலம் நிச்சயம்!

உங்கள் வசதிக்காக சென்னை ரீஜினல் கவுன்ஸில் ஆபீஸின் விலாசத்தை எழுதுகிறேன்.

The Joint Director of Studies,
The Institute of Chartered Accountants of India,
122, Utthamar Gandhi Salai,
P.B. No. 3314, Nungambakkam,
Madras - 600 034.

— ரா. தரங்கிணி, மகாதானபுரம்.

இரண்டாம் பரிசு
ரூ. 250/- பெறும் வழிகாட்டி

விமான போக்குவரத்துத் துறையில் தனியார் நிறுவனங்களும் பங்கேற்க ஆரம்பித்ததிலிருந்து, விமானப் போக்குவரத்துச் சார்ந்த பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் வர ஆரம்பித்து விட்டது. விமானத் துறையில் பணி என்றால், நமக்கெல்லாம் பைலட் அல்லது ஏர்ஹோஸ்ட்ரஸ்தான் ஞாபகம் வரும். ஆனால் அவை போல பல இருக்கின்றன நம் கவனத்தைக் கவராமலேயே...

முக்கியமாக டிராவல் ஏஜென்சிகளில் டூர் ஆபரேஷன் (டூர் ஆபரேட்டர் என்று பெயர்), செக்ரேட்டரீஸ், டிராவல் ஏஜெண்ட் புக்கிங் மேனேஜர் என்று பல பதவிகள்.

இதே போன்று அரசாங்க விமானத்துறை (Air India, Indian Airlines)யிலும் இருக்கின்றது.

இதில் தகுதி பெறத்

தேவையானதெல்லாம் ஒரு டிப்ளமோதான்.

IATA எனப்படும் Inter National Airtransport Association- ஆல் வழங்கப்படும் சர்டிபிகேட்டிற்கு அத்தனை மதிப்பு. நம் இந்திய நாட்டில் இந்த சர்டிபிகேட் ஒரு தகுதியாகவே மதிக்கப்படுகிறது.

அகில உலகத்திற்கும் ஒரே மாதிரியான வழிமுறையோடு சொல்லித் தரப்படுகிறது. இந்த IATAவின் தலைமை முகவரி :

IATA,
P.O. Box 672, CH-1215
Geneva 15 Airport (Switzerland)

இந்திய கோ-ஆர்டினேட்டரும் உண்டு.

தபால் மூலமாகவே இந்தப் படிப்பை (2 வருடம்) தொடரலாம்... பின் நாமினல் ரேட்தான். மேலும் ஒரு விசேஷம் என்னவென்றால் இதற்கு ஸ்கூல் ஃபைனல் கூட போதுமானதுதான்.

— ரா. சுந்தரவல்லி, சென்னை – 90.

மூன்றாம் பரிசு ரூ. 100/- பெறும் வழிகாட்டி

'CIPET' - Central Institute of Plastics Engineering and Technology எனும் இந் நிறுவனம் தரும் கோர்ஸ்களில் பயின்றால், வேலை கொடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். விவரம் பார்க்கலாமா?

ஜூலையில் சென்னை, திருச்சி, திருநெல்வேலியில் நுழைவுத் தேர்வு வைத்து, தேர்ந்தெடுக்கிறார்கள். தகுதி வாய்ந்தவர்களுக்கு ஸ்டைபண்ட் உண்டு. எஸ்ஸி/எஸ்டி வயது வரம்பு மற்றும் இடஒதுக்கீடும் உண்டு. வேலை செய்பவர்களுக்கும் வாய்ப்புத் தர வேண்டி பகுதி நேர வகுப்புகள் உண்டு. இதற்கு நவம்பரில் அப்ளிகேஷன் தருகிறார்கள்.

முகவரி -
Senior Manager,
Corporate Office (Training) CIPET,
Guindy Industrial Estate,
Guindy, Madras - 600 032.

-எம்.கலையரசி சென்னை-114.

மேலும் சில வழிகாட்டும் தகவல்கள்

பட்டப் படிப்பு முடித்துவிட்டு, மேற்கொண்டு படிக்க வேண்டும், தொழிலுக்குப் போக வேண்டும் என்று எண்ணுபவருக்கு இதோ ஒரு சத்தான தகவல் :

"பெர்ஸனல் மேனேஜ்மெண்ட்" கோர்ஸ் ஒன்று உள்ளது. இந்த கோர்ஸ் நமக்குத் தெரிந்தே நிறைய இடங்களில் இருக்கு. இருந்தாலும் கல்கத்தாவிலுள்ள NIPM (National Institue of Personal Management) ல் படித்தாலே தனி மதிப்புதான். இந்த கோர்ஸ் முழுதாக இரண்டு வருட கோர்ஸ். போஸ்டல் மூலம் படிக்க வசதி உண்டு.

Sl.No.	Course code	Title	Duration (years)	Entry qualification	Max age limit
1.	PGD-PE	Postgraduate diploma in plastics engineering	1	BE/B.Tech/B.Sc.Engg.(4 years) in Mech/Chem/Prodn/ ploymer/Tool/ engineering	26 years
2.	PGD-PPT	P.G. Diploma in plastics processing technology	1	A 3 year degree in science with chemistry as one subject	24 years
3.	PGD.PTCT	P.G. Diploma in plastics testing and conversion technology	1	A 3 yr. degree in science with chemistry as one subject	24 years
4.	PD.PMD	Post diploma in plastic mould design	1	dip. in Mech/Plastic tech/ Tool engg/plastic engg/prodn tech/ CIPET DPMT/equivalent	24 years
5.	DPMT	Diploma in plastic mould technology	3	SSLC/10th std with maths english and science	18 years
6.	DPMMT	Diploma in plastic mould making technicians	2	ITI trade cert in Turning/fitting/ machinist	22 years.
7.	PD.MM	Post diploma in machine maintenance	1	Dip. in Mech/electrial/ electronic engg and CIPET-DPMT	24 years

கோர்ஸின் பெயர்: "Post Graduate Diploma in Personnel Management" இதைப் படித்து முடித்தாலே நல்லதொரு வேலை வாய்ப்புகள் நமக்குக் கிடைப்பது உறுதி. இப்பொழுது, இன்றைய தேதியில் எந்த ஒரு கம்பெனியும் பெர்ஸனல் டிபார்ட் மெண்ட் இல்லாமல் இயங்காது. அதனால் பட்டப் படிப்பு முடித்ததுமே, இந்த அருமையான படிப்பைத் தொடரலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

National Institute of Personnel Management,
45, Jhowtala Road, (1st Floor),
Calcutta - 700 019.

– தாரா மணிவண்ணன், கோவை – 18.

டிப்ளமோ இன் இன்ஸ்ட்ருமென்ட் டெக்னாலஜி 3 ஆண்டு பாடத் திட்டமாகும். சென்னையில் உள்ள அரசு மகளிர் பாலிடெக்னிக், கோவையிலுள்ள ஜி.ஆர்.ஜி. மகளிர் பாலிடெக்னிக் ஆகிய இரண்டே இடங்களில் மட்டுமே உள்ளது. இதில் கோவை மகளிர் பாலிடெக்னிக்கில் "எலக்ட்ரானிக்ஸ் வித் டிப்ளமா இன் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ்" என்ற பெயரில் கற்பிக்கப்படுகிறது.

• சயின்ஸ் பாடங்களுடன் +2 முடித்தவர்களுக்கு மருத்துவம் பல் மருத்துவம், பிஃபார்ம் போன்றவைகள் தவிர பி.எஸ்ஸி., நர்ஸிங் உண்டு. இவை 4 வருட கோர்ஸ்கள்.

• பொறியியல் துறையில் +2 முடித்தவர்களுக்கு பி.எஸ்ஸி. அப்ளைடு ஜியோலஜி 3 ஆண்டு பாடத் திட்டம். சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் மட்டுமே உண்டு. வேலை வாய்ப்பு அதிகம் உள்ள கல்வி இது.

விஜயா நாராயணன், அருவங்காடு

வீட்டிலேயே தபால் மூலம் (Comprehensive home study course) படித்து "இன்டீரியர் டிசைனர்" ஆக விருப்பமும், அதற்கேற்றதாகவும் உள்ளவர்கள் மேலும் விவரங்கள் அறிய முகவரி :

Sheffield School of Interior design,
P.O. Box 409,
Narrabeen NSW 2101
Australia.

(ரீடர்ஸ் டைஜெஸ்ட் ஆகஸ்ட் 1996)
தகவல் : எஸ். லக்ஷ்மி, சேலம்.

Name of the Institute : "NTTF"
'Nettur Technical Training Foundation'
Courses Offered : 'Diploma in Tool and Die making'
(Recognised by Govt. of India of Karnataka)
Duration : 3 years + 1 year Industrial Training.
Centres : Bangalore, Dharwad, Tellicherry, Vellore & Gannavaram.

Eligibility : Pass in SSLC (or) PUC/10th Std./+2 with min 60% marks in science and maths.

10வது ரிசல்ட் வந்தவுடன் ஹிந்துவில் விளம்பரம் வருகிறது. அதற்கு எழுதி பதிவுசெய்து கொண்டால் நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். அதன் மதிப்பெண் வைத்துத் தேர்வு செய்வார்கள். இதை முடித்து விட்டால் அருமையான வேலை வாய்ப்பு உண்டு. மூன்றாவது வருடம் தொழிற்சாலைகளிலிருந்து வந்து இண்டர்வியூ செய்து வேலைக்குத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

– சித்ரா ரங்கராஜன், கடலூர் – 1

(அடுத்த இதழில் மேலும் கல்வி வகுப்புகள் பற்றித் தொடரும்)



ஜவ்வரிசி பாயசம் வைக்கும் போது, ஜவ்வரிசியையும், சேமியா வையும் மிதமான வெந்நீரில் 1 மணி நேரம் ஊறிய பின்பு, அடுப்பில் ஒரு கொதி வந்தால் போதும் பாயசம் ரெடி. இப்படி செய்வதால் கேஸ் மிச்சம். வேலையும் மிச்சம்.

-பி.கோமதி

பாரசீகப் பழமொழி

மிகக் கூர்மையாக
இருக்க விரும்பாதீர்கள்;
உங்களையே
வெட்டிக் கொள்வீர்கள்.
முழுவதும் சர்க்கரையாக
இருக்க விரும்பாதீர்கள்,
உலகம் உங்களை
விழுங்கி விடும்.

தொகுப்பு-கே.விஜயலட்சுமி

சென்ற இதழில் வெளியான 'எப்போது இந்தப் பெண்கள் மாறுவார்கள்?' கட்டுரையைப் படித்து ஏராளமான பெண்கள் மனம் குமுறி எழுதியிருந்தார்கள். சகோதரிகளாகிய நாம் இதையெல்லாம் படித்து வருத்தப்பட்டுப் புத்தகத்தை மூடி வைத்து விடாமல், நம்மை நாம் மாற்றிக் கொண்டால் என்ன?

அடிபட்ட சகோதரிகள் அழுகிறார்கள்



இங்கு வெளியாகியிருக்கும் கட்டுரைகளில் எந்த மாதிரி சமயங்களில் எல்லாம் அவர்கள் புண்படுத்தப் படுகிறார்கள் என்று எழுதியிருக்கிறார்கள், இன்னும் நிறையவும் உண்டு. இதையெல்லாம் சரிப்படுத்த ஒரு பெரிய போராட்டம், புரட்சித் தேவையில்லை. நம்மை, நம் மனோபாவங்களை மாற்றிக் கொண்டாலே போதும்.

அதைப் பற்றிய தகவல்கள் எனக்கு வருமா?

-ஆவலுடன் ஆசிரியர்.

பதினெட்டு வருடங்களுக்கு முன் எங்கள் வீட்டருகில் ஒரு மாமி இருந்தார். அவருக்கு இரண்டு பிள்ளைகள். மூத்த பையனுக்குக் கல்யாணம் முடித்து மூன்றே வருடங்களில் பையன் இறந்து விட்டான். மாமி தன் மருமகளை பிறந்த வீட்டுக்கு அனுப்ப மறுத்து விட்டார். பூவோடும், பொட்டோடும் வழக்கம்போல இருக்க வேண்டும் என்று சொல்லி, அந்தப் பெண் எப்போதும் அர்ச்சனை செய்த குங்குமம் வைத்துக் கொள்ளும்படி பார்த்துக் கொண்டார். பழுத்த சுமங்கலியாகத் தான் செல்லும் எல்லா விசேஷங்களுக்கும் அவளையும் அழைத்துச் சென்று கலந்து கொள்ள வைத்தார். எங்கு சென்றாலும், தன் மருமகளுக் குக் குங்குமம், பூ, வெற்றிலை பாக்குக் கொடுத்தால்தான் தானும் வாங்கிக் கொள்வார். நெருங்கிய உறவினர் திருமணத்தில், ஊஞ்சல் சடங்கின்போது, அவளை விளக்கு ஏற்றி வர அனுமதித்தால் மட்டுமே தான் கல்யாணத்தில் கலந்து கொள்ள முடியும் என்று சொல்லி விட்டார். அந்த வயதான மூதாட்டி இப்படித் தன் மருமகளைத் தைரியமாக சம்பிரதாயங்களை உடைத்துப் பாதுகாத்ததை என்னால் மறக்க முடியவில்லை.

ஒரு பெண்ணைப் பார்த்தவுடன் அவள் கணவன் உயிருடன் இருக்கிறானா இல்லையா என்ற அடையாளங்கள் இருப்பது நம் இந்து மதத்தில் தான்.

இந்தக் கொடுமைகள் மாற வேண்டுமானால், நாமெல்லோரும் ஒருமனதாகப் பழைய வழக்கங்களை உடைத்தெறிய வேண்டும், தைரியமாக ஒரு நல்ல காரியத் திற்காக சமுதாயத்தை எதிர்த்து நிற்கத் துணிய வேண்டும். கடந்த வருடங்களில் எவ்வளவோ மாற்றங்களைச் சந்தித்த நாம் இதைச் சாதிக்க முடியாதா என்ன?

- நிர்மலா ரமேஷ், கோவை-1

சமூகத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ள பல விதவைப் பெண்கள், பூ வியாபாரத்தை மட்டுமே பிழைப்பாக நம்பி, யார் தயவுமின்றி, குறைந்த மூலதனத்தில் சுய தொழில் செய்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

நம்மில் பலர் மங்களச் சின்னமாகக் கருதப்படும் பூவை, இவர்களிடம் வாங்குவதால், தம் சுமங்கலித்துவத்துக்கு பங்கம் ஏற்பட்டு விடும் என்று நினைக்கிறார்களே!

படித்து, பகுத்தறிந்த, பண்புள்ள நம் சமுதாயப் பெண்கள், விதவைத் தாய்மார்களிடம் பூ வாங்குவதால் அவர்களின் பிழைப்புக்கு மறைமுகமாக நாமும் உதவக் காரணமாக இருப்பதுடன்; பூப் போட்டு மணிக் கணக்கில் ஆடம்பரமாகப் பூஜைகள் செய்தாலும், நேரில் காண முடியாத இறைவனை, இந்த ஏழைகளின் கள்ளமில்லாச் சிரிப்பிலாவது நிச்சயம் காணலாம் என்பதை சற்றே சிந்திக்கட்டும்.

-கஸ்தூரி, சென்னை - 101

எனக்குத் தெரிந்த ஒரு மூதாட்டி பொட்டு, மெட்டி நம்பிக்கையில் மிகத் தீவிர மானவர். கணவனையிழந்தவர்களை அவர் பார்க்கும் பார்வையே போதும்! சுட்டெரிக்கும். எனது தம்பி திருமணத்தில் நான் கலந்து கொள்ள இவருக்கு என்ன தடை! நிச்சய தார்த்தம் முதல் விவாகம் வரை இவர் நானிருக்கும் இடத்தையே சுற்றிச் சுற்றி வந்து கொடிய வார்த்தைகளைக் கூறி புண்பட்ட எனது மனதை மேலும் ரணமாக்கியவர். அவரது 70-ம் வயதில் கணவனையிழந்ததும், உறவுகாரர் என்ற முறையில் நான் அவரைப் பார்க்கச் சென்றபொழுது "நீ சின்னஞ்சிறு வயதிலேயே இந்தக் கொடுமைகளை அனுபவித்தாயே" என்று அப்போது வருந்தி அழுதார். ஏன் இந்த மாற்றம்? தலை வலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தானா? காய்ச்சலுடன் கஷ்டப்படுபவர்களைக் கண்டாலே நாம் இரங்க வேண்டாமா?

இன்னொரு மூதாட்டி தனக்குப் பிடிக்காத, லேசாக நெருப்புப் பட்ட ஒரு புடவையை, கணவனையிழந்த ஒரு விதவைத் தோழிக்குக் கொடுத்து, "நானெல்லாம் இதைக் கட்டிக் கொள்ளக் கூடாது. நீ கட்டிக் கொள்ளலாம்" எனக் கொடுத்தாராம்.

எனது தோழி கணவனையிழந்த 10 நாட்களுக்குள் நடந்த இந்தக் கசப்பான நிகழ்ச்சி எனது மனதில் பசுமரத்தாணி போலப் பதிந்து விட்டது. குளிக்கச் செல்வதற்காக, பழங்கால வீடான அந்த இடத்தில் பின்புறம் நோக்கிச் சென்ற அவளை அழைத்து (அவருடன் அவளது தாயாரும் இருந்தது கவனிக்கத்தக்கது) அவளது சொந்த நாத்தனார் "வாழ்வரசிகள் வருகிறார்கள் இந்தப் பக்கம். நீங்க கொஞ்ச நேரம் அவர்கள் கண்ணில் படாம இருங்க", என்று சொல்ல; நினைத்து நினைத்து இன்று வரை கதறுகிறாள் அவள். அவர்கள் வீட்டில் வாழ்க்கைப் பட்டு, அவர்களது தவறால் கணவனையிழந்த அவளுக்கு ஏன் இந்த வசவும் குத்தலும்! 'வாழ்வரசிகள்' சிந்திக்க வேண்டும்.

'வேலைக்குச் செல்லும் இளம் விதவைகள் படும் பாடு சொல்லத் தரமன்று. வாழ்விழந்த துக்கம் ஒருபுறம் இருக்க இவர்களது கடுகணைகள் ஒரு புறம்! இதைவிட செத்து விடலாம்



என்றுதான் தோன்றுகிறது. அதிலும் இளம் குழந்தைகளைக் கட்டிக் காக்கும் பொறுப்புள்ள இளம் அபலைகள் என்ன செய்வார்கள். சகோதரிகளே! ஏற்கனவே அடிபட்ட பறவைகள். அவர்களை மேலும் கல்லாலும் சொல்லாலும் அடித்துக் கொல்லாதீர்கள்!

-இராகவப்ரியா, சென்னை-14.

இந்தக் கட்டுரை விஜயாவின் மனக் குமுறலை மட்டுமல்ல, இதுபோல் பாதிக்கப் பட்ட பல பெண்களின் நிலைமையையே சுட்டிக் காட்டுகிறது. கணவன் மறைந்த துக்கத்தில் இருக்கும்போதே - எங்கே இவள் ஒரு வருடத்திற்குள் நம் வீட்டுக்கு வந்து விடுவாளோ என்று சொந்தச் சகோதரிகளே பயப் படுகிறார்கள். கொலைகாரியைக்கூட சேர்த்துக் கொள்வார்கள். ஆனால் எங்களைப் போன்றவர்களைப் பார்ப்பதே பாவம் என்று நினைக்கிறார்கள். டி.வி, சினிமா போன்ற மீடியாக்களில் முதலில் கணவனை இழந்ததும் காட்டும் வெள்ளைக் கோலத்தை மாற்ற வேண்டும். நாம் வளர்த்து ஆளாக்கும் நம் குழந்தைகள், 21-ஆம் நூற்றாண்டின் தலை முறைகளாவது இந்த மூட நம்பிக்கையிலிருந்து விடுபட்டு, மனிதனை மனிதாபிமானத்துடன் பார்ப்பார்களா?

- ருக்மணி, பெங்களூர்

என்னுடன் பிறந்த 7 சகோதரிகளுள் ஐந்தாமவள். சிறிய வயதில் ஒரு பெண்ணை மட்டும் வைத்துக் கொண்டுள்ள நிலையில் விதவையாகி விட்டாள். அவள் கணவர் வேலை இவளுக்குக் கிடைத்துப் பார்த்து வருகிறாள். அவள் வேலைக்குப் போகும் போது தலைமயிர் ரப்பர் பேண்ட் போட்டுக் கொண்டு போனாலும், புடவை பின் போட்டுக் கொண்டு மடிப்பாகப் போனாலும் என் சகோதரிகளே இகழ்கிறார்கள். நான் அவர்களைக் கண்டிப்பேன்.

சமீபத்தில் என் மாமா பிள்ளை திருமணத்தின் போது எங்கள் அத்தை வீட்டிற்கு வெள்ளிக்கிழமை அதுவுமாக நான்கு சகோதரிகளுடன் இவளும் தங்கையும் சென்றிருந்தனர். அத்தை வீட்டில் வெற்றிலை பாக்கு, ரவிக்கைத் துண்டு அனைவர்க்கும் கொடுத்துவிட்டு இவளுக்கு மட்டும் ஒன்றுமே கொடுக்கவில்லை. சத்திரத்தில் வந்து

என்னிடம் 'ஓ' வென்று அழுதாள். என் வருத் தத்திற்கு அளவே கிடையாது.


மங்கையர்மலரில் எழுதிய வாசகிக்கு நானும் உடன்பிறவா சகோதரியாக, என் சகோதரியாக நினைத்து ஆறுதல் சொல் கிறேன். கவலைப் படாமல், தன்னுடைய மக னுடன் அவர் சுகமாக வாழ ஆண்டவனை பிரார்த்திக்கிறேன்.

-கமலாவியாசராவ், சென்னை - 52.

என் தோழியின் வீட்டிற்குச் செல்லும் போதெல்லாம் தோழியின் தாயாரிடமே கட்டாயமாக மஞ்சள் குங்குமம் பெற்றுக் கொள்வேன். அன்பும் பண்பும் நிறைந்த அந்த மூதாட்டி விதவை என்பதாலயே மஞ்சள் குங்குமம் தர தகுதி இல்லாதவர் என்பதையே என் மனமும் ஒப்புக் கொள்வதில்லை. மேலும் மனப்பூர்வமான ஆசிகள்தானே முக்கியம். இதைக் கண்ணுற்ற மற்றொரு தோழி 'இந்த விபரீத விளையாட்டே வேண்டாம்' என்று எச்சரிக்கும்போது மனம் மிகவும் வாடுகிறது. சொல்லும் தோழியின் தாயும் சமீபத்தில் விதவையானவரே! 'தாய் மீது எவ்வளவு பாசம் இருப்பினும் நம் மஞ்சள் குங்குமத்தின் மீது பரீட்சை செய்ய முடியாது' என்கிறாள் தோழி. விதவை என்று யாரையும் ஒதுக்காமல் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து எங்கள் வீட்டு வரலக்ஷ்மி விரதம் உட்பட அழைக் கிறேன். மிகவும் மனஉறுதியோடு இருக்கும் எங்களைப் போன்றவர்களைக்கூட அலுப்பில் லாத உபதேசங்கள் தடுமாறச் செய்கின்றன. பெண் என்பவள் ஆணின் இருப்பை மஞ் சளாகவும் குங்குமமாகவும் அவ்வளவு இறுக்கி வைத்துக் கொள்வதும் அது சம்பந்தமாகவே நம் சமுதாயமும் செயல்படுவதும் பெண் ணுக்கு இருக்கும் பாதுகாப்பற்ற உணர்வே என்பது என் எண்ணம்.

-இந்திரா, திருப்பத்தூர்.

என்னுடன் ஒன்றாகப் பிறந்து, ஒரே வீட்டில் வளர்ந்த என் உறவினரே நான் என் வேலையாக வெளியே செல்லும்போது, அவன் காரியாலயத்திற்கோ, வேறு எங்காவது வெளியே கிளம்பி தெருவிலே வரும் போது, நான் தெரு முனையில் வரு வதைப் பார்த்து விட் டால் வீட்டிற்குள் சென்று விடுவான். இல்லையெனில் தெருவிலே பார்த்தால் எதிர்ப்பக்கம் சென்று விடுவான். அவ்வளவு பாவப்பட்ட ஜன்மமா கணவனை இழந் தவர்கள்.



இவ்வளவு ஏன் பெரியவரை (ஸ்ரீ சங்கராச் சாரியரை) தரிசிக்க இரண்டு மணி நேரம் கியூ வில் நின்று எங்கள் மாதர் சங்க அங்கத்தினர் கள் சென்றோம். அருகில் வரும் போது அங்கிருந்த அவருடைய சிஷ்யர்கள் "நீங்கள் அவரைப் பார்க்கக் கூடாது, வெளியே போய் விடுங்கள்" என்றார்கள். பெரியவாளை கட வுளுக்குச் சமமாக நினைத்து அவரை தரிசிக் கச் சென்றால் இப்படி அவமானப் படுத்தி அனுப்பி விட்டார்கள். இது அவருக்குத் தெரிந்து நடக்கிறதா? இல்லை . நடுவில் இருப்பவர்களின் வேலையா?

-சாந்தா இராமானுஜம், சென்னை-15

"**தா**லி சென்டிமென்ட்" படங்களைப் பார்த்துப் பிழியப் பிழிய கண்ணீர் விடும் தாய்க்குலம் இருக்கும்வரை இது மாறாது. இளம் விதவை திரையில் பொட்டுக்கும், பூவுக் கும் ஏங்கும் ஏக்கத்தைப் பார்த்து உருகும் பெண் தன் தாய்க்கோ, சகோதரிக்கோ அந்த ஏக்கம் இருக்கும் என்பதைப் புரிந்து கொள் ளாதது ஏன்? பூவும் பொட்டும் திருமணத் திற்குப் பின் வந்தவையல்லவே, அவற்றை கண வன் இறந்த பின் துறப்பதற்கு. இறந்தவருக்குச் செய்யும் மரியாதையாக அதை நினைப்பது தவறு.

-கோகிலா, பெங்களூர் - 79

நம்மூரில் "சுமங்கலி பிரார்த்தனை" என்று ஒன்று செய்வார்கள். அதிலே கலந்து கொள்ள பெண்களுக்கு வேண்டிய ஒரே தகுதி அவர்கள் கணவனை உடையவர்களாக இருக்க வேண்டியதே ஆகும். அவள் ஒரு கொடுமைக்கார மாமியாராகவோ, சுயநலமிக்க மருமகளாகவோ கணவனை பிழிந்தெடுக்கும் ஒரு ஒட்டுண்ணியாகவோ இருக்கலாம். இருந் தும் 'துணைவன்' இருப்பது ஒன்று போதும் அவர்களை "பிரார்த்தனை செய்வதற்கு". எத் தனையோ இளம் பெண்கள் துணைவனை இழந்த பின் மனம் தளராமல் உழைத்துத்தான் பிள்ளைகளை வளர்த்து வளமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கிறார்கள். அவளை எத்தனை பெண்கள் "பிரார்த் தனைக்கு"த் தகுதியாகக் கருதுவார்கள்?

-பிரபா அருண்

முகப்பரு இருக்கிறதா?

ஒரு சங்கை எடுங்கள். கல்லில் சிறிது தண்ணீர் விட்டு அரைத்து அதை முகப்பரு உள்ள இடத்தில் தடவுங்கள். காய விடுங்கள். முகப்பரு இருந்த இடம் தெரியாமல் போகும்.

-கே.விஜயலட்சுமி

நாம் தினமும் பார்க்கும் பெண்களில் பலர் கருப்பை நீக்கம் செய்து விட்டவர்கள். இன்னும் சிலர் "கூடிய சீக்கிரமே எடுக்க வேண்டியதுதான். ரொம்பவும் பிரச்னை. தாங்க முடியலே" என்று அலுத்துக் கொள்பவர்கள். கருப்பை நீக்கம் செய்வதால் வரக்கூடிய பின் விளைவுகள், பக்க விளைவுகள் பற்றி நம்மில் பலருக்கும் நிறைய சந்தேகங்கள் உண்டு. நம் கேள்விகளுக்கு விடை தேடி டாக்டர் திருமதி வசந்தா சிவானந்தம் அவர்களை தமிழ்நாடு மருத்துமனையில் சந்தித்தோம் –

கருப்பை நீக்கம் செய்த பின்பு...



கருப்பை நீக்கம் எந்த மாதிரி நிலையில் செய்யப்படுகிறது? இதற்கு வயது வரம்புகள் உண்டா?

முன்காலத்தில் பெண்கள் 40 வயதை நெருங்கும் போது அதிகமான இரத்தப் போக்கு, குறைந்த இடைவெளியில் அடிக்கடி வரும் மாதவிலக்கு என ஏற்பட்டால் 'தாரம் நிற்கும் நேரம்' என்று பொறுமையுடன் பொறுத்துக் கொள்வார்கள். கேன்சர், இரத்த சோகை போன்றவைகளினால் பாதிக்கப்படவும் செய்வார்கள். ஆனால் இன்று அப்படி அல்ல. ஒரு சாதாரண சிறிய பிரச்னை என்றாலே உடனேயே மருத்துவர்களை அணுக வேண்டும் என்ற ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பது பாராட்ட வேண்டிய ஒன்றுதான். இல்லத்தரசியோ/பணிக்குச் செல்லும் பெண்ணோ - யாருக்குமே தகுதியான உடல் நிலையுடன் எப்போதுமே இருக்க வேண்டுமென்று விருப்பம் உண்டு. அதிகமான உதிரப்போக்கு, அழற்சி போன்றவைகள் இருந்தால் முதலில் மருந்துகள் மற்ற சிகிச்சைகள் தருவோம். அந்தப் பெண் 30 வயதை நெருங்கிக் கொண்டிருந்து, குழந்தை பெற்று முடித்திருந்தால் - இனி மருந்தினால் மட்டுமே அவளுடைய பிரச்னை தீராது என்ற நிலை வரும் போது மட்டுமே கருப்பை நீக்கம் செய்வோம். 60, 70 வயதுக்கு மேல் கருப்பை நீக்கம் செய்யும் நிலை என்றால் புற்றுநோய் அல்லது கருப்பை கீழே இறங்கியிருத்தல் காரணமாகும்."

"ஓவரி என்னும் கருமுட்டைப்பை நீக்கம் செய்வதால் வரும் பாதிப்புக்கள்?"

"ஓவரி என்பது பெண்களுக்கு மிகவும் அத்தியாவசியமான உறுப்பு. இது சுரக்கும் ஈஸ்ட்ரோஜன் என்னும் ஹார்மோன் இதயத்திற்குப் பாதுகாப்பு தரும். பெண்மையின் மென்மைக்கு இந்த ஹார்மோன் முக்கிய காரணம். எலும்புகளையும் தேய்மானம் இல்லாது காக்கும். மாதவிடாய் காலத்தில் இந்த கருமுட்டைப்பைகள் தங்கள் பணிகளை சிறிது சிறிதாகக் குறைத்து பின்பு நிறுத்திவிடும். இது போல கருப்பை நீக்கம் செய்யும் போது கூடுமானவரை இரண்டு ஓவரிகளையும் எடுப்பதில்லை. அந்த ஓவரிகளால் ஏதாவது பிரச்னை என்றால் அதுவும் கருப்பை நீக்கம் செய்யும் பெண்மணி 45 வயதை நெருங்கிக் கொண்டிருந்தால் மட்டுமே இவைகளை எடுப்போம். ஒரு ஓவரியாவது விட்டு வைப்பது உண்டு. இப்படி ஓவரிகளை திடீரென நீக்கிவிடுவதால் அவைகளின் பணியும், அவை சுரக்கும் ஹார்மோனும்



ஹோட்டல் இட்லி சாம்பார் வீட்டிலேயே எப்படி? இட்லிக்கு புழுங்கல் அரிசி அரைக்கும் பொழுது ரவைபதத்தில் அரைத்துக் கொள்ளவும். இட்லிக்குக் காலையில் செய்த சாம்பார் மீந்திருந்தால் அதனுடன் மிக்ஸியில் அரைத்த (ஒரு வெங்காயம், சிறிது வறுக்காத தனியா, சிறிது கசகசா மூன்றும் சேர்ந்த) விழுதைப் போட்டு ஒரு கொதி விடுங்கள். சூப்பர் சாம்பார் ரெடி.

— ரதா வெங்கடேஷ்

சுத்தமாக நின்று விடுவதால் அதிகமாக வியர்த்தல், திடீரென உடல் சூடாகுதல், சில சமயம் இரத்த அழுத்தம் கூடுதல், படபடப்பு, எலும்புகள் தேய்தல், சில சமயம் ஹார்ட் அட்டாக் கூட வரலாம்."

"இவைகளைத் தடுக்க 'ஹார்மோன் ரீப்ளேஸ்' செய்யலாம் என்கிறார்களே? இதை எத்தனை வயது வரை தரலாம்? பக்க விளைவுகள் உண்டா?"

"ஓவரி நீக்கம் செய்வதால் வரக்கூடிய பாதிப்புக்களை இந்த ஹார்மோன் ரீப்ளேஸ் மூலம் தடுக்கலாம். இவைகளை மாத்திரை, இன்ஜக்ஷன் அல்லது பேட்ச் மூலம் தரலாம். இதை ஒரு டாக்டரின் மேற்பார்வையில் எடுத்துக் கொள்ள வேண்டும். இவைகளை எடுத்துக் கொள்ளும் போது இரத்த அழுத்தம், எடை, மார்பகங்கள் போன்றவைகளை ஆறு மாதங்களுக்கொருமுறை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இவைகளை எப்போதும் எடுத்துக் கொள்ளலாம். வயது வரம்பு இல்லை."

"கருப்பை நீக்கம் செய்தவர்களில் பலருக்கு முதுகு மற்றும் இடுப்பு வலி வருகிறது என்று சொல்கிறார்களே?"

"இப்படி ஒரு பெண் அறுவை சிகிச்சைக்கு என வரும் போது அந்தப் பெண்மணியை டாக்டர் முதலில் கௌன்சில் செய்து இந்த அறுவை சிகிச்சையினால் அவளுக்கு அவள் பிரச்னைகள் நீங்கி நல்ல சுகம் பெறப் போகிறாள் என்பதை அவள் மனத்தில் பதிய வைக்க வேண்டும். அதே போல, 'நம் டாக்டர் செய்யும் இந்த சிகிச்சையினால் நமக்கு வலியும் வேதனையும் நீங்கும்' என அந்தப் பெண்ணும் எண்ண வேண்டும். அப்படி ஒரு பரஸ்பர நல்ல எண்ணம் உருவாகிவிட்டால் அறுவை சிகிச்சைக்குப் பிறகு வரும் முதுகுவலி, இடுப்பு வலி, மற்ற உடல் உபாதைகள் எது ஏற்பட்டாலும் கருப்பை நீக்கத்தினால்தான் இது வந்தது என்ற எண்ணம் வர வாய்ப்பே இல்லை. இந்த வலிகள் கருப்பை நீக்கம் செய்யாத ஒரு பெண்ணுக்குக் கூட வரலாமே? அப்படி வரும் போது என்ன காரணம் சொல்வது? கருப்பை நீக்கத்திற்கும் இந்த வலிகளுக்கும் சம்பந்தமில்லை."

"குனிந்து நிமிர்தல், தரையில் படுத்தல்/உட்காருதல், கீழே விழுந்து வணங்குதல் இவைகளை அறுவை சிகிச்சை முடிந்து எத்தனை நாட்களுக்குப் பிறகு செய்யலாம்?"

"பத்து நாட்கள் ஆனபின்பு லேசாகக் குனிந்து நிமிரலாம். எல்லோருடைய வீட்டிலும் கட்டிலையும், மேற்கத்திய பாணி கழிவறைகளையும் எதிர் பார்க்க முடியுமா? நிதானமாக, ஜாக்கிரதையாக இருந்தால் தாராளமாகத் தரையில் படுக்கலாம், உட்காரலாம். அறுவை சிகிச்சை முடிந்து ஒரு வாரமான பின்பு மெதுவாக எளிய வேலைகளைச் செய்யலாம். 45 நாட்கள் வரை அதிக பளுவைத் தூக்கக் கூடாது. 'பெட்-ரெஸ்ட்' தேவையில்லை. 'முடிந்த வேலைகளை மட்டுமே செய்யலாம் - இஷ்டப்பட்ட அனைத்து வேலைகளையும் செய்யக் கூடாது. இரண்டு மாதங்களான பின்பு தாராளமாக தண்ணீர் குடம் கூட தூக்கி வரலாம்."

"யூரினரி இன்ஃபெக்ஷன் வரும் வாய்ப்பு உண்டா?"

அறுவை சிகிச்சையின் போது டியூப் போட்டுச் சிறுநீரை எடுப்பதால் சில சமயம் ஒரு சிலருக்கு அறுவை சிகிச்சை முடிந்தவுடன் வரலாம். இது கருப்பை நீக்க அறுவை சிகிச்சைக்கு மட்டுமல்லாமல் எல்லா அறுவை சிகிச்சைகளுக்குப் பின்பும் வர வாய்ப்பு உண்டு!"

"வயிற்றினுள் போடப்படும் தையல்கள் சேர/உள் இரணம் ஆற எத்தனை காலம் ஆகும்?"

"தையல் போட பயன்படுத்தும் மெட்டீரியல்கள், அறுவை சிகிச்சை நிபுணரின் திறமை இவைகளைப் பொருத்துத்தான் இந்தக் காலம் அமையும். இப்போது வரும் (தையல் போட பயன்படுத்தும்) மெட்டீரியல்கள் மிகவும் தரமானவை. வேகமாகவே புண் ஆறிவிடும். அத்துடன் வயிற்றை குறுக்காகத் திறந்து அறுவை சிகிச்சை செய்தால் ரணம் சீக்கிரமாக ஆறிவிடும். அத்துடன் நோயாளிக்கும் இந்த முறை சௌகர்யமானது என்பதுடன் ஹெர்னியாவும் வராது."

"அறுவை சிகிச்சை முடிந்து ஒன்றிரண்டு ஆண்டுகள் ஆனபின்பும் கூட சில சமயம் சிலருக்கு அடிவயிற்றுப் பகுதி ரொம்பவும் 'டைட்'டாக இருப்பது போல ஒரு உணர்வு இது ஏன்?"

குழந்தை இல்லையா?

கருப்பை கட்டிகள்-மாதவிடாய் கோளாறா?

❋ கருப்பை கட்டி- குழந்தை பெற்றவர்: Mr.N.R. பார்த்தசாரதி (36) இவர் மனைவி பத்மஜா (31), லட்சுமி நாராயணன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33 கருக்கோளம் மற்றும் இணைப்பு குழாயில் பெரிய கட்டி இருந்து 8 Gynaecologistகள் முயன்றும் குழந்தை பேறு கிட்டவில்லை. எமது சிகிச்சையில் கட்டி கரைந்தது. இம்மாதம் ஒரு குழந்தைக்கு தாய ஆகி உள்ளார். இது போல Dr. Rathna, M.B.B.S., சென்னையில் ஒரு பிரபல மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டரான இவருக்கு Clinical Testகள் Normal -ஆக இருந்தும் குழந்தை இல்லை. எமது குருமருந்து சிகிச்சைக்குப்பின கருவுற்றிருக்கிறார். **❋ கருப்பைக் கட்டி கரைந்தது:** (Fibroid) Miss. திலகம் (39) கிழக்கு தாம்பரம், சென்னை-59. இவருக்கு கருப்பையினுள் 5.1cm. கட்டி (Fibroid) இருந்தது. எமது சிகிச்சைக்குப் பின் கட்டி முழுதும் கரைந்துவிட்டது U.S. Scan மூலம் உறுதியாகி உள்ளது. **❋ சிறுநீரக கல் கரைந்தது:** Mrs. கிளாடிஸ் (35) மகாலட்சுமிபுரம், கிழக்கு தாம்பரம், சென்னை-59. இவருக்கு சிறுநீரகக் குழலில் (Ureter) கல் அடைத்து சிறுநீரகமும் வீங்கியது. எமது சிகிச்சையில் அது முழுவதும் கரைந்து விட்டது.

திருமணமாகி 5-6 ஆண்டு ஆகியும் குழந்தை இல்லையா?

அப்படியானால் உங்கள் பிரச்சினை இவைகளாகத்தான் இருக்க வேண்டும்!

1) ஆர்மோன் ஒழுங்கீனம் காரணமாக தாறுமாறான ரத்தப்போக்கு. 2) கருப்பான கட்டிகளாக அதிகமான ரத்தப்போக்கு. 3) கருக்கோளங்களில் கட்டிகள் - PCOD (Poly Cystic Ovarian Diseases) குழந்தை இல்லாத பெண்களில் 70% பேரின் பிரச்சனை இதுதான்! இதனால் மாதவிடாய் நாட்கணக்கின்படி வருவதில்லை. முட்டை (Follicle) உற்பத்தி தடைபட்டு ஆர்மோன் மாத்திரை சாப்பிட்டால் மட்டுமே மாதவிலக்கு ஏற்படுவது இல்லாவிட்டால் 2 - 3 மாதம் ஆனாலும் வருவதில்லை. சிலருக்கு 13 - 14 வயதிலேயே இந்தப் பிரச்சினை ஆரம்பித்து விடுகிறது 4) கருப்பையினுள் கட்டிகள் புண்கள் (Fibroid Polyp, Cyst, Endometriosis, Cervicitis) குழந்தை பெறுமுன்பேகூட பல பெண்களுக்கு கட்டிக்காக கருப்பையை எடுத்துவிட வேண்டிய நிர்ப்பந்தம். 5) கருக்குழலில் அடைப்புகள்- (Fallopian Tube Block) இதற்கு ஆபரேஷன் செய்வதால் கருக்குழலே சேதமடையும் வாய்ப்பு அதிகம். 6) 3-வது, 4-வது மாதத்தில் தொடர்ந்து கருச்சிதைவு (Missed Abortion) முழு ஓய்வில் இருந்தாலும்கூட இதை தவிர்க்க முடிவதில்லை. நவீன மருத்துவத்தில் இது புரியாத புதிர்! கருப்பை கோளாறுகளுக்கும், குழந்தை இல்லாத பெண்கள் குறைபாடுகளுக்கு பொதுவாகஒருசில ஆர்மோன் மாத்திரைகளே பல பெயரில் தயாராகி வேறு வேறு டாக்டர்களால் தரப்படுகின்றன. இவைகளையே தொடர்ந்து சாப்பிடுவதால் பல பயங்கர தீய விளைவுகள் உண்டு. (Shaw's Text Book of Gynaecology)

உயிரணு இல்லாத ஆண்கள்: (Azoospermia) ஆண்களின் குறைபாடுகளில் மிகவும் சிக்கலானதும் பிறரிடம் உயிரணு பெறுதல் அல்லது தத்து எடுத்தல் இரண்டு மட்டுமே தீர்வு என்று கருதப்படும் இந்த கோளாறுக்கு வெற்றிகரமான சிகிச்சை எம்மிடம் உண்டு. இதற்கு வெறும் விந்து பெருக்கும் மருந்துகள் எத்தனை ஆண்டு சாப்பிட்டாலும் பலன் இல்லை.

இந்த குறைபாடுகள் நீங்கி குழந்தை பேறு பெற வேண்டுமா? உங்களுக்கு உதவ 180 ஆண்டு பாரம்பரை அனுபவம் பெற்ற சித்தர் மருத்துவ சிகிச்சை அளிக்கிறோம். ஒவ்வொரு கோளாறுக்கும் தனித்தனி சிறப்பு மருத்துவம் உண்டு!

30-40 நாள் நிற்காத ரத்தம்: பல பெண்களின் 30-40 நாள் நிற்காத ரத்தப் போக்கிற்காக கருப்பையை அகற்ற தேவை இல்லை! எமது மூலிகை மருந்தினால் குணம் பெறலாம்!

இளம்பெண் மார்பக கட்டி கரைந்தது!

Miss. சசிகலா (20) பண்ருட்டி, செங்கை MGR மாவட்டம் இவருக்கு இடப்புற மார்பினுள் 1.5 செ.மீ. அளவு இருந்த கட்டி (Fibro Adenoma) எமது சிகிச்சையில் முழுவதும் கரைந்து விட்டது. இதுபோல் இம்மாதம் இன்னும் 2 பேர் நலம் பெற்று உள்ளனர். (திருமணம் ஆகாத பெண்கள் ஆகையால் முழு முகவரி வெளியிட முடியவில்லை).

பெண்கள் மார்பகத்தில் குத்தல், வலியுடனோ வலி இல்லாமலோ ஒருவித கட்டி (Fibro Adenoma) வருவதுண்டு. அதை கரைத்துவிட சரியான மருத்துவம் இல்லாமல், மாதாமாதம் Check-up செய்து கொண்டு வருபவர் பலர். எமது சிகிச்சையில் எளிதாக குணம் பெறலாம். பயத்துடன் நாட்களை கடத்த வேண்டாம்.

புற்றுநோய் தீராத நோய் அல்ல. கடைசி கட்டத்தில், வருவதைவிட கண்டுபிடித்தவுடன் எமது சிகிச்சை பெற்றால் குணம் அடையும் வாய்ப்பு அதிகம். **கன்னம், மார்பகம், தொண்டை, கல்லீரல், கருப்பை, மலக்குடல்,** Thyroid **அக்குள் சுரப்பிகள், மூக்கு, நாக்கு, மூளை ஆகிய இடங்களில் வரும் புற்றுநோய்க்கு சிறப்பான சிகிச்சை செய்கிறோம்.** 20-நாளில் வலி நின்று விடுவதும், 45 நாளிலேயே குணமாவதும் அறிகுறி தென்படுவதும் எமது மருந்துகளின் மகிமையாகும்.

சோதனைக்கு பெண் மருத்துவர் உண்டு. வெளியூர் நோயாளிகள் மருந்து பெற்றுக்கொண்டு உடன் திரும்பிவிடலாம்.



Dr. S. JEYARAM, M.A., M.A., PRAVEEN, HIMP, RMP

3000-க்கும் மேற்பட்ட சித்த மருத்துவ சுவடிகளை ஆராய்ந்தவர் மற்றும் ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி ஆங்கில மருத்துவ முறைகளிலும் ஆழ்ந்த ஆராய்ச்சி உள்ளவர்.

நவோதயா சித்தர் மருத்துவமனை

20, ஆற்காடு ரோடு (மாடியில்) கோடம்பாக்கம், சென்னை - 600 024.
(லிபர்டி பஸ் ஸ்டாப் / சேகர் எம்போரியம் அருகில்) போன் : 4954389 / 8551258 (வீடு)

ஆலோசனை நேரம் : காலை 10 முதல் 2 மணி வரை, மாலை 4 முதல் 8.30 மணி வரை, ஞாயிறு காலை மட்டும்

தபால் / போன் / நேரில், தேதி-நேரம் குறித்துக் கொண்டுதான் வர வேண்டும்.

செப்டம்பர் 18-ந்தேதி டாக்டர் கோவை வருகை. 15-ந்தேதிக்குள் முன் பதிவு செய்ய தொடர்பு கொள்ள போன்: 440235 (P.P.)

"இதற்கும் கருப்பை நீக்கத்திற்கும் சம்பந்த மில்லை. 'காஸ்டிரிக்' (வாயு) தொந்திரவுகள்தான் இதற்குக் காரணம். அதற்குண்டான மருந்துகள் எடுத்துக் கொண்டால் இது குணமாகிவிடும்."

"கருப்பை நீக்கம் செய்த பலருக்கு உடல் மிகவும் பெருத்துப் போகிறதே? ஏன்?"

"தேவையில்லாமல் அதிகமான ஓய்வு, உடற் பயிற்சி என்பதே கிடையாது. இத்துடன் அறுவை சிகிச்சை செய்து கொண்டதனால் உடல் ரொம்பவும் பலவீனமாகி விட்டது என்ற எண்ணத்தில் அதிகம் உண்பது இவைதான் உடல் பெருக்க முக்கிய காரணம். உணவுக் கட்டுப்பாடு உடற்பயிற்சி என்பது நம் எல்லோருக்குமே எப்போதுமே மிகவும் அவசியம். நடைப் பயிற்சி மிகவும் நல்லது."

"ஓவரிகள் நீக்கப்பட்டு விட்டால் தாம்பத்திய உறவில் ஆர்வம் குறையுமா?"

"ஓவரிகள் நீக்கப்படும் போது பிறப்புறுப்பில் உலர்தன்மை ஏற்படுவதால் தாம்பத்திய உறவின் போது சில சமயம் அசௌகர்யமாக இருக்கக்கூடும். இதற்கு பெண் மருத்துவர்களை அணுகினால் தகுந்த ஆலோசனை தருவார்கள். எந்த விதமான பிரச்னையோ பயமோ இல்லாமல் இல்லற உறவைத் தொடரலாம்."

"அறுவை சிகிச்சைக்குப் பிறகு உடல் பலவீனமாகி விடுகிறது தொடர்ந்து வேலை செய்ய முடியவில்லை என்ற ஒரு எண்ணம் - இது சரியா?"

"ஓரளவு சரிதான். அறுவை சிகிச்சைக்கு வரும் போதே அந்தப் பெண்ணுக்கு லேசான இரத்த சோகை இருக்கலாம். அறுவை சிகிச்சையின் போது ஏற்படும் இரத்த இழப்பு - சிகிச்சைக்குப் பின்பு டாக்டர் சிபாரிசு செய்யும் அளவு இரும்புச் சத்து மற்றும் வைட்டமின் மாத்திரைகள், சத்தான உணவு இவைகளை உண்ணாமை, இதனால் உடல் பல வீனமாகலாம். மருத்துவரின் ஆலோசனையுடன் மருந்துகளையும் நல்ல உணவையும் எடுத்துக் கொண்டால் பழையபடி பலம் பெறலாம்."

"ஓவரிகள் நீக்கம் செய்யப்படுவதால் 'பெண் தன்மை' குறைந்து விடுமா?"

"ஓவரி தன் வேலைகளை நிறுத்திவிடுவதுதான் சூதக ஓய்வு எனப்படுகிறது. அது படிப்படியாகக் குறைந்து, பின்பு நிற்கும். இப்படி ஓவரிகளை எடுப்பதால் திடீரென அப்படி ஒரு நிலை ஏற்படும். 'பெண் தன்மை' குறைந்துவிடும் என்ற பயம் எதற்கு, தாராளமாக ஹார்மோன் தெரபி எடுத்துக் கொள்ளும் போது?"

"ஓவரிகள் நீக்கம் செய்யப்படாவிட்டால் எத்தனை காலத்திற்கொருமுறை செக்கப் செய்து கொள்ள வேண்டும்?"

"முப்பது வயதான, திருமணமாகி தாம்பத்திய உறவில் ஈடுபடும் பெண்கள் ஆண்டுக்கொருமுறை பெண் மருத்துவரிடம் தங்கள் கருப்பை மற்றும் ஓவரிகளை சோதனை செய்து கொள்ள வேண்டும். கருப்பையை மட்டும் நீக்கம் செய்துவிட்டு ஓவரிகளை வைத்துக் கொண்டுள்ள பெண்களுக்கும் இது பொருந்தும்."

"கைகால், மூட்டு வலிகள், மலச்சிக்கல், வாயுக் கோளாறு போன்றவைகள் கருப்பை நீக்கத்தினால் வருமா?"


"ஓவரிகள் நீக்கம் செய்வதால் எலும்புகள் தேய்மானம் இருக்கும். இதற்கு ஹார்மோன் ரிப்ளேஸ் செய்வதுடன் கேல்ஷியம் மாத்திரைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். வாயுக் கோளாறு, மலச்சிக்கலுக்கும் கருப்பை நீக்கத்திற்கும் சம்பந்தமேயில்லை."

"இது போல கருப்பை நீக்க அறுவை சிகிச்சை செய்து கொண்ட இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு பெண் சிகிச்சை முடிந்த இரண்டு மாதத்திலேயே சைக்கிளிலேயே ஐரோப்பா முழுவதும் சுற்றுப்பயணம் செய்தாள். தன்னம்பிக்கையிருந்தால் எதையுமே எளிதாக எதிர் கொள்ள முடியும். அறுவை சிகிச்சையின் அவசியம், அதனால் அந்தப் பெண் பெறப்போகும் நன்மை இவைகளை அவள் மனத்தில் பதிய வைப்பது ஒரு மருத்துவரின் கடமை. அதே நேரம் கீழே விழுந்து ஒரு சிறிய காயம் பட்டாலே துடித்து விடுகிறோம். வயிற்றைத் திறந்து தைப்பது எளிய வேலையில்லை. அதில் வலியும் வேதனையும் இருக்கத்தான் செய்யும். பொறுத்துக் கொண்டால் நிரந்தர நிவாரணம் இருக்கும் என்பதை அந்தப் பெண்ணும் உணர வேண்டும். அறுவை சிகிச்சை செய்ததுடன் தன் கடமை முடிந்து விடவில்லை. அந்தப் பெண்ணின் உடல் சம்பந்தமான எந்த பிரச்னைக்கும் தான் எந்த நேரமும் நின்று உதவ வேண்டும் என்ற எண்ணம் அந்த மருத்துவரின் மனத்தில் இருந்தால் அப்புறம் ஏன் குழப்பங்களும் பிரச்னைகளும் வரும்?!" என்கிறார் டாக்டர் வசந்தா சிவானந்தம்."

பேட்டி : **வைதேகி தேசிகன்**

வெல்லச் சீடை விரியாமல் இருக்க, குலோப் ஜாமூனுக்கு உருட்டுவது போல ஸாஃப்ட்டாக உருட்ட வேண்டும். எங்கள் வீட்டிற்கு முறுக்கு சுற்ற வந்த சமையல் மாமி கொடுத்த டிப்ஸ் இது.

— ஷமீமா





கடின உழைப்பு என்பது பெண்களுக்கு இயல்பான ஒன்று!

'**வீ**ட்டைக் கட்டிப் பார்...' என்று சும்மாவா சொன்னார்கள் பெரியவர்கள்? ஒரு வீட்டைக் கட்டி முடிப்பதே பெரிய வாழ்க்கைப் பிரச்னையாக இருக்கும். அதுவும் ஆட்களை வைத்து வேலை வாங்குவது, சாமான்களுக்காகத் திரிவது மகா கடினமானது. இப்படிப்பட்ட துறையில் ஒரு பெண்மணி வெற்றிகரமாக காலூன்றி முன்னேறி வருகிறார் என்பது பெரிய சாதனைதானே!

மதுரையில் பிரியங்கா ஃப்ளாட் டெவலப்பர்ஸ் லிமிடெட் எனும் நிறுவனத்தின் மேனேஜிங் டைரக்டரான திருமதி நிர்மலா பாஸ்டியன்தான் அவர். அவர் தனது சாதனைகளைப் பற்றிக் கூறினார்.-



• பாஸ்டியன்

'**சா**தாரணமாக பிளாட் வீடு கட்டித் தருபவர்கள் காலி மனையைக் காண்பித்து இங்கேதான் உங்களுக்கு விடு கட்டித் தரப் போகிறோம் என்பார்கள். ஆனால் நாங்கள் இந்த நிலையில் இருந்து மாறுபட்டு எங்கள் பிரியங்கா பிளாட் டெவலப்பர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தில் மதுரையை ஒட்டிய பகுதிகளில் பிளாட் வீடுகளை கட்டிக் கொண்டே அதில் 'அவரவர் வசதிக்கு ஏற்றபடி வீடுகளைத் தேர்வு செய்து கொள்ளலாம்' என்று புதுமையாக அறிவித்து செயல்பட்டு வருகிறோம். கற்பனையில் தங்களுக்குக் கட்டப் போகும் ஃபிளாட்டுகளைக் காணாமல் நிதரிசனமாகவே காணலாம்" என்கிறார் பிரியங்கா நிறுவனத்தின் மேனேஜிங் டைரக்டர் திருமதி நிர்மலா பாஸ்டியன்.

"ஏன் மதுரையை ஒட்டிய பகுதிகளைத் தேர்ந்தெடுத்தீர்கள்" என்று கேட்டபோது,

"நகரின் உள்ளேயும் ஏற்கெனவே வீடுகள் கட்டித் தந்து இருக்கிறோம். ஆனால் நகரில் நல்ல குடிநீர் கிடைப்பது இல்லை. காற்றோட்டம் கிடையாது. நிலத்தின் மதிப்பும் அதிகமாக இருக்கிறது. எனவே இப்போது நகரை ஒட்டி உள்ள செமி-அர்பன்-புறநகர் பகுதியில் வீடுகளை கட்ட ஆரம்பித்து இருக்கிறோம்.


ஆனால் ஒன்று. நடுத்தரவர்க்கம் என்றால் இத்தனை ஸ்கொயர்ஃபுட் வீட்டிற்குள் அடங்கிவிட வேண்டுமா என்ற எண்ணம் எனக்கு வந்தது. அவர்களுக்கும் ஏன் மேல்தட்டு வர்க்கத்தினரின் சூழ்நிலையை, அதே சமயம் ஆரோக்கியமான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடாது என எனக்குள் எழுந்த எண்ணம் காரணமாகத்தான் அண்ணா நகர் எக்ஸ்டென்ஷன், கோமதிபுரம் பிளாட் வீடுகளில்

• நிர்மலா



இதைச் செயலாக்கினோம். இங்கு இரவுண்ட் ப்ளோருடன் சேர்த்து மூன்று அடுக்குகள் கட்டுகிறோம். இங்கே குழந்தைகள் பூங்கா, ஸ்விம்மிங்பூல் – நீச்சல்குளம், ஹெல்த்கிளப் ஆகியவை அமைத்து, 'பிரியங்கா வில்லேஜ்' உருவாக்கி 'மாடல் வில்லேஜாகவே' அதனை உருவாக்க இருக்கிறோம். இது என்னுடைய கனவு என்று கூடச் சொல்லலாம்" என்கிறார் இவர்.

"மதுரையில் நகரை ஒட்டியுள்ள மூன்று இடங்களில் பிளாட் வீடுகளை சகல வசதிகளுடன் கட்டி வருகிறோம். நத்தம் மெயின் ரோட்டில் உள்ள திருப்பாலையில் வித்யா பிரியங்கா பிளாசா அமைத்தும், அண்ணாநகர் எக்ஸ்டென்ஷன் கோமதிபுரத்தில் 'மார்க்ஸ் பிளாசா' அமைத்தும், கோச்சடையில் 'கோச்சடை கேட்' அமைத்தும் வருகிறோம்.



மூன்றுக்கும் மக்கள் இடையே நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.

இன்றைய காலகட்டத்தில் தனி வீடு வாங்குவது என்பதோ, அவரவரே வீடு கட்டிக் கொள்வது என்பதோ நடக்காத காரியம். நடுத்தரவர்க்கத்தினர் வேலைக்குப் போய்ச் சம்பாதிப்பார்களா, வீடு கட்டுவார்களா? ஆனாலும் இவர்கள் அனைவருக்குமே 'சொந்த வீடு' என்ற கனவு இருக்கும். அவர்களுக்காகவே நாங்கள் நடுத்தர வருவாய்க்கேற்ப வீடுகளை கட்டித் தருகிறோம். இந்த பட்ஜெட்டில் தனியாக ஓர் இடம் வாங்கி அதில் வீடு கட்ட அதிக செலவாகும். அதனைத் தவிர்த்து நடுத்தரக் குடும்பம் வாங்கும் விலை அமைத்து ஃப்ளாட்டுகள் நிறைவான தரத்துடன் குறைந்த செலவில் நடுத்தர குடும்பத்தினரின் கனவை நினைவாக்கி வருகிறோம்.

"ஒரு பெண்ணாக இருந்து கொண்டு..." என ஆரம்பிக்கும்போதே இடைவெட்டுகிறார் இவர்.

"திருப்பித் திருப்பி இதே கேள்வியை எத்தனை வருஷம் கேட்டுக் கொண்டு இருக்கப் போகிறீர்கள். கடின உழைப்பு என்பது பெண்களுக்கு இயல்பான ஒன்று. அதனால் எனக்கு இந்தத் துறையில் உழைப்பது பெரிய கஷ்டமாக இல்லை. இன்னொன்று, நான் பெண்ணாக இருப்பதாலேயே வீடுகளில் ஒரு குடும்பத்திற்கு என்னென்ன வேண்டும் எனப் பார்த்துப் பார்த்துச் செய்ய முடிகிறது. சிறிய சிறிய விஷயங்களிலும் கவனம் செலுத்த முடிகிறது. உதாரணங்கள் சொல்கிறேன்..." என கிடுகிடுவென சொல்ல ஆரம்பித்தார்.

"திருப்பாலை பிளாட் வீடுகளில் இரண்டு லிப்ட் அமைக்கப் போகிறோம். ஒரு லிப்ட் இயங்காது போனால் மற்றொரு லிப்ட் இயங்கும். இதுவரை எந்த பிளாட்டிலும் இல்லாத புதுமை இது. வெளியே இருந்து சாமான்களைத் தூக்கிக் கொண்டு களைத்து வரும் பெண்கள் லிப்ட் ரிப்பேர் என்றால் எவ்வளவு அவஸ்தைப்படுவார்கள் என நான் அறிவேன்.

கோச்சடையில் 'கோச்சடை கேட்' பிளாட் வீடுகளில்



பணத்திற்கு கைகள் இல்லை. ஆனால் அதையே உங்களுக்காக உழைக்க வைக்கும் எங்கள் கைகள்.

நீங்கள் கடுமையாக உழைத்து சம்பாதித்த ஒவ்வொரு காசையும் உங்களுக்காக, உங்களது வளமான எதிர் காலத்திற்காக உழைக்க வைப்பதையே தனது குறிக்கோளாகக் கொண்டது 'ஷாஸன் ஃபைனான்ஸ்'. 20 வருட அனுபவமும், ரூ.100 கோடிக்கு மேல் வியாபாரமும் உடைய 'ஷாஸன் குரூப்'பின் ஒரு அங்கமான 'ஷாஸன் ஃபைனான்ஸ்'ஸில் முதலீடு செய்வதன் மூலம் உங்கள் பணம் நம்பகமான, பாதுகாப்பான கைகளைச் சென்றடைகிறது. ஏனெனில் அனுபவச் செறிவும், இளமையின் துறுதுறுப்பும் உடைய எங்களால் பணத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புகளையும், பாதுகாப்பையும் அளிக்க முடியும். இதனை உறுதி செய்யும் வகையில், அசலைத் திருப்பிக் கொடுப்பதிலும், உரிய நேரத்தில் வட்டி வழங்குவதிலும் போதிய பாதுகாப்பிற்கு CARE நிறுவனத்தாரின் மதிப்பீடு பெற்றுள்ளது 'ஷாஸன் ஃபைனான்ஸ்'. சேவையிலாகட்டும், உத்திரவாதத்தை உறுதி செய்வதிலாகட்டும் தனது வாடிக்கையாளர்கள் எப்போதும் சிறந்தவற்றையே பெறுதல் வேண்டும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டது 'ஷாஸன் ஃபைனான்ஸ்'.



ஷாஸன் ஃபைனான்ஸ் லிமிடெட்

Member Shasun Group

நிர்வாக அலுவலகம் : 21, கோபால கிருஷ்ணா ரோடு, தி.நகர், சென்னை - 600 017. போன் : 8281138

டெபாசிட் மையம் : 2, துரைசாமி ரோடு, தி.நகர், சென்னை - 600 017. போன் : 4347128, 4348930, 4348931.

கோயம்புத்தூர் : சேரன் டவர்ஸ், 60/27, முதல் மாடி, அரசு கலைக் கல்லூரி ரோடு, கோயம்புத்தூர் - 641 018, போன் : 201256.

பாண்டிச்சேரி : 2வது மாடி, நெ.80, காமராஜ் சாலை, பாண்டிச்சேரி - 605 011.

திருச்சி : 5வது மாடி, கணேஷ் காம்ப்ளெக்ஸ், நெ.6-A, காசன்ஸ் ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சி - 620 001.

மதுரை : ஜுவைஹரா பில்டிங், 26A மேற்கு ஆவணி மூல தெரு, மதுரை – 625 001.

சேலம் : 5/271B, ஜங்ஷன் மெயின் ரோடு, முதல் மாடி, ஜுந்து ரோடு, சேலம் – 636 004

கொச்சி : பிஸினெஸ் கம்யூனிகேஷன் சென்டர், சிராமல் சேம்பர்ஸ், குரிஷிபள்ளி ரோடு, ரவிபுரம், கொச்சி -682 015. போன் : 365492, 369627.

பெங்களூர் : பிரஸ்டீஜ் காம்ப்ளெக்ஸ், நெ.3, 5வது கிராஸ், மல்லேஸ்வரம், பெங்களூர் -560 003.

Insight-360

வாடிக்கையாளரின் திருப்தியே எமது முயற்சியின் குறிக்கோள்

சிங்கின் பெட்ரூம் வசதியுடன் கட்ட இருக்கிறோம். இது கார்ப்பரேசன் ஏரியாவில் இருக்கிறது. குறைந்த வருமானம் கொண்டவர்களும் சொந்த வீடு எனும் கனவை நனவாக்கிக் கொள்ளவே இத் திட்டம். சதுரடிக்கு ஆயிரம் ரூபாய் வாங்கி பெரிய வீடுகளை கட்டித்தர எங்களால் முடியும். ஆனால் குறைவாக பெரிய பிரம்மாண்டமான பிளாட்டுகளை கட்டி அதிகமாக லாபம் சம்பாதிக்க நாங்கள் விரும்பவில்லை. அதிகமாக சிறிய ஆனால் இரண்டு பெட் ரூம், இரண்டு டாய்லெட் வசதிகளுடன் வீடுகளை அதிகமாகக் கட்டி குறைவாக லாபம் பெறவே திட்டமிடுகிறோம். சதுர அடிக்கு ஐநூறு முதலே கட்டித் தருகிறோம். 2½ லட்சம் முதல் 7½ லட்சம் வரைதான் எங்கள் வீடுகள் இருக்கும்.

பிளாட் மதிப்பில் முதலில் 25 சதவிகிதம் கட்டினால் போதும். மீதித் தொகையை எல்.ஐ.சி. இண்ட் பேங்கில் கடன் வாங்கி தவணை முறையில் அளிக்க நாங்களே ஏற்பாடும் செய்து தருகிறோம்" என்றவர் சொந்த வீட்டைச் சுற்றிக் காக்கும் ஓர் இல்லத்தரசியின் பெருமிதத்தோடு தன்னுடைய ஃப்ளாட்டுகளைக் காட்டினார்.

கடப்பா சமையல் மேடை, சிங்க், மொசைக் தரை, வார்ட்ரோப், குடிதண்ணீர் என ஒவ்வொன்றையும் அவர் பார்த்துப் பார்த்துச் செய்திருப்பதை உணர முடிந்தது. "டிஷ் ஆன்டெனா, பாதுகாப்பிற்கு செக்யூரிட்டி, வண்டிகள் நிற்குமிடத்தில் கூரை என இவையெல்லாம் கூட செய்யப் போகிறோம்" என்கிறார் பெருமிதத்துடன்.

"எங்களுடைய அலுவலகமான 41 வாக தேவபுரி முதல் தெரு, ஞானஒளிபுரம்,

கோகுலாஷ்டமிக்கு உப்புச் சீடை போடும்போது சீடையை அழுத்தி உருட்டக் கூடாது. மிகவும் சிறியதாகவும் உருட்டக் கூடாது. வாணலியில் பாதியளவு எண்ணெய் வைத்து சிறிதுகூட இடைவெளி இன்றி, எண்ணெய் முழுவதும் பரவி இருப்பது போல் சீடையைப் போட வேண்டும். சிறிது நேரம் பொறுத்துத் திருப்பி விடுங்கள். வெடிக்குமோ என்ற கவலையே இல்லை.

-மஹிமா



இனிப்புக் கொழுக்கட்டைக்கு பூரணம் கிளறும்போது, தண்ணீருக்குப் பதில் 1/4 டம்ளர் இளநீரை விட்டுக் கிளறுங்கள். அதிக இனிப்பு இருக்கும்.

-மஹிமா

மதுரை – 16 (தொ.பே. 603993) எனும் முகவரியில்தான் பெரும்பாலான நேரம் இருக்கிறேன். வீடு வாங்க வருபவர்களில் பெண்கள் தான் அதிகம் கேள்விகள் கேட்பார்கள். நானும் பெண் என்பதால் என்னால் ஒரு தோழியாகப் பேசி என் தொழிலைச் சேவையாகவே செய்ய முடிகிறது" என்னும் இவரிடம்,

"இருபத்திநாலு மணி நேரமும் போதாதே இவற்றையெல்லாம் நிர்வாகம் செய்ய? எப்படி சமாளிக்கிறீர்கள்" என்றதற்கு,

"நான் இந்த அளவு நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்த உற்றதுணையாக இருப்பது என் கணவர் பிரான்சிஸ் பாஸ்டியன்தான். அவரும் பிரியங்கா குரூப் நிறுவனங்களின் சேர்மனாக இருக்கிறார். எம்.பி.ஏ. பட்டதாரியான இவர் பிளாட் வீடுகள் கட்டும் துறையில் நல்ல அனுபவம் பெற்றவர். அவருடைய ஊக்கத்தில்தான் என்னால் இந்த அளவு செயல்பட முடிகிறது" என்கிறார். இவர் சொல்லும் ஒரு விஷயம் சிந்திக்க வேண்டியது. "பிளான் அப்ரூவல் செய்வதில் தாமதம் ஆவதை அரசு தவிர்த்து உடனே பிளான் அப்ரூவல் செய்து விலை ஏற்ற தாழ்வில் வீடுகளை வாங்குபவர்கள் பாதிப்பு அடையாமல் செய்ய வேண்டும்" என்ற இவருடைய அபிப்ராயம் அரசாங்கம் கவனிக்க வேண்டிய ஒன்று.

பேட்டி : ஆர். சுமதி

படங்கள் : கே. பிரசன்னா

தெய்வ



அன்று ஆடி அமாவாசை. சாதார ணமாக விசேஷ நாட்களில், கோவில்களில் குறிப்பாக அம்மன் கோவில்களில் கூட்டம் அதிகமாக இருப்பதுண்டு. ஆடி அமாவாசையன்று அம்மன் கோவில்களில் கூடும் கூட்டம் கணக்கிலடங்காது. அதை நிரூபிக்கும் வகையில் அன்று மதுரை தெப்பக்குளம் மாரியம்மன் கோவிலில் அதிகாலை யிலிருந்து இரவு வெகு நேரம் வரை பக்தர்கள் கூட்டம் அம்மன் தரி சனத்திற்காக அலைமோதியது.

அலுவலகத்தில் வேலையில் இருந்த ராமநாதனுக்கு மாலை 3 மணிக்கு மனைவி பார்வதியிடமிருந்து ஃபோன் வந்தது.

"என்னங்க... இன்னிக்கு எத்தனை மணிக்கு கோவிலுக்குப் போறது? நான் எப்ப வரணும் சொல்லுங்க."

"நீ அஞ்சு மணிக்கு எப்பவும் போல ஆபீஸுக்கு வந்திடு. இங்கிருந்து கோவி லுக்குப் போயிட்டு அப்படியே வீட்டுக்குப் போயிடலாம். சரியா?"

"அது சரி... இன்னிக்கு கூட்டம் அதிகமாக இருக்கும். யாருகிட்டயாவது சொல்லி பாஸ் கீஸ் வாங்கி சீக்கிரமா உள்ள போயிட்டு வர்றதுக்கு வழி பண்ணுங்க. திரும்பி வந்துதான் நான் சமையல் பண்ணணும்."


இரண்டு மாதங்களுக்கு முன் குழந்தை களுக்கு அம்மை நோய் கண்டிருந்த பொழுது, வெள்ளியால் செய்த கண் வாங்கி உண்டியலில் போடுவதாகவும், குழந்தைகளுக்கு மாவிளக்கு எடுப்பதாகவும், ஒரு பன்னிரண்டு வாரங்கள் வெள்ளிக் கிழமைகளோடு விசேஷ நாட்களிலும் கோவிலுக்கு தொடர்ந்து வருவதாகவும் அம்மனிடம் சொல்லிக் கொண்டனர். முதல் இரண்டு வேண்டுதல்களையும் முதல் வாரத்திலேயே நிறைவேற்றிவிட்டு, மூன்றாவது வேண்டுதலை ராமநாதன் தன் மனைவியுடன் நிறைவேற்றுவதில் வெற்றிகரமான எட்டாவது வாரம்தான் இந்த ஆடி அமாவாசை.

பார்வதியின் தொலைபேசி உத்தர வுக்குப் பின் அந்த ஒசிப் பாஸுக்காக ராமநாதன் தெப்பக்குளம் காவல் நிலையத்திலிருந்த அவரது டிஎஸ்பி. நண்பரையும், கோவிலில் வாரம் தோறும் தன்னையும் தன் குடும்பத்தையும் கண்டு கவனித்து அனுப்பும் தன் நண்பனின் நண்பரான கோவில் சூப்பிரண்ட்டென்ட் அவர்களை யும் இன்னும் கோவில் அருகில் உள்ள தியாகராசர் கல்லூரி ஆசிரிய நண்பர்களையும் தொலைபேசியில் பிடிக்க ஐந்து மணி வரை போராடி வெற்றி வாய்ப்பை இழந்தார்.

சரியாக ஐந்து மணிக்கு மனைவி பார்வதி அலுவலகம் வந்து சேர்ந்தாள். "என்னங்க... உள்ள போறதுக்கு ஏற்பாடு பண்ணிட்டீங்களா?"

"அது ஒண்ணுதான் பாக்கி... உங்கேள்வி என்னமோ போல இருக்கு பார்வதி. என்னமோ தெரியல இன்னிக்கு தூண்டில்ல ஒரு மீனும் சிக்கலை. எல்லாப் பயல்களும் ஓடி ஒளிஞ்சுகிட்டானுக போலிருக்கு."

"என்னங்க இது அமாவாசையும் அதுவுமா மீனு கீனுன்னு சொல்லிக்கிட்டு, உங்களுக்கு சமத்து பத்தாதுன்னு



தரிசனம்

வித்யா

பெரும் சலிப்போடு ஆட்டோவில் ஏறினாள் பார்வதி. ஆட்டோ பத்தே நிமிடத்தில் கோவில் வாசல் முன்நின்றது. வாசலுக்கு வெளியிலும் தொங்கிக் கொண்டிருந்தது தர்ம தரிசனக் கியூ. வாசல் வரை வந்துவிட்டது சிறப்பு நுழைவுக் கட்டண கியூ. அலுவலகம் முன்பு அர்ச்சனை மற்றும் என்ட்ரன்ஸ் டிக்கெட் வாங்க கியூ. உள்ளே இருந்த தேங்காய் பழக்கடைகளிலும் பூக்கடைகளிலும் கியூ. வரிசைகளுக்கு இடையே குடும்பம் குடும்பமாக மாவிளக்கு எடுக்கும் கூட்டம். அம்மனுக்குப் பொங்கலிடும் கூட்டம். அம்மனுக்கு உடைத்த தேங்காய் மூடிகளை அப்படியே பற்களால் துருவித் துருவித் தின்று கொண்டிருக்கும் கூட்டம். ஆங்காங்கே அம்மன் அருளிறங்கி கோவில் வீதிகளையும், வரிசைகளையும் ஆடிக் கொண்டே தாண்டிச் செல்லும் பெண்கள் கூட்டம். இப்படி பக்தர்கள் கூட்டம் பிதுங்கி வழிந்தது.

"நான் இந்த 'லயன்ல' இருக்கேன். நீங்க என்ட்ரன்ஸ் டிக்கெட் வாங்கிட்டு வாங்க. அப்படியே அந்த ஆளு இருக்காரான்னு பாருங்க. தேங்காபழம் வேண்டாம். அந்தக் காசை உண்டியல்ல போட்டுடலாம்.."

பார்வதி அந்த கடைசிப் பகுதியை சற்று உரக்கவே பக்கத்திலிருப் போருக்குக் கேட்கும்படி சொன்னாள்.

கோவில் அலுவலகத்திற்கு முன்னால் இருந்த கியூவில் ராமநாதன் சேர்ந்தார். உள்ளே ஒரே நபர் எல்லாவிதமான சீட்டுகளும் கொடுத்துக் கொண்டிருந்தார். அவ்வப்போது துண்டு பேப்பர்களில் கையெழுத்தும் சீலும் போட்டு கியூவில் இல்லாத சில நபர்களுக்குக் கொடுத்து அவர்களை வடக்கு வாசல் வழியாகப் போகச் சொல்லிக் கொண்டிருந்தார். அதுதான் வி.ஐ.பி. வாச லுக்கான ஒசிப் பாஸ்.

மனைவிக்குப் பின்னால் டிக்கெட்

எனக்குத் தெரியும். பியூன அனுப்பியாவது பார்த்திட்டு வரச் சொல்லியிருக்கலாமே?"

"போதும், போதும் நிறுத்து... இதுவரைக்கும் ஆபீஸ் டெலிபோனில் கன்னாபின்னான்னு கத்தியாச்சு. இனி பியூன வேற கண்டபடி கத்த விடணுமா? சீக்கிரமே ஆட் டோவில போயி அங்க மேனேஜ் பண்ணிக்குவோம்."

டோடு வரிசையில் சேர்ந்த ராமநாதன் "அந்த ஆளைக் காணோம், ஆனா அந்த டிக்கெட் கொடுக்கிற ஆளு கண்டபடி எழுதி எழுதி கூட்டம் கூட்டமா ஓசியில உள்ளே அனுப்பிக்கிட்டேயிருக்கார். அதுதான் இந்தக் கியூ நகர மாட்டேங்குது" என்றார்.

"அவர் டெம்ப்பிள் அட்மினிஸ்ட்ரேஷன் இஸ் வெரி பேட்... இவ்வளவு ஜனங்க வர் றாங்க, எவ்வளவோ வருமானம் வருது. கோவில இம்ப்ருவ் பண்ணுவோம்... ம்... அதெல்லாம் ஒண்ணும் செய்ய மாட்டானுக. சுருட்டுறதிலேயே இருப்பானுக" இது வரிசையில் இருந்த ஒரு பெரியவர்.

"யு ஆர் ரைட் சார்... நம்ப கோயில்லதான் இப்படியெல்லாம். மத்த இடங்கள்ல பாருங்க." இது அவர் பக்கத்திலிருந்த இன்னொருவர்.

மணி 7 ஆகியிருந்தது. ஏறக்குறைய ஒரு மணி நேரத்திற்குப் பின் தெற்குப் பகுதியிலுள்ள சிறப்பு நுழைவு வாயிலை நெருங்கிக் கொண் டிருந்தது ராமநாதன் குடும்பம். கியூ மீண்டும் நின்றுவிட்டது. ஒரே சலசலப்பு.

ஸ்பெஷல் என்ட்ரன்ஸைக் கவனித்துக் கொண்டிருந்த அந்த வாட்ச்மேனிடம் "என்ன வாட்ச்மேன்... ஏன் கியூ நகர மாட்டேங்குது? ராமநாதன் கேட்டார்.

"சார் அந்த என்ட்ரன்ஸ்ல நிறைய பேர் பாஸோடு வந்துகிட்டே இருக்காங்க. அதுதான் இந்தச் சிக்கல்."

கியூ அமைதியிழந்து குமுறத் தொடங்கியது.

"கியூ கொஞ்சம் நகர்ந்ததும் வாசலின் உள் புறம் ராமநாதன் தம்பதியினர் வந்து சேர்ந்த னர். உள்ளே பெருங் கூட்டம். தர்மதரிசனம் இதுவரைதான். இதற்கு மேல் உள் பிரகாரத்திற்கு டிக்கெட்டோடு போக வேண்டும் அல்லது வி.ஐ.பிகளாக போக வேண்டும்.

"பேசாம தரும தரிசன கியூவில வந்திருந்தா இதுக்குள்ளாற வீடு போயிருக்கலாம்" ராமநாதனுக்கு பின்னால் நின்றிருந்த ஒரு நடுத்தர வயது அம்மணி சொன்னார்.

"நான் அப்பவே சொன்னதுக்கு, அதுல போனா தியேட்டர்ல போயி தரை டிக்கெட் வாங்கி சினிமா பார்க்கிற மாதிரி இருக்கும்னு நீதானே சொன்னே" இது அந்த அம்மா வீட்டுக்காரர்.

பெருமைக்காகவும் கௌரவத்திற் காகவும் இந்தக் கியூவில் இவர்களைப் போல் நிற்பவர் கள்தான் அதிகம். அம்மன் தரிசனம் பலருக்கு ரிட்சுவலாக இருக்குமோ? ராமநாதன் இதையே எண்ணிக் கொண்டிருந்தார். 'உண்மையாக அம்மனி தரிசனம் வேண்டி வந்தவர்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள்?" தன்னைத்தானே கேட்டுக் கொண்டார்.

வடக்கு வி.ஐ.பி. வாசலில் போலீஸ் காரர் ஒருவர் பெரிய மனிதர் ஒருவரையும், ஏழெட்டு பெண்மணிகளையும் அழைத்து வந்தார். உள் பிரகாரத்தில் அமர்ந்து தரிசனம் செய்து கொண் டிருந்தவர்கள் வெளியேறுவதற்குள் இந்த வி.ஐ.பி. கூட்டம் உள்ளே சென்றது. அந்தப் பெண்களில் சிலர் கூட்டத்தை நோக்கி ஏளனமாகவும் எகத்தாளமாகவும் வீசிச் சென்ற பார்வை எல்லோரையும் எரிமலையாய் குமுறச் செய்தது.

கியூவிலிருந்த ஒரு குழந்தை அம்மா விடம், "ஏம்மா நாம வந்து அம்மனை பார்க்கிற மாதிரி அம்மன் யாரையாவது போயி பார்க்குமா?" என்று கேட்டது.

"பேசாம நில்லு... உனக்கு ஒரு கேள்

மொசைக், மார்பிள் தரையினை வார்கோலால் கூட்டி தூசினை அள்ளும்போது சுத்தமாக அள்ள இயலாமல் கைகளால் மீதமுள்ள தூசுகளை அள்ளிச் சிரமப்படும் இல்லத்தரசிகளே, இதோ ஒரு எளிமையான வழி. பழைய எக்ஸ்ரே பிலிம் அல்லது போஸ்ட் கார்ட், அல்லது இன்விடேஷன் கார்ட் போன்றவற்றைக் கூட்டி ஒதுக்கப்பட்ட தூசிக்கருகில் வைத்து வார்கோலால் தள்ளினால் தரையில் தூசி ஒட்டாமல் சுத்தமாக எளிதாக அள்ளி விடலாம்.

— பிரேமாவாசன்



சிகப்பழகு வண்ணத்தை, இங்கு பார்க்கலாம்தான்...
மென்மையை தொட்டு உணர முடியாதே!
சிகப்பழகு பெற வேண்டும்....
மேனி மென்மையாக வேண்டும் என்பதே
உங்கள் கனவு அல்லவா!! இதற்கெனவே,
இப்பொழுது வந்துவிட்டது - ஃபேர் அண்ட்
லவ்லி ஆக்டிவ் ஃபேர்னெஸ் மாயிஸ்ட்ரைஸர்.
இதில் ஆக்டிவ் உட்பொருட்கள் இருப்பதால்,
ஒவ்வொரு துளியும் உயர்வளம் வாய்ந்தது. இது,
மேனிக்குள் இதமாக, இயற்கையாக செயல்பட்டு
மேனிக்கு சிகப்பழகை மட்டுமல்ல... மென்மை
அழகையும் தருகிறது.
மேனிக்கு மென்மையூட்டுகிறது
மேனிக்கு சிகப்பழகு தருகிறது
சூரியனிடமிருந்து காக்கிறது
Fair & Lovely
ACTIVE
FAIRNESS MOISTURISER
For soft, fair skin
ஃபேர் அண்ட் லவ்லி
ஆக்டிவ் ஃபேர்னெஸ் மாயிஸ்ட்ரைஸர்
சரும நிபுணர் தீபா நாராயன் சிபாரிசு செய்கிறார்.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
இந்துஸ்தான் லீவர் ஸ்கின் சென்டர்
Lintas Fal P 1 2416

அல்ட்ரா கிரைண்ட்+ வீட்ல இருந்தா வேலை எவ்வளவு ஈஸி!




ULTRA
GRIND +

12 month warranty


இந்தியாவின் முதல் "டேபிள் டாப்" ஆட்டுக்கல்

என்னைப் போல ஒங்களைப் போல பிஸியா இருக்கற புதுயுகப் பெண்களுக்காகவே தயாரிச்சிருக்காங்க இந்த அல்ட்ரா கிரைண்ட் + ஆமாம்! இந்த அல்ட்ரா கிரைண்ட் + வந்ததிலேருந்து இட்லி தோசைக்கு மாவு அரைக்கறது ஈஸி! சட்னிக்கு தேங்காய் துருவறது ஈஸி! சப்பாத்தி மாவு பிசையறது ஈஸி! இப்படி, நம்மளோட வேலையெல்லாம் எவ்வளவு ஈஸியாயிடுச்சு பாத்தீங்களா?

என்னைப் பொருத்தவரைக்கும் இல்லத்தரசிக்கு வசதி மட்டுமில்ல; இல்லத்திற்கே பெருமை தர்றது இந்த அல்ட்ரா கிரைண்ட் + என்ன, நான் சொல்றது சரிதானே!



மாவு பிசை சாதனம்



தேங்காய்த் துருவி

எல்ஜி தயாரிப்பு

எல்ஜி பாலிடெக்ஸ் லிமிடெட் — அல்ட்ரா டிவிஷன்,
எல்ஜி ஹவுஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர்-641 045.
போன்: 0422-216132, 214571. பேக்ஸ்: 0422-211740
மண்டல அலுவலகம்: சிந்தூர் டவர்ஸ், 95, லஸ் சர்ச் சாலை,
சென்னை-600 004. போன்: 4996824/6577.

PATENT PENDING DESIGN REGD. NO. 163445 & 163446.

புதுயுக வசதி அல்ட்ரா. புதியதோர் அனுபவம் அல்ட்ரா.

Anugrah 1693/96 Tam

விக்கு பதில் சொன்னா ஒரு டஜன் கேள்வி கேட்பே..." அம்மா எரிந்து விழுந்தாள்.

"ஆமான்டா கண்ணு, ஒம்பது மணிக்கு நாங்க கோவில பூட்டிடுவோம். அதுக்கப்புறம் அம்மன் உண்மையான பக்தர்களைத் தேடி எல்லா இடங் களுக்கும் போகும்" துவாரவாயிலில் நின்ற வாட்ச்மேன் குழந்தையிடம் பொறுப்போடு சொல்லிக் கொண் டிருந்தார்.

அம்மனே தேடிப் போகும் அந்த பக்தன் அல்லது பக்தை எப்படி இருப்பார்கள்? அம்மன் வந்து பார்க்க வேண்டுமானால் பக்தர்களுக்கு என்ன தகுதிகள் வேண்டும்? நிச்சயமாக அந்த பக்தன் தானில்லை என்று ராம நாதனுக்குத் தெரியும்.

கடந்த ஏழு வாரங்களிலும் ஐந்து நிமிடத்திற்குள் பூஜையையும் தரிசனத் தையும் முடித்து விட்டு கிளம்பி விடும் ராமநாதன் இன்று கண்களால் இப்பெருங்கூட்டத்தை அளந்து கொண் டிருந்தார். முன்னே நின்றிருந்த பார்வதி எதிரே திரும்பி குழந்தைகளைப் பற்றியும் அவர்களது படிப்பு பற்றியும் பேசிக் கொண்டே இருந்தார்.

வியர்வை சொட்டச் சொட்ட தரிசனம் முடிந்து ராமநாதன் வடக்கு வாசல் வழி மனைவியோடு வெளியேறி னார். நேரே கிழக்கே வந்து மண்ட பத்தின் கீழ்க்கோடியில் அமர்ந்தனர்.

அருகில் சில கிராமத்துப் பெண்கள் குழந்தைகளுக்கு மாவிளக்கு எடுத்துக் கொண்டிருந்தனர். அவர்களது பேச்சில் ராமநாதனது கவனம் சென்றது.

"ஏ... புள்ள, குருவு, உங்கூட அந்த சின்னத் தாயி இங்க வர்றதா சொல்லியிருந்தாளே. அவ வரலியா இன்னிக்கு? என்னமோ ஆடி அமா வாசைக்கு மாவிளக்கு எடுத்து ஆத்தாளுக்கு பொங்க வைக்கணும்னு வைகாசி மாசமே சொல்லிட்டு இருந்தாளே."

"ஆமா பூச்சியம்மா... வரணும் வரணும்னு சொல்லிட்டு இருந்தா. அவ மனசெல்லாம் இங்கதான் இருக்கும். அந்தச் சின்னச்சாமி கங்காணி இந்த அம்மன் கோவில் செலவுக்கெல்லாம் காக தாரேன்னு சொல்லிப்புட்டு கடைசி நேரத்தில கைய விரிச்சுப்புட்டாராம்!

"அந்த மனுஷி யாருகிட்டயாவது கடனையாவது வாங்கிட்டு வந்திருக்கலாமில்ல."

"கடைசி நேரத்தில எங்க போயி காசு வாங்குவா. அவளுக்கு ரெண்டு வயசில ஒரு பொட்டக்குட்டி இருக்குள்ள, அதை நம்ம மதகுபட்டிக்கு மேற்க இன்னிக்குக் காலைல கூட்டியாந்து இந்த ஆத்தா கோயிலுக்கு நேர ஒக்காரவச்சு மொட்டை போட்டு மாரியம் மான்னு பேரையும் வச்சுப்புட்டா. ஆத்தா நல்லா வச்சிருந்தா ஐப்பசி மாசம் புள்ளையோட கோவிலுக்கு வந்து புள்ளைக்கு மாவிளக்கும், ஆத்தாளுக்கு பொங்கலும் வைக்கிறேன்னு வேண்டிக்கிட்டா. அதான் அவ வரலை. அவளுக்குக் கொடுத்து வச்சது அவ்வளவுதான்."

"என்ன இங்க டேரா போடுறதுன்னு முடிவு பண்ணிட்டீங்களா? எழுந்துருங்க போவோம், சமைக்கணும்" ராமநாதனை பார்வதி கிளப்பினாள்.

அம்மனின் உண்மையான பக்தை எங் கிருக்கிறாள் என்று ராமநாதனுக்கே தெரிந்து விட்டது, அம்மனுக்கா தெரியாது! ராமநாதன் சிவகங்கை திருப்பத்தூர் சாலையில் உள்ள மதகுப்பட்டியை நோக்கி இருகரம் கூப்பி அந்த சின்னத்தாயி அம்மாவுக்கு அம்மனின் அருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து கிளம்பிய அதே வேளையில் மதுரை தெப்பக் குளம் மாரியம்மன் மதகுபட்டி சின்னத்தாயி மாரியம்மன் தரிசனத்திற்காக புறப்படும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.



முறுக்கு மாவிற்கு பாதி வெண்ணெயும், பாதி டால்டாவும் கலந்து பிசையுங்கள். உப்பு மாவில் கொஞ்சம் கூட இருக்க வேண்டும். ஒருமுறை எண்ணெயில் போட்டு 2 நிமிடத்தில் எடுத்துவிட்டு, சிறிது நேரம் கழித்து மீண்டும் எண்ணெயில் போட்டு எடுங்கள். சிவக்காத வெள்ளை வெளேர் முறுக்கு உங்களுக்குக் கிடைக்கும்.

– மஹிமா



மங்கையர் மலர், ராகா இணைந்து வழங்கிய

நம் உயர்வை

'வழிகாட்டிகள்' எனும் இந்தப் புதிய தொடரில் முதலில் ஒரு தலை சிறந்த சிந்தனையை எடுத்துக் கொண்டு கருத்துப் பரி மாற்றம் நிகழ்த்த வேண்டும் என்று தோன்றியது. இந்தியர்களாகிய நமக்கு இந்தியர்கள் என்றால் இளப்பம். நாமே 'ஒரு அமெரிக்கன், ஒரு ஜப்பான்காரன், ஒரு இந்தியன் இருந்தார்களாம்' என ஜோக் ஆரம்பித்து இந்தியன் என்றால் சாப்பாட்டு ராமன், மடையன் என முடித்து விட்டுச் சிரிப்போம்.



நம் உயர்வை, நம் கலாசாரப் பின்னணி என்ன? அதையெல்லாம் நாம் மறந்தது மட்டுமல்லாமல் வருங் காலச் சந்ததியினரையும் மறக்கடித்து வருகிறோம். நம் உயர்வை நாம் எப்போது உணர்வோம்? நம் இந்தியாவில் முன்னேறவா வாய்ப்பில்லை? உலக வியாபாரக்காரர்களின் கண்ணெல்லாம் நம் மீது படிந்திருக்கும் நேரமல்லவா இது?

• கி.வேங்கடகிருஷ்ணன்









வழிகாட்டிகள் கருத்துப் பரிமாற்றம்

நாம் உணர்வோம்!

தொழிலதிபரும், 'ராகா' எனும் நம் பாரம் பரியப் பெயருடன் வெற்றிகரமாக நம் இந்திய மூலிகைகளைக் கொண்டு சீயக்காய்ப் பவுடர், ஷாம்பூ, ராகா ப்ளஸ் என கேசப் பராமரிப்புப் பொருட்களைத் தயாரித்து உலக அளவில் வெற்றி பெற்று வருபவருமான குமாரவேலு இந்த 'வழி காட்டிகள்' நிகழ்ச்சியை மிகவும் வர வேற்றார். நம்மோடு இணைந்து நடத்தவும் மகிழ்வுடன் முன்வந்தார்.

புதுவை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், பெரும் கல்வியாளருமான கி. வேங்கட கிருஷ்ணன், அயல்நாட்டிலிருந்து திரும்பி மறுமலர்ச்சிச் சிந்தனை களை எழுப்பி வரும் எம்.எஸ். உதயமூர்த்தி இந் நிகழ்ச்சிக்கு முக்கிய விருந்தினர் களாக வந்து சிறப்பித்தார்கள்.



பல அயல்நாடுகளுக் குச் சென்று அங் குள்ள கட்டிடக் கலைச் சிறப்பை தன்னிடத் திலேயே கொண்டு வந்த பொறியாளர் ராஜா பாதர், சிறந்த சமையல் கலைஞராக புகழ் பெற்ற 'ஜெய்



• எம்.எஸ்.உதயமூர்த்தி









மாஹி' கேட்டரிங் சர்வீஸ் ஜெயராமன் ஆகியோரும் நம்மோடு தங்கள் சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டனர்.

நேஷனல் ஆங்கிலப் பள்ளி மாணவிகள், எம்.ஓ.பி. பெண்கள் வைணவக் கல்லூரி மாணவிகள் இளைய சமுதாயத்தின் பிரதிநிதிகளாக இருக்க, ஜோதி மாதர் சங்கம், மாந்தோப்புக் காலனி மாதர் சங்கம், மங்கையர்க்கரசி மகளிர் மன்றம் - இச் சங்கங்களிலிருந்து வந்திருந்த பெண்மணிகள் தாய்மார்களின் பிரதிநிதிகளாக தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்...

இனி நம் உயர்வை நாம் உணர்வோம்....

(ஆசிரியர்)

> "கல்லூரிகளில் எய்ட்ஸ் பற்றி 'லெக்சர்' கொடுக்கிறார்கள். அதேபோல 'கரியர்' கெய்டென்ஸ் கொடுக்கலாமே!"

எம்.எஸ். உதயமூர்த்தி : "நம்முடைய நாட்டில் மேடையில் பேசுவதைக் கேட்டு ரசிக்க நிறைய பேர் உண்டு. ரசிக்க இது என்ன கச்சேரியா? நாட்டியமா? ஆசிரியர், அம்மா, ஏன் அத்தை பாட்டி கூட வழிகாட்டியாக இருக்கலாம். நாம் யாரிடம் மனந்திறந்து பேசுகிறோமோ அவர்கள்தான் வழிகாட்டி. பெண்





களுக்கு அனுமான உணர்வு அதிகம். ஒருவரைப் பார்த்தவுடனேயே அந்த நபர் இப்படிப்பட்டவராக இருப்பார் என்பதை அவர்களால் கூறி விட முடியும். அவர்களின் உள்ளே உள்ள இந்த மகத்தான சக்தியை வெளியே கொண்டு வர வேண்டும். அதுவே அவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக இருக்கும். உள் உணர்வுகளை வளர்த்தாலே நாமே நமக்கு வழிகாட்டிகளாக முடியும். 'தட்டுங்கள் திறக்கப்படும் – கேளுங்கள் கொடுக்கப்படும்' என்பது போல 'நம்மால் முடியும்' என்பதுதான் நம் இயக்கத்தின் தாரக மந்திரம்."

ராஜாபாதர் : "லாஸ்வேகஸில் இந்த கோபுரத்தைப் பார்த்து இது போல ஒன்றை ஏன் நம் ஊரில் செய்யக்கூடாது என்ற எண்ணத்தில் உருவானதுதான் மொட்டை மாடி மீது உள்ள இந்த ஹால். எத்தனை வேகத்தில் அடிக்கும் புயலையும் தாங்கக்கூடியது. சென்னையில் இப்படி அமைந்துள்ளது இதுதான் முதல் முறை. ஐ.ஐ.டி.யின் பேராசிரியரின் துணையுடன் – தேவையான மெட்டீரியல்களை வெளிநாட்டில் வாங்கி வந்து அமைத்ததுதான் இது. வெளிநாட்டிலுள்ளவைகளை பார்த்துப் புகழ்வதுடன் சரியாகி விடுமா? அவைகளைப் பார்த்து அதே போல இங்கு நம் நாட்டில் அமைக்க ஏன் முயலக் கூடாது? இங்கு என்ன இல்லை? திறமை, பொருட்கள் – இப்படி எல்லாமே இருக்கிறதே? – இப்படி 2 வருட முயற்சியின் விளைவுதான் இது."

ஆர்த்தி (எம்.ஓ.பி. வைஷ்ணவா காலேஜ்) : "இது என் தாய்நாடு என்ற எண்ணம் வேண்டும். சிறு வயதிலேயே இது மனத்தில் படிய வேண்டும். மேல்நாடுகளில் பல வருடம் இருந்து சம்பாதித்து விட்டு இங்கு வந்து விட வேண்டும். பள்ளியில் படிக்கும்போதே எதிர் காலம் பற்றிய எண்ணம் வேண்டும். இதற்கு ஊக்கம் கொடுப்பவர்கள் வேண்டும்.

இங்கு இருக்கும் பெரிய வேலைகளைக் கூட உதறி விட்டு அமெரிக்கா செல்வதை பெரிய பெருமையாக நினைக்கிறார்களே?"

"கல்லூரிகளில் எய்ட்ஸ் பற்றி வந்து 'லெக்சர்' கொடுக்கிறார்கள். அதேபோல 'கரியர் கெய்டென்ஸ்' கொடுக்கலாமே! இன்னின்ன துறையில் படிக்கலாம், இன்னின்ன வேலை வாய்ப்புகள் உள்ளன என்பது போல விளக்கங்கள் சொல்லப்படுமானால் எங்களுக்குப் பெரும் வழிகாட்டுதலாக அமையும்."



துர்காலட்சுமி: "ஆனால் இதையெல்லாம் புரிந்து கொள்ளும் பக்குவம் போதாது இன்றைய இளைஞர்களுக்கு. மகன் தாயை மறப்பது போலத்தான்



தெங்


ஆரோக்கியம் மட்டுமல்ல!
பல ஆதாயங்களும் கூட...
Supreme
Pure, Double Refined Vegetable Oil
சுப்ரீம் சமையல் எண்ணெய் நலம் பல தந்திடும் சமையலின் தரம் உயர்ந்திடும்.
• வைட்டமின் 'ஈ' நிறைந்திருப்பதினால் சமைத்த உணவு பொருட்களை கெடாமல் அதிக நேரம் பாதுகாக்கிறது.
• மணமற்றது. உணவின் ருசியை மாற்றாதது.
• மெழுகுத்தன்மையற்றது. ஆகையால், குறைந்த அளவே தேவைப்படுகின்றது.
• பொரிப்பதற்கு மிகவும் சிறந்தது, சுப்ரீம்.
சுகம்... மேலான நலம்... சுப்ரீம்.
S.S.D. OIL MILLS CO. LTD.
• MADRAS Ph: 8281803 • COCHIN Ph: 391640 • BANGALORE Ph: 367330
• GUNTUR Ph: 223572 • BHUBANESWAR Ph: 410362 • GOA Ph: 731195
• ANDAMANS Ph: 30641



• குமாரவேலு, •ராஜாபாதர் •ஜெயராமன்

இந்த வெளிநாட்டு மோகம்."

உதயமூர்த்தி : "எடுத்தவுடனே பெரிதாக வந்து விட வேண்டும் எனப் பேராசையை ஏற்படுத்தக் கூடாது இளைஞர்களுக்கு. 2, 3 கம்பெனிகளில் 7 வருடம் வரை அனுபவம் பெற வேண்டும். பிறகு தானாகவே வாய்ப்புக்கள் தெரியும். தேட வேண்டிய இடம் புரியும். தேவைப்பட்ட இடங்கள் தொடர்பு தானாக வரும். பிறகு தொழில் தொடங்கலாம். இப்படிப் படிப்படியான வளர்ச்சியே உறுதியான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும்."

வேங்கடகிருஷ்ணன் : "சற்று யோசனை செய்து பார்த்தால் எங்கே கோளாறு என்பது புரியும். ஏன் இப்படி ஒரு அமெரிக்க மோகம்? மணப்பெண் வேண்டிவரும் விளம்பரங்களில் 'Broadminded' girls என்று கேட்பார்கள். இது கேவலம். அங்கு சமையலறை துடைக்க வருபவர் கூட டை கட்டிக் கொண்டு, காரில் வந்து கிளீன் செய்வார்கள். அம்பாடி செய்திக்குப் பிறகு அமெரிக்க மாப்பிள்ளை மோகம் குறைந்துள்ளது. பிள்ளை அமெரிக்காவில் படிக்க வேண்டும், சம்பாதிக்க வேண்டும், அமெரிக்க பொருட்கள் வேண்டும், அமெரிக்க மருமகள்? - அது மட்டும் வேண்டாம் இல்லையா? நம்மை நாமே இருத்திக் கொள்ள முடியவில்லை என்றால் ஏது பெருந்தன்மை?

இதற்கு முக்கியக் காரணம் நம் அரசாங்கக் கொள்கைகள். 95% மார்க்கு வாங்கிய மாணவருக்கு இங்கே டாக்டர், என்ஜினியர் படிக்க இடம் கிடைக்கவில்லை. எனவே படிக்க அயல்நாடு செல்கிறான். படித்து முடித்து அங்கேயே சம்பாதிக்கவும் ஆரம்பித்து திருமணம் முடித்து குழந்தைகளும் பெற்று செட்டிலாகி விட்ட ஒருவனுக்கு தன் பெண் குழந்தைக்கு 13 வயதாகும் போதுதான் நம் கலாசாரம் பற்றிய எண்ணமே எழுகிறது. உடனே குடும்பத்துடன் இங்கே வந்து விடுகிறான். அமெரிக்கா, இந்தியா இப்படி இரண்டும் கெட்டான் நிலைமை ஏன்?

இங்கு கேபிடேஷன் என லட்சக்கணக்கில் கொடுத்தால்தானே டாக்டர், என்ஜினியர் என சேர்ந்து படிக்க முடிகிறது? ரூ. 15 லட்சம் கேபிடேஷன் கொடுத்து படித்து டென்டிஸ்ட்டாக வருபவன் 32 பல்லையும் பிடுங்கினால் தான் செலவழித்ததை ஈட்டு கட்ட முடியும் என்றுதானே எண்ணுவான்? கணக்கு சரியான பின்பும் பணத்திற்கு அவன் அடிமைதான். அதிலிருந்து மீள ஒரு போதும் ஆகாது. இஸ்ரேல் நாட்டில் மருத்துவக் கல்லூரியில் 'ஷிப்ட்' முறை தான். இப்படி ஒருநிலை இங்கு வந்தால் இப்போதையது போல 5 மடங்கு மாணவர்களுக்கு இடம் கிடைக்குமே!"

திருமதி. மஹாதேவன் : "பள்ளிகளில் ஷிப்ட் முறை போல கல்லூரிகளிலும் வந்து விட்டால் மேல் படிப்பு என்றால் வெளிநாடுதான் என்ற நிலை மாறுமே? விரும்பியவர்கள் விரும்பிய கல்வி படிக்கலாம். பிடித்த துறையில் படிக்க இயலாததால் இளைஞர்களுக்கு விரக்தி மனப்பான்மை, லட்சக் கணக்கில் 'சீட்'டுக்கு லஞ்சம் என்பதெல்லாம் ஒழியும்."

> **"எடுத்தவுடனேயே பெரிதாக வர வேண்டும் என்று பேராசையை ஏற்படுத்தக் கூடாது இளைஞர்களுக்கு!"**

வேங்கடகிருஷ்ணன் : "ஒருமுறை டெல்லி சென்றபோது படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் நடத்தும் இட்லி கடையைப் பார்த்தேன். நானே அமெரிக்காவில் படிக்கும்போது தினமும் தோசை போட்டு சம்பாதித்தேன்."

மங்களம் ராமமூர்த்தி : "அங்கு தொழில் செய்பவர்களை மதிக்கிறார்கள். இங்கே கேவலமாக அல்லவா பார்க்கிறார்கள்?"

வேங்கடகிருஷ்ணன் : "என்னதான் படித்தாலும் இங்கே தைரியம் கிடையாது. நன்கு படித்துப் பெரிய வேலையில் இருப்பான். ஆனால் மனைவியை சினிமா அழைத்துச் செல்வதை தாயிடம் சொல்ல பயம். 'அவளுக்கு உடம்பு சரியில்லை. டாக்டரிடம் போறோம்' என்பான். ஏனிப்படி? டி.வி. விளம்பரங்களில் வரும் இல்லத்தரசிகள் துணி துவைத்தேன். புடைவை ஊறவைத்தேன் என்

பார்கள். என்னை அயல்நாட்டினர் பலரும் ஏன் உங்கள் நாட்டுப் பெண்களுக்கு புடைவை துவைப்பது ஒன்றுதான் வேலையா? அதற்கு மிஷின் இல்லையா என்று கேட்டனர். இந்த மாதிரி மனப்பான்மைகள் சமூகத்தில் மாறினால்தான் உருப்படுவோம்."

ஜெயராமன் : "இன்று மேடையில் இருக்கும் பல பெரியவர்களுக்குக் குறிப்பாக போர்ட் டிரஸ்டின் முன்னாள் தலைவர் முன் நான் சமமாக உட்கார்ந்திருக்கிறேன் என்றால் அது நான் செய்யும் சுயதொழிலினால் பெற்ற கௌரவம் (நானும் போர்ட் டிரஸ்டில் பணி புரிந்தவன்) சாதாரண படிப்பு மட்டுமே போதாது. தொழில் கல்வி வேண்டும். அனுபவம் வேண்டும். 'போலி கௌரவம்' என்பது கூடவே கூடாது. முயற்சிகளில் நாம் சந்திக்கும் இன்னல்களே நாம் வெற்றிபெற படிகளாக அமையும். ஈடுபாடுதான் அவசியமான ஒன்று. முதலில் தேங்காய் மண்டி வைத்து ரூ. ஒன்றரை லட்சம் நஷ்டப்பட்டேன். தற்கொலை எண்ணம் ஏற்பட்டது. நண்பர்கள் என் மனதை மாற்றினர். பிறகுதான் இந்த கல்யாண சமையல் காண்டிராக்ட் துறைக்கு வந்தேன். உங்களுக்கு மூன்று நாள் விசேஷம் எங்களுக்கு 365 நாள் வாழ்க்கை. தொழில் சிறப்புகளைத் தேர்வு செய்து ஈடுபாட்டுடன் முயற்சி செய்தால் ஏன் உயர முடியாது? உழைப்புடன் நாம் செய்யும் தொழிலை நேசிக்கவும் வேண்டும். பின்தங்கியுள்ள தொழில்களை தேர்ந்து காரணங்களை ஆராய்ந்து - அவைகளை நீக்கி முயன்றால் ஏன் முன்னேற முடியாது. படிப்பு கூட இரண்டாம்பட்சம் தான். முயற்சிதான் முதலில். லாபம் குறைத்து விற்று முதலைக் கூட்டினால் ப்ரொடக்ஷன் தானே தொடருமே! இங்கேயே இருந்து எவ்வளவு உயரத்திற்கும் நம்மால் உயர முடியும்."

குமாரவேலு : "இந்தத் தலைப்பே வித்தியாசமானது. மிகவும் பயனுள்ளது. காந்தி ஜெயந்தி அன்று அவர் படத்துக்கு மாலை போட்டு விட்டு அவர் சொன்னவைகளை மறந்து விட்டால் என்ன பயன்? அமெரிக்காவில் தனிமனிதனின் சாதனைகள் அதிகம். நாம் ஒவ்வொரு இந்தியனும் அப்படிப்பட்ட சாதனையாளராக இருக்க வேண்டும் என நான் கல்லூரி மாணவனாக இருக்கும்போது எங்கள் கல்லூரிக்கு வந்து உதயமூர்த்தி பேசினார். அது என் மனத்தில் ஆழப் பதிந்தது. எனவேதான் நம் நாட்டின் பாரம்பரியம் மிக்க சிறப்பினை உலக அளவில் உணர்த்த வேண்டும் என 'ராகா' ஆரம்பித்தேன். நம் மூலிகைகளைப் பற்றி ஆராய்ந்து, தீர்மானம் செய்து நம் கலாசாரம் மாறாமல் சீயக்காய், செம்பருத்தி சேர்த்து வாடிக்கையாளர்களின் ஆலோசனை கேட்டு இப்படி உருவானதுதான் எங்களுடைய தயாரிப்புக்கள். சொல்லப்

'ஹெர்பல் டை' தயாரிக்கக் கூடாது?

இந்தக் கருத்துப் பரிமாற்றம் நிகழ்ச்சியில் ராகா ஹெர்பல் பவுடர் பற்றியும் ஆர்வத்தோடு வாசகிகள் கேட்டுக் கொண்டு இருந்தார்கள். அதற்கு ராகா ஹெர்பல் ப்ராடெக்ட்ஸின் நிர்வாக இயக்குனர் குமாரவேலு பதிலளித்தார்.



• குமாரவேலு

கேள்வி :- நிறைய கெமிகல் 'டை' தான் வருகிறது. தலைநரைக்கு நீங்கள் ஏன் நல்ல 'ஹெர்பல் டை' தயார் செய்யக் கூடாது?"

குமாரவேலு:- "செய்யலாம், நல்ல யோசனை தான்" என்று சிரித்தார்.

கேள்வி :- "இள நரையைப் போக்கும் விதமாக ஹெர்பல் பவுடர் தயாரியுங்களேன்."

குமாரவேலு :- "நம்முடைய நாட்டின் பாரம்பரிய மருத்துவமுறைகளில் இதற்கு மூலிகைகள் இருக்கலாம். ஆனால் சரியாகத் தெரியவில்லை. இவையெல்லாம் பெரிய சப்ஜெக்ட். ரொம்பவும் ஆராய்ச்சி செய்ய வேண்டிய விஷயங்கள். ஏதோ ஒன்றை வெளியிட்டு கெட்ட பெயர் வாங்கி விடக் கூடாது, இல்லையா?"

கேள்வி :- "உங்களுடைய ராகா பவுடர் டப்பாக்களில் வாங்கும்போது அழகான சிறிய கிண்ணம் அதற்குள் இருக்கிறது. நாங்கள் 'சாஷே' பாக்கெட்டுகள் வாங்குகிறவர்கள். பதினைந்து பாக்கெட்டுகளோ பத்து பாக்கெட்டுகளோ வாங்கினால் எங்களுக்கும் கொடுக்கலாமே?"

குமாரவேலு:- "உங்களுடைய ஆதங்கம் புரிகிறது. இதை என்னுடைய நிறுவனத்தில் மற்றவர்களிடம் கலந்தலோசித்து விரைவிலேயே கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்."

கேள்வி:- "அதேபோல ஷாம்புவோ, ஹெர்பல் பவுடரோ எந்தக் கம்பெனியாக இருந்தாலும் ஒன்று சிறிய பாக்கெட்டாக இருக்கும். இல்லை கன்டெய்னராக இருக்கும். கொஞ்சம் தலைமுடி கூட இருக்கிறவர் களுக்கு சாஷே போதாது..."

(இடையில் ஒரு குரல் :- "இந்தக் காலத்தில் தலைமுடி அதிகமாக இருப்பவர்கள் ரொம்ப அதிசயம்" (சிரிப்பு))

"கன்டெய்னரும் வாங்க முடியாது என்கின்ற போது இடைப்பட்ட நிலையில் கொஞ்சம் பெரிய பாக்கெட் ஏன் வெளியிடக் கூடாது...?"

குமாரவேலு:- (கொஞ்ச நேரம் யோசித்து) "இதுவும் நல்ல யோசனைதான். இந்த மங்கையர் மலர் கூட்டத்திலேயே நான் அறிவிக்கிறேன். விரைவில் பெரிய பாக்கெட்டுக்களை அறிமுகப்படுத்துகிறோம் என்று..."

(எல்லோரும் மகிழ்ச்சியுடன் கை தட்டினார்கள்)



பளபளக்கு
உங்கள்
மேனி
பார்ப்பவர்
மனதைக் கவர
பாண்ட்ஸ் சாண்டல்
டால்க்கின் ஜொலிப்பு
தீபத்தின் சுடரைப்போல்
பளபளப்பு.
நறுமண சந்தனம் கொண்ட
புதிய பாண்ட்ஸ் சாண்டல் டால்க்
பற்றி அறிந்து கொள்ளுங்கள்.
மென்மையானது. உங்கள்
மேனியுடன் இயற்கையாக
இணைகிறது.
புதியது!
POND'S
Sandal Talc
POND'S SANDAL TALC
பிரமிப்பூட்டும் பளபளப்பு.

போனால் வாடிக்கையாளர்கள்தான் எங்களின் வழிகாட்டிகள். ஈடுபாட்டுடன் செய்யும் எதுவுமே நல்ல ஒரு தயாரிப்பாக அமையும். அப்படித்தான் நாங்கள் இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் இன்று வெற்றி பெற்று வருகிறோம்."

பானுமதி : "தைரியம் இருந்தா எதையுமே சாதிக்க முடியும். மேல்படிப்புக்காக அமெரிக்கா செல்ல விசா கிடைக்காத ஒரு பெண் பாண்டிச்சேரி அரவிந்தர் ஆசிரமத்திலேயே படித்து மிகச்சிறந்த குழந்தை நல ஆலோசகராக மாறினார். இங்கேயே அவர்களின் படிப்பைக் கொண்டு வந்தார்.

ஜெயலட்சுமி : "என் மகன் செய்த வியாபாரம் நஷ்டத்தில் நொடித்துப் போக, நாமே ஏதாவது ஏன் துவங்கக் கூடாது என்ற எண்ணம். பொடி, ஊறுகாய் என சாதாரணமாக ஆரம்பித்தது இன்று நன்கு நடைபெறுகிறது. இதுக்கு மங்கையர் மலர் ஆசிரியை மஞ்சுளா ரமேஷ் கொடுத்த ஊக்கம்தான் முக்கிய காரணம் என்று சொல்லலாம்."

குமாரவேலு : "நாம் மறந்து போன இந்தியப் பாரம்பரிய சிறப்புக்களை நினைவுகூர்ந்து ஆராய்ச்சிகள் செய்து பார்த்தாலே தெளிவு வரும்."

ராஜி : "தைரியம் மட்டும் போதாது. பெற்றோர் குழந்தைகளை சுதந்திரம் கொடுத்து வளர்க்க வேண்டும். +2 முடித்தவுடன் என்ன தொழில் தொடங்கலாம் போன்ற விவரங்களை சொன்னால் வெளிநாடுகள் செல்ல எண்ணம் ஏன் வரும்?"

கலா : "குழந்தைகளின் தனித்திறமையைப் பார்த்து வழிகாட்ட வேண்டும். ஏதோ வழி வகை தேடித்தான் ஃபாரின் செல்லுகின்றனர். சம்பளம் அதிகம். அதே வேலையை இங்கும் செய்யலாம் என்ற எண்ணம் வளர வேண்டும். மகளிர் மன்றங்களிலும் இது பற்றி பேசலாம்."

மீரா பரமசிவன் : "அரசும் பல லட்சம் செலவழித்து மாணவர்களை உருவாக்குகிறதே?"

ருக்மணிபார்த்தசாரதி : "பிராட் மைண்டட் பெண்களைக் கேட்கிறார்களே? இது ஆண்களுக்கு? அயல்நாடுகளில் குடும்பம், பாசம் எல்லாம் மறக்கப்பட்டு வருகிறதே! அங்கே சென்று குடியேறுபவர்களுக்கு பணம் என்ற ஒன்றைத் தவிர வேறு கௌரவம் கிடையாது. கேவலமாகத்தான் நடத்தப்படுகிறார்கள். ஆனால் நாம் வெளிநாட்டில் இருக்கிறார் என்றவுடன் 'ஹா'வெனப் பார்க்கிறோம். வெளிநாட்டில் நம்மவர்களின் நிலை பற்றியெல்லாம் இங்கு பத்திரிகைகளில் எழுதப்பட வேண்டும். அப்போதுதான் அந்த மாயை குறையும்."

நேஷனல் பள்ளி மாணவி : "ஆராய்ச்சி, வேலை, சம்பளம் இப்படி எல்லாவற்றிலுமே

நம் உயர்வை நான் உணர்ந்தேன்!

மங்களூர் போர்ட் ட்ரஸ்டின் முன்னாள் தலைவர் திரு.ராஜாபாதர் நிறைய வெளிநாடுகளுக்குப் போய் வந்தவர்... அங்கு பார்த்தவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு அடையாறு சிக்னல் அருகில் ஒரு அதிசயத்தை நிகழ்த்தி இருக்கிறார். பத்மினி எனும் பெயரிட்ட அவருடைய அந்த உயர்ந்த கட்டிடத்தில் மேல் மாடி வண்ண மயமாக இருக்கும். இடையே ஒரே மரம் செடி கொடி மயமாகக் காட்சியளிக்கும். மனுஷர் அவ்வளவு உயரத்தில் என்ன செய்திருக்கிறார் என எட்டிப் பார்த்தால்-

'அகஸ்யா' எனும் அந்த ஹால் முன்னாள் மொட்டை மாடியின் மறு அவதாரம். நடுவில் கீதோபதேச கிருஷ்ணர் ஓவியத்துடன் மேடை. எதிரே ஹால் முழுக்க முழுக்க ஃபைபர் க்ளாஸால் வடிவமைக்கப் பட்ட சுவர், கூரை. அதற்கும் மேலே மற்றொரு பகுதியில் வண்ண மயமான கூரை. விளக்குகள்.

"ஆறாவது மாடியிலே இவ்வளவு உயரமான இடத்தில் இப்படி ஒரு கட்டிடத்தைக் கட்டியிருக்கிறீர்களே, மழை புயல் பாதிக்கும் நகரமாச்சே சென்னை?"

"இது எதற்கும் அசைந்து கொடுக்காத தொழில் நுட்பத்துடன்தான் இதைக் கட்டி இருக்கிறேன். அமெரிக்காவில் லாஸ்வேகாஸில் இதைப் போன்ற ஒரு வடிவமைப்பை ஒரு அடுக்குமாடி உச்சியில் செய்திருந்தார்கள். அங்கிருந்து பார்க்கும்போது நகரத்தின் அழகையும், வான வெளி அழகையும் ரசிக்க முடியும். அதேபோல நம் ஊரில் செய்யக் கூடாதா என்ற எண்ணத்தில் தான் நான் ஸ்பெஷலாக வருவித்த கம்பிகள், மேற் கூரைகள் இவற்றைக் கொண்டு செய்தேன்.



இங்கே நடக்கும் மீட்டிங்குகள், கருத்தரங்குகள், சிறுவிசேஷங்கள் இவற்றிற்கு வருபவர்கள் எல்லாம் இந்த அமைப்பை ரொம்ப ரசிக்கிறார்கள்.

மொட்டை மாடி என்றாலே மீந்து போன கம்பி, கட்டைகள், குப்பைகள் போடும் இடமாக இல்லாமல் இதைப் போல அமைத்து பயனுள்ள வகை யில் உபயோகப்படுத்த லாமே! அமெரிக்கர்கள்தானா ரசனை மிகுந்தவர்கள்? நாம் அவர்களுக்கும் மேலானவர்களே!"

முன்னேறிய நிலை வெளிநாடுகளில்.

நல்ல அனுபவமும் எக்ஸ்போஷரும் கிடைக்கிறது. இதையெல்லாம் தெரிந்து கொண்டு பயன்படுத்திக் கொண்டு இந்தியா திரும்பி விட வேண்டும்."

"சாதாரண படிப்பு மட்டும் போதாது. தொழில் கல்வி வேண்டும்"

நேஷனல் பள்ளி மாணவி : "டாக்டர், என்ஜினியர் ஆகி வெளிநாடுகளில் சம்பாதிக்க விரும்புவோர் மற்ற துறைகளை மறப்பது ஏன்? சம்பாதிப்பது மட்டும் வாழ்க்கையில்லை. பணத்திற்கு அப்பாற்பட்ட வாழ்க்கையை அவர்கள் இழந்து விடுகிறார்கள்."

ஜஹீரா முகைதீன் : "நாம் இந்தியாவுக்குத்தான் சொந்தம் என்ற எண்ணம் வேண்டும். பெயரும் நம் தாய்நாட்டுக்குத்தான் வர வேண்டும். இன்றைய இப்படிப்பட்ட ஒரு நிலைக்குக் காரணம் நாம்தான்."

ஒரு பெண்மணி : "என் மகள் வெளிநாட்டில்தான் எம்.எஸ். படிக்க வேண்டுமென்கிறாள். இங்கு ஆகும் செலவை அயல்நாட்டில் செய்தால் அறிவை மேலும் வளர்த்துக் கொள்ள முடியுமே!"

ஸ்ரீவித்யா : "அங்கே படிச்சுட்டு அவுங்க பெண்ணோட திறமையை இங்கே கொண்டு வந்தா நல்லா பேசப்படுவாங்க. அங்கு இருந்தாங்கன்னா லட்சத்தில் ஒருத்தர் ஆயிடுவாங்க. அவுங்க திறமையை இங்கு கொடுக்கணும்."

ஷோபனா : "இங்கே திறமை அடையாளம் காணப்படுவதில்லை. மதிப்பும் இல்லை. திறமைகளை வளர்த்து வெளிக்கொண்டு வர வேண்டும். வெளிநாட்டில் திறமைக்கும், ஆற்றலுக்கும் மதிப்பு உண்டு. இங்கு எல்லாமே சிக்கல்தானே?"

அருள்மொழி : "குறிப்பாக வறுமையில் உள்ளவர்களின் திறமை மதிக்கப்படுவது இல்லையே!"

சந்திரலேகா : "லஞ்சமே பிறப்புரிமையான பின்பு சுதந்திரமே கேலிக்குரிய ஒன்றுதானே?"

சுலோசனா : "எம்.பி.ஏ.வை அமெரிக்காவில் முடித்தவர்களுக்கு கம்பெனியில் தனிமதிப்புதானே?"

பவானி : "வெளிநாடு போன என் உறவினர் அங்கேயே மஞ்சள் காமாலையில் இறந்து விட, 'உடல்' இங்கு வர இரண்டு மாதம் ஆனது. ஒருவர் இறந்தவுடன் செய்ய வேண்டிய சடங்குகள் கூட செய்ய முடியவில்லை. இப்படி நிறைய கலாசார சிக்கல்களும் வரும்."

சீதா ராகவன் : "நம் பாசம் வெளிநாட்டில் ஏது?"

வேங்கட கிருஷ்ணன்: "இப்படிப்பட்ட சிறுத்தங்களைத்தான் இன்றைய பெண்களிடையே வளர்க்க வேண்டும். 'பெண்களுக்குக் கராத்தே கற்றுத் தரணும். தைரியம் வேணும். இந்திராகாந்தி அவர்கள் 'டீன்ஏஜில்' அடியெடுத்து வைத்தபோது அவருடைய தந்தை நேருஜி 'உனக்கு ஒரே ஒரு அறிவுரைதான் சொல்வேன். தைரியமாக இரு. எல்லாம் உன்னைப் பின்தொடரும்' என்றாராம். அது தான் தாரகமந்திரம். அமெரிக்காவிலுள்ள 'க்ரீன் கார்டு' மாப்பிள்ளை என்றால் கணவனைப் பிரிந்து வாழவேண்டிய நிலை புதுப் பெண்ணுக்கு.

நம் அரசின் கொள்கைகள் மாற வேண்டும். அயல்நாடு செல்வோர் அங்கு படும் கஷ்டங்களை வெளிக்கொணர வேண்டும். சங்கராச்சாரியார் பட்டுப் புடைவையும், காப்பியும் வேண்டாமென்றார் - இங்கே யார் அதைக் கேட்டார்கள்? அங்கு லைப்ரரி, எக்விப்மெண்ட்ஸ், வசதிகள் அதிகம் - முன்னோடிகளும் இருக்காங்க. அதுபோன்ற நிலை இங்கும் வேண்டும். டாக்டர்களிடையேயும் வேலையில்லாத் திண்டாட்டம் உண்டு என்கிறார்கள். கிராமம் செல்ல எந்த டாக்டர் முன்வருகிறார்? படித்து முடித்து இங்கேயே ஐந்து வருடம் கண்டிப்பாக வேலை பார்க்க வேண்டுமென்ற பாலிசி கொண்டு வர வேண்டும். என்ஜினியரிங், மெடிகல் துறைகளில் ஷிப்ட் முறை வேண்டும். இளைஞர்களின் ஆர்வத்துக்கு வடிகால் வேண்டும். மங்கையர் மலர் போன்ற பத்திரிகைகள் இவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்."

தொகுப்பு : **வைதேகி தேசிகன்**

படங்கள் : ஜி.சுரேஷ்

கருத்துப் பரிமாற்றத்தில் கலந்து கொண்டவர்கள்

மகளிர் மன்றத்தைச் சேர்ந்த தமிழரசி ஆடியபாதம், சுசீலா வாசன், முத்துலெட்சுமி மோகன்தாஸ், மீனா பரமசிவன், ஜானகி மகாலிங்கம், ராணி ஆறுமுகம், சீதா சிவப்பிரகாசம், ஜெகதா லோகநாதன், ராஜி கல்யாணராமன், பாமா நடராஜன், சீதா ராகவன்,

அலமேலு மஹாதேவன், பார்வதி சுப்ரமணியன், தங்கம் சீனிவாசன், ஜெயலட்சுமி சுப்ரமணியம், லட்சுமி வாசுதேவன், வனஜா கிருஷ்ணமூர்த்தி, பானுமதி, சுலோசனா சுரேஷ், செல்விபவானி, ருக்மணி பார்த்தசாரதி, ராஜேஸ்வரி சந்திரசேகர், காமாட்சி கிருஷ்ணமூர்த்தி, சாவித்திரி, சாம்பமூர்த்தி, லலிதா ராமசந்திரன், நளினி குமார், மங்களம் ராமமூர்த்தி, ஜஹீரா மொஹைதீன், லீலா சுவாமி, கலாவதி கண்ணப்பன்,

கல்லூரி மாணவிகள்- ஜெ.யாமினி,. என்.வித்யா, ஜெ.தங்கவயல், ஆர்.ஷோபனா, டி.வி.அருள்மொழி, ஜெ.ஆர்த்தி, ஆர்.எம்.சாந்தி, க.துர்காலட்சுமி, அ.ஜெய சங்கரி, வி.தீபா.

பள்ளி மாணவிகள்:- பி ஸ்ரீவித்யா, ஆர்.உமாதேவி, எஸ்.பிரசன்னா, டி.ரேவதி, எல்.லட்சுமி, பி.சுதா, எம்.சவிதா, பி.சுவேதா, அனிதா, காயத்ரி.

அழகாக வாழ்வோம்!

ஸ்ரீகவி

'அன்றாட வாழ்க்கையில் சிறிது கவனமும், ஒழுங்கு முறையும் கடைபிடிப்பதன் மூலம் மிகப்பெரும் மாற்றங்களையும், வெற்றிகளையும் அடையலாம்' என்பது பாண்டிச்சேரி அன்னையின் வாக்கு. தினம்தினம் நாம் வாழும் வாழ்க்கையையே, சரியாக வாழ்ந்தால் அதுவே பெரிய பக்தி தான்; யோகம்தான் எனும் அன்னையின் யோசனைகளை நாம் அன்றாட வாழ்க்கையில் கடைபிடித்தால் மேலும் மேலும் உயரலாம்...

அதற்குத் தேவை ஓர் உறுதியான உடல். அந்த உடலின் வடிவில் வனப்பு. வனப்பின் தோற்றத்தில் லயம். லயத்தின் அசைவுகளில் நளினம்.



நளினத்தின் செயல்களில் உறுதியும், உறுப்புக்களின் இயக்கத்தில் நோய் தடுக்கும் ஆற்றலும் இன்றியமையாதது.

இந்த உடல் பல அசைவுகளைக் கொண்டது. அந்த அசைவுகளை நாம் ஆராய வேண்டும். அசைவுகளில் ஒரு லயத்தையும் லாவண்யத்தையும் அமைக்க வேண்டும். அவைகளில் ஒரு அர்த்தம் இருப்பதுடன், அவலட்சணமும் ஒழுங்கீனமும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அணியும் ஆடைகளில்தான் நமது தோற்றப் பொலிவும் அடங்கியிருக்கிறது.

அதனால் ஆடைகளைத் தேர்வு செய்வதில் ரசனை அவசியம். அசிங்கமான அல்லது கிழிந்த ஆடைகளை அணியக் கூடாது. அவைகளினால் ஒவ்வாத தன்மையும், வறுமையும், தீயசக்திகளை ஈர்க்கும் அபாயமும் சேரும். ஆடம்பரமில்லாமல் எளிமையானதாகவும் முழுமையானதாகவும் ஆடைகள் அமைந்தாலே போதுமானது.

நிறங்களைப் பொறுத்துதான் நமது குணங்களும் அமைகின்றன என்பது ஆராய்ச்சிக் குறிப்பு.

மனித உள்ளியல்புகளில் பலவித பாதிப்பை பதிவாக்குவது நிறங்கள்.

ஆகையினால் நிறங்களையும் அதன் சாயல்களையும் தேர்ந்தெடுக்கும்போது கவனம் தேவை. காரணம், அவை மன இயல்புகளை மாற்றும் தன்மையுடையதால் வெகுசிரத்தையாக நிறங்களை நிர்ணயிப்பது நல்லது.

அதிகாலையிலும் அந்திசாயலிலும் வானம் வடிவமைக்கும் நிறங்களிலுள்ள நிஜங்களை கவனித்துப் பார்த்தால் நமது நிலைமையும் புரியும்.

திருமுருகா ரியல் எஸ்டேட் – பைனான்ஸ் மற்றும் தொகுப்பு நிறுவனங்கள்

73, ரங்கநாதன் தெரு, வி.கே.கே. டிரேட் சென்டர், 2வது மாடி, தி. நகர்,
சென்னை-17. போன்: 4347833/6260079.

கிளை: H-58/59 South Extension Part I, P.S. House, புது டெல்லி - 110 049. போன்: 4644179.

ரூ. 10,000/-
1 வருட டெபாசிட்
செய்பவர்களுக்கு சிறப்பு
ஊக்கத்தொகையாக (Incentive)
25.09.96 வரை
ஒரு கிராம் தங்க நாணயம்
(1 gm. Gold Coin)
வழங்கப்படும்.

ரூ.5000/-
ஒரு வருட
டெபாசிட்
செய்பவர்களுக்கு
ஒரு (Wall Clock)
சுவர் கடிகாரம்
வழங்கப்படும்.



காலம்	குறைந்த பட்ச டெபாசிட்	வட்டி	ஊக்கத் தொகை
3 மாதம்	ரூ. 5000	24%	2%
6 மாதம்	ரூ. 5000	26%	3%
9 மாதம்	ரூ. 5000	28%	4%
ஒரு ஆண்டும் அதற்கு மேலும்	ரூ. 5000	30%	6%

பொதுஜனம் : என்னையா செய்தி தாளை பிரித்தால் ஒரே பைனான்ஸ் கம்பெனி அட்வர்டைஸ்மென்டாக இருக்கு. இதிலே எவன் ஏமாற்றுக் காரன் எவன் நல்லவன் என்றே தெரியவில்லை. ஒரே குழப்பமா இருக்கு.

திருமுருகா : குழம்பாதீர்கள் சார். திருமுருகா இருக்கு சார். நீங்கள் டெபாசிட் செய்வதற்கு, பாதுகாப்பான நிறுவனம்.

ஏன் திருமுருகாவில் டெபாசிட் செய்ய வேண்டும்.

(1) திருமுருகா நிறுவனத்திற்கு கோடிக்கணக்கான சொத்துக்கள் உள்ளது.

(2) டிபாசிட்தாரர் என்று வேண்டுமானாலும் டிபாசிட் தொகையில் 75% உடனடி கடனாக பெறலாம். தவிர்க்க முடியாத காரணம் இருப்பின் டிபாசிட் முதிர்ச்சி ஆவதற்கு முன்பே ஊக்கத் தொகையை பிடித்துக்கொண்டு பணத்தை திருப்பி கொடுக்கிறோம்.

(3). 29.09.96 குலுக்கலில் உங்களுக்காக 50 பரிசுகள் காத்திருக்கிறது.

(4) திருமுருகா Fibre-Glass Industry, Heat Treatment Industry, Netlon Agency, வீட்டுமனை விற்பனை, லாபகரமாக நடக்கிறது.

(5) விருப்ப ஓய்வு பெற்ற அரசு அதிகாரியால் நடத்தப்படுகிறது.

"தொடக்கத்தில் ஸ்ரீ அன்னை எங்களுக்கு அன்னையாகத் தோன்றவில்லை. முதலில் அவர் அழகின், நளினத்தின் இசையின் உருவ மாகவே எங்களிடம் வந்தார்..."

-இவ்வாறு 'ஸ்ரீ அரவிந்தர்' என்ற நூலில் குறிப்பிடுகிறார், திரு. நளினி காந்த் குப்தா.

நமது இல்லமே நமது உள்ளத்தின் பிரதி பலிப்பு.

சுற்றுப்புறச் சூழ்நிலையை சுத்தமாகவும், செழுமையாகவும் வைத்துக் கொள்வது தனிச்சிறப்பு.

இல்லத்திலுள்ள தேவையற்ற பொருட் களையும் தேவையுள்ளவைகளாக மாற்றி விட் டால், மேலும் தேவை என்ற நிலை நீடிக்காது. ஒவ்வொரு பொருளையும் ஒழுங்கான முறையில் இதமாக அமைப்பது சிறந்தது. எந்த இடத்தில் எது இருக்க வேண்டுமோ, அந்த இடத்தில் அது இருந்தால், எந்த நேரத்திலும் தடுமாற்றத்தைத் தவிர்க்கலாம்.

அதேபோல ஜடப் பொருட்களுக்கும் உணர்வுகள் உண்டு என்பதை உணர்ந்து, அவைகளை முறையாகச் சத்தமின்றிப் பயன்படுத்தினால்; நமக்குள் ஒரு சுய உணர் வும், சுகமான சிந்தனைகளும் வளரும். அமைதியும் சாந்தியும் அப்படிப்பட்ட இல்லத்தில் அடைக்கலமாகும்.

"நமது வாழ்க்கையை அதிக சுத்தமான ஒரு மட்டத்திற்கு உயர்த்துவதே அதன் சாரமாகும். நமது வாழ்க்கை எவ்வளவு ஒழுங்கற்றிருக்கிறது என்பதைப் பொதுவாக நாம் உணர்வதில்லை. இதன் பிரதிபலிப்புப் போல நமது சொந்தப் பொருட்கள், வீட்டுச் சாமான்கள் எல்லாம் தாறுமாறாகக் கிடக்கும். நமது செயல்கள் மனம் போன போக்கில் இருக்கும். நமது அக வாழ்க்கையும் புறவாழ்க்கையைப் போலவே ஒழுங்கற்றிருக்கும். இன்னும் மோசமாகக் கூட இருக்கும். நமது சிந்தனைகளும் நமக்குத் தாறு மாறாகவே வருகின்றன" என்று ஸ்ரீ அன்னை தமது அறிவுரைகள் மூலமாகவும், தமது முன் மாதிரியாலும் நமக்கு போதிக்கிறார்.

"....ஆசிரமத்திற்குத் தேவையான பல பொருட்களை ஸ்ரீ அன்னை பிரான்சிலிருந்து வரவழைத்தார். பெரிய பெரிய ஜாதிக்காய் பெட்டிகளில் அந்தப் பொருட்கள் வரும். பெட்டிகளையும் வீணாக்காமல் ஸ்ரீ அன்னை உபயோகிப்பார். அவற்றையெல்லாம் தாமே ஒன்று சேர்த்துப் பெரிய பலகைகளாகச் செய் வார்."

இவ்வாறு தமது அன்றைய நாட்களை நினைவுகூர்கிறார், யோகி சம்பக்லால்.

"உடலின் தேவைகளான உணவு, உறக்கம், வேலை ஆகியவற்றில் ஓர் ஒழுங்கு முறையைக் கையாள வேண்டும்" என்ற ஸ்ரீ அன்னை அதனை தமது வாழ்நாளில் நடத்திக் காட்டியதுடன் நில்லாமல் மற்றவர் களுடைய வாழ்விலும் ஒரு நெறிமுறையை ஏற்படுத்தியதற்கு ஏராளமான சம்பவங்கள் இருக்கின்றன.

'மனிதனில் தெய்வ உணர்வைத் தட்டி எழுப்ப வேண்டும். இந்த அரிய ஆன்மிகப் பணிக்கு மக்களின் கூட்டு முயற்சி தேவை' என்பதை ஸ்ரீ அரவிந்தர் வலியுறுத்திய நேரத் தில் அவருடன் மொத்தம் பத்துப் பன் னிரண்டு அங்கத்தினர்களே இருந்தனராம். இவ்வாறாகத்தான் அவர்களுடைய தேவசங்கம் ஆரம்பித்ததாம்.

ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரின் இல்லத் திற்கு வந்து சேர்ந்தபொழுது, மனம் போனபடி ஓர் ஒழுங்குமுறை இல்லாத வாழ்க்கை நடத்திவந்த இளைஞர்களிடையே ஒரு நியதியை ஏற்படுத்தினார். ஸ்ரீ அரவிந் தருடன் அதுவரை அவர்கள் ஒரு நண்பரிடம் பழகுவது போலவே பழகி வந்தனராம். ஒரே ஒரு குளியலறை. துடைத்துக் கொள்ள ஒரே ஒரு துவாலை. ஒவ்வொருவராகக் குளித்துவிட்டு அதைப் பயன்படுத்துவார் களாம். கடைசியாகக் குளிப்பவர் ஸ்ரீ அரவிந்தர்.

அன்புத் திருவுருவமான ஸ்ரீ அன்னை வந்தபின் இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டது. மேல் தளத்தில் ஸ்ரீ அரவிந்தர் குளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்ரீ அரவிந்தருடன் சம ஆசனத்தில் அமருவது அழகல்ல என் பதைத் தாமே முன்னோடியாக இருந்து காட் டினார் ஸ்ரீ அன்னை. குரு சிஷ்ய உறவு என் றால் என்னவென்பதை மிக அழகாக, மென் மையாக அவர்களுக்கு உணர்த்தினார். உணவு முறையிலும் ஒரு நிலையான பழக்கம். இரவு உணவிற்குப் பின்னர் தியானம்.'

"உயிர் வாழ்வதற்கே உண்; உண்பதற்காக உயிர் வாழாதே!" என்ற ஸ்ரீ அன்னை, 'ஆண்ட வனின் அருட்பிரசாதமாக உணவை உட் கொள்வது நலம். அதிகமாகவோ குறை வாகவோ உண்பது கூடாது. மனம் போன போக்கில் உணவுப் பழக்க வழக்கத்தை மாற் றலாகாது. சாந்தத்தைத் தருவது சமரியான உணவு. நமக்குள் கோயில் கொண்டுள்ள ஆண்டவனுக்கு நிவேதித்த பின்பே உணவு உட்கொள்ள வேண்டும். அமைதியாகவும் மவுனமாகவும் உண்ண வேண்டும். உணவைத் தயாரிக்கும்பொழுதும் சாத்வீகமான நிலையில் தயாரிக்க வேண்டும். அப்போது தான் உணவு உடலில் வலுபெறும்' என்று குறிப்பிடுகிறார்.

அன்றைய பொழுது முடிந்து உறங்கும்

ஒரு பெண்ணைப் பற்றி அவதூறு சொல்வதைப் பார்க்கிலும் ஓர் ஆலயத்தை எரிப்பது குறைந்த பாவம். (செர்பியா பழமொழி.)

-தகவல் ; மஞ்சுளா ராமசாமி

முன்னர் இறைவனை நினைத்துத் தியானிப்பது ஆழ்ந்த உறக்கத்திற்கான அஸ்திவாரமாகும். உறக்கம் உடலுக்கு இன்றியமையாதது எனினும் உடலின் தேவைக்கேற்ப அளவான அமைதியான உறக்கத்தை வரவழைப்பதே ஆரோக்கியத்திற்குச் சிறந்த வழி.

உறங்குவதற்குத் தயாரானதும் படுக்கை மேல் அமர்ந்து, அலைமோதும் மன வேகத்தைக் குறைத்து, உறக்கம் வரத் தொடங்கியதும் நம்மை இறையருளிடம் ஒப்படைத்து விடுவது நல்ல உணர்வுகளை நம்முள் ஏற்படுத்தும். மல்லாந்து படுப்பது ஜீரணத்திற்கு இடைஞ்சல் மட்டுமின்றி நரம்புகள் மீது அழுத்தம் விளைவிக்கும். இடதுபக்கமாகச் சாய்ந்து படுப்பது இதயத்திற்கு நல்லது. உறக்கத்தில் நிலை மாறினாலும் சற்றே விழிப்பு ஏற்படும் பொழுது சகஜ நிலைக்கு வந்து விடலாம்.

ஒவ்வொரு தடவையும் விழிக்கும்போதும் உறங்கத் தொடங்குவதற்கு முன்னர் இருந்த தியான நிலைக்கு மனதைக் கொண்டு வந்து உறக்கத்தைத் தொடரலாம். புத்துணர்ச்சியுடன் விழிப்பு வரும் போது மறுபடியும் உறங்குவது கூடாது. விழித்ததும் உடல் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில் சற்று நேரம் அசையாது இருந்து, கடைசியாகக் கண்ட கனவில் நமக்கு நினைவிருக்கும் இடத்திலிருந்து முழுக் கனவையும் நினைவுக்குக் கொண்டு வரும் பயிற்சியால் உறக்கத்திலும் உணர்வுடனிருக்கக் கற்றுக் கொள்ளலாம்.

நமக்குச் சில நேரங்களில் உறக்கம் வராது. அப்போது கவலை தரும் சம்பவங்களை நீக்க சிறிது உலவலாம். சாந்தியளிக்கும் நூல்களைப் படிக்கலாம். ஜபம் செய்யலாம்.

உடலிற்கு மிகத் தேவையானது வேலை அல்லவா!?

ஒருவருக்கு வேலை இல்லையெனில் உடல் விலங்கிற்கு ஒப்பாகி மாறிவிடும்!

"வேலையில் சிறியது என்றோ பெரியது என்றோ எதுவும் இல்லை. முன்னேற்றத்தையும் கட்டுப்பாட்டையும் நாடுகிறவனுக்கு எந்த வேலையும் சமமானதே. எந்த வேலையும் பயனளிப்பதே. எதை ஆரம்பிக்கிறாயோ அதைச் செய்து முடிக்க வேண்டும். 'ஏதோ இயன்ற மட்டும்' என்று சொல்லாமல் முழு நிறைவுடன் நன்றாக முடிக்க வேண்டும் என்ற உண்மையான பொறுப்புணர்ச்சியுடன் வேலையைச் செய்ய வேண்டும்" என்று அறிவுறுத்துகிறார் ஸ்ரீ அன்னை.

நாம் செய்யும் வேலையில் அதன் தன்மையை விட அதனைச் செய்யும் பாவனையே முக்கியமானது. செய்த வேலையாக இருந்தாலும் மீண்டும் அதனைச் செய்கின்ற போது புத்துணர்ச்சியுடன் செய்வது மனதை இதமாக்கும். எந்த வேலையைச் செய்தாலும் இறையுணர்வுடன் செய்யப் பழகிக் கொண்டால் அதில் பரிபூரண முழுமை தெரியும்.

"அகந்தை சிறிதும் இன்றி, கடவுளுக்காக, கடவுளுக்கு நிவேதனமாக, கடவுள் உணர்வில் ஆழ்ந்து செய்யப்படும் வேலை எல்லாம் யோகமாகும்" என்று அருள்மொழிகிறார் ஸ்ரீ அரவிந்தர்.

"அழகு எனும் சித்தியை அடைய உடலைப் பண்படுத்தும் தவத்தை மேற்கொள்ள வேண்டும்...

அனைத்திற்கும் அடிப்படையாய் நிற்பது உடல் அன்றோ...!?

உடல் இன்றி சாதனை ஏது...?"

- இவ்வாறு கேட்கும் ஸ்ரீ அன்னை உடலும் உறுதியுடன் வளர உடற்பயிற்சி அவசியம் என்கிறார்.

ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்தைச் சார்ந்த கல்விக்கூடத்தில் உடற்பயிற்சி வகுப்பு ஒன்றை ஏற்படுத்தினார் ஸ்ரீ அன்னை. நோயில் விழுவது பெருமை அல்ல. அது ஒரு பலவீனம். மனம் வளர்ந்தால் மட்டும் போதாது. உடலும் வளர வேண்டும். இதற்காக ஸ்ரீ அன்னை அரும்பாடுபட்டார்.

"உடலை எந்தவிதமான இச்சைக்கும் போதைக்கும் அடிமையாக விடக்கூடாது. உடலை அதனுடைய போக்கில் விட்டு விடாமல் வசப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த உடலில் இறைவன் இருக்கிறான் என்பதை எப்போதும் மறக்கக் கூடாது. இறைவன் குடிகொண்டிருக்கும் இந்த உடலைப் பேணிக் காப்பதே சிறந்த அழகு."

- இவ்வாறு அருளும் ஸ்ரீ அன்னையின் பல திருவுருவங்களைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும்.

'அழகு' என்பது ஒரு அற்புதமான 'சித்தி' என்பதை அறிந்து கொள்வோம்!

படம் உதவி : ஸ்ரீ அரவிந்த ஆசிரமம், புதுவை.


'இப்போது என் கண்மணியின் தலைமுடிக்குத்
தருகிறேன் தேங்காய் எண்ணெய் மற்றும் லிக்விட்
புரோட்டீனின் ஊட்டச்சத்து... அதுவும் பிசுபிசுப்பு, சிக்கு
இல்லாமலேயே'! —திருமதி. ஷர்மா
முதன்முறையாக
பிசுபிசுப்பற்ற
தலைமுடிக்கான
தேங்காயெண்ணெய்
லிக்விட் புரோட்டீன்-உடன்
Clinic Plus
COCONUT HAIR OIL
WITH LIQUID PROTEIN

புக் ஷெல்ஃப்

கணவன் மனைவி மகிழ்ச்சியுடன் வாழ வழி முறைகள்

குடும்ப மகிழ்ச்சிக்காக பல யோசனைகளைச் சொல்பவர் டாக்டர் எஸ்.என். முரளீதர்.

பக் : 112. விலை ரூ.20/-

நோய்களை ஜெயிப்பது எப்படி!

உணவு, உடற்பயிற்சி, சிறந்த சுற்றுப்புறம் என ஆரோக்கியமாக வாழ்வதற்கான யோசனைகளைக் கூறுகிறார் மானோஸ்.

பக்:112, விலை ரூ.20/-

(இரண்டும் கார்த்திகா பப்ளிகேஷன்ஸ், 18 தெற்கு பெருமாள் கோவில் முதல் தெரு, வடபழனி, சென்னை - 26)

சிரிப்புச் சுரங்கம்

486 நகைச்சுவை துணுக்குகள். எழுதியவர்– கரடிகுளம் ஜெயாபாரதி ப்ரியா.

பக் : 144. விலை ரூ. 25/-

ஷேர்மார்க்கெட்டில் இலாபகரமாக முதலீடு செய்யும் முறைகள்.

ஆசிரியர் வி.கே. என். சந்துரு. எளிய முறையில் விளக்குகிறார்.

பக்:112. விலை ரூ.20/–

(இரண்டும்-நர்மதா பதிப்பகம், 16/7 ராஜாபாதர் தெரு, பாண்டி பஜார், தி. நகர், சென்னை–17)

கைரேகை ரகசியங்கள்

கைரேகை அமைப்பு முறைகளை விளக்கப் படங்களுடன் கூறுபவர் ஆசிரியர் எம். லட்சுமணன்.


பக்:112. விலை ரூ. 20/-

அங்க-மச்ச ஐஸ்வர்ய பலன்கள்.

அதாவது ஸாமுத்திரிகா லட்சணம் பற்றிக் கூறுபவர் மயிலை பூபதிராஜன்.

பக்:80, விலை: ரூ. 14/-

(இரண்டும்–யமுனா பிரசுரம், 18/1, ராஜாபாதர் தெரு, தி.நகர், சென்னை - 17.)



ஸ்லீப்பர் கோச்.

ஒரு ரயில் பெட்டிக்குள் நடக்கின்ற சுவையான சம்பவங்களைத் தனக்கே உரிய பாணியில் சொல்பவர் பி.வி.ஆர்.

பக்:280, விலை ரூ.45/-

பதவி

பிரபஞ்சனின் சிறுகதைத் தொகுப்பு. புதுச்சேரியின் பிரெஞ்ச் காலத்திய கதைகளானாலும் மனித உணர்வுப் போராட்டங்களைச் சுவைபட அமைத்துள்ளார்.

பக்:134, விலை ரூ.22/-

(இரண்டும்- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை -17)

அப்புசாமியும் ஆப்பிரிக்க அழகியும்

பாக்கியம் ராமசாமியின் அழியாபுகழ் பெற்ற அப்புசாமியின் கதைகளில் ஒன்றான அப்புசாமி ஆப்பிரிக்காவுக்குப் போன கதை. விழுந்து விழுந்து சிரிக்க வைக்கும் நாவல் எனச் சொல்லவும் வேண்டுமா?

பக்:384. விலை ரூ. 72/-

புகழ்பெற்றவர்களின் காதல் கடிதங்கள்


ஜாக்குலினுக்குக் கென்னடி, லியோ டால்ஸ்டாய் தன் காதலிக்கு என பிரமுகர்கள் எழுதிய சுவைதரும் கடிதங்கள். தொகுப்பு - மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு.

பக்:108, விலை ரூ.20/-

(இரண்டும் - மணிமேகலைப் பிரசுரம், த.பெ.எண்.1447,4 தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை -17)

எத்தனை நாடுகள், எத்தனை விவரங்கள்!

மிகப் பெரிய பூங்கா. இரயில்களால் வளர்ந்த நகரங்கள் என உலகின் முன்னேற்றங்களைக்



மிக்ஸட் அடை தோசை

ஒருநாள் ஃப்ரிட்ஜில் கொஞ்சம் தோசை மாவு, கொஞ்சம் அடை மாவு இருந்தது. இரண்டையும் சரிசமமாகக் கலந்து, அந்த மாவில் தோசைஅடை வார்த்தேன். சூப்பர் டேஸ்ட்!

— உமாசுவாமிநாதன்

கூறுபவர் இரத்தின சண்முகனார்.

பக்:332, விலை ரூ.50/-

(அருணோதயம், 3 கெனடியாமடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14)

வேட்கை

புதுகை வெற்றி நிலவன் எழுதிய சிறுகதைத் தொகுப்பு. சமகாலத்திய பிரச்னைகளை அலசுகிறார்.

பக்: 127, விலை ரூ. 26/-

சிறுநாடகங்கள்

சுஜாதாவின் பத்து சிறுநாடகங்கள்.

பக்:232, விலை ரூ.45/-

(இரண்டும் குமரிப் பதிப்பகம், 8. நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் - 611 001)

ஹிட்லர் அய்யாசாமி

நாகர்கோவில் கிருஷ்ணனின் நகைச்சுவை நாடகம்.

பக்:132, விலை ரூ.25/-

(மஹேஸ்வரி பிரசுரம், 55, சோலையப்ப முதலி தெரு, சென்னை -4)

ஆதிசங்கரர் அருளிய ஸ்ரீசுப்ரமண்ய புஜங்கம்

திருச்செந்தூர் முருகன் மீது ஆதிசங்கரர் அருளிய வடமொழி ஸ்தோத்திரங்கள். இதனை அழகுபட தமிழில் கவிதையாக்கி விளக்கவுரையும் கூறியிருப்பவர் வாகீசன்.

பக்:40, விலை ரூ.5/-

கூண்டினுள் பட்சிகள்

இந்நாவல் ஒரு துறவியின் ஆன்மீகப் பயணத்தைக் கூறுகிறது. ஆசிரியர் நீல பத்மநாபன்.

பக்:176, விலை ரூ.32/-

(இரண்டும்-வானதி பதிப்பகம், 13. தீனதயாளுதெரு, தி. நகர், சென்னை -17)

நவீன நியூமராலஜி

பிறந்த வருட தேதிகளோடு கிழமையையும் இணைத்துப் பலன் சொல்லும் நியூமலராலஜி சொல்பவர் நந்திதேவன்.

பக்:192, விலை ரூ.25/-

வீட்டு வைத்தியம்

உப்பு, இஞ்சி, ஓமம் போன்றவற்றைக் கொண்டு கைவைத்தியம் செய்து கொள்ளும் முறைகளைச் சொல்பவர் எஸ்.ஏ. ஆசைராஜா.

பக்:88, விலை ரூ.15/-

(இரண்டும்-ஸ்டார் பிரசுரம், 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை -5)

வாழ்க்கை அறிவியல்

கல்வி வாழ்க்கைக்குச் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றிப் பேசுபவர் ஆசார்ய மகாபிரக்ய. தமிழாக்கம்-தஞ்சை மா.கோவிந்த ராஜன். புலவர் மா.கி.இரமணன்.

பக்:246, விலை ரூ.35/-

(துளசி மகாபிரக்ய சாகித்ய அகாடமி, சென்னை - 79.)

மணவாழ்வு மணம்பெற சில யோசனைகள்

மணநல ஆலோசகர் பூங்கோதை குருதாஸ் திருமணங்கள் வெற்றிபெற யோசனைகள் கூறுகிறார்.

பக்: 144, விலை ரூ.27/-

(நர்மதா பதிப்பகம், 16/7 ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார், தி. நகர், சென்னை -17.)

'குழந்தையை புத்தகத்தை உரக்க வாசிக்கச் செய்யுங்கள்' என்னும் கட்டுரை படித்தேன். நான் கோவையில் ஒரு மெட்ரிகுலேஷன் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றுகிறேன். எங்கள் பள்ளியில் மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு உரக்க வாசித்தலுக்கென அரை மணி நேரம் ஒதுக்குகிறோம். இந்த நேரத்தில் ஆசிரியர்கள் கண்காணிப் பின்கீழ் அனைத்துக் குழந்தைகளும் தமது பாடப் புத்தகத்தை உரக்க வாசிக்கிறார்கள். இதனால் குழந்தைகளின் உச்சரிப்பு திருத்தம் அடைவதோடு படிப்பில் ஆர்வமும், தன்னம்பிக்கையும் பெறுவதைக் கடந்த இருவருடங்களாகக் கண்டு வருகிறோம்

-சசிகலாசத்தியப்பிரியன்

ஆன்லைன் இருக்க கவலை எதற்கு ?

ஆண்டாளின் பாசுரத்தை முணுமுணுத்தபடி பார்த்தசாரதி கோவிலின் பிரகாரத்தை வலம் வந்த சம்பூர்ணம் மாமி மூலவரை சேவித்த பின்பு அருகிலுள்ள மண்டபத்தில் வந்து அமர்ந்தாள்.

சற்று இருட்டத்தொடங்கியதும் வீட்டுக்கு கிளம்பலாம் என்றெண்ணி மாமி எழுந்தபோது "சம்பூர்ணம் மாமி" என குரல் கேட்டு திரும்பினாள்.

"என்ன மாமி, ஆத்துக்கு கிளம்பிட்டேளா?" என்று கேட்டாள் அடுத்த வீட்டு புவனா.

" ஆமாண்டியம்மா, ஆமா. உன் ஆத்துக்காரனுக்கு சிங்கப்பூர்ல ஏதோ எலக்ட்ரானிக்ஸ் கம்பெனியில் வேலை கிடைச்சு போயிருக்கானாமே. கேள்விப்பட்டேண்டி" என்றாள் சம்பூர்ணம்.

" நானே உங்ககிட்ட சொல்லணும்னு இருந்தேன் மாமி. அவர் சிங்கப்பூர் போயி கிட்டத்தட்ட 4 மாசமாயிடுத்து. இங்க அவர் வேலை செஞ்ச கம்பெனி திடீர்னு மூடிட்ட உடனே நேக்கு கையும் ஓடலை, காலும் ஓடலை. ரெண்டு குழந்தைகளை வச்சுண்டு எப்படி காலம் தள்ளுவோம். பகவானே ஒரு நல்ல இடத்துல நல்லபடியா வேலைகிடைக்கணும்னு, இதோ... இதே பெருமாள்கிட்டத்தான் வேண்டிண்டேன். பெருமாளோட அனுக்கிரஹம் தான் அவருக்கு அடுத்த பத்தாவது நாளே சிங்கப்பூர் கம்பெனி வேலை கிடைச்சது. இப்போ அவருக்கு அங்க நம்ம ஊர் கணக்குப்படி பார்த்தா 18,000 ரூபாய் சம்பளம் மாமி. பகவான் எங்களை சோதிச்சாலும் கைவிடலை மாமி !" என்று உணர்ச்சி வசப்பட்டு கண்கலங்கினாள் புவனா.

" ஏண்டி புவனா, உன் ஆத்துக்காரன் நன்னா சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டான். இனி நோக்கு ஒரு குறையும் வராது. எதுக்கு போயி கண்கலங்கறே?" என்றபடி பரிவுடன் புவனாவை தேற்றினாள் சம்பூர்ணம்.

" ஆமா, உன் ஆத்துக்காரன் அனுப்புற பணத்தை சேமிக்கறியா, இல்லையா? நல்லபடியா சேமிக்க உன் குழந்தைகள் பேர்லேயும் உன் பேர்லேயும் டெபாசிட் பண்ணிட்டு அக்கடான்னு இருடி புவனா." என்றாள் சம்பு மாமி.

" அது விஷயமாத்தான் உங்களைக் கேட்டு முடிவு பண்ணலாம்னு இருந்தேன் மாமி. அடுத்தவீட்டு விசாலம் மாமி கூட ஏதோ முன்ன பின்ன தெரியாத ஃபைனான்ஸ் கம்பெனியில் போட்டுட்டு இப்போ திண்டாடிண்டு இருக்கா. அந்த நிலைமை எனக்கும் வந்துடுமோன்னு நேக்கு பயமாயிருக்கு மாமி." என்றாள் புவனா.

" பயப்படாத புவனா. நான் சொல்ற ஃபைனான்ஸ் கம்பெனியில் டெபாசிட் பண்ணு."

"என்ன கம்பெனி மாமி?" கண்களில் ஒரு தெம்புடன் கேட்டாள் புவனா.

" Online Finance Company. அவங்களோட தனிப்பட்ட முறையில் செய்யற சேவை, தேர்ந்தெடுக்கிற சேமிப்பு முறை டெபாசிட் பண்றவாளுக்கு நிச்சயம் பிடிக்கும். மேலும் ஆன்லைனோட CARE 'A'(FD) Rating உங்களோட பணத்துக்கு முழுப்பாதுகாப்பளிக்குது.

" வட்டி எவ்வளவு மாமி தருவாங்க?"

"ஆன்லைனோட வட்டிவிகிதம் RBI-யோட சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதால் நியாயமான வட்டி 'டாண்'னு உங்களோட வீடு தேடி வரும். என் தங்கையும் அவளோட ஆத்துக்காரரும் சிங்கப்பூர்ல தான் செட்டிலாயிருக்கா. அவா கூட Online Finance Company-ல தான் டெபாசிட் பண்ணியிருக்கா. இவ்வளவு ஏன் புவனா, எங்க ஆத்துக்காரரோட Pension, Gratuity பணம் கூட Online-ல தான் டெபாசிட் பண்ணியிருக்கோம். உள்ளூர்க்காரா மட்டுமில்லாம வெளிநாட்டுல இருக்கிற நம்ம ஊர்க்காராளும் ஆன்லைன்ல டெபாசிட் பண்றாங்கன்னா எந்த அளவுக்கு அவங்களுக்கு ஆன்லைன் மேல நம்பிக்கையிருக்குன்னு தெரியுதோ?"

" சரி மாமி. அந்த கம்பெனி பத்தின விவரங்கள் எப்படி கிடைக்கும்?

பேச்சுவாக்கில் இருவரும் சம்பூர்ணம் மாமியின் வீட்டு வாசலை நெருங்கி விட்டிருந்தனர். புவனாவை வீட்டுக்குள் அழைத்துச் சென்ற சம்பு மாமி ஷெல்பிலிருந்த ஆன்லைன் கார்டை எடுத்து, "புவனா, நீ 8276768/8265301/8234072-ன்ற டெலிபோன் நம்பர்ல இல்லேன்னா 8267008-ன்ற ஃபேக்ஸ் நம்பர்ல ஆன்லைனை தொடர்பு கொண்டா உனக்கு தேவையான விவரங்கள் உங்களோட ஆத்துக்கே வந்து சேரும். ஆனா ஒன்னு மட்டும் நிச்சயம். ஆன்லைனோட தனிப்பட்ட சேவையை உணர்ந்துட்டேன்னா, நீயே மத்தவங்களுக்கு சொல்லுவே ஆன்லைனைப் பத்தி" என்றாள் சம்பு மாமி.

" சரி மாமி, நாழியாயிடுத்து. ஆத்துல பசங்க ரெண்டும் [illegible] அடிச்சிண்டுருப்பா. நான் கிளம்பறேன்." என்றபடி நகர்ந்தாள் புவனா.

" இரு புவனா. வெள்ளிக்கிழமை அதுவுமா வந்திருக்கே. இந்தா குங்குமம் இட்டுண்டு போ" என்றபடி குங்குமச்சிமிழை நீட்டினாள் சம்பூர்ணம்.

குங்குமத்தை இட்டுக்கொண்ட புவனா, "மாமி, நாளைக்கு உங்காத்திலிருந்து ஒரு போன் பண்ணிக்கணும்" என்றாள்.

"என்ன ! நீயே ஆத்துக்காரர் ஞாபகமா?" என்று நமுட்டுச் சிரிப்புடன் சம்பூர்ணம் மாமி கேட்க ... சற்றே நாணத்துடன் புவனா, " இல்லை மாமி ! ஆன்லைனுக்கு." என்றபடி தெளிவாக புன்னகைத்தாள்.

CARE 'A' RATING



ஆன்லைன் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்

2/6, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
சென்னை-600 014.
தொலைபேசி : 8276768-8265301-8234072
ஃபேக்ஸ் : 8267008.





முகப் பருக்கள்

இன்றைய இளைய தலைமுறையினரின் தலையாய பிரச்னை முகப்பருக்கள். சினிமா பாணியில் அழகுடன் உலா வர நினைக்கும் பருவ வயதினரைக் கேட்கவே வேண்டாம். ஒரு சிறு புள்ளி விழுந் தால் கூட மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள். விளம்பரங்களில் வரும் பருக்களைப் போக்கும் களிம்புகள் அனைத்தையும் பயன்படுத்திப் பார்ப்பார் கள். "முகப்பருக்கள் பருவ வயதில் வருவது சகஜம், தானாக மறைந்து விடும்" என்று அலட்சியமாக இருப்பவர்களும் உண்டு.

"சாதாரண முகப்பருக் களுக்கு சிகிச்சை தேவை யில்லை. நீடித்த முகப்பருக் களுக்கும், குழிகள், கட்டிகள் விழுந்தாலும் கட்டாயம் சிகிச்சை பெற வேண்டும்" என்கிறார் பிரபல ஹோமி யோபதி மருத்துவர் டாக்டர் ஆர். ஞானசம்பந்தம்.

நம் முகத்தில் உள்ள எண்ணெய் சுரப்பிகள் வீங்குவதாலும், நாளங்கள் அடைபடுவதாலும் முகப்பருக்கள் ஏற்படுகின் றன. நாம் பருவ வயதை அடையும் போது பால் வினை ஹார்மோன்கள் அதிகமாக சுரந்து ஆண் பெண் இருபாலாருக்கும் அபரித வளர்ச்சியைக் கொடுக்கும். நம் உடலில் உள்ள எல்லா உறுப்புகளும் தூண்டப்படும். முகத்தில் உள்ள எண்ணெய் சுரப்பிகள் தூண்டப்பட்டு அதிகமாக "சீபம்" எனப்படும் பசையைச் சுரக்கும். அதிகமாக இச் சீபம் சுரக்கும் போது நாளங்கள் அடைபடுவதாலும் எண்ணெய் சுரப்பிகள் வீங்குவதாலும் முகப்பருக்கள் உண்டாகின்றன.

முகப்பருக்கள் 13 வயதில் தொடங்கி பெரும்பாலும் 20 வயதுக்குள் மறைந்து விடும். ஆனால் சிலருக்கு 32 வயது வரை கூட நீடிக்கும்.

முகப்பருக்கள் அதிகமாக நீடித்து இருந்தால் பாலுணர்வு அதிகமாக இருக்கும் என்று பரவலான எண்ணம் உண்டு. அது உண்மையல்ல.

முகப்பருக்களை தடவி கொண்டிருப்பதோ கிள்ளி விடு வதோ கூடாது. நோய் நுண்கிருமிகள் நாளங்களின் உள்ளே சென்று சிறு சிறு சீழ் கட்டிகளை உண்டாக்கி விடும்.

சீழ் கட்டிகள் ஆறியபின் முகத்தில் பள்ளம் பள்ளமாக மாறி முக அழகையே கெடுத்து விடும். சீழ் கட்டிகள் தோன்றினால் அவசியம் மருத்துவரை நாடுங்கள்.

ஒருசிலருக்குக் கட்டி கட்டியாக விழுந்து முகம் கோரமாகி விடுவதும் உண்டு. இது "கிலாய்டு" (Keloid) எனப்படும்.

சீழ் கட்டிகள் ரத்தக் கசிவு இருந்தால் அது கருப்பு நிறமாக மாறி கருப்புநிற முகப்பருக்கள் (Black Head Pimples) உண்டாகும். பருக்கள் மறைந்த பின்னும் கரும்புள்ளிகள் முகத்தில் நீண்ட நாட்கள் இருக்கும்.

முகப்பருக்கள் முகத்தில் மட்டும்தான் வரும் என்பதில்லை. கழுத்து, நெஞ்சு, முதுகில் பின்பக்கம், கைகளின் மேல் பகுதி களில் கூட வரலாம். இவற்றைப் பார்க்க ஏதோ பால்வினை நோயால் பாதிக்கப்பட்ட தோல்நோய் போலத் தோன்றும்.

முகப்பருக்கள் அதிகம் இருப்பவர்களுக்குத் தலையில் பொடுகு அதிகமாக இருக்கும். தலையில் 'சீபம்' அதிகமாகி வறண்டு பொடுகு செதில் செதிலாக உதிரும்; முடி கொட்டும்.

மலச்சிக்கல் இருந்தால் பருக்கள் அதிகமாகும்; மாதவிடாயின் போதும் அதிகமான பருக்கள் தோன்றும்.

இப்படிப் பாதிக்கப்பட்டவர்கள் உணவில் எண்ணெய் பதார்த்தங்களைக் குறைக்கவும்; மீன், முட்டை, மாமிசம், பால் வேண்டாம்; இனிப்பு வகைகள், சாக்லேட், கேக், பொரித்த உணவைக் குறையுங்கள். முகத்தை மூன்று நான்கு முறை சோப்புப் போட்டு, எண்ணெய் பசை போக கழுவுங்கள். பவுடர் உபயோகிக்கலாம். பசையுள்ள அழகு

சாதனங்களை பயன்படுத்தாதீர்கள். இவை நாளங்களை அடைத்துப் பருக்களை அதிக மாக்கி விடும்.

வெளிப்பூச்சு மருந்துகள் மூலம் முகப்பருக்களை நிரந்தரமாகக் குணப்படுத்த முடியாது. மறைவது போல மறைந்து மீண்டும் வருவதுடன் பல்வேறு பின்விளைவுகளை உண்டாக்கி விடும்.

முகப்பருக்கள் தோன்ற அடிப்படைக் காரணமாக இருப்பது ஹார்மோன்கள். இவற்றைச் சீராக்கினால் மட்டுமே குணம் பெற முடியும்.

ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் முகப்பருக்களை முழுமையாக குணமாக்க லாம். பின்விளைவுகளும் இருக்காது. சிகிச்சையில் ஆரம்பக் காலங்களில் "எனக்குக் குணமாகவில்லையே அப்படியேதான் இருக்கிறது" என்று ஆதங்கப்பட்ட பலர் சில மாதங்களில் நிரந்தரக் குணம் பெற்று ஆச்சரியப் பட்டிருக்கின்றனர். இதற்குக் காரணம் ஹார்மோன்களின் சீராக்கம் உடல் ரீதியிலேயே உண்டாக்கப்படுவதுதான். வெளிப்பூச்சு மருந்துகளே பயன் படுவதில்லை. உள் சாப்பிடும் மருந்துகள்தான்.

முகப்பருக்கள் மறைந்து பின் கரும்புள்ளிகளைப் போக்க "பெர்பெரிஸ் அக்விபோலியம்" எனும் ஹோமியோபதி மருந்து நல்ல பலனைப் பலருக்குக் கொடுத்துள்ளது. சில பெண்களுக்குக் கண்களைச் சுற்றிக் கருவளையங்கள் தோன்றும் நிறமி அதிகமாவதால் உண்டாகும். தூக்கம் கெடுதல், கொழுப்பு சத்து அதிகமாவதால் உண்டாகிறது.

பெண்களுக்குக் கன்னங்களில் கருப் பாகப் புள்ளி ஒன்று சேர்ந்து வண்ணத்துப் பூச்சி வடிவில் தோன்றும். இந்த மங்கு (cholasma) கருவுற்ற தாய்மார்கள்; கல்லீரல், கருப்பை கோளாறு உள்ளவர்களுக்குத் தோன்றும், நீண்ட காலம் கருத்தடை மாத்திரை சாப்பிட்டாலும் வரும்.

சில பெண்களுக்கு ஆண்களைப் போல மீசை தாடி வளர்வது உண்டு. இதற்குக் காரணம் "என்ட்ரோஜன்" எனப்படும், ஆண்பால் வினை ஊக்கி அதிகமாவ தால்தான்; இதைச் சீராக்கினால் மட்டுமே குணம் கிடைக்கும். செயற்கையாக "அழகுமையங்களில்" நீக்கினாலும் மீண்டும் வரும்" என்று கூறும் டாக்டர் ஆர். ஞானசம்பந்தம், ஈரோடு அரசு மருத்துவமனை எதிரில் கிளினிக் மற்றும் ஆராய்ச்சி மையம் நடத்தி வருகிறார். போன் (0424)219344 வெள்ளி, சனி தோறும் சென்னை லாயிட்ஸ் ரோடு, இராயப் பேட்டை சிவா மருத்துவமனைக்கு (8260451) வந்தும் சிகிச்சை அளிக்கிறார்.

- புவனா

ஒரு விசேஷத்தில் வெள்ளை வெளேரென்று ஒரு பொரியல் வைத்தார்கள். அது என்னவென்றே கண்டுபிடிக்க முடிய வில்லை. ஆனால் பொரியல் மிகச் சுவையாக இருந்தது. சாப்பிட்டு முடித்தவுடன் நேராக சமையற்காரரிடம் சென்று அது என்ன பொரியல்? என்று கேட்டேன். வாழைக்காய் பொடிமாஸ் என்றார். என்னால் நம்ப முடியவில்லை. அதை எப்படிச் செய்வது என்றும் சொன்னார்:

தேவையான வாழைக்காயை எடுத்துக் கொண்டு இரண்டாக நறுக்கி தண்ணீரில் கொதிக்க வைத்து பாதி வெந்தவுடன் தண்ணீரை வடியவிட்டு தோலை எடுத்துவிட்டு, கேரட் சீவியில் சீவி வைத்துக் கொள்ளவும். திட்டமாக எண்ணெய் விட்டு கடுகு, உளுந்தம் பருப்பு, கடலை பருப்பு, பச்சை மிளகாய் தாளித்துச் சீவி வைத்துள்ள வாழைக்காயில் கொட்டவும். திட்டமாக உப்பு சேர்க்கவும். பிறகு எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து அதன் சாறை விட்டு நன்கு கிள றவும். இதுதான் என்னை திகைக்க வைத்த பொடி மாஸ்.

– மஞ்சுளா
ராமசாமி

● வீட்டில் வெங்காயம், உருளைக் கிழங்கு, மில்க் பவுடர் ஸ்டாக்கில் இருக்கட்டும். எப்போது மழையால் தினசரி வாழ்க்கை பாதிக்கப்படுமோ? காய்கறிக் காரன் பால்காரன் வராவிட்டால் சமயத்திற்கு உதவும்.

● மழை சமயத்தில் கூடிய மட்டும் காட்டன் புடைவைகளை உடுத்த வேண்டாம். அதுவும் ஸ்டார்ச் செய்தவை வேண்டவே வேண்டாம். நனைத்து விட்டோமே, ஈரம் போகட்டும் என்று லேசாகப் பிழிந்தாலும் போதும் ஒரே கசங்கலாகி விடும்.

அடுப்புக் கரி, சாம்பிராணி இவற்றைக் கொஞ்சம் கைவசம் வைத்

வருணனுக்கு வரவேற்பு

திருங்கள். மழையில் நனைந்து விட்டால் ஜலதோஷம் பிடிக்காமல் புகை போடலாம். வீடும் மணக்கும்.

● பனியன், ஜாக்கெட், ப்ராக் போன்றவைகளை ஹாங்கரில் மாட்டிக் காய வைத்தால் வராண்டாவில் இருக்கும் இடத்திலேயே எல்லாத் துணிகளையும் காய வைத்து விடலாம். மழைக்குப் பயந்து மொட்டை மாடியில் போட முடியவில்லை என்று கவலைப்பட வேண்டாம்.

ஆரம்பிக்கலாமா?

தனி வீடோ இல்லை ஃப்ளாட்டோ முதலில் மொட்டை மாடிக்குப் போகலாம். அம்மாடி! லீவில் இந்தக் குழந்தைகள் விளையாட வரும்போதெல்லாம் இத்தனை சாக்லேட் பேப்பர் பழத்தோல் குப்பைகளை போட்டிருக் காங்களே. ஒரு மழை பெய்தால் இவ்வளவும் தண்ணீர் வடியும் ட்ரெய்ன் பைப் இல்லையோ அடைத்துக் கொள்ளும்.' ஓ.. இந்தப் பழைய பெட்ஷீட்டை விடெல்லாம் தேடினேன். இங்கே இருக்கா ட்ரெய்ன் பைப் வாயை அடைத்துக் கொண்டு.

'அம்மா அந்தக் குழாய்க்குள் மூன்று பந்து இருக்கு. அதையும் தேடி எடுத்து விடேன்' - முதுகுக்குப் பின்னால் குட்டிப் பையனின் அசரீரிக் குரல். சரி பெரிய மூங்கில் குச்சியால் குத்தி விட்டால் எல்லாம் கீழே விழுந்து விடும். குப்பையையும் பெருக்கியாச்சு.

அடுத்தது வீட்டைச் சுற்றி இருக்கும் சாக்கடை. வெயிலுக்கு எவ்வளவு வெடிப்பு. உடனே கொத்தனாருக்குச் சொல்லி பூசி சரிசெய்ய வேண்டும். இல்லையோ மழையில் வீட்டைச் சுற்றி அகழிதான். முதலை வராது. ஆனால் மலேரியாவை துணைக்குக் கூட்டிக் கொண்டு கொசு வரும்.



இந்த மழையில் ஊரே சகதி; வீடே நாறிப் போகிறது என்று குறைசொல்வதை விட்டு ஊருக்கு உதவ வரும் வருண பகவானை வரவேற்க நமது வீட்டையும் சுற்றுப்புறத்தையும் தயார் செய்து கொள்வது புத்திசாலித்தனம் இல்லையா?

வாசற்படியில் இருக்கும் ரப்பர் மேட் அழகாகத்தான் இருக்கு. ஆனால் ஈரக்காலுடன் ஓடி வரும் குழந்தை வழுக்கி விழுவான். இதை எடுத்துவிட்டு நல்ல கனமான காயர் மேட் போட வேண்டும்.



பால்கனியைப் பார்க்கலாமா? பூந்தொட்டிகளை நகர்த்திச் சுற்றி இருக்கும் ஈர மண்ணைப் பெருக்கி எடுக்க வேண்டும். அப்படியே தொட்டிகளையும் சுத்தமாகத் துடைத்து விடலாம். மழைக்குக் கரையான் பிடிக்காமல் இருக்கும்.

ஆகா, இதென்ன அதிசயம்! சுத்தியல், ஆணி, கம்பி எல்லாம் கண்ணெதிரில் இருக்கு! பின்பக்கம் சர்வீஸ் வெராண்டாவில் வலுவாக இரண்டு கொடி கட்டி விடலாம். மழையில் சன்னல் கம்பி கதவு என்று கிடைத்த இடமெல்லாம் ஈரத்துணியால் தோரணம் கட்டி விட்டு இதென்ன புழுங்கல் வாடை என்று மூக்கைச் சுளிக்க வேண்டாம்.

அடுத்த இடம் சமையலறை. ஷெல்பை எல்லாம் பெருக்கி ஜர்மாக்ஸின் பொடியால் கோலம் போட்டு மேலே புதிய பேப்பரையும் போட்டால் எறும்பும் கரப்பும் ஏன் வருகிறது? அப்படியே வருஷ சாமான்களையெல்லாம் ஒருமுறை வெயிலில் காயவைத்து விட்டால் தேவலை. இன்னும் இரண்டு மூன்று மாதத்திற்கு சூரியன் வரவுக்குக் காத்து நிற்கணும். ஊறுகாய் ஜாடியைத் திறந்து பார்க்கணும். எண்ணெய் மேலிட இருக்கோ? மாவடுவை கொஞ்சம் சின்ன பாட்டிலில் எடுத்துக் கொண்டு ஜாடியின் உட்பக்கம் உலர்ந்த துணியால் துடைத்து நன்றாக மூடி வெள்ளைத் துணியால் வாயைக் கட்டி விடுங்கள்.



பெட்டியில் இருக்கும் போர்வை கம்பளியெல்லாம் உதறி வெயிலில் போட்டு உபயோகிக்க ரெடியாக வைத்துக் கொள்ளணும். 'முனியம்மா, மத்தியானம் கொஞ்சம் கூடமாட ஒத்தாசை செய்யேன். கொஞ்சம் ஒட்டடை அடித்து விடுகிறேன்.'

யார் வாசலில்? எலெக்ட்ரீஷியனா... 'வாப்பா உன்னைத்தான் நினைச்சேன். நூறு வயசு போ. இந்த ஹீட்டர் ஒயர் எல்லாம் சரியாக இருக்கா என்று செக் செய்து விடு. மூன்று மாசமாக உபயோகப்படுத்தலை. இனிமே மழைக் காலம் வெந்நீர் இல்லாமல் சரிப்படாது.'

இதென்ன கூடை நிறைய குழந்தைகளுடைய பழைய துணிகள். இப்படி அடைத்து வைத்தால் மழை நாளில் வீடெல்லாம் மக்கல் வாடை வரும். யாராவது குழந்தைகளிடம் கொடுத்தால் குளிருக்கு அடக்கமாகப் போட்டுக் கொள்வார்கள்.

ஆச்சு. கடைசியாக இந்த மர பர்னிச்சருக்கு எல்லாம் கொஞ்சம் மண்ணெண்ணையால் துடைத்து விடுகிறேன். ஈரத்துக்குக் கரையான் பிடிக்காமல் இருக்கும்.

அப்பா, இனிமேல் வருண பகவான் விஜயம் எப்போது வேண்டுமானாலும் இருக்கலாம். நான் தயார்.

• சுகன்யா ஜானகிராமன்



ருசித்துப் பார்ப்போம் நட்பை!

நீங்கள் நல்ல நண்பர்களைப் பெற்றிருக்கிறீர்களா? அப்படியெனில் அழியாத சொத்தொன்று உங்கள் கையில் எப்போதும் இருப்பதாக அர்த்தம். உங்களுக்குத் துயரம் என்று வரும் காலத்தில், அதைத் துடைத்தெறிய, துடிப்புடன் செயலாற்றும் நண்பர் உண்டென்றால் அது அரிய செல்வமல்லவா?

நட்புக்காக பல அரும்பெரும் செயல்கள் செய்யப்பட்டதாக வரலாறு எடுத்தியம்புகிறது. அவை நம் வாழ்விலும் நடைபெற வழியிருக்கிறது.

இரண்டாண்டுகளுக்கு முன்பு, என் பிரசவ நேரம் என்னைச் சேர்ந்தோருக்கு கலக்கத்தைக் கொடுத்தது. ஆனால் என் பெற்றோரின் பிரார்த்தனைகளாலும், உற்றாரின் உதவியினாலும் மிக எளிதாக எல்லாம் நிறைவேறியது. அச்சமயம் எங்கள் நண்பர் குடும்பங்கள் எனக்குச் செய்த உதவிகளை இங்கு எழுத்தில் எடுத்தியம்ப முடியாது. அடுத்து சமீபத்தில் எனக்கும், எனது குடும்பத்தாருக்கும் ஏற்பட்ட பேரிழப்பு என் தந்தையின் திடீர் மரணம். அது என் மனத்தில் ஏற்படுத்தியுள்ள ரணத்தை என் உற்ற தோழிகள்தான் அன்பு எனும் ஆறுதலால் மருந்திட்டு மாற்றுகிறார்கள். எனவே நல்ல நட்பு நிலையானது.

நாம் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் நட்பு முகம் காட்டினால் நாளை பற்றி நாம் அஞ்ச வேண்டியதே இல்லை. உதவி உங்கள் இல்லம் தேடி வரும்.

சரி... நண்பர்களை எப்படி சம்பாதிப்பது? அது மிக எளிது. அழகு அடுத்தவரை ஈர்க்கும். அன்போ அனைவரையும் அடிமையாக்கும்.


உங்கள் உரையாடலின் போது, நீங்கள் தவிர்க்க வேண்டியவை 'நான்' 'என்னுடைய' 'எனக்கு' போன்ற தன்மை வார்த்தை களை. 'நீங்கள் நலமா?' என்று ஆரம்பித்து, அவர்களை அனுசரணையுடன் அணுகுங்கள். மேலும் எப்போதோ நீங்கள் சந்தித்தவராக இருந்தாலும், நீங்கள் பெயர் சொல்லி, அழைக்கக்கூடியவராக அவர் இருப்பாரானால், அழகாக, இனிமையாக அவரது பெயரை உரையாடலில் உச்சரியுங்கள். பிறகு உங்களது உதடுகளில் உறுதியாக அந்தப் பெயர் ஒட்டிக் கொள்ளும்.

மேலும் ஒன்றை இறுதியாக, ஆனால் உறுதியாக உணர்த்த விரும்புகிறேன். எல்லா மொழிகளிலும் மிகவும் இனிமையான வார்த்தை ஒன்று இருக்குமாயின், அது அவரவருடைய பெயர்தான். இதை மற்றவர் (மற்றவர்தான் பயன்படுத்த முடியும்) உச்சரிக்கும்போது, கிடைக்கும் உவகை இருக்கிறதே, அதற்கு ஈடுஇணை இல்லை என்பதை நான் சொல்லவில்லை, பல மனவியல் வல்லுனர்கள் ஆராய்ந்து வகுத்துள்ள வாக்கு இது.

இனியென்ன? உங்கள் வாழ்வில் உற்ற துணையான நண்பர்கள் அணிவகுத்து நிற்பார்கள். ஒருவருக்கொருவர் உதவி செய்து, மனிதநேயம் வளர்க்கும்போது, கவலைகள் மறைந்து போவது நிச்சயம்.


இந்நாள் வரை எனக்கு நட்பு முகம் காட்டி, நேசக்கரம் நீட்டிய அனைவருக்கும் இச்சிறு கட்டுரை காணிக்கையாகட்டும்.

- தேன்மொழி முகில்குமா



வெண்டீ
பணம் சேமிக்க வெண்டீ!
எப்போதும் இதற்கே வெற்றி!
சுதா உமா இருவரும் பள்ளித் தோழிகள். ஒரு நாள் வீடு திரும்பும் போது...
உமா, என் மம்மி ரொம்ப கிரேட். ஜோரா பெயிண்டிங் பண்ணுவாங்க!
HIGH SCHOOL
என் மம்மி டிரஸ்லேகூட பெயிண்டிங் பண்ணுவாங்களே
என் மம்மி ரொம்ப அழகா கர்ச்சீப் தைப்பாங்க.
வாக்குவாதம் சூடுபிடித்துவிட்டது
ப்பூ! என் மம்மி என் டிரஸ் எல்லாமே தைக்கிறாங்களே!
என் மம்மி வெண்டீ நிலையத்தில் எண்ணெய் வாங்குறாங்க. உங்க அம்மா அப்படி இல்லை. நிச்சயமா தெரியும்.
Vendee
வெண்டீ... அது என்ன?
வெண்டீ... இது ஆட்டோமேட்டிக்கா எண்ணெய் வழங்கற இடம்னு அம்மா சொல்றாங்க. இது தூய்மையானது சுகாதாரமானது அவங்களுக்கு நிறைய பணமும் மிச்சம் ஆகுதாம்.
எவ்வளவு பணம்?
போன மாதம் சேமிப்பிலே, எனக்கு ஒரு அழகான ஸ்கேட்ச் பென் பாக்ஸ் வாங்கிக் கொடுத்தாங்க. வெண்டீ எண்ணெய் மூலம் பாக்கேஜ் செலவும் மிச்சம் ஆகுதுன்னு சொன்னாங்க.
அப்ப அந்த எண்ணெய் எல்லாம் தூய்மையா இருக்காது
தப்பு. வெண்டீ எண்ணெய் டேம்பர் ப்ரூஃப். இதிலே எந்த மாற்றமும் செய்ய முடியாதபடி சீல் செய்யப்பட்டது அதனால இது தூய்மையானதுன்னு மம்மி சொன்னாங்க.
டாடி பேப்பர்லே படிச்சுகிட்டு இருந்தாங்களே...
வெண்டீ வழங்குகிறது - அனுராக் சூப்பர் ரீஃபைண்டு சூரியகாந்தி எண்ணெய், அனுகூல் - பிளெண்டட் வெஜிடபிள் எண்ணெய், அபூர்வா - சூப்பர் ரீஃபைண்டு கடலை எண்ணெய் மற்றும் டெய்லி - டபுள் ஃபில்ட்டர்டு கடலை எண்ணெய்
பாக்கேஜ் செய்த எண்ணெய்களைவிட இவை 6 முதல் 10 ரூபாய் விலை குறைவானவை
நான்தான் சொன்னேனே.. என் அம்மாதான் கிரேட்!
மம்மிகிட்டே நிச்சயமா சொல்லணும்... வெண்டீ பத்தி...





பாக்கேஜ் செய்தது போல் தூய்மையானது.
தனியே அளந்து வாங்குவது போல் விலை குறைவானது.

	பாக்கேஜ் செய்த எண்ணெயின் விலை (1 லிட்டருக்கு) ரூ.	வெண்டீ நிலையத்தில் (1 லிட்டருக்கு) ரூ.	உங்கள் சேமிப்பு ரூ.
சூப்பர் ரிஃபைண்டு சூரியகாந்தி எண்ணெய்	51.00		
அனுராக் சூப்பர் ரிஃபைண்டு சூரியகாந்தி எண்ணெய்		41.00	10.00
டபிள் ஃபில்டர்டு கடலை எண்ணெய்	48.00		
டெய்லி டபிள் ஃபில்டர்டு கடலை எண்ணெய்		42.00	6.00
சூப்பர் ரிஃபைண்டு கடலை எண்ணெய்	54.00		
அபூர்வா சூப்பர் ரிஃபைண்டு கடலை எண்ணெய்		46.00	8.00
பிளெண்டெட் வெஜிடபிள் எண்ணெய்	45.00		
அனுகூல் பிளெண்டெட் வெஜிடபிள் எண்ணெய்		37.00	8.00

தென் இந்தியா முழுவதும் மற்றும் மும்பையில் மொத்தம் 250 வெண்டீ நிலையங்கள் - சென்னையில் 75, திருச்சியில் 20, மதுரையில் 15, கோயம்புத்தூரில் 20, ஹைதராபாத்தில் 15, பெங்களூரில் 55, மற்றும் மும்பையில் 50.

உங்களுக்கு அருகில் உள்ள வெண்டீ நிலையத்தைத் தெரிந்து கொள்ள, எஸ் & எஸ் இண்டஸ்ட்ரீஸ் அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். சென்னை: 4823204 / 4823854 / 4849001-6 ஆற்காடு: 25980 / 25981 பெங்களூர்: 626985 / 603691 திருச்சி: 770052 / 770153 கோயம்புத்தூர்: 232483 மதுரை: 535392 ஹைதராபாத்: 255201 / 255202 மும்பை: 5775706 / 5775707.


அனுராக்

அபூர்வா

அனுகூல்

டெய்லி

எஸ் & எஸ் இண்டஸ்ட்ரீஸ் அண்ட் எண்டர்பிரைசஸ் லிமிடெட்
சுக்ரா மேன்ஷன், 3-வது மாடி,
158 - ஆற்காடு சாலை,
சென்னை 600 026.
தொலைபேசி: 484 9001-6
தந்தி: ESSANDESS டெலக்ஸ்: 041-5334.
ஃபேக்ஸ்: 484 9007.



SUSWAAD

கல்யாண ஸ்வீட்ஸ், சீர்முறுக்கு, சீர்வரிசை
பட்சணங்கள் எவ்வளவு தேவை
ஆனாலும் அர்ஜெண்ட் ஆர்டர் பேரில்
தயார் செய்து தருகிறோம்.

- ☐ சுத்தமான நெய்யில் தயாராகும் ஸ்வீட் வகைகள்
- ☐ சுத்திகரிக்கப்பட்ட, கொலஸ்ட்ரால் தொல்லை இல்லாத தாவர எண்ணெயில் தயாராகும் கார வகைகள்
- ☐ அதிகப்படியான எண்ணெய் அகற்றப்படுவதால் நீண்டநாள் கெடாமல் இருக்கும் தென்னிந்திய பட்சணங்கள் (Free of Oil)
- ☐ Instant இட்லி மிக்ஸ், தோசை மிக்ஸ், அடை மிக்ஸ், வடை மிக்ஸ், புளியோதரை மிக்ஸ் etc.

OUR SPECIALITIES :

- ☐ புழுங்கலரிசி கைமுறுக்கு, தட்டை, சீடை, மிக்ஸர் (Free of Oil) etc.
- ☐ மைசூர் பாகு, போளி, லட்டு, கோதுமை அல்வா, etc.
- ☐ Nitrogen filled packing for a longer shelf life.

SUSWAAD SWEETS AND SAVOURIES PRIVATE LIMITED
The Delicious Home made Sweets and Savouries
1/3, Venkatraman Street,
(Near Kasi Arcade, Pondy Bazaar),
T. Nagar, Madras - 17.
Ph : 8232678

Also Available at :

C/0. Unique Electronics
160, Royapettah High Road,
Mylapore, Madras - 4.
Ph : 4992190

EXPORT ORDERS & ENQUIRIES FOR TECH. KNOWHOW SOLICITED.

SRI JAYANTHI ORDERS ACCEPTED

சொல்ல விரும்புகிறோம்



பத்தாம் பசலிகளின் தலைவி...

■ ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் மாமியார்களும், மருமகள்களும் படிக்க வேண்டிய மிகச் சிறந்த கதை 'மருமகள்'
மூவரில் ஒருவன், சென்னை - 5.

■ யார் யாருக்கு எந்தெந்த நகை பொருந்தும் என்பதைப் பற்றி திருமதி கீதா அவர்கள் விளக்கமாகக் கூறினார்கள் நன்றி.
த.சாந்தி தனகோபாலன், மன்னார்குடி-1.

■ தங்களின் குழந்தை, 'நன்கு படித்து டாக்டராகவோ, இஞ்சினியராகவோ ஆக வேண்டும்' என்ற ஆர்வ மிகுதியினால் பெற்றோர்கள் குழந்தைகள் மீது தாங்க முடியாத பளுவினை சுமத்தி, அவர்களை விரக்தியடையச் செய்யும் இக்காலத்தில், தங்களின் கட்டுரை பெற்றோர்களுக்கு ஒரு சிறந்த பாடமாக அமையும் என்பதில் துளியும் சந்தேகமில்லை.
-ஏ.பரமேஸ்வரி ஆனந்தராஜ், சென்னை-24.

■சூரியா சிதானந்தின் 'காலம் மாறிப் போச்சு' சிறுகதைக்குச் சரியான தலைப்பு. சிறிய வயதுள்ளவர்கள் வாழ்க்கை அலுத்து உலகம் அழிந்தாலும் அதில் எனக்கு எந்தச் சிரமமும் இல்லை என்று கூற, வயதான பாட்டி இன்னும் உயிரோடு இருக்க வேண்டும் என்ற ஆசையில் நெக்லஸை வாங்கி வரச் சொல்கிறாள். நல்ல முரண்பாடு.
சத்யா பாண்டிச்சேரி-1.

■ '21-ம் நூற்றாண்டின் குழந்தைகளுக்காக' கட்டுரைத் தொடர் மிக அற்புதமாக சொல்லப்பட்டிருக்கிறது. படிக்க, படிக்க ஆகா... என்ன நல்ல விஷயங்கள் உள்ளன உலகில் என படித்து மகிழ்ந்து அதன் படியே நடக்கிறேன். என் குழந்தைகளுக்கும் படித்துக் காண்பித்து அதில் உள்ள ஸ்லோகங்களைச் சொல்லிக் கொடுத்தேன்.
ராதா நரசிம்மன், பெங்களூர் - 94.

■ டூத் பிரஷ் சிறப்பிதழோ என வியக்கும் வண்ணம் டூத் பிரஷ் உபயோகங்களை வாரி வழங்கி விட்டீர்கள்.
ஸ்ரீ வித்யா காளிதாஸ், சிதம்பரம்

■ "சொந்த மண்ணைத் தேடி." சிறுகதை மிகவும் அருமை. தான் வாழ்ந்த ஊரை விட்டு வந்து யாராலுமே மற்றொரு இடத்தில் வந்து இருக்க முடியாது. ஏனென்றால் அதில் உள்ள பாட்டி மாதிரியே என்னுடைய பாட்டியும் அப்படித்தான் இருப்பார்கள். கதையுடன் நானும் ஒன்றி விட்டேன்.
வி.ராணி, குடவாசல்.

■ தங்களின் தலையங்கத்தில் கூடா ஒழுக்கம், பிறன்மனை நோக்குதல் பற்றி நீங்கள் குறிப்பிட்டிருப்பதைப் படிக்கும் பலர் உங்களைப் பத்தாம்பசலிகளின் தலைவி என்று கருதக் கூடும். ஏனெனில், கூடா ஒழுக்கம், பிறன் மனை நோக்குதல் இவையெல்லாம் பேராண்மையின் அடையாளச் சின்னங்களாக மாறிப் பல ஆண்டுகளாகி விட்டன. ஏக பத்தினி விரதம் என்பது இன்று ஒரு கெட்ட வார்த்தை.

பணம் சம்பாதித்துப் பெரிய மனிதனாகி விட்டால் ரிஷிமூலம், நதி மூலம் போல் எவரும் பணமுதலைகளின் தொடக்க வாழ்க்கையை, பூர்வாசிரமத்தை ஆராய விரும்புவதில்லை. அப்படியே தெரிந்தாலும் கூட "இல்லாடி மஞ்சன்யா! எப்படி, எப்படியெல்லாம் சம்பாதிச்சிருக்கான் பாரு!" என்று பாராட்டி மகிழ்வார்கள். சந்தனக் காட்டு வீரப்பனுக்கும், ஹர்ஷத் மேத்தாவுக்கும் கிடைக்கும் ஜன ஆதரவுகூட அருட்செல்வர்களுக்கும், ஆன்மீக குருக்களுக்கும் கிடைப்பதில்லை.

எப்படியோ, அத்தனை வழிகளின் மூலமும் பரவும் இந்த நச்சுக் கலாச்சாரத்தை எதிர்த்து உங்களைப் போன்ற, குறைவான எண்ணிக்கையிலான பத்திரிகையாளர்கள் கொடி தூக்கியிருப்பது வரவேற்கத்தக்கது. நீங்களே கூறியிருப்பதுபோல் 'சக்தி' நம் நாட்டைக் கைவிட்டு விட மாட்டாள்.
எஸ்.சுந்தரராஜன், மதுரை-3.

அட்டை வண்ணப்படம் : டி.சி.நாகேஷ்

சொர்ண வர்ஷா

தங்க நகை சேமிப்புத் திட்டம்





ரூ. 34 லட்சம் மதிப்புள்ள 734 பரிசுகள் (போனசுடன்)

மாதம் ரூ. 250 வீதம் 25 மாதங்கள்

- பம்பர் குலுக்கல் : அழகிய ஃபிளாட், மாருதி வேன் போன்ற பரிசுகள்
- 1, 7, 13, 19 -வது மாதங்களில் சிறப்புக் குலுக்கல் : TVS சுசுகி, சேதக் ஸ்கூட்டர், கைனடிக் பிரைட், கலர் டிவி, தங்க காசுகள் போன்ற பல பரிசுகள்.
- பிரதி மாத குலுக்கலில் கலர் டிவி, ஏர் கூலர், வாக்குவம் கிளீனர், தங்க காசுகள் போன்ற பரிசுகள் உண்டு.

திட்டத்தில் சேரும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் 'அமுதசுரபி' கோல்டு கார்டு மூலம் சிறப்புச் சலுகைகள் பெற்றிடலாம்.

குறிப்பிட்ட உறுப்பினர்களே !

ஜ்வல்லர் சோழா

15, வடக்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை - 4. போன் : 4940199

வழுக்கைக்கு யூனானி மூலிகைகள்

டாக்டர் ஹகீம் எஸ். அக்பர் கவுஸர்

மனிதன் எவ்வளவு ஆரோக்கிய மாகவும் அழகாகவும் இருக்கின்றானோ அவ்வளவு தன் முகத்தின் அழகையும் தலைமுடியினை கவர்ச்சிகரமாக வைப்பதிலும் அதிகமான கவனம் செலுத்துவான். ஆயினும் ஆண், பெண் இருபாலருக்கும் முடி கொட்டிவிடும். தலை வழுக்கை ஆகிவிடும் இவைகளை தடுக்க யூனானி மருத்துவம் உதவுகிறது.

காரணங்கள் :

உடலில் அதிக உஷ்ணம், வறட்சி ஏற்



படும் போது முடி கொட்டும். தண்ணீர் இல்லாத ஏரியில் பூமி வறண்டு போவதைப் போல் உடல் உஷ்ணத்தால் மண்டையில் வறட்சி ஏற்பட்டு முடி உதிரும். உஷ்ண நிலை கொண்டவர்களின் உடல் சூடாக இருக்கும். அதிகமான காய்ச்சல் உண்டாகும். அன்றாடம் வேலை செய்யும் போது களைப்பு உண்டாகும். அதிகமான தாகம், மேல் வயிற்றுப் பகுதியில் எரிச்சல், எரிதல், நாக்கில் கசப்பான ருசி உணருதல், சூடான காரமான உணவு ஒத்துக் கொள்ளாமை, குளிர்ந்த உணவுகள் எடுக்கும் போது உடல் சுகமாக இருப்பதாக உணருதல். கோடைக்காலத்தில் கஷ்டப்படுதல், இவர்களின் நாடித் துடிப்பு எப்போதும் பலவீனமாகவும் வேகமாகவும் இருக்கும். உடல் உஷ்ணத்தைத் தணிக்கவும் முடி உதிரலை தடுக்கவும் யூனானி மருத்துவத்தில் "ரோகன் ஆமிலா சாதா" என்னும் எண்ணெய் சிறந்த மருந்தாக அமைந்து இருக்கின்றது. இதை சுடும்பப் பெண்களே வீட்டிலும் தயாரித்துக் கொள்ளலாம். பால்சட் (ஜடாமாசி - Valerian) 50 கிராம், ஜர்நபாத் (காட்டு இஞ்சி - Zedoary) 50 கிராம், புதிய நெல்லிக்காய் 800 கிராம், மஞ்சள் அல்லது வெள்ளை கரிசலாங்கண்ணி புதிய கீரை 800 கிராம், மருதாணி புதிய இலைகள் 800 கிராம், நல்லெண்ணெய் 800 கிராம் அனைத்தையும் நாட்டு மருந்துக் கடைகளிலிருந்து வாங்கிக் கொள்ளுங்கள். மேற்கண்ட நான்கு பொருட்களையும் தனித் தனியாக இடித்து அதன் சாறை பிழிந்து கொள்ளுங்கள். சாறு கிடைக்கும் அளவில் அதில் அதே அளவில் தண்ணீரை சேர்த்துக் கொள்ளுங்கள். ஜடாமாசி, காட்டு இஞ்சிப் பவுடரை மேற்கண்ட மருந்துச் சாற்றில் தூவி இரவு முழுவதும் அப்படியே விட்டு விடவும். காலையில் அதை அடுப்பில் ஏற்றிச் சுட வைத்து பாதியாக கண்டியபிறகு வடிகட்டி வைத்துக் கொள்ளுங்கள். இப்போது நல்லெண்ணெயைக் கலந்து மீண்டும் அடுப்பில் ஏற்றி நன்றாகக் கொதித்து நீர் முழுவதும் கண்டிய பிறகு வடிகட்டி சூடு ஆறியபின் கண்ணாடி பாட்டிலில் அடைத்து வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த எண்ணெயைத் தினசரி தலைக்குப் பூசிவந்தால் முடி உதிரல் நின்று விடும். துண்டு துண்டாக உடைந்து விழும் முடிகள் நன்றாக வளரும். முடியின் கருப்புத் தன்மையைப் பாதுகாக்கும். இதை இந்திய அரசில் யூனானி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனமும், ஹம்தர்த் பல்கலைக் கழகமும் அங்கீகரித்து உள்ளது.

பொதுவாக யூனானி மருத்துவர்கள் மேற்கண்ட எண்ணெயைப் பூசுவதற்குக் கொடுத்து ஜவாரிஷ் ஆமிலா சாதா லேகியமத்தைக் காலையில் ஒரு டீஸ்பூன் கொடுப்பார்கள். இதை காலையில் ஒரு டீஸ்பூன் சாப்பிட்டால் முடி உதிரல் நின்றுவிடும். ஞாபக சக்தி அதிகரிக்கும். இதய படபடப்பு, பயம், பதட்டம் நீங்கும். உடல் உஷ்ணத்தைத் தணிக்கும். வயிற்றுக்கும் கல்

வீரலுக்கும் சக்தி தரும்.

மண்டை சளியால் உண்டாகும் தலை முடி பிரச்னைகள் :

மண்டை சளி, மூக்கு சளி, இவைகளால் காது, மூக்கு, கண், தொண்டை மட்டும் பாதிக் கப்படுவதில்லை. தலைமுடியும் பாதிக்கப்படு கின்றது என்று யூனானி மருத்துவம் விளக்கு கிறது. பொதுவாக மண்டைசளி நோய் கொண் டார்களுக்கு ஜீரண சக்தி குறைவு, குளிர்ந்த பானங்கள் குடிக்க விருப்பமில்லாமை, மூட்டு களில் தளர்ச்சி, அடிக்கடி காய்ச்சல், ஜலதோ ஷம் உண்டாகிக் குளிர்காலத்தில் மிகவும் கஷ் டப்படுவார்கள். சூடான உணவுகளை சாப்பிட விரும்புவார்கள். ஈரமான காற்று, உணவு ஒத்துக் கொள்ளாது. அதிகமாக தூக்கம் இருக்கும். இது ஈரமான உடலின் அறிகுறிகளாகும். இவர்களின் தலைமுடி அடர்த்தியாக இருக்கும். ஆனால், இளமையிலேயே நரைத்துவிடும். 10, 15 வயது பிள்ளைகளுக்கும் முடி நரைத்து வெள்ளையாகி விடும். இதை குணமாக்க இத்ரபீல் உஸ்துகுத் தூஸ் என்னும் லேகியத்தை தொடர்ந்து பயன் படுத்தலாம். இளமையில் நரைத்துவிடும் முடி கள் மீண்டும் கருப்பாகிவிடும். சளி தொல்லை களும் நீங்கும். காது, மூக்கு, தொண்டை பிரச் னைகளும் குணமாகும். இதை வீட்டிலேயே தயாரித்துக் கொள்ளலாம்.

சீமை மரிக்கொழுந்து 20 கிராம், ஆகாஷ வல்லி 10 கிராம், கடுக்காய் தோல் 10 கிராம், பிஞ்சு கடுக்காய் (தான்றிக்காய்) 10 கிராம், நிலா வரை 10 கிராம், ரோஜாப்பூ 10 கிராம் இவை களை ஒன்றாகச் சேர்த்து பவுடராக்கி வைத்துக் கொள்ள வேண்டும். 60 கிராம் நெய்யில் அந்த பவுடரை பிசைந்து கொள்ள வேண்டும். 20 கிராம் கிஷ்மிஷ் பழங்களை வாங்கி சிறிது தண் ணீரில் வேகவைத்து கையால் பிசைந்து கொட் டைகளை அப்புறப்படுத்திவிட வேண்டும். 200 கிராம் சர்க்கரைபாகு தயாரித்து மேற்கண்ட பொருட்களை சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். இதுதான் இத்ரபீல் உஸ்துகுத்தூஸ் யூனானி லேகியம். உலகப் புகழ் பெற்ற இந்த லேகியத்தை ஒரு வருடம் வரை தொடர்ந்து சாப்பிட்டால் நரைத்த முடி கருப்பாகிவிடும். நம் மருத்துவமனையில் மேற்கண்ட லேகியத்து டன் ரோகன் பைஜாமூர்க் என்னும் எண்ணெ யைத் தலைக்கு தேய்ப்பதற்குக் கொடுக்கின் றோம்.

வழுக்கை தலை :

ஆரோக்கியமான மண்டையில் நச்சுக் கிருமிகளால் நோய் ஏற்பட்டு முடி முழுவதும் கொட்டிவிடும். மண்டை பளபளப்பாக மாறி விடும். சிலருக்கு மண்டையிலும் மீசை தாடி யிலும் ஆங்காங்கு சொட்டை விழுந்து வட்ட வட்டமாக முடி உதிர்ந்து வழுக்கையாகி விடும். இவைகளை குணமாக்க இஸ்லாமிய மார்க்க நிறுவனர் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுர்மா கல்லை பயன்படுத்துமாறு சிபாரிசு செய்கிறார். யூனானி நாட்டு மருந்து கடைகளில் அரபு நாட்டில் விளையும் அவ்வந் வகைக் கொண்ட சுர்மா கல்லை விற்கின்றார் கள். இதை வாங்கி பவுடராக்கிக் கொள்ள வேண்டும். சம எடையில் பூண்டை சேர்த்து களிம்பாக அரைத்து ஒன்றாக சேர்த்து தினசரி இரவில் வழுக்கையில் இதைப் பூசி வந்தால் வியக்கத்தகும் அளவில் மீண்டும் முடி வளரும்.

தேவையில்லாத முடிகள் :


பெண்களுக்கு முகத்திலும், மார்பிலும் தேவையில்லாத முடி வளரும். இதைப் போக்க மன்மதக்கல் மற்றும் ஆட்டுப்பித்தப்பை பயன் தருகிறது. மார்க்கெட்டிலிருந்து ஆட்டின் பித் தப்பை வாங்கிக் கொள்ளலாம். அதை அறுத்து அதற்குள் மன்மதக்கல் என்னும் சங்கே ஜரா ஹத் கல்லை பித்தப்பைக்குள் அடைத்து களிம் பாக மாறிய பின் முடி கொண்ட இடத்தில் தினசரி தேய்த்து வந்தால் அவ்விடங்களில் மீண்டும் முடி பிறக்காது என்று யூனானி மருத்துவம் கூறுகிறது.

ஹேர் டை :

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பலவித

குழந்தைகள் ஸ்கூலில் இருந்து வரும்பொழுது அரிசி உப்புமா கொடுத்தால் ஆஊவென்பார்கள். உனக்கு அரிசி உப்புமாதான் பண்ணத் தெரியுமா? போர் அடிக்கிறது என்பார்கள். அரிசி உப்புமா கிளறும் பொழுது முக்கால் பதம் வெந்ததும் எடுத்து ஆறவைத்து, அதில் வெங்காயம் பொடிப் பொடியாக நறுக்கிப் போட்டு, வாணலியில் எண்ணெய் ஊற்றி அதில் இந்த உப்புமாவை வடை மாதிரி தட்டி மொறு மொறுவென்று எடுத்துக் கொடுங்கள். குழந் தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

- சித்ரா ஸ்ரீதரன்



மான இயற்கையான ஹேர்டைகளைப் பற்றி விளக்கியிருக்கின்றார்கள். அவைகளில் ஒன்று நீலச்செடியைக் கொண்டு தயாரிக்கப்படும் ஹேர்டை ஆகும். நீலச்செடிக்கு ஆங்கிலத்தில் இன்டிகோ ஃபேரா டிங்டோரியாவின் என்றும், தமிழில் அவுரி செடி என்றும் அழைப்பார்கள். இதன் இலையை இடித்துப் பிழிந்தால் நீல நிற சாயம் வரும். அதனால்தான் இதற்கு நீலச் செடி என்று பெயர்.

நீலச்செடியை வெட்டி இடித்து வெந்நீர் நிறைந்த தொட்டியில் மூழ்க வைப்பார்கள். நாள் முழுவதும் அது வெந்நீரில் ஊறிக் கொண்டே இருக்கும். அடுத்தநாள் செடியை வெளியே எடுத்து வீசி விடுவார்கள். அடியில் தேங்கும் நீரை இரண்டு வாரங்கள் வரை விட்டு விடுவார்கள். பிறகு நீரை எடுத்துவிட்டு அடியில் தேங்கும் மண்டியைப் பதப்படுத்திப் பயன் படுத்துவார்கள். இதுதான் நீலம். தமிழ்நாட்டிலும், வடநாடுகளிலும் நீலச்செடி பரவலாக விளைகிறது. நாட்டு மருந்துக் கடைகளில் இதன் இலைகள், விதைகள், வேர் அனைத்தும் உலர வைத்த நிலையில் விற்கப்படுகின்றன. மருதாணி 6 கிராம், நீலச்செடியின் இலைகள் 6 கிராம் இரண்டையும் அரைத்து தலைக்குப் பூசினால் நரைத்த முடி பளபளப்பாகும். கருஞ் சிவப்பாகவும் மாறிவிடும்.

கரிசலாங்கண்ணி ஹேர் டை:

முழுமையான கரிசலாங்கண்ணி செடியை நிழலில் உலர வைத்துப் பவுடராக்கி, சலித்து பீங்கான் பாத்திரத்தில் போட்டு வைத்துக் கொள்ளவும். கரிசிலாங்கண்ணி பச்சிலையை இடித்து அதன் சாற்றை பீங்கானில் உள்ள உலர்ந்த பவுடர் மீது 4 அங்குலம் உயரம் வரும் வரை ஊற்ற வேண்டும். இதை நிழலில் உலரவைத்த பின் மீண்டும் கரிசிலாங்கண்ணி யின் புதிய சாற்றை அதில் கலக்க வேண்டும். இப்படியே 21 முறை உலரவைத்துப் பவுராக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இந்தக் கரிசலாங் கண்ணி பவுடர் 100 கிராம், நெல்லிக்காய் பவுடர் 50 கிராம், கடுக்காய் பவுடர் 25 கிராம், தான்றிக்காய் பவுடர் 25 கிராம், மஞ்சள் கடுக் காய் பவுடர் 25 கிராம் அனைத்தையும் ரோகன் பாதாம் ஷீரின் (பாதாம் எண்ணெயில்) கலந்து கைகளால் நன்றாகப் பிசைந்து சம அளவிற்குச் சர்க்கரை கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். இம்மருந்தை 6 கிராம் அளவில் காலையில் பாலுடன் சாப்பிடலாம். ஒரு வாரத்திற்குப் பிறகு 9 கிராம் அளவிலும் 3-வது வாரத்தில் 12 கிராம் அளவிலும், 4-வது வாரம் முதல் காலை-மாலை இரண்டு வேளை, வேளைக்கு 12 கிராம் வீதம் அதிகரித்துக் கொண்டே போக வேண்டும். மொத்தம் 40 நாட்கள் தொடர்ந்து



நாம் சீயக்காய்ப் பொடி அரைக்கும் பொழுது, அதில் வெந்தயம், எலுமிச்சை தோல், பயறு, செம்பருத்திப் பூ (உலர்ந்தது) போட்டு அரைப்போம். அதனுடன் வேப்ப இலையை வெய்யிலில் நன்கு காயவைத்து சேர்த்து, அரைத்துக் குளித் தால் பேன், பொடுகு தொல்லை குறை கிறது.

— சித்ரா ஸ்ரீதரன்

சாப்பிட்டால் வெள்ளை முடி கருப்பாகும். இவ்வாறு உலக புகழ்பெற்ற அல் ஹக்கீம் யூனானி புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

முடி உதிரல் :

ஆலம் விழுதை 250 கிராம் அளவில் எடுத்து 3 நாட்கள் நிழலில் உலர்த்திப் பின் இடித்துத் தேங்காய் எண்ணெயில் 15 நாட்கள் ஊற வைக்க வேண்டும். அதன் பின் வடிகட்டிக் கண்ணாடி பாட்டிலில் அடைத்து வைத்துக் கொண்டு இரவில் தலைக்கு எண்ணெயாகப் பயன்படுத்தினால் முடி உதிரல் நின்றுவிடும்.

கடலை ஒரு கிலோ கிராம், நெல்லிக்காய் அரை கிலோ கிராம், சீயக்காய் 250 கிராம், வெந்தயம் 250 கிராம் அனைத்தையும் பவுடராக்கி வேளைக்கு 25 கிராம் அளவில் ஒரு டம்ளர் தண்ணீரில் ஊறவைத்து 15 நிமிடங் களுக்குப் பிறகு ஷாம்பூ பயன்படுத்துவதைப் போல் குளிக்கும் போது தலைக்குத் தேய்த்தால் முடி உதிரல் பிரச்னைகள் நீங்கும்.

தயாரிக்கப்பட்ட மருந்துகள் :

மேற்கண்ட மருந்துகளை தயாரிக்க முடி யாதவர்கள் யுனானி மருந்து கடைகளில் விற்கப்படும் ரோகன் பைஜாமூர்க், பேதஜீர் ஹேர் ஆயில், ஜராஹி ரோகன் ஆமிலா, ஜுல் மாலா எண்ணெய்களை வாங்கி தலைக்கு பூசலாம். மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி. டாக்டர் அக்பர் கவுஸர், தொ.பே.- 24095, 370, மசூதி வீதி, நியூடவுன், வாணியம்பாடி, வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம்.

குணுக்கு காப்பலமார் குணுக்கு

மாலையில் கணவரும், குழந்தைகளும் திரும்பி வரும்பொழுது கடக்கட சிற்றுண்டிகள் இருந்தால் அலுப்பெல்லாம் தீர்ந்துவிடும் அவர்களுக்கு! குழந்தைகள் வடை, போண்டா போன்றவற்றை விரும்பி உண்பர். பின்வரும் சிற்றுண்டிகள் சுவையானவை, வித்தியாசமானவை. செய்து உங்கள் குடும்பத்தினரை மகிழ்ச்சியில் ஆழ்த்துங்களேன்!

ஜவ்வரிசி குணுக்கு :

தேவையான பொருட்கள் :

ஜவ்வரிசி – 1 கப்,
ரவை – 2 கப்,
மைதா மாவு – ½ கப்,
புளித்த மோர் – 1 டம்ளர்,
பச்சை மிளகாய் – 3,
பொடியாக நறுக்கிய கருவேப்பிலை பச்சைக் கொத்துமல்லி – 2 டேபிள் ஸ்பூன்,
பொடியாக நறுக்கிய வெங்காயம் – 2 டேபிள் ஸ்பூன்,
இஞ்சி – 1 அங்குலத் துண்டு (தோல் சீவி பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும்.)
உப்பு – தேவையான அளவு.



செய்முறை :

முதலில் இரண்டு மணி நேரம் முன்னதாகவே புளித்த மோரில் ஜவ்வரிசியை ஊறப் போட்டு விட வேண்டும். நன்றாக ஊறிய பிறகு ரவை, மைதா இரண்டையும் கலக்க வேண்டும். பின்பு உப்பு சேர்த்து பொடியாக நறுக்கிய பச்சைமிளகாய், இஞ்சி, கருவேப்பிலை, கொத்துமல்லி, வெங்காயம் ஆகியவற்றைச் சேர்த்து சிறிது தளர இருக்கும்படி கலந்து கொள்ள வேண்டும். பின்பு எண்ணெயில் சிறு சிறு உருண்டைகளாகப் போட்டு எடுக்க வேண்டும். சுவையான ஜவ்வரிசிக் குணுக்கு தயார்!

புடலங்காய் குணுக்கு :

தேவையான பொருட்கள் :

கடலை மாவு - 2 கப்,
அரிசி மாவு - 1 கப்,
காரப் பொடி – 1½ டீஸ்பூன்,
உப்பு – தேவையான அளவு,
பெருங்காயப் பொடி – சிறிதளவு,
பொடியாக நறுக்கிய புடலங்காய் – 1 கப்,
கருவேப்பிலை, கொத்துமல்லி சிறிதளவு.

செய்முறை :

முதலில் அரிசி மாவு, கடலை மாவு இரண்டையும் ஒன்றாகக் கலக்கவும். உப்புப் பொடி, காரப் பொடி, பெருங்காயப் பொடி மூன்றையும் போட்டுத் தண்ணீர் விட்டுப் பிசைந்து கொள்ளவும். கொஞ்சம் கெட்டியாகப் பிசைந்து கொள்ளவும். புடலங்காய் சேர்த்தால் சிறிது நீர் விட்டுக் கொள்ளும். கருவேப்பிலை, கொத்துமல்லி, புடலங்காய் சேர்த்து பிசைந்து எண்ணெயில் நான் பஜ்ஜி போடுவது போல கிள்ளிக் கிள்ளிப் போட்டு பொன்னிறமானதும் எடுக்கவும்.

இட்லி குணுக்கு :

தேவையான பொருட்கள் :

இட்லி மாவு - 2 கப்,
மைதா மாவு – 1 கரண்டி,
உப்பு – (இட்லி மாவிலேயே உப்பிருப்பதால் வேண்டுமானால் சிறிதளவு போட்டுக் கொள்ளலாம்.)

பச்சை மிளகாய் - 2 (பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும்)
இஞ்சி - 1 அங்குலத் துண்டு (பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும்)
மிளகு - ½ டீஸ்பூன்,
தேங்காய் - பல், பல்லாகக் கீறியது 1 டேபிள் ஸ்பூன்,
கருவேப்பிலை கொத்துமல்லி - பொடிப் பொடியாக நறுக்கியது சிறிதளவு.

செய்முறை :

இட்லி மாவு, மைதா மாவு ஒன்றாகக் கலந்து பச்சை மிளகாய், இஞ்சி, மிளகு, தேங்காய், கருவேப்பிலை, கொத்துமல்லி சேர்த்து அப்பம் போல் எண்ணெயில் போட்டு எடுக்க வேண்டும்.

பருப்புக் குனுக்கு :

தேவையான பொருட்கள் :
துவரம் பருப்பு - ½ டம்ளர்,
கடலைப் பருப்பு - ¼ டம்ளர்,
உளுத்தம் பருப்பு - 1 பிடி (அ) 1 கரண்டி,
பச்சரிசி - 1 டம்ளர்,
உப்பு - தேவையான அளவு,
வர மிளகாய் - 4,
பச்சை மிளகாய் - 2,
பெருங்காயம் - 1 சிறிய கட்டி,
துருவிய தேங்காய் - ½ கப்,
கருவேப்பிலை கொத்துமல்லி சிறிதளவு.

செய்முறை :

பச்சரிசி, பருப்புகளை தண்ணீரில் 1 மணி நேரம் ஊறவைத்து, வரமிளகாய், உப்பு, பெருங்காயம் சேர்த்து மிக்ஸியில் நறநறவென்று அரைக்க வேண்டும். கெட்டியாக அரைக்க வேண்டும். பிறகு துருவிய தேங்காய், கருவேப்பிலை கொத்துமல்லி சேர்த்து எண்ணெயில் சிறு சிறு உருண்டைகளாகப் போட்டு பொன்னிறமானதும் எடுக்க வேண்டும்.

— ஜெயந்தி ஜி. சுந்தர்

ஆஹா, இவரல்லவோ கணவர்!

ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் எங்களுடன் வேலை பார்க்கும் ஒருவர் அவருடைய குடும்ப நடைமுறை பற்றிச் சொன்னார். அவருடைய வார்த்தைகள் எங்கள் அனைவருக்குமே ஒரு பெருமையையும், புத்துணர்ச்சியையும் ஊட்டின. இப்படி ஒரு பெண்ணை போற்றும் மனிதருடன் வேலை செய்கிறோமே என்று.

"மேடம், என்னுடைய மனைவியும் வொர்க்கிங் வுமன். அவரும் (இப்படி மரியாதையோடுதான் விளித்தார்) 2 பஸ் மாறி வேலைக்குப் போகணும். எங்க 2 பசங்களையும் பள்ளிக்குக் காலையில் அரக்க பறக்க அனுப்பணும். வேலை முடித்து வீட்டுக்கு வர இரவு 7 மணி ஆகிவிடுகிறது. அதனால் நாங்க வேலையைப் பங்கிட்டுக் கொண்டோம்.

காலை, மதியம் சமையல் அவரோடது. இரவு சமையல் என்னோடது. நாங்க இரண்டு பேரும் சேர்ந்து காலை, மாலை இருவேளையும் செய்யலாம்தான். ஆனா நான் காலையில் லேட்டாதான் விழிப்பேன். அவரோ அதிகாலையில் எழுந்திடுவார். நான் இரவு மிகவும் லேட்டாக படுக்கப் போவேன். அவரோ ரொம்ப சீக்கிரம் தூங்கப் போயிடுவார். அதனால் நாங்க பிளான் பண்ணி வேலையைப் பிரிச்சுக்கிட்டோம்.

சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வீட்டிலேயே நான் சமைத்து விடுவேன். மத்த நாள்ல மெஸ்ஸில் (அ) ஓட்டலில் குழம்பு, சட்னி, சில இட்லிகள் வாங்கிட்டு போயிடுவேன். வீட்டில் தோசை ஊற்றி இந்த குழம்பு, சட்னி வகையைச் சரிபண்ணிடுவோம். சில சமயம் பூரி, சப்பாத்தி இப்படி வகை வகையா வாங்கிடறேன். "என்னங்க மேடம்! காசுக்குக் கேடு" என்கிறீர்களா? "சுகமாக வாழத் தானே இருவர் சம்பாத்தியமும். இதில் ஒருவேளை சாப்பாட்டுக் கணக்குப் பார்த்தால் வாழ்க்கையில் பிணக்கு வந்திடுதே."

எப்படி எப்படியெல்லாமோ பிளான் போட்டு இந்தத் திட்டம் ரொம்பப் பொருந்திடுச்சு. இரவிலே சமையல் செஞ்ச பாத்திரம் கழுவறது, அடுப்படி சுத்தம் செய்வது இதெல்லாம் இல்லை. மாலை முழுவதும் ப்ரீதான். குழந்தைகளுடன் நன்கு உரையாடுகிறோம். மனைவியுடன் பேச நிறைய நேரம் கிடைக்கிறது."

கற்பனை பண்ணிப் பார்த்தேன். அவருடைய மனைவி அரக்க பறக்க ஓடி வராமல் நிதானமாக வந்து முகம் கழுவி, காப்பி சாப்பிட்டு விட்டு டி.வி. பார்க்க, டின்னர் டைமிற்கு பார்சலைப் பிரிக்க நிம்மதியாக நால்வரும் சாப்பிட்டு விட்டு பார்சலைத் தூக்கிப் போட்டு விட்டு டிபன் பாக்ஸை மட்டும் கழுவி விட்டு அவர் மனைவி ஜாலியாக படுக்கைக்குப் போக, ஆஹா! ஆஹா! இதுவல்லவோ வசந்த வாழ்க்கை!

– நளினி ஜெயபால்.



வாழ்வை வளமாக்குமா அதிர்ஷ்டக் கல்?

வாழ்வை வளமாக்கும் அதிர்ஷ்டக் கல்! போட்டியில் பரிசு பெற்ற இக்கட்டுரையாளர்களுக்கு ரூ.500/- மதிப்புள்ள வண்ண முத்துமாலை செட்டினைப் பரிசாக அளிப்பவர் சென்னை தி.நகர் வடக்கு உஸ்மான் ரோட்டில் ஏ.ஆர்.ஆர்.காம்ப்ளெக்ஸ் எதிரில் இருக்கும் ஜெய்ப்பூர் ஜெம்ஸ் இன் உரிமையாளர் ராஜேந்திர குமார் எம்.மேத்தா.

நம்பிக்கையே வாழ்க்கை

நம் முன்னோர்கள் அதிர்ஷ்டக் கற்களில் நம்பிக்கை வைத்திருந்தனர். அவர்கள் கழுத்தணிகளில், மோதிரங்களில் பதித்து அணிந்தனர். இக்காலத்தில் எதற்கும் அறிவியல் ரீதியான கண்ணோட்டம் அவசியமாகின்றது. வினவிக்கு டைமண்ட், மார்ஸுக்கு பவளம். இது போன்ற கிரகம், ராசிக்கு ஏற்றவாறு நவரத்தின கற்களை உபயோகித்தால் மருத்துவ ரீதியாக பலன் உண்டு. இதற்கு 'ஜெம் தெரபி' என்று பெயர். ஜெம் தெரபி நம்பிக்கையும் வளர்ந்து வருகின்றது.

அதிர்ஷ்டம் யாரைத் தேடி வரும்? 'முயற்சியுடையவர்கள் ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்றார் வள்ளுவர். 'உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே' என்றார் திருமூலர். ஆரோக்கியமான உடல்நிலை முயற்சிக்கு மூலதனம். அத்தகு உடல் ஆரோக்கியத்தை இந்தக் கற்கள் தருவதாக மருத்துவ முறையொன்று கூறுகின்றது. நவரத்தின கற்களை மருத்துவரீதியாகப் பக்குவப்படுத்தி செரிவூட்டி உட்கொண்டால் நோய்கள் குணமாகும் என்று ஹோமியோபதி கூறுகின்றது. இவ்வகையில் ஆரோக்கிய வாழ்வுடன் அதிர்ஷ்டத்தை அழைக்க முடியும்.

மற்றொன்று, தோலில் படும் வண்ணம் இக்கற்களை அணிவதன் மூலம் அந்தந்த கற்களுக்கான நற்பலனை பெற முடியும். கிரகங்களும், வளிமண்டலமும் சூரியக் கதிரால் பலனடைகின்றன. மண்ணில் தோன்றிய வண்ணக் கற்களும் ஆதவன் ஒளியால் பயனடைகிறது. அப்பலன் அணி பவரையும்



சேரும். மனித உடலின் செல்களில் உள்ள R.N.A, D.N.A மூலக்கூறுகளை இக் கற்களிலிருந்து புறப்படும் ஒளிக்கதிர்கள் பாதித்து நோய்களை குறைப்படுத்தும்.

நீலக் கற்கள் தலைவலி போன்றவற்றையும், வைரம் தோல் வியாதிகளையும், புஷ்பராகம் ஜலதோஷம் சம்பந்தமான சுரங்களையும், மரகதம் ஜீரணத் தொல்லைகளையும், பவளம் சுரம் சம்பந்தப்பட்டவற்றையும், முத்து சிறுநீரக வியாதிகளையும், மாணிக்கம் ரத்த சம்பந்தமான வியாதிகளையும் போக்கும் என்பது ஹோமியோபதி மருத்துவ நம்பிக்கை.

நவரத்தின கற்களில் விலை அதிகமானதும் உண்டு; குறைந்ததையும் உண்டு. ஜப்பானில் செயற்கை முத்து தற்போது வழக்கத்தில் உள்ளது. மற்ற வண்ணங்களில் செயற்கை கற்கள் பெருகிவிட்டன. நகைக் கடைகளில், பிறந்த தேதி, பலன், ராசி, ஜாதகம் இவற்றையெல்லாம் பார்த்து கற்களை தேர்வு செய்து அணியும் அளவு இந்தக் கற்களின் மேல் நம்பிக்கை அளவு கடந்து விட்டது. ஆங்கில மாதங்களை அடிப்படையாக வைத்தும் அதிர்ஷ்டக் கற்கள் அணியும் வழக்கம் பெருகி விட்டது. உதாரணமாக ஜனவரிக்கு- கார்னட், மார்ச்-அக்வா மெரைன்; ஆகஸ்ட்-காட்ஸ்ஐ; செப்டம்பர்- சபையர்; இப்படியாக ஒவ்வொரு மாதத்திற்கு ஏற்றவாறு அணிந்து அதிர்ஷ்டத்தை வாசல் தேடி வரச் செய்யலாமாம். ராகு தோஷம் உள்ளவர்கள் கோமேதகம் அணிவது நெடுங்கால நம்பிக்கை.

இத்தகைய விஷயங்களுக்கிடையே விவேகானந்தரின் வார்த்தையொன்று மனதில் அலைமோதுகின்றது. ''தன்னம்பிக்கை கொண்டவரே ஆத்திகர்''. தன்னம்பிக்கைக்கு உடல் நலம், மனோதிடம் அவசியம். அவற்றை அதிர்ஷ்டக் கற்கள் தருமானால், கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டக் கூடும். நம்புவோம், அதிர்ஷ்டக் கற்கள் வாழ்வை வளமாக்கும் என்று. ஆனால் அதைவிட அதிகமாக, விடாமுயற்சி, தன்னம்பிக்கையும், தளராத உழைப்பும் சேர்ந்து வாழ்வை வளமாக்கும் என்பதிலும் ஆழ்ந்த நம்பிக்கை வைப்போம்.

-ஜெயசரஸ், புதுவை -4



எல்லாம் தலைவிதிபடியே நடக்கும்!

நமது இந்தியாவிலும், சில மேலை நாட்டவர்களாலும் தொன்று தொட்டு "கைரேகை பார்த்தல்", "குறி" சொல்லுதல், போன்ற சடங்கு, சம்பிரதாயங்கள் வம்சா வழியாக நம்பப்பட்டும், கடைபிடிக்கப் பட்டும் வருகிறது.

ஒருசாரார் இது போன்ற பழக்க, வழக்கங்களில் ஆழ்ந்த நம்பிக்கையும், பற்றும் கொண்டுள்ளார்கள். ஒரு சாரார் இதை மூடப் பழக்கம் என்று கூறி புறக்கணிக்கிறார்கள்.

எத்தனையோ கோடி மக்கள் திருமணம் போன்ற சுப காரியங்கள் செய்ய ஜாதகம், தோஷம் பார்த்துத் திருமணம் செய்கின்றார்கள். ஆனால் ஒரு சிலரது வாழ்வில் திருமணம் முடித்த அடுத்த கணமே மரணமோ, விபத்தோ ஏற்பட்டு உயிருக்கோ, அல்லது உடலுக்கோ ஆபத்து நேரிடுகிறது. அது ஏன் நேரிட்டது? பொருத்தம் பார்த்து, "வையத்தில் வாழ்வாங்கு வாழ்வார்கள்" என்று நம்பித்தானே பெற்றோரும் உற்றாரும் திருமணத்தை நடத்தினார்கள்.

"அவனின்றி ஓரணுவும் அசையாது" என்பது பழமொழி. இறைவனது சித்தத்தை ஒருவராலும் மாற்ற முடியாது. ஒருவன் விபத்தில் இறக்க வேண்டும் என்றோ, உறுப்புக்களை இழக்க வேண்டும் என்றோ இறைவனது சித்தம் இருந்தால் அது எப்படியும் நிறைவேறிவிடும். அதை மனிதர்களோ, கற்களோ மாற்ற முடியாது.

"நான் ஜூன் ஆறாம் தேதி" பிறந்தவன். என் ராசி கடகராசி. என் ராசிக்கு "முத்து" சிறந்தது. இதை அணிந்தால் நினைத்தது நடக்கும் என்று எனக்குத் தெரிந்த ஒரு ஜோசியர் என்னிடம் கூறினார். சுப-காரியம் ஒன்று உன் வீட்டில் நடக்கும் என்று கூறினார். எனவே வாங்கி அணிந்தேன்.

துரதிர்ஷ்டம்தான் முதலில் வந்தது. என் உடல் நிலை பாதிக்கப்பட்டதுடன், எனது சகோதரனுக்கு விபத்தும், என் தந்தையாருக்கு திடீர் மரணமும் நேரிட்டது.

சிறிது நாட்கள் கழித்து அதே ஜோசியரை சந்திக்க நேரிட்டது. அவரிடம் நடந்ததைக்

கூறினேன். "எல்லாம் அவன் செயல், அவன் வகுத்ததை யாரால் மாற்ற முடியும்" என்று கூறி நழுவி விட்டார்.

அதிருஷ்டக்கல்லை தயாரித்து விற்கும் ஜோசியராகட்டும், கைரேகை நிபுணர் ஆகட்டும் அல்லது பிரசித்தி பெற்ற நகை வியாபாரி ஆகட்டும். "இறைவன் வகுத்த பாதையை யாராலும் மாற்ற முடியாது" என்பதை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்.

அதிர்ஷ்டக்கற்கள் வாழ்வை வளமாக்க முடியாது. இறைவன் அருளும், ஆசியும் தவிர வேறொன்றும் வாழ்வை மாற்ற முடியாது. அப்படி மாற்ற இயலுமானால் ஒரு வருக்கும் ஒரு கெடுதியும் வராதே! இது சாத்திய மில்லையே!

-ர.சாந்தி சத்யா, அரக்கோணம்-1.

வாழ்விற்கு ஒளி தந்த வைரக்கல்!

வாழ்வை வளமாக்குமா அதிர்ஷ்டக்கல் என்றால், ஏன் ஆக்காது கட்டாயமாக ஆக்கும் என்பதுதான் என் பதில். ஜாதகம் என்றாலே நம்பிக்கையில்லாதவங்க நாங்க. அப்படி இருந்த நாங்கள் இப்பொழுது எவ்வளவு நம் பிக்கையோடு இதை எழுதுகிறேன் என்றால் பாருங்கள்.

என் கணவர் ஒரிஸ்ஸா டெக்ஸ்டைல் வீவிங் மாஸ்டராக வேலை செய்தார். அங்கு எப்பொழுதும் தொழிலாளர் பிரச்னை. எங் களுக்கு உடல்நலப் பிரச்னை, மொழிப் பிரச்னை எல்லாம் ஒன்று சேர வேலையை விட்டு விட்டு வந்து விட்டோம். வருடம் ஒன்றாகியும் நல்ல வேலை அமையவில்லை. பணத்துக்கோ, வசதிக்கோ ஒரு குறையும் இல்லை. ஆனால் என் கணவர் எப்பொழுதும் கறுகறுப்பாக இருப்பவர் (வேலையில்) அதற்கு மாறாக யாரிடமும் பழகுவதில்லை. விநாயகர் கோவிலுக்கு நான்தோறும் சென்று வருவார். எனக்கும், என் மாமியாருக்கும் மிகுந்த வருத்தமாக இருக்கும். ஒரு நாள் நாங்கள் என் கணவருடைய ஜாதகத்தை எடுத்துக் கொண்டு பெரிய ஜோதிடரிடத்தில் போனோம். அவர் கிரகங்களைப் பற்றி எல்லாம் என்னென் னமோ சொன்னார். இவருடைய பிறந்த நாளுக்கு ஏற்ற கல் வைரம். அதை மோதிர மாகப் போடுங்கள். அவருடைய பிரச்சனை எல்லாம் பறந்துப் போகும் என்றும், கணபதி ஹோமம் செய்யுங்கள் என்றும் கூறினார்.

என் மாமியார் எங்க குடும்பத்துக்கு வைரமே ஆகாது. அதனால் நாங்கள் யாரும் போட்டதில்லை என்றார். அதற்கு அவர்

வொயிட் கான்வாஸ் ஷூக்களுக்கு, வொயிட் பாலீஷ் இல்லையென்றால் கவலை வேண்டாம். ஷூவை, கழுவிய பிறகு, ஈரமான ஷூவின் மீது வெள்ளை சாக்பீஸை தேய்த்து விடுங்கள். காய்ந்த பிறகு பளிச்சென்று இருக்கும்.

-கீதாஞ்சலி

சொன்னார், "நீங்க உங்க மகனுக்கு வைரத்தில் மோதிரம் போடுங்கள். பிறகு பாருங்கள் அவர் வாழ்க்கையின் சக்கரம் எப்படி மாறுதுன்னு. அது போட்ட 90 நாட்களில் அவருக்குப் பெரிய வேலை, உயர்வான வேலை வரும். அதிலே மேல் நாட்டுக்கும் போவார். இவர் ஜாதகத்தில் இருக்கு" என்றார். நானும் என் மாமியாரும் மன சஞ்சலத்தோடு வீட்டுக்கு வந்து சொன்னால் என் கணவர் பணம்தான் விரயமாகும் என்றார்.

என் மாமனார், "நம்பிக்கை இல்லாதப்போ ஜோதிடரிடத்தில் போகக் கூடாது. போன பிறகு அவங்க சொன்னதுதான் செய்து பார்ப்போமே அதனால் நல்லது நடந்தால் சரி"ன்னார். எனக்கோ ஆகாத வைரத்தைப் போட்டுக் கொண்டு, இவருக்கு ஒன்றும் ஆயிடக்கூடாதே என்ற கவலை, பயம்.

மறுநாளே கடைக்குச் சென்று வைர மோதிரம் வாங்கி கடவுள் படத்தின் முன் வைத்து சாமி மேல் பாரம் போட்டு என் கண வரின் கையில் போட்டாகி விட்டது. 50 நாட்கள் ஆச்சு. திடீரென்று ஒருநாள் மாலை என் உயிர்த்தோழி ஜெயா, என் கணவருக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்பு இருப்பதாக (அவர் கணவர் இந்தோனேஷியாவில் இன்ஜினியராக வேலை பார்க்கிறார்) வந்து கூறினாள். எனக்கு ஆனந்தத்தால் கண்ணீர் தான் வந்ததே ஒழிய வார்த்தைகளே வர வில்லை. என் தோழியை அப்படியே தழுவிக் கொண்டேன். 10 நாட்களில் எல்லாம் தயாராகி அவர் இந்தோனேஷியாவுக்கு வேலைக்குப் பறந்து விட்டார். ஜோதிடர் சொன்ன 60 நாட்களுக்குள் எங்களின் மனக் கவலையை நீக்கி எங்கள் வாழ்க்கைக்கு ஒளி தந்த இந்த வைரக்கல்லை எங்களால் எப்படி மறக்க முடியும்?

டி.சுஜாதா தாமோதரன்,
மதுரை -3

இதோ,


உயர்தர வாழ்வு

அமைய ஓர் அரிய வாய்ப்பு.



24 ஏக்கர் பரப்பளவிலே!

பொன்னை விரும்பும் பூமியிலே, ஈஸ்வர் பண்ணை வீட்டை ஏன் பலரும் விரும்புகின்றணர்?



மதுரைக்கு மிக அருகில் சுமார் 5000 ஏக்கரில் ஈஸ்வர் ஓர் எழில் கொஞ்சும் சோலையை உருவாக்கி வருகிறது.

இந்த சோலையில் 10,000 ச.அடி நிலமும், வளம் பெருக்கும் மா, பலா, தேக்கு மற்றும் அதிக லாபம் ஈட்டும் காய்கறிகளும் பழங்களும் பயிரிட்டு, 20 ஆண்டுகளுக்கு பராமரிக்கப்படும்.

ஈஸ்வரின் நிர்வாக திறன், வேளாண் நிபுணர்களின் உதவி, மிக உயரிய வேளாண் தொழில் நுட்பம் ஆகியவை இந்த சோலையை காப்பியங்களில் காணும் உதாரணங்களுக்கு ஈடாக அமைக்கும்.

இங்கே குயில்கள் பாடும், இன்ப இளந்தென்றல் உங்களை காதலோடு அரவணைக்கும், பல பசுமையான மரங்கள் கவிதை பாட வைக்கும், இத்தகைய சோலையில் ஒரு பண்ணை வீடு அமைத்து உங்கள் மகிழ்ச்சியையும், முதலீட்டையும் பெருக்குங்கள்.

ஈஸ்வர்-இன் பொன் விளையும் திட்டங்கள்:

உங்கள் முதலீடு	நீங்கள் பெறுவது	20 ஆண்டுகளில் மதிப்பு
ரூ.25,000/- அல்லது ரூ.250/- வீதம் 100 சுலப தவணைகள்	10,000 ச.அடி நிலம்	ரூ.10 லட்சம்
	24 தேக்கு மரங்கள்	ரூ.24 லட்சம்
	2 ஒட்டு மா	ரூ.50,000
	2 வீரிய தென்னை காய்கறி தோட்டம்	ரூ.50,000

20 ஆண்டுகளில் ரூ.35 லட்சம் மதிப்பு சொத்துக்கள்

• 10,000 ச.அடி நிலம் உடன் உங்கள் பெயரில் பதிவு செய்யப்படுகிறது • அம்பு தொழில் நுட்ப வித்தை. • சிறந்த நீர் வளம், மண் வளம், பயிர் வளம். • சில ஆண்டுகளில் உங்கள் நிலம் மதுரை நகரின் மையமாகி விடும். • பண்ணை வீடுகளும் கட்டிக்கொள்ளலாம்.

ரூ.100/-வீதம் 15 மாதங்கள் செலுத்தி லட்சம் பெறும் திட்டங்களும் உள்ளன.



ESWAR GROW-TEK LTD AGRI

287, West Masi Street, Madurai - 625 001.
Ph: 540843, 540305. Fax: 0452 - 540305. Telex: 0445 - 478 AGRI-IN.

பசுமை வளம் நிறைந்த இந்தியாவை உருவாக்குவோம்.

எங்கள் கம்பெனி (ஈஸ்வர்), சென்னையை சார்ந்த ஈஸ்வரி குரூப் ஆப் கம்பெனிகளுக்கு எந்த விதத்திலும் தொடர்பு இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறோம்.

FIN-HANS R K SWAMY/BBDO

இந்த மாதம் எப்படி? செப்.96



மேஷ ராசி:

அசுவினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம்.

மாதத்தின் பிற்பகுதியில் ஏதோ ஒரு விதத்தில் தனலாபம் உண்டு. அது பதவி உயர்வினாலும் வரலாம். அல்லது விரும்பிய இடத்திற்கு மாற்றம் ஏற்பட்டு அதன் காரணமாகவும் ஏற்படலாம். உங்கள் லக்னத்தில் சூரியன் இருந்தால், மாதத்தின் முற்பகுதியில் கண் சிறிதளவு பாதிக்கப்படும். இத்துடன் முதலிரண்டு வாரங்களில் சொற்களை அளந்து சொல்லுங்கள். புதனால் கோர்ட் விவகாரத்தில், போட்டி, வியாபாரத்தில், மற்றும் விளையாட்டுத்துறையில் வெற்றி கிடைக்கும். குழந்தைகளால் மனமகிழ்ச்சியும் பெருமையும் ஏற்படும். விழா ஒன்றில் வஸ்திர லாபமும் உண்டு. அது திருமணம் போன்ற விழாவாகக் கூட இருக்கலாம். அல்லது இலக்கிய, கலை மேடைகளிலிருந்தும் கூட கிடைக்கலாம். குடும்ப சுகத்திற்குக் குருவும், சுக்கிரனும் உதவுகிறார்கள். புதுமணத் தம்பதிகளுக்குப் புத்திரப்ராப்தி ஏற்படும். சனியின் சஞ்சாரமும், கேதுவின் நிலையும் சிற்சில நஷ்டங்களைத் தரலாம். கண், வயிறு இவை கூட பாதிக்கப்படலாம். ஆயினும் ஆறில் உள்ள ராகுவின் அருள் அனைத்துத் துயரங்களையும் நீக்கி வெற்றியைத் தரும் நிலையில் உள்ளது. அத்துடன் உங்களுக்குக் குரு தசை சுக்கிரன் அல்லது புதன் திசை நடக்குமானால் அதுவும் அவர்கள் ஆட்சி உச்சம் பெற்ற நிலையில் இருந்தார்களேயானால், இந்த மாதம் உங்களுக்கு சூப்பர் மாதமாக இருக்கும். அரசியல்வாதிகளுக்கும், அரசுத் துறையினர்க்கும், சற்று கெடுபிடியான மாதம். எனினும் ஆதாயம் இருக்கும். தேர்தலில் நிற்பவர்கள் சண்டிஹோமம் செய்வது நல்லது. மற்றவர்கள் வீட்டிலேயே முருகனுக்குச் சிவப்பு மலர்களால் அர்ச்சனை செய்வது நல்லது. அல்லது மாலையாகக் கட்டிப் போடலாம்.



ரிஷப ராசி:

கிருத்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ஆம் பாதங்கள்.

மாதம் பூராவும் முருகனின் அருள் முன்னேற்றத்தைத் தரும் நிலையில் அமைந்துள்ளது. கலைஞர்களுக்கும்- குறிப்பாக இசை, நடிப்புத் துறையில் உள்ளவர்களுக்கும் உயர்ந்த நிலையைத் தரும். இது அவர்களுக்கு ஒரு வெளிநாட்டுப் பிரயாணத்தின் மூலமும் ஏற்படலாம். 5ல் உள்ள சுக்கிரன் அத்தகைய யோகத்தைத் தர இருக்கிறார். புதனால் குறைந்தது 40 நாட்களுக்கு நல்லதொரு நிலை உங்களுக்குக் கிடைக்கும். அதனால் தொழில் ரீதியாகவோ அல்லது நீங்கள் பெற்றுள்ள கல்வியின் வாயிலாகவோ ஒரு எதிர்பாராத திருப்புமுனை ஏற்பட்டு, உங்களுக்கு ஒரு பதவி உயர்வு அல்லது தனலாபம் தரும் வகையில் ஏதேனும் ஒரு வாய்ப்பு வந்து உங்கள் கதவைத் தட்டலாம். பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஆயினும் சூரியனின் சஞ்சாரம் சற்று உடலையும் உள்ளத்தையும் பாதிக்கலாம். உங்கள் ராசிக்கு யோககாரனாகிய சனி 11ல் கேதுவுடன் சம்பந்தப்பட்டிருந்தாலும், எட்டில் உள்ள குரு சில சிரமங்களைத் தரத்தான் செய்கிறார். அதனால் மனதில் ஒருவித விரக்தி, எவரிடத்திலும் நம்பிக்கையில்லாத நிலை இவைகளை ஏற்படுத்தலாம். நல்லதொரு புத்தகத்தை- அதுவும் குறிப்பாக இறை பக்தியை விளக்கும் புத்தகத்தைப் படியுங்கள். கேஸட்டுகள் மூலம் பக்திப் பாடல்களைக் கேளுங்கள். ஸ்ரீசுப்ரமணியருக்கு வீட்டிலேயே காலை நேரத்தில் நெய்விளக்கேற்றுங்கள். புது அறிமுகம் ஒன்று ஏற்பட்டு அதனால் பலவிதத்தில் எதிர் காலத்தில் நன்மை உண்டாகும்.



மிதுன ராசி:

மிருகசீரிஷம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்.

இராசி நாதன் சுகஸ்தானத்தில் குருவின்

பார்வை பெற்று மாதம் பூராவும் நல்ல நிலையில் இருப்பதுடன், மாதத்தின் முற்பகுதியில் இராஜயோகத்தையும் தர இருக்கிறார். குரு உங்கள் இராசியைப் பார்ப்பதால், மற்ற கிரகங்களின் சஞ்சாரம், சாதகமாக இல்லை என்றாலும் பாதகம் ஒன்றும் ஏற்பட்டு விடாது என தைரியமாக இருங்கள். பணப்பற்றாக்குறை, கடன் தொந்திரவு. அலுவலகத்தில் மேல்நிலையில் உள்ளவர்களது கெடுபிடி, திருடர்பயம் எனப் பல விதங்களிலும் சங்கடங்கள் வரக்கூடிய நிலை என்றாலும், இராசிநாதன் சூரியனின் வீட்டில் இருப்பதால் எதுவும் விபரீதமாக நடந்து விடாது. சுப விரயத்திற்கு வாய்ப்பு உள்ளது. அதே சமயம் நல்லதொரு சுப நிகழ்ச்சியும் நடந்தேறும். அலுவலகங்களில் நிதிப் பொறுப்பில் உள்ளவர்களும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களும் கவனத்துடன் பணியாற்ற வேண்டிய கால கட்டம். சுக்கிரனால் சுகமுண்டு- வீடு வாங்கும் யோகமும் உண்டு. பாம்புக் கிரகங்களும் மற்ற பாவக் கிரகங்களும் பலவீனமான மனதை உடையவர்களைத் தொல்லைக்கு ஆளாக்கலாம். நீச்சச் செவ்வாய் அத்தகைய கோழைத்தனத்திற்கு வழி வகுத்தாலும், குருவின் பார்வை இராசிக்கும், இலாபஸ்தானமான மேஷத்திற்கும் இருப்பதால், இலாபம் வரவில்லை என்றாலும் நஷ்டமேற்படாது. திருடு போனாலும் திரும்பக் கிடைத்து விடும். கவலைப்படாதீர்கள். கார்த்தவீரியார்ஜுன ஜபமும், விஷ்ணு ஸகஸ்ரநாமமும், கடனைத்தீர்க்கும் அங்காரகஸ்தோத்திரமும் படிப்பது நல்லது. படித்தால் பணம் கிடைத்து விடுமா எனக் கேட்க வேண்டாம். எதையும் சமாளிக்கத் தகுந்த வகையில் மனம் தளராத பக்குவமாவது கிடைக்குமே.



கடக ராசி:

புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.


சுக்கிரனும், இராகுவும் தான் உதவும் நிலையில் உள்ளனர். எனவே குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி இருக்கும். ராகுவினால் எந்தவித்த காரியத்தில் வெற்றி நிச்சயம். உங்களது இளைய சகோதரரால் எதிர்பாராத உதவி கிடைக்கும். எனவே, அவரை அணுகி உதவி கேட்பதால் பயனுண்டு. சுற்றம் பார்க்கில் குற்றம் இல்லை. கௌரவப் பிரச்னையாகக் கொள்ளாமல் உதவி பெறலாம். மற்ற கிரகங்கள் அத்தகைய சிக்கலான நிலையை உருவாக்கலாம். இளைய சகோதரர்கள் இல்லாதவர்கள் என்ன செய்வது? தம்மைவிட இளையவர்களை அணுகலாம். மூன்றாம் இடம் சகோதர ஸ்தானம் என்ற முறையில் மூத்த சகோதரர் இருந்தால் அவரையும் அணுகலாம். செவ்வாய் நீச்சம் பெற்றது ஒரு மைனஸ் பாயிண்ட் தான். எனவே, குரு, சனி முதலானவர்களுக்கு வீட்டிலிருந்து கொண்டே தோத்திரம் சொல்வது நல்லது. மாதத்தின் முற்பகுதியில் சூரியனும், பிற்பகுதியில் சூரியன், புதன் ஆகியவர்களின் பரிவர்த்தனையும் தொழில், உத்தியோக ரீதியில் பிரச்னைகளைத் தோற்றுவிக்காது. தசா புத்தி நன்கு அமைந்தவர்களுக்கு நன்மை கூடுதலாக அமையும். பாண்டிச்சேரி அன்னையை மனதார வேண்டுங்கள். அந்த மாதாவின் கருணை கடல் போன்றதல்லவா? அதைப் பெறுவதற்கான தக்க தருணம் வந்துள்ளது.



சிம்ம ராசி:

மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்.

அஷ்டமத்தில் உள்ள கிரகங்களும் 12ல் உள்ள அங்காரகனும், இரண்டில் உள்ள இராகுவும் உங்களைச் சற்று தொழில் ரீதியாகவோ, உடல் மற்றும் உள்ளம் ஆகியவை பாதிக்கும் வகையிலோ சஞ்சாரம் செய்தாலும் குருவின் அருள் ராசிக்கும், மாதத்தின் முற்பகுதியில் ஆட்சியில் உள்ள உங்கள் ராசிநாதனாகிய சூரியனுக்கும் கிடைப்பதால் எதையும் தாங்கும் இதயத்தை உடையவர்களாகக் காட்சி அளிப்பீர்கள். அரசு, அல்லது அரசியல்துறையில் உள்ளவர்களுக்குச் சற்று சோதனை மிகுந்த காலம்தான் என்றாலும், 12ல் உள்ள சுக்கிரன் உங்களுக்குக் குருவைப் போலவே உதவும் நிலையில் இருப்பதால் வழக்குகளில் வெற்றி உண்டு. வெளியூர்ப் பிரயாணமும் உண்டு. இந்தச் சமயத்தில் நீங்கள் சிம்மத்தைப் போன்று சிலிர்த்து நின்று



புதினா துவையல் செய்யும் போது சிறிது புளிக்கு பதில் ஒரு சிறிய தக்காளியை புதினாவுடன் சேர்த்து வதக்கி துவையல் செய்தால் மிகவும் சுவையாக இருக்கும்.

— மாதங்கி கண்ணன்

ஃப்ளாட்டில் வசிப்பவர்கள் சுவரிலோ, தரையிலோ, கார்(அ) ஸ்கூட்டரின் நம்பரை வெள்ளை நிற பெயிண்ட்டினால் எழுதி, அவரவர் வண்டிகளை நிறுத்தினால் பிரச்னைக்கு இடமே இல்லை!

– ஜெயா



எதையும் சமாளிப்பீர்கள். உங்கள் உறவினர் கூட உங்களையே குற்றம் சாட்டக் கூடிய நிலையை புதன் உருவாக்கலாம். உடல்நிலையும், மனநிலையும் சீராக இருக்க மிருத்யுஞ்ச ஜபஹோமம், தன்வந்திரி ஜபம் இதைச் செய்வது நல்லது. அத்துடன் வித்யாகாரகனாகிய புதனை ஏழை எளிய மாணவிகளுக்கு உதவுகின்ற டிரஸ்டுகளுக்கு நன்கொடை வழங்குவதன் மூலம் திருப்திபடுத்தலாம். வித்யாகாரகனாகிய புதனுக்கு வித்யாதானமே சிறந்த ஆராதனை ஆகும். மற்றபடி எத்துறையினர்க்கும், எந்த விதத்திலாவது ஒரு சோதனை ஏற்படலாம். அது கடன் சம்பந்தமாகவும் இருக்கலாம், அரசியல் ரீதியாகவும் ஏற்படலாம்.



கன்னி ராசி:

உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்.

மாதம் பூராவும் சுக்கிரனும், செவ்வாயும் உதவும்நிலை, எனவே, வீட்டினை வாங்கவும், வீடுகட்டவும் சுபநிகழ்ச்சிகள் நடக்கவும் வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரும். பயன்படுத்திக் கொள்ளுங்கள். தாம்பத்திய உறவிலும், சகோதரபாசத்திலும் குறைவிருக்காது. கடன் தரவும் செவ்வாய் உதவலாம். வேலைக்காகக் காத்திருப்பவர்களுக்கும், பதவி உயர்வு பெறுவதற்காகக் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கும் வெற்றி கிடைக்கும். எனினும் பாம்புக் கிரகங்களும், மற்றுமுள்ள பாவக் கிரகங்களும் உங்களைச் சற்று அலைக்கழிக்கத்தான் செய்யும். மேலே கண்ட வெற்றி வாய்ப்புப் பெறும் இனங்களில் கூட தடங்கல்கள், காலங்கடத்தல் போன்றவை உங்களுக்கு மன உளைச்சலைத்தரலாம். குரு 4ம் இடத்தில் ஜாதகத்தில் இருப்பவர்களுக்குக் கவலை தேவையில்லை. கஜகேசரி யோகம் எனும் நற்பலனைப் பெறுவீர்கள். கோட்சார ரீதியிலும் உத்திரம், ஹஸ்தம், சித்திரை நட்சத்திர நாட்களில் உங்களுக்கு நல்ல பலனே நடக்கும். மற்றபடி சனீஸ்வர ஆராதனை, புற்றுக்குப் பால் வார்த்தல், துர்க்கைக்கு அர்ச்சனை ஆகிய பரிகாரங்களைச் செய்யலாம். இராசிநாதன் புதன் என்பதால் ஏழை மாணவர்களுக்குக் கல்வி சம்பந்தமாக மாணவர்களுக்கு உதவும் அறக்கட்டளைகளுக்கு ஒரு கணிசமான தொகையை அனுப்பலாமே? பரிகாரத்திற்குப் பரிகாரம், உபகாரத்திற்கு உபகாரம். அனுப்பித்தான் பாருங்களேன்.



துலாம் ராசி:

சித்திரை 3, 4 ஆம் பாதங்கள். சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்.

புதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு. சுகமுண்டு. ஆதாயமும் உண்டு. கோர்ட் விவகாரம் ஒன்றில் வெற்றி உண்டு. ஆயினும் மாதத்தில் முதல் நான்கு வாரங்களிலும், சுக்கிரன் சில சிக்கல்களைத் தோற்றுவிப்பார். அத்துடன் நன்கு பழகும் பெண் அல்லது ஆண் உங்களுக்குக் கவலைகளை உண்டாக்கலாம். அது உங்கள் மதிப்பைக் கூட பாதிக்கும் வகையில் அமையலாம். இது இந்த இராசியைச் சேர்ந்த ஆண்களுக்குப் பெண்களாலும், பெண்களுக்கு ஆண்களாலும் ஏற்படக் கூடிய நிகழ்ச்சியாக அமையலாம். எனவே, ஒன்றாகப் பணிபுரியும் அலுவலர்களும், சேர்ந்து படிக்கும் மாணவ, மாணவியர்களும் சற்று எச்சரிக்கையாகப் பழகுவது நல்லது. வெறும் வாயை மெல்லுபவர்களுக்கு உங்கள் மூலம் சிவிங்கமோ, அவலோ கிடைக்கும்படியான தொரு வாய்ப்பைக் கொடுத்து விடாதீர்கள். பத்தாமிடத்தில் செவ்வாயும் அதுபோலவே வேண்டாத விவகாரங்களில் உங்களைத் தலையிடும்படி செய்து விடும் நிலையில் சஞ்சரிப்பதால் திருட்டு மூலம் பொருள் விரையமாகாமலும், சொற்களை அளந்து பேசுவதன் மூலமும், எச்சரிக்கையாக இருப்பது நல்லது. ராகுவும் உதவும் நிலையில் இல்லை. ஆயினும், 6ம் இடத்தில் உள்ள சனியும், கேதுவும் உங்களுக்குப் பிரச்னைகளை வெற்றியுடன் சமாளிக்கவும் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் உதவும்போது கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. எச்சரிக்கையும் தேவை, அதே சமயம் தயக்கமின்றி நமது செயல்களைச் செய்வதற்குரிய மனோபலமும் தேவையல்லவா? அதனால் தான் இரண்டையும் எழுத வேண்டியுள்ளது. மற்றபடி தேவகுருவும்


கூட தேவையற்ற பிரச்சனைகளை உங்களது அலுவலகங்களில், குறிப்பாக அரசாங்கத்தில் உயர் பதவியில் உள்ளவர் களுக்கு உண்டாக் கப் பார்க்கலாம். எனவே, குருவுக்கும், செவ் வாயுக்கும் சேர்ந்தே அர்ச் சனைகள் செய்ய லாம்.



விருச்சிக ராசி:

விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

செவ்வாய், சனி, கேது ஆகிய மூன்று கிரகங்களைத் தவிர, இதர கிரகங்கள் அனைத்துமே உங்களுக்கு உதவும் நிலை. உங்களது அபிலாஷைகள் நிறைவேறும் கால கட்டம். பிரிந்தவர் கூடலாம். புதிய தொரு வாழ்க்கையைத் தொடரலாம். கோர்ட்டு வழக்குகளில் வெற்றி கிடைக்கும். கணவன் மனைவியிடையே ஏற்படும் பிரிவு உணர்வினைப் பேசித் தீர்த்துக் கொண்டு மீண் டும் நல்லதொரு வாழ்க்கை யைத் தொடர லாம். காத்திருப்பவர்களுக்கு வேலையோ, நடிப்புத்துறையினர்க்கு புது ஒப்பந்தமோ, பதவியில் உள்ளவர்களுக்கு எதிர்பார்க்கும் பதவி உயர்வோ, நோயாளிகளுக்கு நோய் தீரும் வாய்ப்போ கிடைக்கலாம். தனுசு லக் கினக்காரர்களுக்கும், இந்த ராசியில் பிறந்து செவ்வாய் ஆட்சி பெற்று, அவர்களது தசா புக்தி நடப்பவர்களுக்கும் நன்மை கூடுதலாக இருக்கும். சுப நிகழ்ச்சிக்கு நல்லதொரு வாய்ப்பு- வீட்டில் விருந்தினர்களுக்குக் குறைவிருக்காது. ஒரு சிலருக்குப் பொருளா தாரத் தட்டுப்பாடு உண்டாகலாம். சனீஸ்வர னையும், கேதுவையும் ஆராதியுங்கள். எதிர் பாராத தனலாபமும், எத்தவித்த காரியத்தில் வெற்றியும் கட்டாயம் உண்டு. இது எத்துறையி னர்க்கும் பொருந்தும். டிசம்பருக்குள் நீங்கள் எதிர்பார்க்கும் சுப நிகழ்ச்சி கட்டாயம் கைகூடி வரும்.



தனுசு ராசி:

மூலம், பூராடம் உத்திரா டம் 1ஆம் பாதம்.

குடும்ப வாழ்க்கையில் பிரச் சினைகள் ஏற்படக் காரணமில்லை. எல்லாம் நல்லபடி நடக்கும். அந்த அளவிற்கு சுக்கிர னும், மாதப் பிற்பகுதியில் சூரியனும், அருள் புரிகிறார்கள். ஆனால் அஷ்டமத்தில் உள்ள அங்காரகன் அவ்வளவாக உதவும் நிலையில் இல்லை. அதற்கு மாறாக உடல் நிலையைச் சற்று பாதிக்கச் செய்யலாம். இரத்த அழுத்த சம்பந்தமான பிரச்னைகளை உடையவர் களும், சர்க்கரை சம்பந்தமான உடல் உபத் திரவத்திற்கு ஆளாகியுள்ளவர்களும் கூடிய மட்டும் உணவுக்கட்டுப்பாட்டைக் கவன முடன் கடைபிடிப்பது நல்லது. அத்துடன் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட மருந்து, மற்றும் ஆகாரவகைகளை சாப்பிட வேண்டும். வருமுன் காப்பது என்ற கொள்கைப்படி நடப் பதே சிறந்த பரிகாரம். அலுவலகப் பணியா ளர்கள், நிதிப் பொறுப்பில் உள்ளவர்கள், வர வேற்புக் கூடத்தில் பணிபுரியும் இளம் பெண் கள் ஆகியவர்கள் அவர்களை அறியாமலேயே கவனக்குறைவுக்கும், உணர்ச்சிக்கும் ஆளாகி, ஏதேனும் ஒரு சிக்கலில் மாட்டிக் கொள்ளக் கூடிய அல்லது வேண்டாதவர்களின் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய நிலை தெரிகிறது. ஆகவே மேற்கூறப்பட்ட வர்கள் கவனமுடன் செயலாற்றுங்கள். எனினும் எது எப்படி இருப்பினும் இராசி நாதன் ஆட்சியில் இருப்பதாலும், சூரியன் மாதப்பிற்பகுதியில் 10ம் இடத்திற்கு வருவ தாலும், புதனுக்குக் குருபார்வை இருப்பதா லும் எப்பிரச்னையையும் சமாளிக்கும் ஆற்ற லைப் பெறுவீர்கள். அம்பலத்தாடு பவனை யும், ஆலிலை மேல் துயின்றவனையும் ஆழ் மனத்தில் நிறுத்தித் தியானியுங்கள். அனைத் துத் துன்பங்களும் பஞ்சாய்ப் பறந்து, நெஞ் சத்தில் நிம்மதி ஏற்படும்.



மகர ராசி:

உத்திராடம் 2,3,4ஆம் பாதங்கள், திருவோணம் அவிட்டம் 1,2ஆம் பாதங்கள்.

சனியும், கேதுவும் கெடுக்கும் நிலை. ஆனால் அவற்றைத் தடுக்கும் நிலையில் செவ்வாயும், சுக்கிரனும், ராகுவும், சூரியனும் சஞ்சரிக்கிறார்கள். எனினும் எட்டில் உள்ள புதன் எப்பிரச்னைகளையும், எந்தத் துறையில்



சிண்டிகேட் வங்கியில் எழுதப்பட்டுள்ள சேமிப்பைப் பற்றிய ஒரு வாக்கியம் என்னை மிகவும் கவர்ந்தது.

"சேமிப்பு என்பது பற்பசையைப் போன்றது. பிதுக்கி எடுப்பது மிக மிக சுலபம். திரும்பவும் உள்ளடக்க நினைப்பது மிக மிக கடினம்."

- பாலாஜி ஆர்.

SABARI INVESTMENTS AND PROPERTIES

18/17, First Floor, Third Cross St., opp. R.A. Puram, Corporation Office Complex, (opp. Kaliappa Hospital), Madras - 600 028. Tele/Fax : 458931

DEPOSITS ARE ACCEPTED

SCHEME - I

CUMULATIVE DEPOSITS

Term (Months)	Minimum amount	Maturity Value for Rs. 5000	Annual yield % *
37	Rs. 5000	Rs. 10000	32.43
54	Rs. 5000	Rs. 15000	44.44
	and in multiples of Rs. 1000/-		

* Interest compounded monthly @ 24% p.a.

SCHEME - II

FIXED DEPOSITS

Term (Months)	Minimum Amount	Interest p.a.	Incentive on Deposit
12	Rs. 10000	22%	1.5%
24	Rs. 10000	23%	2%
36	Rs. 10000	24%	2.5%

+ ATTRACTIVE GIFTS

- Your Deposits are invested in Building Promotion activities, Vehicle hire purchase loan, etc.
- Company is managed by young well experienced dynamic persons with the guidence of professionals.
- Group Company of Sabari foundations Pvt. Ltd., which is already in Building Promotion activities with an annual turnover of more than Rs. 2.50 Crores.
- Post dated cheques will be issued in advance for the Interest & Deposit Amount.


உள்ளவர்களுக்கும் எள்ளத்தனையும் தொல்லை தராதவாறு காப்பார். ஏனெனில் புதனின் அதிதேவதையே பாற்கடலில் பள்ளி கொண்டு பாரினைக் காக்கும் பரமனாயிற்றே! எனவே, அவன் துதிபாடுங்கள். அல்லது அவனது ஆயிரம் நாமங்களைப் பிறர் ஓதக் கேளுங்கள். குறைந்தபட்சம் புதன்கிழமை தோறும் விஷ்ணு ஸகஸ்ர நாமத்தைக் கேட்பது நல்லது. மற்றபடி அன்றாடப் பணிகளில் குறையிருக்காது என்றாலும் தாம்பத்திய உறவில், குடும்ப நிலையில் சிறுசிறு பிரச்னைகள் தோன்றலாம். பணத்தட்டுப்பாடு ஏற்படலாம். குருவிரயத்தில் இருக்கிறார். காசை விரயம் செய்ய வேண்டாம். கடும் உழைப்பும் சிக்கனமுமே இக்கணம் உங்களுக்குத் தேவை என்பதைக் கூற வேண்டியுள்ளது. நீண்டநாள் பிரச்னை ஒன்றில் உங்களுக்கு வெற்றி ஏற்பட்டு, அதனால் மனமகிழ்ச்சியும், நிம்மதியும் கிடைக்கும். அது உங்கள் வீட்டில் நடக்க வேண்டிய சுப காரியமாகவும் இருக்கலாம். அல்லது உத்தியோக ரீதியில் ஏற்பட்ட ஒரு தடங்கல் நீங்கு வதன் மூலமும் கிடைக்கலாம். அல்லது ஏதோ காரணத்தால் அரசுப் பணியில் உள்ளவர் களுக்கு ஏற்பட்டிருந்த பயம் நீங்கும் வண்ணம் நிலைமாறி விடலாம். அதனால் கவலையை விடுங்கள். கடமையைத் தொடருங்கள்.



கும்ப ராசி:

அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3ஆம் பாதங்கள்.

எடுத்த காரியத்தில் ஜெயம் பெறும் வண்ணம் ஏதாதசிப் பிரகஸ்பதியான குரு ஆட்சியில் இருக்கிறார். ஒரு சுப காரியம் நடக்கும். அல்லது உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் எதிர்பார்த்தபடி கல்வியில் நல்ல ஆர்வம் பிறக்கும். அல்லது அவர்களுக்கு உத்தியோகம் கிடைக்கும். அங்காரகனால் கடன் தொல்லை நீங்கி நிம்மதியை அடையும் வகையில் தொழிலிலும், உத்தியோகத்திலும் லாபம் இருக்கும். மற்றபடி எந்தக் கிரகமும் உதவும் நிலையில் இல்லை. 9,10க்குடைய சுக்கிரனும், செவ்வாயும் சேர்ந்திருப்பதால் நியாயமாகத் தரும கருமாதிபதி எனும் யோகத்தைத் தர வேண்டும். அதன்படி பார்த்தால் ஒரு எதிர்பாராத தனலாபமோ, தொழிலில், உத்தியோகத்தில் மாற்றமோ ஏற்பட்டு உங்கள் நிலை உயரலாம். எனவே, ஸ்ரீ சுப்ரமணியரின் திருத்தலங்களுக்குச் சென்று வரலாம். அல்லது ஸ்ரீரங்கத்திற்குச் சென்று ஸ்ரீரங்கமன்னரைச் சேவிக்கலாம். அன்னார் மனது வைத்தால் மண்ணுலகில் ஆகாதது எதுவுமே இல்லை. எத்துணை கிரகங்கள் எங்கிருந்து தடை செய்தாலும் அவரது அருள் மடை திறந்த வெள்ளம் போல் உங்களுக்குக் கிடைக்கும். தடைகள் அகலும், கவலைகள் நீங்கும். அவரது மார்பில் உறையும் அஷ்ட லட்சுமி உங்களுக்கு அனைத்தையும் தருவாள். அருள் பெற ஆழ்ந்த பக்தியும், சிரத்தையும், நம்பிக்கையும் தேவை என்பதை மறவாதீர்கள்.



மீன ராசி:

பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

சுக்கிரன், புதன், மாத ஆரம்பத்தில் சூரியன் ஆகியவர்கள் நன்மையைத் தரும் நிலை. புதனின் பரிபூரண அருள் உண்டு. எனவே வியாபாரம், தொழில், குழந்தைகளின் கல்வி, மற்றும் மனநிலை இவை எந்த விதத்திலும் பாதிக்கப்பட நியாயமில்லை. இராசிநாதனின் பார்வை இராசிக்கு இரண்டு எனும் குடும்பஸ்தானம், நான்கு எனும் சுகஸ்தானம், ஆறு எனும் ரோகஸ்தானம் ஆகியவைகளுக்கு இருப்பதால் மேற்படி சம்பந்தப்பட்ட இனங்களில் பிரச்னைகள் ஏற்படாது. எனினும் 7ல் உள்ள கேதுவும், 5ல் உள்ள செவ்வாயும் கடன் தொல்லை, மற்றும் கோர்ட்டு விவகாரங்கள் ஆகியவைகளில் சிறு சிறு பிரச்னைகளைத் தோற்று விக்கலாம். ஏற்றத்தாழ்வு மிகுந்த மாதந்தான். எனினும் விஷ்ணு புராணம் படித்தல், பெருமாள் கோவில்களுக்குச் சென்று அர்ச்னை செய்தல், எடுத்துக் கொள்ளும் ஆகாரம், பேசும் சொற்கள் இவைகளில் சற்று நாவடக்கம் ஆகியவைகளைப் பின்பற்றினால் பிரச்னைக்கு இடமில்லை. அரசுப் பணியாளர்களில் சிலருக்கு, "யாருக்காகவோ செய்து கொடுத்த பணியினால் அப்போது லாபம் சிறிதளவு பெற்றிருந்தாலும் தற்போது பதவியில் நீடிப்பதற்குத் தகராறு வந்து விடுமோ எனும் மனக்கவலை ஏற்படலாம். குரு அப்படி 10ல் சஞ்சரிப்பதும், மற்றொரு யோககாரனாகிய செவ்வாய் நீச்சம் பெற்றதாலும் இந்த நிலை. எனவே கார்த்த வீரியார்ஜுன ஜபம், மிருத்யுஞ்சய ஜபம் இவற்றை மனதார 11 முறை ஒவ்வொரு நாளும் காலையில் கூறிவரவும். எந்த விதத்திலும் உங்களுக்குத் தாழ்மை ஏற்படாது. கவலை வேண்டாம்.

-ஜெயலட்சுமி கிருஷ்ணன்

மணப்பெண்

சிறப்பு அலங்காரம்

சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும். எனவே உடல் ஆரோக்கியம் மிகவும் முக்கியம். முக்கால் பகுதி நாம் உண்ணும் உணவே நமக்கு அழகு சாதனம். உடல் பருமனாகி விடக்கூடும் என்ற எண்ணத்திலேயே அநேக பெண்கள் இள வயதில் சத்தான ஆகார வகைகளை ஒதுக்குகிறார்கள். இது மிகத் தவறான முறை. வைட்டமின் ஏ.பி.சி உள்ள காய்கறிகள், பால் பழ வகைகள், கீரை, உலர் பழ வகைகள் (பேரீச்சை, திராட்சை போன்றவை) மேனிக்குப் பளபளப்பை மெருகு கூட்டித்தர வல்லவை.

அறுசுவை உணவு என்கிறோமே. இவை ஒவ்வொன்றிற்கும் ஒரு மருத்துவ பயன் உண்டு. நோயற்ற வாழ்வுக்கு இவை அத்தியாவசியத் தேவை என்பதை மறக்கக் கூடாது. புளிப்புச் சுவை உடல் எடைக் கூட்டும். மலச்சிக்கலும் ஏற்படும். ஆனால் எலுமிச்சை, ஆரஞ்சு, மாதுளை சாறுகள் உடலுக்கு நலம் தருபவை. வாயில் மட்டுமே இனிக்கும் தேன் உடலுக்குக் கசப்பு தரும் தன்மை கொண்டது. சுவையற்ற வெந்நீரும் கசப்பு தரவல்லது. இரத்த விருத்தி செய்து மலச்சிக்கலைத் தீர்க்க வல்லது துவர்ப்புச் சுவை. தினமும் உணவில் வாழைப் பூ. அத்திக்காய், விளாம்பழம் சேர்த்துக் கொள்ள துவர்ப்புச் சுவையும் பலனும் கிடைக்கும்.

முளை கட்டிய தானியங்கள் உடலுக்கு அதிக நன்மையைத் தரக் கூடியது. தினமும் நாம் சாப்பிடும் உணவில் அவசியம் முளை கட்டிய தானியங்கள் இடம் பெற வேண்டும்.

ஜீரணக் கோளாறுகள் உள்ளவர்கள் உணவருந்திய பிறகு ஒரு கப் சீரகத் தண்ணீர் இளம் சூடாக சாப்பிட நல்ல குணம் தெரியும். சீர் + அகம் = சீரகம். சீரான ஆரோக்கியமுள்ள உடலைப் பெற வேண்டுமானால் சீரகம் அவசியம் நம் உணவில் இடம் பெற வேண்டும். காலையில் உடற்பயிற்சி செய்த பின் இளம் சூட்டில் சீரகத் தண்ணீர் அருந்தினால் உடல் எடையைக் குறைக்க விரும்புகின்றவர் வியக்கத்தக்க மாறுதல் அடையலாம்.



ஆய கலைகள் 64-ல் ஒப்பனைக் கலையும் ஒன்று. முகத்தின் ஒளியையும் மேனி அழகையும் அதிகரிக்கும் ஒப்பனைக் கலையில் திருமண அலங்காரம் சிறப்பு இடத்தைப் பெறுகிறது. வெய்யிலில் அல்லது வேறு ஏதாவது காரணத்தினால் முகம் கழுத்து கறுத்து இருந்தால் இழந்த ஒளியை மீண்டும் பெற ஹெர்பெல் ப்ளீச் அவசியமாகிறது.

வாழ்க்கையில் ஒரு பெண்ணின் திருமண நாள் மறக்க முடியாத நாளாகும். அன்று திருமணப் பெண்ணை நன்றாக அலங்கரித்துக் காண அனைவரும் ஆசைப்படுவர். மணப்பெண் அலங்காரம் முற்பகல் கொஞ்சம் எளிதாகவும், மாலைவேளைகளில் எடுப்பாகவும் இருப்பது சிறப்பு. மணப்பெண்ணின் முகம், உடல்வாகுக்கு ஏற்றபடி மேக்கப் செய்ய வேண்டும். மேக்கப் பொருட்கள் நல்ல தரம் உள்ளதையே உபயோகிக்க வேண்டும். மேக் அப் செய்யும் முன் க்ளென்சிங் மில்க் பஞ்சில் நனைத்து

முகம், கழுத்துப் பகுதி, காது என்று எல்லா பகுதிகளையும் நன்கு சுத்தம் செய்ய வேண்டும். 5 நிமிடம் கழித்து முகம் மற்றும் கழுத்துப் பகுதியை (ஜஸ் தான் செய்து ஒத்தடம் கொடுப்பது போல்) டவலால் ஒற்றி எடுக்க வேண்டும். பிறகு லிக்விட் பவுண்டேஷன் அல்லது பான்கேக் தண்ணீர் இரண்டு மூன்று சொட்டு ஊற்றி நன்றாக முகம், கழுத்து முன், பின்பக்கக் கழுத்து, காது, முகத்தில் ஒரே மாதிரியாக போட வேண்டும். கூந்தலில் பட்டிருந்தால் நன்கு துடைத்து விட வேண்டும். இரண்டு நிமிடம் கழித்து பிரஷின் உதவி கொண்டு பவுடர் போட வேண்டும்.

மணப்பெண்ணின் சருமத்திற்கு ஏற்றவாறு ஃபவுண்டேஷன் வாங்கி உபயோகிப்பது நல்லது. பார்ப்பதற்கு மேக் அப் இயற்கையாக இருப்பது போல் தெரியும். உலர்ந்த ஐஷேடோ, ஐலைனர், மஸ்க்காரா, ரூஜ் இவைகளை ஏற்றவாறு அழகுபட பூச வேண்டும். நெற்றியில் குங்குமப் பொட்டோ, ஸ்டிக்கரோ அழகுற இட வேண்டும். இன்று தலை அலங்காரத்திற்குக் கற்களாலான நகைகள், கோல்ட்டு செட் பிரமாதமாகக் கிடைக்கிறது. பொருத்தமான தலை அலங்காரம் மணப் பெண்ணிற்கு செய்ய வேண்டும். வெளிநாடு களுக்கு இணையாக நம் நாட்டில் அழகு சாதனப் பொருட்கள் நிறைய வந்துள்ளன. திருமண உடையின் நிறத்திற்கு ஏற்றவாறு ஐஷேடோ போட வேண்டும். பின்பு லிப்ஸ்டிக் போட வேண்டும். அழகுக் கலையில் மணப்பெண் அலங்காரம் சிறந்த இடம் வகிக்கிறது. திறமையான அழகுக் கலை நிபுணர்களால் மணப்பெண் அலங்காரம் சிறப்பாக அமைகிறது.

என்னுடைய மூலிகைத் தயாரிப்பான மணமகள் ஸ்பெஷல் பவுடர், மேக்-அப் செய்யும் முன் போட்டு, மசாஜ் செய்த பின்பு ½ மணி நேரம் கழித்து மேக்-அப் போட்டால் 8 மணி நேரம் மேக்-அப் கலையாமல் அப்படியே இருக்கும்.

மணப்பெண்ணிற்கு மணநாள் முன்னால் ஒரு மாதம் முன்பே Bridal Care என்று ஆரம்பித்து ஒவ்வொரு வாரமும் தலை முதல் பாதம் வரை மூலிகையான Pack மூலம் ஹெர்பல் ஃபேஷியல் மற்றும் வேண்டாத முடிகளை அகற்ற ஹெர்பல் வேக்ஸிங் மற்றும் கை, கால் மினுமினுப்பாக இருக்க உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு ஹெர்பல் மசாஜ் ஆயில் செய்து மணநாளுக்குத் தயார்ப்படுத்துகிறேன். இதனால் மணநாள் மட்டும் அல்லாமல் குறைந்தது 6 மாதத்திற்கு மேனி மெருகுடன் காணப்படும். மணப் பெண் ஒவ்வொருவரும் சிறப்பாக மிளிர Bridal Care அவசியம் தேவை.

மூலிகைகளினாலான பேஸ் பாக் முகத்திற்குப் பூசுவதால் இரத்த ஓட்டம் சுறுசுறுப்படைகிறது. முகத்திலுள்ள துவாரங்கள் சுத்தம் அடைகிறது. காய்ந்த தோல், கரும்புள்ளிகள் பருக்களினால் உண்டான வடுக்கள் நீக்கப்படுகின்றன. சருமத்தை வெண்மையாக்குகிறது. முகத்திலுள்ள தசைகளையும், நரம்புகளையும் இளைப்பாறச் செய்து மொத்தத்தில் முகத்திற்குப் புத்துணர்ச்சி அளிக்கிறது. தவறாமல் ஹெர்பெல் பாக்குகளை உபயோகித்தால் மேனி இளமையுடன் விளங்கும். மேலும் யோசனைகள் வேண்டுமானால் என்னுடன் 6583596 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு என்னுடன் பேசலாம்.

சில டிப்ஸ்-

எண்ணெய்ப் பசை உள்ள சருமத்திற்குப் பாலுக்குப் பதில் தயிர் உபயோகிக்கவும். எப்போதும் இளமையாகவும், உற்சாகமாகவும் இருக்க பச்சைக் கொத்தமல்லி இரண்டு கைப்பிடி அளவு நன்கு அரைத்துச் சிறிது பெருங்காயம் உப்பு, மோருடன் கலந்து தினசரி பருகவும்.

-ஹேமாலக்ஷ்மண்,
அழகு மற்றும் சிகை அலங்கார நிபுணர்

பொன்மொழி

நான் மறையைக் கற்றவன்
ஞானி அல்ல;
'நான்' மறையக் கற்றவனே
ஞானி.

-யாரோ

-அ.ஷண்முக சுந்தரம்




இது ஒரு
நேச்சுரல் ப்ளஸ்
கூந்தல் தைலம்
ஆம்! அம்லா ப்ளஸ்ஸில் நெல்லிக்காயின்
நன்மையைத் தவிர, பல
இயற்கையான மூலிகைகளின் சேர்வு,
உங்கள் கூந்தல் ஆரோக்கியத்திற்கு ஒரு
மிகப்பெரிய ப்ளஸ் ஆகும்.
VVD
அம்லா
ப்ளஸ்
VVD
Amla
Plus

திருச்சியில் ஜெய்நகரில் பரிசுபெற்ற ஆர்.பி.அகிலைச் சந்தித்தபோது இன்ப அதிர்ச்சி! +1 மாணவியான அவரை "என்னம்மா, நிஜமாகவே நீதான் எழுதினாயா, இல்லை உங்கம்மா எழுதி அனுப்பினாரா" எனச் சீண்டியபோது புன்னகைத்தார் கொஞ்சமும் கோபம் இல்லாமல்.

"நான் ஏற்கனவே எங்க ஸ்கூல் மேகஸின்ல கவிதையெல்லாம் எழுதி இருக்கேன்" என்றார். இவர் பரிசு பெற்றதைப் பற்றித் தோழிகள் வாழ்த்தியபோது "சும்மா, வாழ்த்தறதோடு நிறுத்திக்காம நான் சொன்ன கருத்தை ஃபாலோ பண்ண முயற்சி செய்யுங்க!" என்றாராம். பெற்றோர்கள் ஏதாவது வாங்கித் தரும்போது 'வெடுக்'கென்று அதைப் பற்றிய அபிப்ராயம் சொல்லாமல், பிடிக்கவில்லையென்றால் அதை மெதுவாகச் சொல்லலாமே, மற்றவரின் மனம் புண்படாமல் நடந்து கொள்வது எப்படி என தன் தாயிடம் கற்றுக் கொண்டதாக எழுதிப் பரிசு பெற்ற கட்டுரை அது.

அகில் எழுத்தாளர் மட்டுமல்ல, நல்ல பேச்சாளரும் கூடவாம். "இன்றைக்குக் காலையில்தான் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு, நீங்கள்ளாம் வர்றீங்கன்னு ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கிக் கொண்டு வந்திருக்கா" என்றார்கள் இவருடைய பெற்றோர்கள். "என்ன பேசினே" என செண்பகம் சில்க்ஸ் உரிமையாளர் திருமதி. ஜம்பகம் ராமசாமி கேட்டவுடன் 'சடசட' வென பேச ஆரம்பித்து விட்டார். அந்த இளம் பெண்ணின் திறமையைப் பார்த்து மகிழ்ந்து அணைத்து முத்தம் கொடுத்தார் ஜம்பகம்.

இனி 'மகிழ்ச்சி' தலைப்பில் பரிசுபெற்ற கட்டுரைகள்–

வாழ்த் வண்ணங்கள்






ரூ. 5000/- மதிப்புள்ள செண்பகம் சில்க்ஸ் பட்டுப் புடைவை பரிசு பெறும் கட்டுரை.

நான்கு ஆண்டுகள் தவமிருந்த அண்ணி!

1970–ம் ஆண்டு நவம்பர் மாதக் கடைசியில் என் அண்ணனுக்குத் திருமணம். அண்ணியின் பெயர் ராணி. பொருத்துக்கு ஏற்ப அழகு, கம்பீரம். திருமணம் முடிந்து, எங்கள் வீட்டிற்கு வந்த ஆரம்ப நாட்களிலேயே அண்ணி எங்களுடன் பழகுவதில் பாசம் தெரிந்தது.

அண்ணன் ராணுவத்தில் அதிகாரி. மூன்று மாத விடுமுறையில் வந்திருக்கும் பொழுதுதான் திருமணம். எனவே எங்கள் வீட்டில் அவர்களின் எந்த 'புரோகிராமுக்கும்' தடையேதுமில்லை. திடீர் திடீரென்று வெளியூர் கிளம்புவார்கள். வாரம்



ஒருமுறையாவது மதுரை 'விசிட்' உண்டு. அப்படிச் சென்று வரும்போதெல்லாம், வீட்டில் உள்ள அனைவருக்கும் பரிசுப் பொருள்களாக வாங்கிக் கொண்டு வந்து நிரப்புவார்கள்.

அதுபோல ஒரு தடவை மதுரை சென்று வந்த பொழுது, பட்டுச் சேலை எடுத்து வந்திருந்தார்கள். என் அண்ணி என்னிடம் கொடுத்து, பிரித்துப் பார்க்கச் சொன்னார்கள். சேலை சூப்பராக இருந்தது. மாம்பழக் கலரில், முக்கால் சாண் சரிகை வைத்து, மெரூன் கலர் பார்டர்... அழகோ அழகு.

"அண்ணி... உங்க லெமன் கலருக்கு ரொம்ப சூப்பராக இருக்கும்" என்று பாராட்டினேன்.

சிரித்துக் கொண்டே என் அண்ணி மற்றொரு பார்சலை எடுத்து நீட்டி 'இது உனக்கு' என்றார். நான் ஆவலோடு பிரித்துப் பார்த்தேன். அதே மாம்பழக் கலர், மெரூன் பார்டர். சரிகை கூட அப்படியே.

"என்ன அண்ணி.... ஒரே மாதிரியாக எடுத்திட்டீங்க..."

"காலேஜ்ல ஃபிரண்ட்ஸ் ஒரே மாதிரி சேலை எடுத்து, முக்கிய ஃபங்ஷனுக்கெல்லாம் 'மேட்சாப்' போவோம். அது மாதிரி, இந்த வருஷம் பொங்கலுக்கு நாம இரண்டு பேரும் கோவிலுக்கு 'மேட்சாப்' போவோம்... என்ன, சரிதானே..." என்றார். என் அருமை அண்ணியை சந்தோஷம் தாங்காமல் கட்டிக் கொண்டேன்.

ஆனால் எங்கள் சந்தோஷம் நிலைக்கவில்லை. இந்திய-பாகிஸ்தான் யுத்தம் தொடங்கியது. 'விடுமுறை ரத்து... பணியில் சேரவும்' என்று தந்தி என் அண்ணனை நாட்டுப் பணி செய்திட அழைத்தது. திருமணமாகிப் பத்தே நாட்கள் ஆகி இருந்த நிலையில், என் அண்ணன் போர் முனைக்குப் பறந்து சென்றார்.

அந்த மாதமே யுத்தம் முடிந்தது; இந்தியா அந்தப் போரில் மாபெரும் வெற்றி அடைந்தது. பங்களாதேஷ் என்ற புதிய நாடு உதயமானது. ராணுவப் பணி முடிந்து, மீண்டும் என் அண்ணன் 'இதோ' வந்து விடுவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்.

அந்த ஆண்டுப் பொங்கலும் வந்தது; வீட்டில் அனைவருக்கும் சந்தோஷம் காணாமல் போயிருந்தது. பொங்கலுக்காகத் தேர்ந்தெடுத்த பட்டுச் சேலை கட்ட மனமில்லாமல் கிடந்தது. இந்த நிலையில், ராணுவத் தலைமையிடத்திலிருந்து, இடியென அந்தச் செய்தி வந்திறங்கியது– நடந்து முடிந்த யுத்தத்தில் 'காணாமல் போனவர்கள்' பட்டியலில் என் அண்ணன் பெயர் இருப்பதாக. என் அண்ணியை எப்படித் தேற்றுவது என்பதே புரியவில்லை.

இதே நிலையில் இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. 1972ஆம் ஆண்டு ராணுவத் தலைமையகத்தில் இருந்து ஓரளவு ஆறுதல் தரக்கூடிய செய்தியொன்று வந்தது. எங்கள் அண்ணன் 'யுத்தக் கைதி'யாக பாகிஸ்தான் சிறையில் இருக்கிறார் என்று. கைதிகள் பரிமாற்றத்தின் கீழ் விடுதலை கிடைக்கும் என்றும் சொல்லப்பட்டது. 'அப்பாடா... அண்ணன் உயிருக்கு ஆபத்தில்லை...' என்ற நிம்மதி வந்தது.

மேலும் இரண்டு ஆண்டுகள். 1974ம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான் நாடுகள் கைதிகள் பரிமாற்றம் செய்து கொண்டபோது, என் அண்ணன் வீடு வந்து சேர்ந்தார். என் அண்ணன் வீட்டிற்குள் நுழைந்தவுடன் அவரை என் அண்ணி கட்டிக் கொண்டு அழுத அழுகை இருக்கிறதே- நான்கு ஆண்டுத் துன்பத்தின் வெளிப்பாடல்லவா?

நான்கு ஆண்டுகளில் என் அண்ணி காட்டிய பொறுமை பெண் குலத்திற்கே எடுத்துக்காட்டு. தன் நெஞ்சுக் குள்ளே 'தன் கணவனுக்கு என்ன ஆயிற்றோ' என்ற எரிமலை கனன்று கொண்டிருந்தாலும், அதை சுற்றி இருப்பவர்களிடம் காட்டி, முகம் கடுகடுத்ததில்லை. பிறந்த வீட்டிற்கும் போய்விடவில்லை. தனக்கு வந்த துன்பங்களையெல்லாம் மனஉறுதியோடும், தன்னம்பிக்கையோடும் ஏற்றுக் கொண்டார். என் அண்ணன் இல்லாத நான்கு ஆண்டுகளில் என் அண்ணிக்குத் தோழியாகவே மாறி ஆறுதல் சொன்னதும் நான்தான்.

அந்த ஆண்டு பொங்கலுக்கு என் அருமை அண்ணியும், நானும் நான்கு ஆண்டுகளுக்கு முன் வாங்கி இருந்த பட்டுப்புடவைகளை 'மேட்சாகக்' கட்டிக் கொண்டு கோவிலுக்குப் போனபோது எங்களின், எங்கள் குடும்பத்தினரின் மகிழ்ச்சியை வர்ணிப்பதற்கு வார்த்தைகளே இல்லை.

ஏ. உமா சுந்தரி அரசு, திருப்பத்தூர்.

பிரசுரத்திற்கு...

'பளிச்'சென வரக் கூடாதா?


நான் முதல் முதலாக வேலைக்குப் போகும் போது என்னிடம் இருந்த புடை

வைகள் இரண்டே இரண்டுதான். மாற்றிமாற்றி அதையேதான் கட்டுவேன். எங்கள் ஹெட்கிளார்க் ஒரு நாள் என்னை கூப்பிட்டு,

"தப்பா நினைச்சுக்காதே அம்மா, ஆள் பாதி, ஆடை பாதி என்பார்கள். வேலைக்கு வரும் பெண் பளிச்சென்று புடைவை கட்டி வர வேணாமா? மற்ற பெண்களைப் பார், எப்படி வருகிறார்கள். நமக்குக் குடும்பத்தில் ஆயிரம் கஷ்டங்கள் இருக்கும். அதை வெளிப்படுத்தக் கூடாது. மற்றவங்க கேவலமா பேச இடம் கொடுக்கக் கூடாது பார். மனசு கேட்கலை. சொன்னேன்."

என்றபோது சின்ன வயசுதானே, என் வறுமை குத்தி காட்டப்பட்டதுபோல் ரோஷமும் துக்கமும் பொங்கிக் கொண்டு வந்தன. இந்த மாதம் எந்தச் செலவு இருந்தாலும் சரி ஒரு புடைவையாவது எடுத்து விட வேண்டும் என்று முடிவு செய்தேன்.

அன்றுமாலை ஊரிலிருந்து வந்த என் தாய் மாமா மனைவி, என்னிடம் ஒரு துணிப்



பையை தந்து "இதிலே நாலைந்து நைலக்ஸ் புடைவைகள் இருக்கிறது. நீ வேலைக்குப் போவதால் இது உனக்கு உதவும். நான் அதிகமாக வாயில் புடைவைதான் கட்டுவேன். ஆகவே உனக்காகக் கொண்டு வந்தேன்" என்றார்.

அதிகம் கட்டாத விதவிதமான வண்ணங்களில் இருந்த அந்த நைலான், நைலக்ஸ் புடைவைகளைப் பார்த்தபோது எனக்கு மகிழ்ச்சி பொங்கியது. வசதியற்ற நிலை, இந்தக் காலம் மாதிரி, புடைவை சீட்டு, புடைவை தவணை முறைகள் எல்லாம் அப்போது பிரபலமாகாத நேரம். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் என் மாமி புடைவைகள் தந்து உதவிய (அதுவும் நான் வாய் திறந்து கேட்காமல்) அன்பையும் அதனால் நான் அடைந்த மகிழ்ச்சியையும் நிம்மதியையும் நான் மறக்கவே இல்லை.


இன்று ஓரளவு வசதியான நிலையில், வேலைக்கோ, காலேஜுக்கோ போகிறார்கள் என்றால், என் உறவுக்கார குழந்தைகளோ, நண்பர்கள் குழந்தைகளோ யாராய் இருந்தாலும், புடைவையோ சுடிதாரோ பேண்ட் சர்ட்டோ எடுத்துப் பரிசாகத் தருவது என் வழக்கமாக வைத்துக் கொண்டு இருக்கிறேன். என் நாத்தனாரிடமும் என் நாத்தனார் குழந்தைகளிடமும் நான் காட்டும் அன்பும், பதிலுக்கு அவர்கள் என்னிடம் காட்டும் பரிவையும் கண்டு என் கணவரே அடிக்கடி ஆச்சரியப்படுவார். அதற்கெல்லாம் காரணம் என் மாமி நாத்தனார் பெண்ணான என்னிடம் புடவைகள் தந்து அன்பு காட்டிய அந்தச் செயல்தான்.

– சரோஜா ராமசாமி, சென்னை - 14.

பிறருக்குக் கொடுப்பதில் மகிழ்ச்சி

என் அம்மாவிற்கு நான் ஒரே பெண். என் அம்மாவிற்குக் கூடப் பிறந்தவர்கள் 6 சகோதரிகள் ஒரு சகோதரர். என் அம்மா மூத்தவர்.. சுமார் 40 வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் இன்னும் என் மனத்தில் நீங்கா இடம் பெற்றிருக்கிறது. என் நான்காவது சித்திக்குத் திருமணம். எல்லோருக்கும் புடைவைகள் எடுப்பதற்கு என் மாமா, தாத்தா இருவரும் சென்று சுமார் 100 புடைவைகள் எடுத்து வந்து யாருக்கு எது பிடிக்கிறதோ பார்த்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

கூடத்தில் அனைவரும் உட்கார்ந்தோம். புடைவை மூட்டைகள், பிரிக்கப்பட்டன. உடனே எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு புடைவைகளை எடுத்துக் கொண்



டார்கள். நானும் முதலில் ஆரஞ்சும், வெள்ளையும் கலந்த உடல், சிகப்பு பார்டரில் நிறைய ஜரிகை, முந்தியிலும் நிறைய ஜரிகை போட்ட புடைவையை எடுத்துக் கொண்டேன்.

என் அம்மாவும், இரண்டாவது சித்தியும் எதையும் தொடாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். என் இரண்டாவது சித்திக்குக் கால் சற்று ஊனம். அதனால் அவர்கள் தாழ்வு மனப்பான்மையோடு யாரிடமும் அதிகம் பழகமாட்டார்கள். அம்மாவிற்கு அந்தத் தங்கைமீது பாசம் அதிகம். சித்தி எப்போதும் அமைதியாக இருப்பார்கள்.

புடைவைகளில் எதையும் தொடாமல் நான் எடுத்து வைத்திருந்த புடைவையையே



The most EFFECTIVE **WEAPON** against COCKROACHES AND MOSQUITOES



SSCGB * HF * 5 * 2416

காமதேனு

பால் திட்டங்கள்

அம்ருத்
யோஜனா
ஒரு யூனிட்டின்
விலை
ரூ. 12,500/-

1 மில்லியன் லிட்டர்
அளவுள்ள பால், வெற்றிகரமாக
வாடிக்கையாளருக்கு
டெலிவரி செய்யப்பட்டுள்ளது.

வருவாய்
ரூ. 3,650/-* P.A.
மதிப்புள்ள
பாலாக
பெறுங்கள்.

சிறப்பம்சங்கள் :


- தினமும் 1 லிட்டர் பால் வீதம் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு உங்கள் வீடு தேடி வந்து சப்ளை செய்கிறோம். (அ) பாலுக்கு பதிலாக பணம் பெறும் வசதி. (Rs. 2,400 p.a.)
- முதலீட்டை திரும்பப் பெறும் வசதி.
- பால் சப்ளை 5 ஆண்டுகளாக விரைவில் மாற்றப்படவுள்ளது.
- கிரெடிட் கார்டுகள் ஏற்றுக் கொள்ளப்படும் வசதி.

வருவாய்
29.2%
சேவை
100%

முந்துங்கள்!
இத்திட்டம்
18.9.96 வரை
மட்டுமே.

இலவசம்!

ஒவ்வொரு
யூனிட்டுக்கும்
ஒரு காபி மேக்கர்



*ஒரு லிட்டர் பாலின் விலை ரூ. 10/- ஆக கணக்கிடப்பட்டுள்ளது

(TM)
KADF
காமதேனு அக்ரோ & டெய்ரி ஃபார்ம்ஸ் லிமிடெட்
குணா பில்டிங், 304 - 305, மவுண்ட் ரோடு, தேனாம்பேட்டை,
(சிக்னல் அருகில்), சென்னை - 600 018. போன் : 456565, 452080.

பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு என்னிடமிருந்து அதை வாங்கி ஆசையோடு பிரித்துப் பார்த்துவிட்டு அவர்களே கையில் வைத்துக் கொண்டார்கள். இதைக் கவனித்த என் அம்மா என்னைத் தனியாக அழைத்துப் போய், "சித்திக்கு நீ எடுத்துக் கொண்ட புடைவை தான் பிடித்திருக்கிறது. எப்படிக் கேட்பது என்று தயங்குகிறாள். நம்மிடம் நிறைய புடைவைகள் இருக்கின்றது. ஆனால் சித்தியிடம் இல்லை. வசதியும் இல்லை. உனக்கு அப்பா வேண்டியது எடுத்து தருவார். நீ இந்தப் புடைவையை சித்தியிடம் நீயே கொடுத்து விடு" என்று கூறினார்.

எனக்கு அந்தப் புடைவை மிகப் பிடித்திருந்தது. கொடுப்பதற்கு மனமே இல்லை. எனினும் என் தாய் கூறியபடி சித்தியிடம் சென்று, "சித்தி இந்தப் புடைவையை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் நான் வேறு கலர் பார்க்கிறேன்" என்று கொடுத்தேன். அப்போது என் சித்திக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. நான் வேறு கலர் பிடிக்காததால் புடைவை எடுத்துக் கொள்ளவில்லை.


இதையெல்லாம் என் மாமா கவனித்துக் கொண்டிருந்திருக்கிறார். மீதி புடைவைகளை ரிடர்ன் பண்ணிவிட்டு எனக்காக அவரே டார்க் கிரே கலரில் இரண்டு பக்கமும் பெரிய ஜரிகை பார்டர், முந்தியிலும் நிறைய ஜரிகை எல்லோர் புடைவையையும் விட விலையும் அதிகமாக எடுத்து வந்து என்னிடம் கொடுத்து, "நீ மற்றவருக்காக ஆசையுடன் எடுத்த புடைவையை விட்டுக் கொடுத்து விட்டாய். உன் நல்ல குணத்திற்கு என் பரிசு" என்று கூறி கொடுத்தார்.

அப்போது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. எனக்கு அப்போது வயது 16. இன்று பிள்ளைகள் பேரன் பேத்திகள் என்று கூட்டுக் குடும்பம். என் அம்மா அன்று கூறிய அறிவுரைப்படி யார் எதை விரும்பினாலும் குறிப்புணர்ந்து விட்டுக் கொடுத்து விடுவேன். மருமகள்களுக்கு விரும்பும் புடைவைகளை பரிசளிப்பேன். இப்போது என் மாமா இல்லை. ஆனால் அவர் கூறியது என்றும் என் மனத்தில் பசுமையாக இருக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் 40 வருடங்களாக நானும் அந்தக் கலர் புடைவை தேடுகிறேன். எனக்குக் கிடைக்கவில்லை.

– எஸ். சரஸ்வதி, பாண்டிச்சேரி -3.

நீங்களோ சிறையில், நானோ வெளியில்!

எனது இளைய மகனுக்கு சமீபத்தில் தான் திருமணம் நடந்தது. எனது சம்மந்தி ஒரு அரசியல் பிரமுகர். தன் சொந்த உழைப்பினால் முன்னுக்கு வந்தவர். தன்னை நாடி வந்




தவர்களுக்குப் பண உதவியும், உதவி ஒத்தாசைகளும் செய்து எல்லோராலும் பாராட்டப்பட்டவர். கட்சியிலும் நல்ல செல்வாக்குடையவர். கட்சியின் கட்டளைக்கிணங்க அடிக்கடி சிறைவாசம் சென்றவர்.

ஒருநாள் அவரது துணைவியார் தன் மகளைப் பார்ப்பதற்காக எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். எங்கள் வீட்டு டைனிங் டேபிளில் அவரும், நானும் உணவருந்திக் கொண்டிருந்தோம். "உங்கள் டைனிங் டேபிள் நன்றாக இருக்கிறது. எங்கு வாங்கினீர்கள்" என்றார். நான் உடனே "இது எங்களது இருபத்தைந்தாவது திருமண நாளுக்காக எனது கணவர் எனக்குப் பரிசளித்தது" என்றேன். அப்படியா மிகவும் மகிழ்ச்சி என்று கூறியவர் சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு அவரே சிரித்துக் கொண்டு, "எங்களது இருபத்தைந்தாவது திருமண நாளைப் பற்றிக் கூறுகிறேன் கேளுங்கள்" என்றார்.

அவர்களது 25வது திருமண நாளன்று அவரது கணவர் சிறையில் இருந்திருக்கிறார். இவர் போய் தன் கணவரை சிறையில் பார்த்துக் கண் கலங்கியிருக்கிறார். "நீங்கள் அரசியல் கைதியாக மரியாதையாக நடத்தப் பட்டாலும் இந்தப் புனிதமான நாளன்று சிறைவாசம் உங்களையும், என்னையும் பிரித்து விட்டது பாருங்கள். திருமணமான ஆரம்பத்தில் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்து படிப்படியாக முன்னேறி இப்பொழுது நல்ல நிலையில் இருக்கிறோம். இருந்தும் என்ன பிரயோஜனம்? அப்பொழுது உள்ள மனநிறைவும், சந்தோஷமும் 25வது வருடத்தில் எவ்வளவு கூடியிருக்க வேண்டும். அப்படியில்லாமல் நீங்கள் கம்பிக்கு உள்ளே, நான் வெளியே" என்று விரக்தியுடன் கூறிவிட்டு வந்து விட்டார்களாம்.

ஒரு வாரத்தில் விடுதலையடைந்த அவர் வீட்டிற்குக் கூட வராமல் நேரே துணிக் கடைக்குச் சென்று ஒரு அழகிய பட்டுப் புடைவை வாங்கி வந்து பரிசளித்திருக்கிறார். அவர் அளித்த புடைவையை வாங்கிக் கொண்ட என் சம்பந்திக்கு மகிழ்ச்சியினால் உடல் புல்லரித்து விட்டதாம். அதற்குப் பிறகு எத்தனையோ புடைவைகள் வாங்கித் தந்திருந்தாலும் இந்தப் புடைவையை வாங்கிய பொழுது உண்டான மகிழ்ச்சிக்கு ஈடே இல்லை என்றார்கள்.

– எஸ். சந்திரா, திருச்சி.




கை வைத்தியம் என்பது பாரம்பர்யமாக நம்மிடம் இருந்த அற்புதமான மருத்துவக் கலை. நவீன உலகில் அருகிவரும், பின் விளைவோ பக்க விளைவோ இல்லாதது அம்மருத்துவமுறை. இதனை வாசகர்களுக்குத் தெரிவிக்க விரும்பி திருச்சி-17ல் தென்னூரில் ப்ரியா நர்ஸிங்ஹோம் வைத்திருக்கும் பிரபல சித்த மருத்துவ நிபுணரும், தற்பொழுது மத்திய அரசின் ஆயுர்வேதா மற்றும் சித்த மருத்துவ மைய ஆராய்ச்சிக் கழகத்தின் அறிவியல் ஆலோசனைக் குழுவின் தலைவராகவும் உள்ள டாக்டர் இரா.கண்ணனைக் கேட்டோம். இங்கு அவர் நம் வாசகிகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்.

கேள்வி: காதில் தோடு போடும் இடத்தில் அரிப்பு, தோல் தடித்து சற்று சிவந்து நீர் வருகிறது. இது அடிக்கடி வருகிறது. இந்த அரிப்பைப் போக்கவும், அலர்ஜியைத் தடுக்கவும் ஏதாவது கைவைத்தியம் இருந்தால் சொல்லுங்கள் டாக்டர்.

திருமதி.பாக்கியம் ஸ்ரீனிவாசன்,
டெல்லி-85.

பதில்: பல வாசகியர்கள் இதே மாதிரியான கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். தற்காலத்தில் பல பெண்மணிகளுக்கும் ஏன் சிறிய குழந்தைகளுக்கும் காதில் அணியும்



வேம்பு-ரவி - டாக்டர் கண்ணன்

வீட்டிலேயே 'கை வைத்தியம்' செய்யலாமே!

நகைகளால் அரிப்பு, தோல் தடிப்பு ஏற்பட்டு புண்ணும் உண்டாகி அதிலிருந்து நீர் கசிவும் ஏற்படுகிறது. இது தரக் குறைவான அணிகலன்களை அணிவதால் ஏற்படும் ஒவ்வாமை ஆகும். இது மாதிரி ஒவ்வாமைகள் சில தரம் குறைந்த கவரிங் நகைகளை அணிவதாலும், நிக்கல் மற்றும் பித்தளை பொருத்திய ஆடைகளிலுள்ள பித்தான், ஜிப் இவைகளின் உராய்வு முதலியவைகளாலும் ஏற்படும். காதில் மட்டும் அல்லாது கழுத்தில் அணியும் சங்கிலி, மூக்கில் அணியும் மூக்குத்தி, கைகளில் அணியும் வளையல்கள், விரல்களில் மோதிரங்கள் அணியும் இடங்களிலும் ஏற்படும்.

இவைகளுக்கு சில எளிமையான

மருத்துவ முறைகள் உள்ளன. ஒவ்வாத அணிகலன்களை அகற்றி விடுவது தான் நல்லது. அரிப்பு, புண் உள்ள இடங்களில் சித்த மருத்துவத்தில் தயாரிக்கப்பட்ட அருகன் தைலத்தைப் பூசி வரலாம். எங்கும் எளிதில் கிடைக்கின்ற கடுக்காய், மாசிக்காய், கத்தக் காம்பு இவைகளில் ஒன்றை வெந்நீரில் இழைத்து பற்றிட்டு வந்தாலும் விரைவில் ஆறும். வேப்பிலையையும், மஞ்சளையும் அரைத்துப் பூசி வரலாம். பிரம தண்டு விதை, வசம்பு, மஞ்சள் இம்மூன்றையும் அரைத்தும் தடவி வரலாம்.

பரிசு பெறும் மூன்று கேள்விகள்

கேள்வி: வளர்ந்து வரும் விஞ்ஞான யுகத்தில் பலவிதமான வண்ணங்களில், வடிவங்களில் குளியல் சோப்புகள் வந்து விட்டன. இதனால் நிரந்தரமான ஒன்றைப் பயன்படுத்த முடியவில்லை. சோப்புகளை அடிக்கடி மாற்றுவதால் சருமத்திற்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா டாக்டர்?

டி. கவிதா, கடலூர்.

பதில்: இந்தக் காலத்தில் இது ஒரு அவசியமான கேள்வி. தற்காலத்தில் குளிப்பதற்குப் பல வகையான சோப்புகள் வந்து விட்டன. டி.வி., வானொலி இவைகளில் இந்த சோப்புகளுக்குக் கவர்ச்சியான விளம்பரங்கள் வேறு. ஆகவே மக்கள் இந்த விளம்பரங்களில் மயங்கி ஒவ்வொரு புதிய சோப்பு அறிமுகமாகும் போதும் புதுப்புது சோப்புகளை பயன்படுத்தும் பழக்கம் உள்ளது. எல்லா சோப்புகளும் எல்லோருக்கும் ஒத்துக் கொள்ளும் என்று சொல்ல முடியாது. பொதுவாக எல்லா சோப்புகளும் காஸ்டிக் சோடாவை அடிப்படையாகக் கொண்டு செய்யப் படுகிறது. இவை தவிர எல்லாவித சோப்புகளிலும் நிறத்தைக் கொடுக்க ரசாயன கலவைகள், மண மூட்ட செயற்கை வாசனை திரவியங்கள் சேர்க்கப்படுகின்றன. இவற்றில் ஏதேனும் ஒன்றாலும் நமக்கு ஒவ்வாமை ஏற்படலாம். எனவே அவரவர்களுக்கு ஏற்ற ஒவ்வாமை உண்டாகாத சோப்புகளையே பயன்படுத்த வேண்டும்.

பெரும்பாலும் தற்காலத்தில் ஆயுர்வேத சோப்பு மற்றும் மூலிகை சோப்பு என்று கூறியும் விற்பனை செய்கிறார்கள். மூலிகைகள் அரிதாகக் கிடைக்கக் கூடிய இக்காலத்தில் மூலிகைகளைச் சேர்த்துப் பெரிய அளவில் விற்பனை செய்வது என்பது ஐயப்பாட்டிற்கு உரியதே. ஆகவே சோப்புகளினால் ஒவ்வாமை உள்ளவர்கள் பாசிப் பயிறு மாவு, கடலைமாவு இவைகளைக் கொண்டு குளித்து வரலாம்.

சோப்புகளை வண்ணத்தைக் கொண்டோ, வடிவத்தைக் கொண்டோ, நல்ல மணத்தைக் கொண்டோ, அல்லது அதன் விலையைக் கொண்டோ அதன் தரத்தை நிர்ணயிக்கக் கூடாது. அடிக்கடி மாற்றிக் கொண்டும் இருக்கக் கூடாது.

கேள்வி: டாக்டர் என் குழந்தைகள் வயதுகள் முறையே 3,2, இரண்டு குழந்தைகளும் தாமாக உண்ணுவதில்லை. குழந்தைகளுக்குப் பசியைத் தூண்டும் வகையில் ஏதேனும் செய்ய முடியுமா?

திருமதி கே.பானுமதி, திருநின்றவூர்.

பதில்: தற்காலத்தில் என்னிடத்தில் சிகிச்சைக்கு வரும் தாய்மார்களும் என் குழந்தை சாப்பிடவே மாட்டேன்கிறது. என்ன செய்வது டாக்டர்? என்று தினமும் கேள்வி கேட்கின்றனர். தற்போது நாம் இருவர் நமக்கு இருவர் என்பது போய் நாம் இருவர் நமக்கு ஒருவர் என்ற காலம் வந்து விட்டபடியால் வீட்டில் ஓரிரு குழந்தைகளே இருக்கின்றன. அதனால் அவைகளுக்கு நாம் செல்லம் கொடுத்து அவர்கள் இஷ்டம் போல் கேட்டதை வாங்கிக் கொடுத்து வளர்க்கக் கூடிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு விட்டோம்.

மாறி வரும் சூழ்நிலையில் சாக்லெட், பிஸ்கட் மற்றும் வகை வகையான தின்பண்டங்கள் கிடைப்பதால் அவைகளையே குழந்தைகள் கேட்டு அடம் பிடித்து சாப்பிடுவது வழக்கமாகி விட்டது. போதாக்குறைக்கு விதவிதமான தொலைக்காட்சி விளம்பரங்கள் வேறு! அவைகளைப் பார்க்கும்



மைதாமாவு கரைத்த தோசை செய்யும்போது மைதாமாவும், அரிசிமாவும் சரிபாகம் கரைத்துச் செய்வோம். ஆனால் அரிசி மாவிற்குப் பதிலாக எவ்வளவு மைதாமாவு போடுகிறோமோ அதில் பாதியளவு பச்சரிசியை அரைமணி முன்பு ஊறவைத்து அரைத்து அத்துடன் மைதாமாவையும் கலந்து உப்பு, கறிவேப்பிலை, பச்சைமிளகாய், சீரகம் இவற்றைக் கலந்து தோசை செய்தால் தோசை ஒட்டாமல் வருவதுடன் ருசியும் அபாரமாக இருக்கும்.

பி. பிரேமாவதி

குழந்தைகள் அவைகளே வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறார்கள். மேலும் தற்காலத்தில் பெற்றோர்கள் இருவருமே வேலைக்குச் செல்லும் சூழ்நிலையில் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு ஹோட்டல்களில் சாப்பிடும் பழக்கம் அதிகமாகி விட்டது. ஆகவே ஹோட்டல் உணவில் ருசி கண்ட குழந்தைகள் வீட்டு உணவை சாப்பிட மறுக்கின்றன.

குழந்தைகளிடம் நல்ல உணவுப் பழக்கங்கள் உண்டாக்குவது பெற்றோர்கள் கைகளிலேயே இருக்கிறது. பிறந்த குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதில் இருந்து படிப்படியாக திரவ ஆகாரம், பால், பழ ரசம் இவைகளைக் கொடுக்க வேண்டும்.

திட உணவு சாப்பிட ஆரம்பித்த உடன் அதிகமான சாதத்தில் சாம்பாரை ஊற்றி அதையே திணிக்காமல் கீரை, பருப்பு, காய்கறி, கூட்டு இவைகளை அதிகமாகச் சாப்பிடப் பழக்க வேண்டும். பழ வகைகளும் அதிகமாகக் கொடுத்துப் பழக்க வேண்டும். நொறுக்குத் தீனிகளை அறவே நீக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் சாப்பிடப் பழக்க வேண்டும்.

இனிப்பும், காரமும் மட்டுமே சுவை என்றில்லை. மாற்றி அறுசுவைகளான கைப்பு, கார்ப்பு, உப்பு, இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு என அறுசுவைகள் உள்ள உணவுகளையும் கொடுத்துப் பழக்க வேண்டும். குழந்தைகள் பசி இல்லாமல் இருந்தால் மலச்சிக்கலும் ஒரு காரணம் ஆகலாம். வயிற்றில் கிருமிகளும் இருக்கலாம். இந்தக் குறைகளும் இல்லாமல் பார்த்துக் கொள்ளவும்.

திட உணவு சாப்பிடும் குழந்தைகளுக்குப் பசி இல்லாமல் இருந்தால் அவைகளுக்கு உணவுடன் இஞ்சி, பிரண்டை, கருவேப்பிலை இவைகளை அதிக காரம் இல்லாமல் துவையலாகச் செய்து கொடுத்து வரலாம். மேலும் கருவேப்பிலை, வெள்ளைப் பூண்டு, பெருங்காயம் முதலியவைகளை உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும். இவைகள் தவிர அன்னப் பொடியை சாதத்தில் கலந்து கொடுத்து வந்தாலும் நல்ல பலன் தரும்.

அன்னப் பொடியின் செய்முறையை இங்கு கீழே தருகிறேன். இதை நீங்களே வீட்டிலேயே செய்து கொள்ளலாமே.

சுக்கு, மிளகு, சீரகம், ஏலம், திப்பிலி, கருவேப்பிலை உலர்ந்தது இவை வகைக்கு நாற்பது கிராம், பொரித்த பெருங்காயம் பத்து கிராம், இந்துப்பு தேவையான அளவு எடுத்துக் கொண்டு இவைகளை நன்கு பொடித்துக் கலந்து வைத்துக் கொண்டு ஒரு டீஸ்பூன் பொடியைச் சாதத்தில் போட்டுச் சிறிது நெய் விட்டுப் பிசைந்து ஓரிரு கவளம் உண்டு வர பசியைத் தூண்டும். இவைகள் தவிர சித்த மருத்துவத் தயாரிப்பான இஞ்சி லேகியம், பஞ்ச தீபாக்கினி லேகியம் முதலியவற்றை மருத்துவரின் ஆலோசனைப்படி உண்டு வர நல்ல பலன் தரும்.

கேள்வி: என் உயிர்த் தோழிக்கு திருமணமாகி ஏழு ஆண்டுகள் ஆகியும் குழந்தைச் செல்வமே இல்லை. எல்லோரும் அவளை மலடி எனக் கேலி செய்கின்றனர். அவர்கள் பார்க்காத வைத்தியமே இல்லை. இதற்கு என்ன காரணங்கள் டாக்டர்? சித்த மருத்துவ முறையில் இதற்கு தீர்வு உண்டா?

திருமதி. சௌம்யா பத்ரி,சென்னை - 79.

பதில்: திருமணமாகி பல ஆண்டுகள் ஆகியும் குழந்தைச் செல்வம் இல்லாமல் இருந்து, குழந்தையில்லாத பல வாசகிகள் தொடர்ந்து கேள்வி கேட்டு வருகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் பொதுவாக விளக்கமான பதில் இங்கே அளித்துள்ளேன்.

குழந்தையில்லாத் தன்மைக்கு ஆண், பெண் இருவருமோ அல்லது இருவரில் ஒருவரோ காரணமாக இருக்கலாம்.

பெண்களுக்குக் கீழ்க் கண்ட காரணங்களால் குழந்தையில்லா தன்மை ஏற்படுகிறது.

---

1) நாளமில்லாச் சுரப்பிகளில் ஏற்படும் கோளாறுகளாலும், உடல் பருமனாக இருக்கும் பெண்களுக்கும்,

2) கருப்பையில் ஏற்படும் பிறவிக் குறைபாடுகள், சினைப்பைக் குழல்களில் ஏற்படும் கட்டி, கழலைகள், மற்றும் அடைப்புகளினாலும்.

"தென்னாற்காடு மாவட்டம் திட்டக்குடியில் நான் தேநீர் விடுதி நடத்தி வருகிறேன். என் மனைவி பெயர் வேம்பு. எங்களுக்கு 1986ல் திருமணமாகி ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் குழந்தை இல்லாமல் தவித்தோம். பல்வேறு மகப்பேறு மருத்துவ நிபுணர்களிடம் சிகிச்சை பெற்றும் பலனில்லாமல் நம்பிக்கை இழந்தோம். எங்கள் வேதனைக்கு அளவே கிடையாது. போதாக் குறைக்கு எங்களை 'மலட்டுத் தம்பதியர்' என உறவினர்கள் கேலி பேசினர். வீட்டு விசேஷங்களுக்கு எங்களை அழைக்க மாட்டார்கள். அவர்கள் குழந்தைகளை எங்களிடம் தரக் கூட மாட்டார்கள். இதனால் பல அவமதிப்புகளுக்கு ஆளாகி வேதனை அடைந்திருந்தோம். இந்நிலையில் திருச்சி சித்த மருத்துவ நிபுணர் டாக்டர். கண்ணன் அவர்கள் பல குழந்தையில்லா தம்பதியர்களுக்கு சிகிச்சை அளித்து வெற்றி கண்ட செய்தியைக் கேள்வியுற்று அவரை அணுகினோம். அவர்கள் எங்கள் இருவருக்கும் எல்லாவித சோதனையும் செய்து எனக்கு விந்துவில் உயிரணுக்கள் மிகக் குறைவாக இருப்பதையும், என் மனைவி வேம்புவுக்கு கருப்பை தொற்றுக் கிருமிகளுடன் பலவீனமாக இருப்பதாகவும் கண்டு பிடித்தார்கள்.

எங்களை 'நீங்கள் கவலைப் படாதீர்கள்' என தைரியமும், ஆறுதலையும் கூறி சித்த மருந்துகளைக் கொடுத்தார்கள். ஒரு சில மாதங்களிலேயே என் மனைவி கர்ப்பமடைந்து அழகிய பெண் மகளை ஈன்றாள். பெண் குழந்தைக்குப் பரணி என்று பெயர் வைத்து இருக்கிறோம். எங்கள் வாழ்க்கையில் வெறுமையை நீக்கி ஒளியேற்றிய டாக்டரை நாங்கள் எங்கள் வாழ்க்கையில் மறக்க இயலாது.

-ரவி

3) சினைமுட்டை உற்பத்தியாகாமல் இருப்பதாலும்,

4) மாதவிடாய்க் கோளாறுகளாலும், பால்வினை நோய்களாலும், நீரிழிவு நோய், ரத்த அழுத்தம், சோகை, வலிப்பு முதலிய நோய்களின் காரணமாகவும்,

5) கருப்பையானது குழந்தையைத் தாங்கக் கூடிய வலிமை குறைந்து இருப்பதாலும்,

6) கருப்பையின் கழுத்தின் (உள்வாய்) சளிச்சவ்வு சினை முட்டைகளை எடுத்துச் செல்ல முடியாத நிலையில் இருந்தாலும் மலட்டுத் தன்மை ஏற்படும்,

7) பிறப்புறுப்புகளில் தொற்றுக்களினால் ஏற்படும் நோய்களின் காரணமாகவும் மலட்டுத் தன்மை ஏற்படுகிறது.

அதே போல ஆணுக்கும் குறைபாடு கீழ்க் கண்ட காரணங்களால் ஏற்படுகிறது.

1) விந்து உற்பத்தி சுரப்பிகளில் ஏற்படும் கோளாறுகள்,

2) நாளமில்லா சுரப்பிகளில் ஏற்படுகின்ற விகற்பங்கள்,

3) விதையில் ஏற்படுகின்ற வீக்கம், தாபிதங்கள், காயங்கள், பால்வினை நோய், தொழுநோய், முதலியவைகளாலும்,

4) விதைப் பைகளில் அதிக உஷ்ணம் தாக்குதல்,

5) மது, போதை மருந்துகள், அளவுக்கு அதிகமாக தூக்க மாத்திரை மற்றும் சில வகை மருந்துகளைத் தொடர்ந்து பயன்படுத்துதல் இவைகளின் காரணமாக நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு மலட்டுத் தன்மை உண்டாகிறது.

6) விந்துவை எடுத்துச் செல்லும் குழாயில் காச நோய்க் கிருமிகள் மற்றும் பால்வினை நோய்க் கிருமிகளால் தொற்று ஏற்பட்டு குழாயில் தடை ஏற்படும். சில சமயங்களில் பிறவியிலேயே ஏற்படும் குறைபாடுகளாலும் விந்துக்குழாயில் தடை ஏற்படுவதால் மலட்டுத் தன்மை ஏற்படும்.

7) சிறு வயதில் பூட்டுத்தாளம்மை நோய் ஏற்பட்டு அதைத் தொடர்ந்து விதைப் பையில் ஏற்படும் தாபிதத்தாலும், சில வகை மன நோய்களினாலும்,

8) மிகவும் இறுக்கமான உள்ளாடைகளை அணியக்கூடிய காரணத்தினாலும்,

9) விந்துவில் உள்ள உயிரணுவின் மாறுபட்ட அமைப்பாலும், ஆண்மைக் குறைவின் காரணமாகவும்,

10) சில சமயங்களில் புரஸ்த கோள தாபிதத்தாலும், மிகுரத்த அழுத்தத்திற்கான மருந்துகளை அதிக அளவில் பயன்படுத்துவதாலும், முன்னந் தண்டில் ஏற்படும் காயங்களினாலும், மற்றும் நீரழிவு நோய், சில வகை நுரையீரல் நோய்களிலும் இந்த மலட்டுத் தன்மை ஏற்படும்.

பெரும்பான்மையான இந்தக் குழந்தையில்லாக் குறையான மலட்டுத் தன்மையை அதிலும் சிறப்பாக எந்தப் பின் விளைவுகளும் இல்லாத இயற்கையான சித்த மருத்துவ முறையில் முழுமையான பலனை அடையலாம். இவ்வாறாக நூற்றுக் கணக்கான தம்பதிகள் என்னிடம் சிகிச்சை பெற்று மழலைச் செல்வம் பெற்று மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள்.

இந்த மலட்டுத் தன்மைக்கு பல்வேறு காரணங்கள் இருப்பதால் கணவன் மனைவி இருவரையுமே நேரில் முழுமையான பரிசோதனை செய்து அதற்கேற்றவாறு சிகிச்சை செய்ய வேண்டும்.

இவ்வாறு என்னிடம் சித்த மருத்துவ சிகிச்சை பெற்று குழந்தைச் செல்வம் பெற்ற ரவி-வேம்பு தம்பதியர் பேட்டியை மேலே படியுங்களேன்!

நீடித்து நிலைக்கும் வெண்மைக்கு

உஜாலா



UJALA

From Jyothy Laboratories

ஜோதி லேபாரட்டரீஸ்
பம்பாய்.

உஜாலாவின் இரகசியம்

நூதனமான மைக்ரோ ஒயிட்னிங் மற்றும் மைக்ரோ புரிஃபிகேஷன் தொழில்டெக்னாலஜியில் ஜோதி லேபிஞுடைய லேபாரட்டரியால் V+ ஃபார்முலா கொண்டு தயாரிக்கப்பட்டது உஜாலா.

இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் கோடிக் கணக்கான மக்களின் இதயங்களை கவர்ந்து நிரந்தரமாக விரும்பப்படுகிறது உஜாலா. இதுவே உஜாலாவின் அபார வெற்றியின் இரகசியமாகும்.

உஜாலாவைப் போன்று தோற்றமளிக்கும் ஏராளமானவைகள் விற்பனைக்கு வருகின்றன. அவைகள் உஜாலாவின் இரகசியத்தை பெற முடியாது.

இப்போது 250 மிலி ஃபேமிலி பேக்கிலும் கிடைக்கிறது.





ராஜாளி® நான்-ஸ்டிக் அதிசயம்
தொடர்கிறது...
இதுவரை தோசைக்கல், ஃப்ரை பான், கடாய் மட்டுமே தயாரித்து வழங்கி வந்த ராஜாளி இப்போது முதன் முதலாக யாரும் பார்த்திராத புதிய நான்-ஸ்டிக் இட்லி தட்டுகளும், நான்-ஸ்டிக் மில்க் பாய்லரும் தயாரித்து வழங்கி உங்களை அதிசயத்தில் ஆழ்த்த வந்திருக்கிறது.
இதெல்லாந்தான் கிடைக்கிறதே! இதிலென்ன அதிசயம்?!
RAJALI
அதிசயம்தான்!
நான்-ஸ்டிக்கில்
இதல்லாங்கூட
கிடைக்குமா?!
மில்க் பாய்லர் கூட
ராஜாளி நான்-ஸ்டிக்கா?!
மல்லிகைப் பூப் போன்ற மிருதுவான
இட்லிகள் தயார் செய்ய
எண்ணெய் தடவாமலேயே தட்டுகளிலிருந்து இட்லிகளை எடுக்கலாம்.
இட்லி ஒட்டாததால் மாவு விரயம் ஆகாது
நேரமும் எரிபொருளும் மிச்சம்
தட்டுகள் சுத்தம் செய்வது எளிது
எல்லா குக்கர் & இட்லி குக்கர்களிலும் பொருந்தக்கூடியது
4 தட்டுகள் மேலும் 6 தட்டுகளாக கிடைக்கிறது
நான்-ஸ்டிக்கில் இவையனைத்தும் கிடைப்பது அதிசயந்தானே!
தோசைக்கல் (Flat & Concave)
கடாய்
இட்லித் தட்டுக்கள்
சாஸ் பான்
ஃப்ரை பான்
எல்லா பிரபல பாத்திரக் கடைகளிலும் கிடைக்கும்
ISI முத்திரையினைக் கொண்டது
RAJALI
HOME EQUIPMENTS
50-A, Appar Swamy Koil Street, Thiruvottiyur, Madras - 600 019. ☎: 543391, 543867

சம்பந்திகளை ஸ்டேஷனுக்குப் போய் இரண்டு வேன் கார்கள் அழைத்து வந்தன. நேரே மண்டபத்துக்குக் காலையிலேயே வந்து விட்டார்கள். நிறையக் கூட்டம். மதுரையில் இருந்தே ஒரு பஸ் வேறு ஏற்பாடு பண்ணிக் கொண்டு வந்திருந்தார்கள்.

ரவியும் விஜியும் மாடிக்கும் கீழுக்குமாக அலைந்து ஓடியாடி, சம்பந்தி உபசாரம் பண்ணினார்கள். வந்திருப்பவர்கள் பெண்ணைப் பார்க்க விரும்புவார்கள் என்று ரம்யாவை அழகுப் பதுமையாக அலங்கரித்திருந்தாள் விஜி. அதே போல சிறிது நேரத்திற்கெல்லாம், மாடியிலிருந்து அழைப்பு வந்தது. விஜி ரம்யாவை அழைத்துக் கொண்டு மாடிக்குப் போனாள். தலையைக் குனிந்தபடி பயந்து கொண்டு போனாள் ரம்யா.

நடுஹாலில் பாதி பேர் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருக்க, சாப்பிட்ட மீதிப் பேர் வெற்றிலை போட்டுக் கொண்டு நாலு நாலு பேராக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

"டபிள் ஸ்வீட் போட்டிருக்கா, பரவாயில்லை" என்று ஒரு அம்மா விமர்சிக்க, உதட்டை வளித்துத் தோளில் நாசூக்காக இடித்துக் கொண்டாள் மற்றொரு அம்மாள்.

"என்ன பெரி.ய்.ய்...ய... ஸ்வீட்? காசி அல்வாவும் ரவா கேசரியும்? எங்க சாரு கல்யாணத்துலே ஒவ்வொரு வேளைக்கும் முந்திரி பர்பி, பாதாம் அல்வா மாதிரி காஸ்ட்லியா செய்தோம். அது மாதிரி யாரால் முடியும்?" என்று தன் பெருமை சாற்றிக் கொண்டாள் இன்னொருத்தி.

"ஆ! கல்யாணம்னா அது கல்யாணம்! இங்கே பார் முதல் வேளைக்கே சீப்பா ரெண்டு ஸ்வீட்டும் இட்லி பொங்கல் வடைனு ஹெவியா ஏதோ

4

கோதா
பார்த்தசாரதி

செஞ்சு இட்டு நிரப்பிட்டா. மத்த வேளை எப்படி இருக்குமோ? காப்பி ரொம்ப சுமார்தான்!"

முதலில் பேசியவளுக்கு ஜால்ரா போட்டாள் மற்றொருத்தி. ரம்யா பயந்து போய் விஜியைப் பார்த்தாள். கண்களில் நீர் தளும்பியது.

"அசடு கல்யாணம்னா இதெல்லாம் சகஜம்தான். நாலு பேர் கூடிப் பேசினா, நாலு வார்த்தை வளரும்தான். இதுக்கெல்லாம் கலங்கலாமா?" என்று காதருகில் ரகசியமாகப் பேசினாள் விஜி.

அதற்குள் வெற்றிலை போட்டுக் கொண்டிருந்த ஒருவர், "என்னம்மா நீதான் இந்த வீட்டு மாட்டுப் பெண்ணா? வெத்திலை இப்படியா வாங்கறது? முறம் மாதிரி பெரிசா இருக்கே. சிறிசா காரமாக இருக்க வேண்டாமோ வெத்திலை?"

"நீங்கள்ளாம் மெட்றாஸ்காரங்க. எங்களுக்குக் கும்பகோணம் வெற்றிலை, கைச் சீவல்தான் வேணும். இதெல்லாம் பார்த்து வைக்கிறதில்லையா?" என்று பாய்ந்தார்.

"ஓ! எல்லாம் தனித்தனியா வாங்கி வெச்சிருக்கு மாமா. எடுத்து வைக்க மறந்து போயிட்டா போலிருக்கு. இதோ போய்க் கொண்டு வரேன்!" என்று சமாளித்தாள் விஜி.

"ரமி. நீ இங்கேயே இரும்மா. கீழே போய் சீவல் கொண்டு வந்துடறேன்" என்று கீழே இறங்கிப் போனாள் விஜி.

"ஏண்டிம்மா விஜி. இது என்ன முதல் காப்பியே நல்லாயில்லையே. நாங்கள்ளாம் தஞ்சாவூர்க்காரா. டிகிரி காப்பி சாப்பிட்டுத்தான் பழக்கம்!" என்று புலம்பியபடி எதிரே வந்தாள் மங்களம்.

"இன்னிக்கு ஏகப்பட்ட முகூர்த்தம் மாமி. பாலுக்கு ரொம்ப டிமாண்ட். அதான் பால் கொஞ்சம் சுமாராப் போச்சு. புதுப்பால் வந்ததும் நல்லதா கொண்டு வரேன்னான். இதோ பால் வண்டி வந்திருக்கே. நான் போய்க் கிட்ட இருந்து நல்ல காப்பியா ஒரு டிரம்லே அனுப்பி வைக்கிறேன்"

என்று மறுபடியும் போனான் விஜி.

"ஏண்டி மங்களம்! காப்பி நல்லாத்தானே இருந்தது?"

வயதான மாமி ஒருத்தி கேட்டாள். மங்களம் சிரித்தபடி, "இப்ப நல்லா இருக்கு. ஆனா, கொஞ்சம் இப்படி கெடுபிடியா இருந்தாத்தான் மரியாதையா எல்லாம் நடக்கும்."

'மன்னி நம்மை இங்கே விட்டுட்டுப் போய் விட்டாளே. நாமாகக் கீழே எப்படிப் போவது?' என்ற தயக்கத்துடன் தவித்தபடி நின்றிருந்த ரம்யாவை, அங்குள்ள பெண்கள் மொய்த்துக் கொண்டனர்.

'எங்கே இப்படித் திரும்பு. தோடு எத்தனை காரட். வைரம் தானே. ஷைனிங்கே இல்லையே. வளை எத்தனை பவுன்? இப்படி ஈர்க்குச்சி மாதிரி மெலிசா இருக்கே. இரட்டை வடச் சங்கிலி போடலையா? வைர நெக்லஸ் போடறதா மங்கா சொன்னாளே. காசு மாலை இருக்கோ.'

'வேலைக்குப் போறயாமே. என்ன சம்பளம்? கல்யாணத்துக்கப்புறம் மதுரையில் வேலை கிடைக்குமா?' - பதில் சொல்லி மாளவில்லை.

ரம்யாவுக்கு வெறுப்பாக இருந்தது. இவர்களிடம் தன்னை விட்டுப் போன மன்னியின் மேல் கோபம் வந்தது.

ரம்யாவை ஆராய்ந்து முடித்ததும் அவளை அப்படியே விட்டு விட்டு அப்பொழுதுதான் அங்கிருந்து போன மங்களத்தைப் பற்றி வம்பு பேச ஆரம்பித்தார்கள்.

"அடியே. இந்த மங்களத்துக்கு வந்த பவிசைப் பாரேன். அந்த நாள்லே குடும்பம் நடத்த எவ்வளவு சிரமப்பட்டானு நமக்கெல்லாம் தெரியாதா? எல்லாம் புதுப்பணம்! பணத்திலேயே புரள்றா மாதிரியும் பன்னீரிலேயே தான் குளிக்கிற மாதிரியும் பேசறா பாரேன். பாவம் சம்பந்தி அப்பாவி. ஏமானியா





"AN F.D. THAT'S A COMFORT IN SICKNESS TOO ?"

"When I put my savings in a Fixed Deposit with Apollo Hospitals, little did I know that more than just my money would be well looked after! Two weeks ago, my daughter got jaundice. We wanted her to be in the best hands, so we took her to Apollo Hospital. Little did I realise that the Fixed Deposit I had made a year ago would turn out to be such a blessing in disguise! We received special attention, expert care, and a 15% discount on the hospital bill!"

"My daughter's recovering fast, we're all happy that things went so smoothly, and my money worked harder than I imagined!"

"Are your savings as safe, hardworking and supportive?"

15% OFF on treatment at Apollo!

HIGHLIGHTS

- 15% concession on all treatment and diagnostic tests at Apollo Hospitals, subject to a maximum of 10% of the value of the Deposit. Certain exclusions apply.
- This discount coupon is transferable to anyone by the deposit holder.
- Personal Accident Insurance for the first named deposit holder equal to the value of the Deposit.
- Post dated interest warrants, encashable at par, will be sent alongwith the Fixed Deposit Receipt.
- A Choice of monthly or quarterly interest warrants.
- Interest commences from the date of receipt of cheque/draft, subject to realisation.
- Deposits from Non-resident Indians accepted with repatriation rights.
- Minimum amount of Deposit accepted is Rs. 3,000 and thereafter, in multiples of Rs. 1,000. Outstation payments must be made through bank drafts.

Scheme A – Fixed Deposit

Period of Deposit	Rate of Interest per annum	Interest Payment
One Year	15.19%	Quarterly
Two Years	15.19%	Quarterly
Three Years	15.19%	Quarterly
1,2,3 Years	15.00%	Monthly

Scheme B – Cumulative Deposit

Period of Deposit	Amount payable on maturity of deposit on Rs. 3,000/-	Effective Annual Yield
One Year	Rs. 3,482	16.08%
Two Years	Rs. 4,042	17.37%
Three Years	Rs. 4,692	18.80%

APOLLO HOSPITALS
Enterprise Limited

Regd. Office: 19, Bishop Garden, Raja Annamalaipuram, Madras - 600 028.
Hospital Complex: 21, Greams Lane, Greams Road, Madras - 600 006.
Administrative Office: Ali Towers, 22 Greams Road, Madras - 600 006. Phone: 8266956, 8272026, 8255753

Adgraph/AP/596

இருப்பார் போலிருக்கு. கண்ணுலே விரலை விட்டு ஆட்டறா. எல்லாம் புதுப்பணம்டி. யம்மா. பணம் பண்ற வேலை!"

கிசுகிசு என்று பேசுவது போல் பேசினாலும் ரம்யாவின் காதில் எல்லாம் விழுந்தான செய்தது – விழட்டும் என்றே பேசினார்களோ?

நல்ல வேளையாக மன்னி வந்து காப்பாற்றினாள்.

பிறகு சாப்பாட்டின் போதும் ஏதோ கசாமுசா.

பையனுக்கு மாமா, வெள்ளைக் கடுக்கன்காரர் – வானத்துக்கும் பூமிக்குமாக குதித்துக் கொண்டிருந்தார். என்ன சண்டை, எப்படிச் சமாதானம் ஆயிற்று எதையும் யாரும் அவளிடம் சொல்லவில்லை.

வற்புறுத்திக் கேட்டபோதும் 'கல்யாணம்னா இப்படித்தான். நீ கல்யாணப் பெண். இதையெல்லாம் காதிலே போட்டுண்டு மனசு கஷ்டப்படாம, சிரிச்சுண்டு உற்சாகமா இரு' என்று மழுப்பி விட்டாள் விஜி.

மதியம் டிபன் காப்பி முடிந்து ஜானவாசத்துக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாயிற்று. தெருக் கோடியில் இருந்த கோவிலில் இருந்து நாலு வீதியும் சுற்றி வருவதாக இருந்தது. அவள் தோழிகள் அவளை இன்னொரு காரில் எதிர்கொள்ள, அழைத்துப் போனார்கள்.

இவர்கள் கார் ஜானவாசக்காரருகில் போய் நின்றது. வெட்கத்தினால் ரம்யா தலைகுனிந்திருந்தாள். சங்கரும் எந்தவிதமான 'பாவமும்' இல்லாமல் சும்மா அமர்ந்திருந்ததைப் பார்த்து தோழிகளுக்கு வியப்பு.

"மாப்பிள்ளை சார், கொஞ்சம் நகர்ந்து இடம் கொடுங்கோ. சத்திரம் வரைக்கும் சேர்ந்து உட்கார்ந்து ஜம்னு ஊர்வலம் வரலாம். யாருப்பா அந்த வீடியோகாரரையும் போட்டோகிராபரையும் இந்தப் பக்கம் அனுப்பு. ஏய் ரமி, ரொம்ப வெட்கப்படாதேடி. இறங்கிப் போய் ஜம்னு உன்னவர் பக்கத்துலே போய் உட்காரு" என்று மீரா உசுப்ப வெட்கத்துடன் இறங்கினாள் ரம்யா.

அந்தச் சமயம் எங்கிருந்தோ வந்து சேர்ந்தாள் மங்களம்.

"சேர்ந்து ஊர்வலமா? அதெல்லாம் பழக்கம் இல்லை. இது என்ன புது சம்பிரதாயம்? நண்டும் சிண்டும் வந்து நாட்டாண்மை பண்றது. பெரியவா பெருந்தலை மட்டு மரியாதை இல்லாம. ஏண்டா சங்கர்! அவங்க சொன்னா உனக்கு எங்கே போச்சு புத்தி? அம்மாவைக் கேளுங்கன்னு சொல்றதுக்கென்ன?" என்று சங்கரிடம் சீறினாள்.

"சாரி மாமி. இப்ப எல்லாக் கல்யாணத்துலேயும் இது மாதிரி செய்யறாங்க, அதான் ரம்யா அம்மாகிட்டே கேட்டுண்டு வந்தேன்" என்றாள் மீரா.

"மதுரத்திடம் கேட்டால் ஆயிற்றா? அந்த மதுரம்தான் ஆகட்டும். சம்பந்தியம்மாவைக் கேளுன்னு ஒரு வார்த்தை சொல்லியிருக்க வேண்டாம்?"

கோபம் கண்களை மறைக்க, 'ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு ரெட்டைத் தாழ்ப்பாள்' என்ற கதையாக 'யார் என்ன வேணா செய்யட்டும். இங்கே நான் கூடாதுன்னா கூடாதுதான்' என்றவள் ரம்யாவின் கைகளைப் பிடித்து அவள் வந்த காரில் பலவந்தமாக ஏற்றினாள்.

பிறகு சங்கரின் கார் டிரைவரை 'நீ போப்பா!' என்று உத்தரவு போட்டபடி பின் தொடர்ந்தாள்.

ரம்யாவுக்கு அவமானமாகி விட்டது. அம்மா அதிகம் அலைய வேண்டாம் என்பதால் கோவிலுக்கே வரவில்லை. கூட வந்த விஜியோ சத்திரம் நெருங்கி விட்டதால் மாப்பிள்ளையை வரவேற்க ஆரத்தி கரைக்க, இன்னும் நிச்சயதார்த்த ஏற்பாடுகளைக் கவனிக்க என்று சத்திரத்துக்குத் திரும்பி விட்டாள்.

ரம்யாவின் கண்களில் கண்ணீர் தளும்பி விட்டது. மற்ற தோழிகள் எல்லாம் 'அடே

இப்போது பிளாட்பாரங்களில் குழந்தைகளுக்கான தினப்படி தேவைக்கான தரமான துணிகள் கொட்டிக் கிடக்கின்றன. மக்களும் அள்ளிக் கொண்டு போகின்றனர். ஆனால் சிறு தவறு செய்கின்றனர். வாங்கிச் செல்லும் உடைகளை முக்கியமாக குழந்தைகளின் உடைகளை அப்படியே போட்டு விடுகிறார்கள் குழந்தைகளுக்கு. ரோட்டின் ஓரத்தில் கிருமிகளும், மண், தூசுகளும் துணியில் ஒட்டிக் கொள்ள வாய்ப்புண்டு. இதனால் குழந்தைகளுக்கு ஒவ்வாமை ஏற்பட ஏது வாகிறது. இதைத் தவிர்த்து புதிய துணிகளை டெட்டாலில் நனைத்து பின்பு பயன்படுத்தலாம்.

– மங்களா சாய்ராம்

> கொத்துமல்லித் தழையை எப்படி வைத்தாலும் அழுகி விடுகிறது. வேரை வெட்டிவிட்டு ஹாட்பேக்கில் போட்டு மூடிவைத்தேன். மூன்று நாள் வரை கெடாமல் அப்படியே இருந்தது.
> – மங்களா சாய்ராம்

யப்பா - பயங்கரமான ஆளுப்பா அந்தம்மா. டிபிகல் மாமியாரா இருப்பாங்க போலிருக்கே. ரமி எப்படிப்பா மானேஜ் பண்ணப் போறே?' என்று கேலி செய்தார்கள்.

இருந்தாலும் 'அவர்' ஏன் எதுவுமே பேசவில்லை? அப்போது மட்டுமில்லை, நிச்சயதார்த்த மனையில் உட்காரும் போதும் சரி, இப்போது மாலை மாற்றி ஊஞ்சலாடும் போதும் சரி, எப்போதும் எதையோ பறிகொடுத்ததைப் போல், பலிபீடத்துக்கு அழைத்துச் செல்லப்படுபவன் போல...

வாழ்க்கையில் ஒருமுறைதான் வரும் இந்தக் கல்யாண நாளன்று கூட மனசில் உல்லாச நினைவுகள் அலைமோதாதா?

ஆசையாக ஒரு பார்வை. கையைப் பிடிக்கும் போது குறும்பாக ஒரு கிள்ளல் எதுவுமே இல்லாமல் ஏன் இப்படி சோகமாக முகத்தை?

'ஐயோ - ஒருவேளை என்னை அவருக்குப் பிடிக்கவில்லையோ? அம்மாவின் வற்புறுத்தலுக்காகத் தலையை ஆட்டி விட்டாரா? மனசுக்குள் வேறு யாரையாவது விரும்பி இருப்பாரோ?

ச்! அப்படியெல்லாம் இருக்காது. கல்யாணம் என்பது ஆயுகள்ள வரை தொடரும் பந்தமல்லவா! அவர் வாழ்க்கைப் பிரச்னையில் கூடவா அம்மாவுக்கு பயந்து தன் ஆசையை வெளிப்படுத்தாமல் மறைப்பார்?

காலையில் விரதத்தின் போது கூட இலையில் உட்கார, மாப்பிள்ளைத் தோழன் என்று யாருமே இல்லை. கடைசியில் அவன் சித்தி பிள்ளையே கூட உட்கார்ந்தான். இந்த வயதிலும் நண்பர்கள்' இல்லாமல் இருக்க முடியுமா? அவன் எத்தனை கல்யாணங்களில் பார்த்திருக்கிறான்?

'கொஞ்சம் எழுந்து இப்படி அப்பா மடியிலே உட்காரும்மா!'

சாஸ்திரிகளின் குரல் அவளை இந்த உலகுக்கு அழைத்து வந்தது. அம்மா அருகில் நிற்க, அப்பா நாற்காலியின் மேல் இருந்த சிறிய வைக்கோல் பொதியின் மேல் அமர்ந்திருந்தார். ரம்யா வெட்கத்துடன் அவர் மடியில் உட்கார்ந்தாள்.

சில முக்கியச் சடங்குகளைச் செய்தபின் கூறைப் புடவையைக் கையில் கொடுத்து சங்கரிடம் கொடுத்து நமஸ்கரித்து வாங்கிக் கொள்ளும்படி சொன்னார்.

'என்னையே உங்கள் கைகளில் ஒப்படைத்திருக்கிறேன். ஏற்றுக் கொண்டு அன்பு காட்டி வாழ வைப்பது உங்கள் கடமை.'

மனசுக்குள் வேண்டியபடி அவன் கால்களில் விழுந்து வணங்கினாள்.

'நாத்தனார் - நாத்தனார்!' என்று சாஸ்திரிகள் கூச்சல் போட வனஜாவும் கிரிஜாவும் வந்து ரம்யாவை அழைத்துப் போனார்கள். மங்களமும் விஜியும் பின்தொடர்ந்து புடவை கட்டி அழைத்து வந்தார்கள்.

இந்தப் புடவை உடுத்தும் போதும் ஒரு மந்திரம் உண்டு. 'இந்தப் புடைவை உன்னைச் சூழ்ந்திருப்பது போல் இந்தச் சொற்கள் உன்னைச் சூழ்ந்து நலம் வழங்கட்டும்! கூறை உடுத்தி வந்த பெண், நல்ல மனம், நல்ல குழந்தைகள் இவற்றை வேண்டிக் கொண்டு கணவனைப் பின்பற்றி அவன் சகல தர்மங்களிலும் விரதங்களிலும் அவனைப் பின்பற்றுவதாக சங்கல்பித்துக் கொள்கிறாள்.

மனைக்கு வந்த பெண்ணுக்கு மாமன் மனைவி காலுக்கு மெட்டி அணிவிக்க வேண்டும்...

விளக்கிக் கொண்டே வந்த சாஸ்திரிகள் புடைவை கட்டி வந்த ரம்யாவைப் பார்த்ததும், 'முகூர்த்த நேரம் தப்பிடப் போறது. சீக்கிரம் வாங்கோ!' என்று மீண்டும் அவளை மகாதேவன் மடியிலேயே அமர்த்தினார்.

'கெட்டி மேளம் - கெட்டி மேளம்!' என்று மேளக்காரருக்கு சைகை காட்டி, 'யாரும்மா, நாத்தனார், இப்படி வாங்கோ!' என்று அழைத்தார்.

சுபயோக சுபமுகூர்த்தத்தில், சங்கர் ரம்யாவின் சங்குக் கழுத்தில் மஞ்சள் கயிற்றில் கோத்த திருமாங்கல்யத்தைக் கட்டி, ஒரு முடிச்சுப் போட மீதி இரண்டு முடிச்சுக்களை வனஜாவும் கிரிஜாவும் போட்டனர். பிறகு இருவரும் கையைப் பிடித்துக் கொண்டு அக்னிக்கு வலதுபுறமாக பெண்ணின் வலது காலை ஒரோரு அடியாக எடுத்து வைக்க வேண்டும்.

மொத்தம் ஏழு அடிகள் என்பதால் சப்தபதி என்று பெயர் பெறுகிறது. ஒவ்வொரு அடிக்கும் அன்னம், புஷ்டி, விரத அனுஷ்டானம், சுகம், பசுலாபம், ருது அனுகூலம், ஹோமத்தில் பங்கு

உங்கள் மகளின் வாழ்வில் என்றும் ஆனந்தம் மலர...
அவள் எதிர்காலம் பொன்னாக மின்னிட
LVB-யின் தனசக்ரா திட்டம்.



சிறப்பம்சங்கள்:

- பொன்னான எதிர்காலம் மலர்ந்திட உருவாக்கப்பட்ட சேமிப்புத்திட்டம்
- 57 மாதங்களில் பணம் இரட்டிப்பாகிறது
- கடன் வசதி உண்டு
- உங்கள் குழந்தையின் எதிர்காலத்திற்கு ஓர் உன்னத திட்டம்

என்றென்றும் ஆனந்தம் மலர,
இன்றே சேருங்கள்

DHANACHAKRA • LVB • SCHEME

ஜி.வி. ராவ்
சேர்மன்

நீண்டகால டெபாஸிட்களுக்கு LVB 16% வட்டி அளிக்கின்றது.

மேலும் விபரங்களுக்கு அணுகுவீர்:

லக்ஷ்மி விலாஸ் வங்கி லிமிடெட்.

பதிவு மற்றும் நிர்வாக அலுவலகம்:
சேலம் ரோடு, காதப்பாறை
கரூர் - 639 006. தமிழ்நாடு

உயர்வான சேவையை நட்புடன் வழங்கும் LVB

ADWAVE/LVB/5190 TAM A

நாங்கள் எங்களது மற்றும்
உங்களின் எதிர்காலத்தை
நிர்ணயித்து கொண்டுள்ளோம்!

1987ம் ஆண்டு துவங்கப்பட்டது முதல் ஈஸ்வரி குரூப் தரமான முதலீட்டாளர்களின் நிதி தொடர்பான சேவையில் மகிழ்ச் திருப்தியுமளிக்கும் வகையில் மிகச் சிறப்புடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. இன்று ஈஸ்வரி தனது மதிப்புமிகு வாடிக்கை களுக்கு பல வழிகளில் சேவை புரிந்து வருகிறது.

ஈஸ்வரி குரூப் : வலிமையான பன்முகப்பணி.

ஈஸ்வரி ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட். : திண்டுக்கல்லில் ஒரு பல கோடி திட்டம். உள்நாட்டு மற்றும் சர்வதேச நூல் தொடர்புள்ள திட்டம்.

ஈஸ்வரி பெனிபிட் ஃபண்ட் லிமிடெட். : சொத்து மீது கடன், நகைக்கடன், மற்றும் பல முதலீடு திட்டங்கள்.

ஜெயவர்ஷினி பிராபர்டீஸ் லிமிடெட். : சென்னையில் 1,00,000 ச.அ. மற்றும் கோயம்புத்தூரில் 2,00,000 ச.அ. பரப்பளவு கொ வணிக வளாகம் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

ஈஸ்வரி அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பணி.

பலகோடி மதிப்பு கொண்ட திட்டங்கள் சென்னையில் அசோக் நகர், கீழ்ப்பாக்கம், ஸ்டெர்லிங் ரோடு ஆகிய பகுதி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈஸ்வரி ஹயர் பர்ச்சேஸ் அண்ட் லீசிங் லிமிடெட். : இது ஒரு லிமிடெட் கம்பெனி. வாகனங்கள் (இரண்டு மற்றும் நான்கு சக் தவணை முறையில் வாங்க உதவும் நிறுவனம். பில் டிஸ்கவுண்டிங் மற்றும் லீசிங் பணியும் செய்கிறது.

ஈஸ்வரி சிட் ஃபண்ட்ஸ் (பி) லிமிடெட். : தற்சமயம் 25 கோடி ரூபாய் விற்று முதல் (Turn over) செய்யும் ஈஸ்வரி சிட் ஃபண (பி) லிமிடெட். தனது சந்தாதாரர்களின் தேவைக்கேற்ப பல புதுமையும் கவர்ச்சியும், நிறைந்த திட்டங்களை வழங்குவதில் (பெற்றது. **மெட்ராஸ் கோச்சஸ். :** ஆட்டோமொபைல் பாடி பில்டிங் யூனிட் (ஆம்னி மற்றும் ஹைடெக் பஸ்கள்). கட்டுமானப் பண சிறப்புறச் செயல்படும் நிறுவனம். அசோக் லைலண்டு, பெப்சி கோலா, R.G.T.C., T.T.D.C. இந்திய விமான துறை, ஆவடி (தொழிற்சாலை மற்றும் பல நிறுவனங்கள் எங்களின் வாடிக்கையாளர்கள்.

ஈஸ்வரி பைனான்ஸ் மற்றும் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் : ரிசர்வ் வங்கியின் நெறிமுறை பிரிவு 45.S.சாப்டர் III-C RBI Act விதிகளுக்கிணங்க, டெபாசிட்டுக்கள் திரட்டுவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள நிறுவனம்.

எதிர்காலதிட்டங்கள்

i) ஓட்டல் தொழில் : தமிழ்நாடு - சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய நகரங்களில் 3 நட்சத்திர ஓட்ட நிறுவ உள்ளோம். 1997-98ல், முதல் கட்டபணி துவக்கப்பட உள்ளது.

ii) வண்ண மலர்கள் வளர்ப்புத்திட்டம் : தென் இந்தியாவில் முதல் முறையாக, 2,000 ஏக்கர் அளவில் பண்ணை வணிகத் தி மற்றும் பண்ணை நிலங்கள் பயன்படுத்துதல் திட்டம் இதன் மூலம் 100% நம்பகமான லாபம்.

iii) ஃபிளவர் எக்ஸ்டிராக்ட் திட்டம் : இதுவும் ஒரு பல கோடி ரூபாய் திட்டம் 100% ஏற்றுமதி திட்டம். ஐரோப்பா மற்றும் தெற்கு ஆ சந்தைக்கு மலர்கள் ஏற்றுமதி செய்யும் லாபம் ஈட்டக்கூடிய திட்டம்.

iv) நவீன நகர அமைப்பு வளர்ச்சி திட்டம் : தமிழகமெங்கும்.

ஓ

ஈஸ்வரியின்
60 நாட்கள்
டெபாசிட் சேகரிப்பு விழா
ஜூலை 15 - செப். 15
குறைந்த கால திட்டம்

டெபாசிட் தொகை (ரூ.)	90 நாட்கள் 20% p.a. ஊக்கத்தொகை/பரிசு	120 நாட்கள் 21% p.a. ஊக்கத்தொகை/பரிசு	6 மாதங்கள் 22% p.a. ஊக்கத்தொகை/பரிசு	ஒரு வருடம் 24% p.a. ஊக்கத்தொகை/பரி
10,000	ரூ.45	ரூ.55	ரூ.65	1%
25,000	ரூ. 175	ரூ.200	ரூ. 225	1%
50,000	1 கிராம் தங்கக்காசு	1கிராம் தங்கக்காசு	1 கிராம் தங்கக்காசு	1%
1,00,000	2 கிராம் தங்கக்காசு	3 கிராம் தங்கக்காசு	3 கிராம் தங்கக்காசு	1%
1,50,000	4 கிராம் தங்கக்காசு	5 கிராம் தங்கக்காசு	5 கிராம் தங்கக்காசு	1%
2,00,000	7 கிராம் தங்கக்காசு	7 கிராம் தங்கக்காசு	8 கிராம் தங்கக்காசு	1%

மாதாந்திர வட்டி முன்னதாகவே ரொக்கமாக வழங்கப்படும்.
அசல் தொகை முன்னதாகவே பின் தேதியிட்ட காசோலையாக வழங்கப்படும்.

வாழைப்பழம் (நன்றாக பழுத்தது) அதிகம் இருந்தால் தோலை நீக்கி உப்பு, ஒரு பச்சை மிளகாய் சேர்த்து நன்கு கையாலேயே மசித்துத் தேவைக்கு ஏற்ப தயிர் சேர்த்து பச்சடி போல் உபயோகிக்கலாம். சாப்பாட்டிற்கும் தொட்டுக் கொள்ளலாம். குழந்தைகள், பெரியவர்கள் அனைவருக்கும் விருப்பம் உடையதாக இருக்கும்.

— மாதங்கி

முதலியவற்றை விஷ்ணுவிடம் தன் மனைவிக்காக பிரார்த்திக்கிறான் கணவன்.

கல்யாணம் ஒருவழியாக முடிந்து வந்தவர்கள் விடைபெற்றுச் சென்றனர். கடைசிப் பந்தியில் வீட்டு மனிதர்கள், சம்பந்தி பேரில் முக்கியமானவர்கள் சாப்பிட உட்கார்ந்தனர்.

சாப்பிடும் போது கூட அவர்கள் பக்கத்தில் கேலி செய்ய ஆள் இல்லை. ரவி – விஜி, ராஜா, ரமேஷ், விதுபிரியா அவள் தோழிகள் எல்லாரும் சூழ்ந்து நின்று கொண்டு எச்சில் இலையிலிருந்து அவள் இலைக்குப் போடும்படியும், சங்கரை ரம்யாவுக்கு ஊட்டி விடும்படியும் கலாட்டா செய்து கொண்டிருந்தார்கள்.

"இதெல்லாம் என்ன நான்சென்ஸ்? எச்சில் போடறதும் ஊட்டி விடறதும், நானென்ன சின்னப் பாப்பாவா? இப்படியெல்லாம் கலாட்டா பண்ணால், நா சாப்பிடாமலே எழுந்து போயிடுவேன்" என்று சங்கர் எரிந்து விழவும், முகம் கருங்கி கண்கலங்கி, நழுவி விட்டனர்.

அவர்கள் சாப்பிட்டு முடிக்கும்வரை அந்தப் பக்கம் தலைகாட்டவே இல்லை. தனியாக ரம்யாவைப் பார்த்ததும், "ஏய் ரமி! உன் புருஷன் என்ன துர்வாசருக்கு தம்பியா இருப்பார் போலிருக்கே. ஸ்போர்டிவா எதையுமே எடுத்துக்க மாட்டாரோ?" என்று ஆரம்பித்தாள் பிரியா.

"ஏன் பிரியா? அவர் சொன்னதுலே என்ன தப்பு? பழைய காலம் மாதிரி எச்சிலைப் போடு, ஊட்டி விடுன்னு நீங்களும் ரகளை பண்ணி இருக்க வேண்டாம். காலையிலிருந்து ஹோமப் புகையில் உட்கார்ந்து தலைவலியோ, கண் எரிச்சலோ என்ன அசௌகர்யமோ!" என்று சமாளித்தாள்.

"ஓ...கோ...கோ... வீட்டுக்காரரைச் சொன்னதும் ரோசம் பொத்துண்டு வக்காலத்து வாங்கிண்டு வரா, பாரேன்!" என்று பிரியா சொல்லவும் எல்லாரும் சேர்ந்து சிரித்தனர்.

"கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கோ, ரமி. நலங்கு, ஹோமம், ரிசப்ஷன்னு வரிசையா ஃபங்ஷன் இருக்கு" என்று தலைப் பின்னலைத் தளர விட்டபடி சொன்னாள் விஜி.

"மன்னியை மாடிக்கு கூட்டிக்கிட்டு வரச் சொன்னா" என்று வந்து நின்றனர் வனஜாவும் கிரிஜாவும். ரம்யா கண்ணை மூடி ஒரு நிமிஷம் கூட ஆயிருக்காது. அதற்குள்? பரிதாபமாக விஜியைப் பார்த்தாள் ரம்யா.

"போயிட்டு வாம்மா. சாயங்காலம் அவங்கதான் தலைபின்னணும். கிரகப்பிரவேசம் ஆயாச்சன்னா அவங்களோட தான் இருக்கணும். மேலும் மாப்பிள்ளைக்கு உன்னைத் தனியா பார்க்கணும், உன்னோட பேசணும் போல் ஆசையாயிருக்காதா?" என்று காதருகே ரகசியமாகக் கூறிய விஜி, அவர்களுடன் அனுப்பி வைத்தாள்.

பயந்து கொண்டே மாடிக்குப் போனாள் ரம்யா.

ஹாலில் கட்டிலில் படுத்து சங்கர் ஹாய்யாகத் தூங்கிக் கொண்டு இருந்தான். மங்களமும் இவளுடன் பேசிக் கொண்டிருந்தவள், கண்ணை இழுக்க அப்படியே கீழே படுத்து விட்டாள். கொஞ்ச நேரத்தில் அவனிடம் இருந்து வந்த குறட்டையொலி, அவனும் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டதைத் தெரிவித்தது. ரம்யா மட்டும் விழித்துக் கொண்டிருந்தாள்.

"மாமி, காப்பி டிபன் சூடா இருக்கு. எல்லாரும் சாப்பிடலாமே!"

விஜி குரல் கொடுத்துக் கொண்டே வந்தாள்.

"காப்பி இருக்கட்டும்டியம்மா. உன் மாமனாரிடம் கப்புனி சொல்லலையா? வைரநெக் லஸ்தான் முடியாதுன்னுட்டீங்க. பச்சைகல் செட்டாவது போடும்படி சொல்லி அனுப்பினேனே! போடறதா ஒப்புக் கொண்டதாக கப்புனி சொன்னாரே!



பௌர்ணமி பூஜைக்கு செய்த பஞ்சாமிர்தம் நிறைய மீந்து விட்டது. அதில் ஒரு கைப்பிடி கோதுமை மாவு சேர்த்துப் பிசைந்து, அப்பமாக இட்டேன். நிமிடத்தில் பழ அப்பம் பறந்து விட்டது.

- பிரேமா மணி

ரம்யா கழுத்துலே காலையில் இருந்து பாக்கறேன். அப்படி எதுவும் காணோமே? சொன்னா சொன்னபடி செய்ய வேண்டாமா? அதைத்தான் எங்க அண்ணாவை விட்டு கேக்கச் சொன்னேன். அதுக்கு உங்க மாமனார் 'கண்டிப்பா சாயங்காலத்துக்குள்ளே வந்துடும். தயவுசெய்து சத்தமா பேசாதீங்க. என் பெண்டாட்டிக்கு ஹார்ட் அட்டாக் அதிர்ச்சி கூடாது'ன்னு கையைப் பிடிச்சுண்டு கெஞ்சினாராம்."

கோபாவேசத்துடன் இருந்தாலும் மெதுவாகவே பேசினாள் மங்களம். ரம்யாவின் உடல் நடுங்கியது.

"தப்பா நெனச்சுக்காதீங்க மாமீ! அப்பா எதிர்பார்த்த இடத்தில் இருந்து பணம் வரல்லை. அதனால்தான் தாமதம். ரிசப்ஷனுக்காவது போட்டுடலாம்னுதான் எங்க வீட்டுக்காரரும் ரொம்ப முயற்சி பண்ணார். எங்கேயும் புரட்ட முடியல்லை.

உடனே தீபாவளி வரது. அதற்குள் எப்படியும் பண்ணிடலாம்னு மாமாகிட்டே சொல்லிண்டிருந்தார்..."

விஜி பயந்தபடி சொன்னாள்.

''அப்படியா? எனக்குத் தெரியும். மாமாட்டா சொன்னாரா? என்கிட்டன்னா சொல்லியிருக்கணும்? புகையிலையும் சீவலும், கும்பகோணம் வெத்திலையும் இருந்தா போதும் இவருக்கு. யார் எது சொன்னாலும் தலையாட்டிடுவார்.

அதென்ன மனுஷாளுக்கு வாக்கு நாணயம் வேண்டாமா? முதல்லே எல்லாத்துக்கும் தலையாட்டிட்டு. இப்ப தீபாவளிக்குன்னா என்ன அர்த்தம்? மூணு முடிச்சு போட்டுட்டா, மாப்பிள்ளை நம்ம கைக்குள்னேங்கிற எண்ணமா?" என்று கத்தினாள் மங்களம்.

விஜியின் உடல் நடுங்கியது.

'இது பெரிய சண்டையாகிடுமோ? தான் இதைப் பற்றி பேசி இருக்கக் கூடாதோ? எனக்கு ஒன்றும் தெரியாது. பெரியவரைக் கேட்கணும் என்று சொல்லி இருக்கலாமோ? பெரியவர்கள் பேசிக் கொள்ளட்டும் என்று மௌனம் சாதித்திருக்கலாமோ?'

மங்களம் போட்ட கூச்சலில் பயந்து போய் "மன்னி!" என்று கண்ணீருடன் தழுவிக் கொண்டாள் ரம்யா. தன் தோளின் மேல் படிந்து இருந்த அவள் கைகளை ஆறுதலாய்த் தட்டிக் கொடுத்தாள் விஜி. 'பயப்படாதே - நான் இருக்கேன்!" என்று ரகசியம் பேசின அவள் கைகள்.

விஜியின் தோளில் சாய்ந்து இருந்த ரம்யா, சங்கர் கட்டிலில் எழுந்து உட்கார்ந்திருப்பதையும், தன்னையே உறுத்துப் பார்ப்பதைக் கண்டு பயந்து விலகினாள்.

'ப்ளீஸ் ஏதாவது பேசுங்களேன். பேசி உங்கள் அம்மாவின் டென்ஷனைக் குறையுங்களேன்!' என்பது போல் அவனை கெஞ்சுதலாகப் பார்த்தாள். அவனோ மௌனம் சாதித்து அவள் திகிலை அதிகமாக்கினான்.

நல்லவேளையாக மேலும் எதுவும் சொல்லாமல் ரம்யாவை விஜியுடன் கீழே அனுப்பி விட்டாள்.

"மன்னி. இதெல்லாம் என்ன? எனக்குப் பயமா இருக்கு!"

எந்த நிமிஷம் மங்களம் நெக்லஸைப் பற்றி மகாதேவனிடமே நேரில் கேட்டு, அந்த இனிய மாலைப் பொழுதைக் கெடுத்து விடுவாளோ என்று பயந்ததற்கு மாறாக, மங்களம் நல்ல குஷியான 'மூடி'ல் இருந்தாள்.

ரிசப்ஷனுக்காக வந்திருந்த பெரிய மனிதர்களையும், அவர்களின் படகுக் கார்களையும், அவர்கள் கொண்டு வந்த பிரம்மாண்டமான, விலை உயர்ந்த பரிசுகளையும் கண்டு வாயடைத்துப் போய், பிரமித்து விட்டாள் மங்களம்.

பூகம்பத்துக்கு முன் நிலவும் இறுக்கம் போல் அமைதி நிலவியது கல்யாண மண்டபத்தில். ரிசப்ஷன் முடிந்து சாப்பாட்டுக்குப் பின் எல்லாரும் விடைபெற்றுச் சென்று விட்டார்கள். மகாதேவன் குடும்பம் மங்களம் குடும்பம் தவிர சில நெருங்கிய உறவினர்கள் மட்டும் தங்கி இருந்தனர்.

மாடியில் முதல் இரவுக்காக ஒரு அறை நேர்த்தியாக ஜோடிக்கப்பட்டுக் கொண்டு இருந்தது. பூக்கடையே அங்கு வந்து கட்டிலும், அறை முழுதும் பூத்திருந்தது. யாரையும் மாடிப் பக்கம் விடாமல் கதவைச் சாத்திக் கொண்டு ரவியும் விஜியும் பார்த்துப் பார்த்து அலங்கரித்தனர்.

இரவுச் சாப்பாட்டின் போது விஜி, புது வெள்ளித் தட்டில் சாதம் போட்டு ரம்யாவுக்கும் சங்கருக்கும் பால் கொண்டு வைத்து பால் சாதம் சாப்பிடும்படி கூறினாள்.

கூட சாப்பிட்டுக் கொண்டிருந்த மங்களம், "இப்ப எதுக்கு இதெல்லாம்?" என்றாள்.

விஜிக்கு என்ன சொல்வதென்று புரிய வில்லை. மேலும் வெட்கம் அவளைத் தடுத்தது.

"அது... அது... அது வந்து... ராத்திரி இதெல் லாம்... ஒரு சம்பிரதாயம்தானே?" என்றாள் தடுமாறியபடி.

"ம்... சம்பிரதாயம்! எனக்கு நீ சொல்லித் தரியா? எனக்குத் தெரியாதா? சாந்தி முகூர்த்தம் இன்னிக்கு இங்கே பண்ணப் போறதா யார் சொன்னா?" என்றாள் மங்களம் கம்பீரமாக.

விஜி திகைத்துப் போனாள்.

"இல்லே மாமி. இன்னிக்கு ராத்திரியே செய் யறது வழக்கம்தானே?" என்றாள் பயந்தபடி.

"வழக்கம் என்ன, பொல்லாத வழக்கம்? உங்க வீட்டு வழக்கம் எங்களுக்குச் சரிப்பட்டு வருமா? அவாவா சம்பிரதாயம் அவாவாளுக்கு. சாப்பிட்டதும் பஸ்ஸிலே கிளம்பறோம். திருச்சிக்குப் பக்கத்துலே எங்க பூர்விக கிராமம் இருக்கு.

அங்கே போய்ப் பிரார்த்தனை, தரிசனம் முடிச்சிண்டு, மறுநாள் எங்க புது வீட்டிலதான் கிரகப்பிரவேசம், ரிசப்ஷன். அப்புறமும் நிறைய பிரார்த்தனை இருக்கு. அதையெல்லாம் முடிச் சிண்டு அப்புறம்தான் இந்த சம்பிரதாயம் எல் லாம் நடத்தற வழக்கம் எங்க வீட்டில்..."

"இதெல்லாம் நீங்க சொல்லவே இல்லையே மாமி. இதோ போய் எங்க மாமனாரையும் மாமியாரையும் கூட்டிண்டு வரேன்" என்று மனம் பதறியவளாய்க் கீழே ஓடினாள் விஜி.

"இன்னிக்கே ஊருக்குக் கிளம்பணும்னு தெரியாதே. நாளைக்கு இன்னும் ஃபங்க்ஷ னெல்லாம் பாக்கி இருக்கே. பிரார்த்தனை விஷ யமும் முன்னாடியே சொல்லல்லையே தெரிஞ் சிருந்தா இந்த ஏற்பாடெல்லாம் பண்ணியிருக்க மாட்டோம்.

அறையெல்லாம் ஜோடிச்சு ஆன பிறகு நின்னு போனால் மனசுக்குக் கஷ்டமாயிருக்கும். அதனால பெரிய மனசு பண்ணி..." என்று கெஞ்சுதலாகச் சொன்னார் மகாதேவன்.

"யாரைக் கேட்டுண்டு இந்த ஏற்பாடெல் லாம் பண்ணீர்? எங்கிட்ட முன்னாடி ஒரு வார்த்தை சொல்லியிருக்க வேண்டாமோ? பிரார்த்தனை முடிந்த பிறகுதான் எல்லாம். ரம்பாவுக்கு வேண்டியதைத் தயார் பண்ணி அரைமணியிலே அனுப்புங்க.

நா மேலே போறேன். பாக் பண்ண யாரை யாவது அனுப்புங்க. எனக்குத் தலைக்கு மேலே வேலை இருக்கு! டே சங்கர்! மசமசன்னு பேசிண்டு நிக்காம சீக்கிரம் மாடிக்கு வா!" என்று உத்தரவு போட்டு விட்டுப் போய் விட் டாள் மங்களம்.

மகாதேவன் செய்வதறியாமல் திகைத்துப் போனார்.

'கடவுளே! அவர்களிடம் கேட்க வேண்டும் என்று ஏன் தோன்றவில்லை? இருந்தாலும் நல்ல நாளும் அதுவுமாக இப்படியா முறித்துக் கொண்டு போவார்கள்?' சம்பந்தி சுபாவமோ, அல்லது அம்மாள் ஆதிக்கம் அதிகமோ எதி லுமே பட்டுக் கொள்வதில்லை.


மத்தியானமே மற்ற உறவினர்கள் போல் அவரும் கிளம்பி விட்டார். மதுரை சென்று வரவேற்பு வேலைகளைக் கவனிக்கணும் என் றார். அம்மாளிடம் முறையிட்டது பலிக்க வில்லை. மாப்பிள்ளையிடம் கேட்டுப் பார்க்க லாமா?

"மாப்பிள்ளை முன்னாடியே சொல்லாதது தப்புதான். மன்னிச்சுடுங்க. இத்தனை ஏற்பாட் டுக்குப் பிறகு நிறுத்தினால் அபசகுனமாப்பட றது. தயவுசெய்து இரவு தங்கி விட்டுக் காலை யில் போகலாம்னு அம்மாவிடம் சொல்லுங்க" என்று கெஞ்சினார் மகாதேவன்.

"ஓ... நோ. அதெல்லாம் முடியாது. அதான் அம்மா சொன்னாளே, பிரார்த்தனைன்னு? மாடிக்குப் போய் நானும் பார்த்தேன். இதெல் லாம் என்ன அநாகரிகம்? சினிமா டிராமா

காலியான டூத் பேஸ்ட் டியூபுகளை இரண்டாகக் கத்தரித்து தண்ணீரில் ஊறவைத்துப் பிறகு அந்தத் தண்ணீரில், கண்ணாடி ஜன்னல்கள், ஸ்கூட்டர், சைக்கிள் இவைகளைத் துடைக்கப் பளபளப்பாகவும், கறை நீங்கியும் இருக்கும்.

— ஆர். பார்வதி



தயிர் விட்டு செய்யும் அவியல், இராத்திரி நேரத்தில் புளித்து விடுகிறது. இதைத் தவிர்க்க, தேங்காய், சீரகம், பச்சை மிளகாய் இவற்றை அரைக்கும் போது நெல்லிக்காய் அளவு புதுப் புளியை சேர்த்து அரைத்து விட்டால், அவியல் மறுநாள் கூட புளிக்காமல் இருக்கிறது. தயிர் தேவையில்லை.

\- கீதாஞ்சலி



மாதிரி? எனக்கு இப்ப செலவு பண்ணி இதை எல்லாம் யார் உங்களைப் பண்ணச் சொன்னா?" என்று பாய்ந்தான்.

ரம்யாவுக்கு வேதனையாக இருந்தது. பெண்ணைப் பெற்றவர்கள் என்றால் அவ்வளவு மட்டமா? பாவம் அப்பா. ஏன் இவர்களிடம் இப்படிக் கூனிக்குறுகி பணிந்து போகிறார்? மன்னிப்பு கேட்க வேண்டியது அவர்கள் அல்லவா?

வேறுவழியில்லாமல் மதுரமும் மகாதேவனும் திரும்பி விட்டார்கள். ரம்யாவைக் கொண்டு விட விஜியும் ரவியும் போகலாம் என்று பாக் செய்ய ஆரம்பித்தனர். எல்லாருக்கும் தாம்பூலம் கொடுத்து விட்டு வாசலில் ரெடியாக நின்ற அவர்கள் பஸ்ஸில் தங்கள் சூட்கேஸை வைக்கப் போனாள் விஜி.

"அடடே நீ எங்கேம்மா பெட்டியும் படுக்கையுமா கிளம்பிட்டே? எங்காவது ஊருக்குப் போறயா, என்ன?"

பஸ் அருகில் நின்றபடி சாமான்களை ஏற்றுவதை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்த மங்களம் கேட்டாள். எல்லாரும் பஸ்ஸில் ஏறியாகி விட்டது. ரம்யா வனஜா கிரிஜாவுடன் சங்கர் கோபி ரமணியுடன் உட்கார்ந்திருக்க, சில உறவினர்கள் தவிர பஸ்ஸில் அதிகக் கூட்டம் இல்லை.

திடுக்கிட்ட விஜி, "அது வந்து... மாமி... ரம்யாவைக் கொண்டு விட நானும் இவரும் வரலாம்னு... அதான்" என்று தடுமாறினாள்.

"எதுக்குடியம்மா வீணா சிரமப்பட்டு அலையணும்? உங்க பெண்ணை நாங்க ஒண்ணும் கடிச்சு முழுங்கிட மாட்டோம்.

பத்திரமா பாத்துக்கறோம். உங்களுக்கு இங்கே மண்டபம் காலி பண்ண, கணக்குத் தீர்க்கன்னு எத்தனையோ வேலை இருக்குமே? எனக்கும் அங்கே கொள்ளை வேலை காத்துண்டிருக்கு. சம்பந்தி உபசரணைக்கு ஏது நேரம்? வேலை மெனக்கிட்டுண்டு இப்ப எல்லாத்தையும் போட்டது போட்டபடி போட்டுட்டு ஓடி வர வேண்டாம். சாவகாசமா வந்து உங்க நாத்தனார் குடித்தனம் பண்றதைப் பார்க்கலாம்."

'நீ வர வேண்டிய அவசியம் இல்லை!' என்று அவ்வளவு பேர் முன்னாலும் சொல்லி விட்டது விஜிக்கு வருத்தமாக இருந்தது. வாடின முகத்துடன் ரம்யாவுடன் பேசினால், அழுது விடுவோமோ என்று பயந்து கீழே இறங்கி விட்டாள் விஜி.

போலியாக ஒரு புன்னகை முகமூடியைப் போர்த்தியபடி, ரம்யா உட்கார்ந்து இருக்கும் ஜன்னலருகே சென்றாள்.

"ரமி. சௌகர்யமா போயிட்டு வாம்மா. நாங்க அடுத்த மாசம் வரோம். ஃபார்மாலிடீஸெல்லாம் எதுக்குன்னுட்டார் உங்க மாமியார். நியாயம்தானே? நம்ம கஷ்டம் தெரிஞ்சு அனுசரிச்சுண்டு போற மாமியார் கிடைக்க, நீ ரொம்பக் கொடுத்து வெச்சிருக்கணும்மா.

அடுத்த முறை நாங்க வரும்போது 'இந்த மாதிரி ஒரு மாட்டுப் பெண் கிடைக்க நாங்க தான் ரொம்பக் கொடுத்து வெச்சிருக்கணும்'னு" உங்க மாமியார் சந்தோஷமாச் சொல்லணும். அப்படி சமத்தா நடந்துக்கணும். நீ படிச்சவ. உனக்கு நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை."

மேலே பேச முடியாமல் குரல் அடைத்துக் கொள்ள, அப்படியே ரம்யாவின் கைகளில் முகத்தைப் பொத்திக் கொண்டு கதறி விட்டாள் விஜி. தன் கண்ணீரைத் துடைக்கவும் மறந்து விஜியின் கண்ணீரைத் துடைத்தாள் ரம்யா.

"அழாதீங்கோ மன்னி. நீங்க அழுதா எனக்கும் அழுகை வரது. நா சமத்தா இருப்பேன். கண்டிப்பா அடுத்த மாசம் வாங்க மன்னி! உங்களையெல்லாம் விட்டுட்டு எப்படித்தான் இருக்கப் போறேனோ? அப்பா அம்மா வழியனுப்ப வாசல் வரைக்கும் கூட வரல்லியே, என் மேல கோபமா, மன்னி?" என்றாள் ரம்யா கேவியபடி.

ரவி ஓடி வந்தான், அரைகுறையாக ரம்யா சொன்னதைக் காதில் வாங்கிக் கொண்டு. "கோவம் ஒண்ணுமில்லேம்மா. நீ கிளம்பறச்சே

அம்மா மனசு தாளாம அழுதுடப் போறாளென்னு அப்பாதான் நிறுத்தினார். அப்படியும் அம்மா அழுது அன்னிக்கு மாதிரி மாரடைப்பு வந்து திணறிப் போயிட்டா. அப்பா டாக்டருக்கு போன் பண்ணிண்டிருக்கார்.

ரம்யா, சீக்கிரம் இறங்கி வா. அம்மாவுக்கு உடம்பு கொஞ்சம் சரி ஆனதும் போகலாம். நானே கொண்டு விடறேன்" என்றான்.

ரம்யாவும் விஜியும் கன்னத்தில் வழிந்த கண்ணீர் அப்படியே உறைந்து நிற்க, 'அம்மாவுக்கு மறுபடி மாரடைப்பா?' என்று பதறினார்கள். கேட்டுக் கொண்டே இருந்த மங்களம் கம்பீரமாக ரம்யாவின் அருகில் வந்து அவள் கையைப் பிடித்து மறுபடியும் உட்கார வைத்தாள்.

"எப்ப கன்யாதானம் பண்ணிக் கொடுத்தாச்சோ, அப்பவே ரம்யா எங்க பெண்ணாயிட்டா. கிளம்பின பயணம் நிக்கக் கூடாது. நாங்க நல்ல வேளையில கிளம்பறோம். நீங்க போய் அம்மாவைக் கவனியுங்க. ஒண்ணும் இருக்காது. அலைச்சல் ஆகல்லை. போன தரம் மாதிரி காஸ் டிரபிளாக் கூட இருக்கும்" என்று அழுத்தமாகச் சொன்னாள் மங்களம்.

ரம்யாவைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி இருவரும் உள்ளே போகத் திரும்பினார்கள்.

"போலாமா?" என்று திரும்பினார் டிரைவர்.

"கொஞ்சம் இருப்பா ஒரு நிமிஷம்!" என்று அவரிடம் சொன்ன மங்களம், "விஜி! கொஞ்சம் நில்லும்மா!" என்று கூப்பிட்டாள்.

'எங்கே மனம் மாறி ரம்யாவை விட்டுப் போகிறாளோ அல்லது உள்ளே வந்து ஒரு நிமிஷம் பார்த்துப் போக அனுமதிப்பாளோ' என்ற ஆவலுடன் விஜி கீழே பஸ்ஸருகில் நிற்க, ரம்யாவும் ஏக்கத்துடன் மாமியார் முகத்தைப் பார்த்தாள்.

சுட்டுவிரலை அசைத்து தான் இருக்கும் ஜன்னலருகே விஜியை வரச் சொன்னாள் மங்களம்.

"அவசியம் அடுத்த மாசம் வா! எப்ப வந்தாலும் பச்சை செட்டோடு!" என்று மெதுவாக ஆனால் கடுமையாகச் சொன்னாள்.

விஜிக்குப் புரிந்து விட்டது. மங்களம் கெட்டிக்காரி. பச்சை செட்டுக்காக கல்யாணத்தை நிறுத்தினால் பேச்சு வரும். அழுத்தமாக இருந்து காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறாள். மங்களத்தம்மாளின் அலங்காரமான உருவம் மறைந்து விகாரமாக இரண்டு கோரைப் பற்களுடன் அரக்கி போல் காட்சியளித்தாள் ஒரு நிமிஷம்.

சீ, ராட்சசி! பணம்தானா பெரிசு? ஒரு செட் நகைக்காக குழந்தைகள் சந்தோஷத்தையே ஒத்தி வைத்து விட்டாளே! பாவம் ரம்யா. இதைக் கேட்டால் அவள் மனம் என்ன பாடுபடும்? துடித்துப் போவாளே? எதிர் சீட்டில்தானே உட்கார்ந்திருந்தாள்?

நல்லவேளையாக ரம்யா இவர்கள் பேச்சை கவனிக்கவில்லை. மறுபக்கம் ஜன்னலருகே தன்னைத் தேடி வந்திருந்த ரவியின் கைகளைப் பிடித்தபடி மௌனமாகக் கண்ணீர் விட, அவனும் அழுது கொண்டிருந்தான். 'ம்கும்' என்ற மங்களத்தின் கனைப்புக் குரல் கேட்டு இருவரும் திடுக்கிட்டு விலகினார்கள்.

"நல்லபடியா கல்யாணம் ஆகி கிளம்பறச்சே எதுக்கு அழுகை? அந்த நாள்லே எங்களை மாதிரி பத்து வயசிலும் எட்டு வயசிலும் பெத்தவங்களை விட்டுட்டு புகுந்த வீட்டுக்குப் போற மாதிரியா, இப்ப? ஆச்சு. முப்பது வயசாகப் போறது.

கல்யாணத்துக்கு வழியில்லாம இத்தனை நாள் இருந்தாச்சு. ஆகுமானு ஆகிப் போகும் போது என்ன பிரலாபம்? உங்க மன்னி ஒரு நீலி. அவதான் ஏதோ பெத்து வளத்து சீராட்டின மாதிரின்னா அழறா? அவளைப் பார்த்து உங்கண்ணா அழ, நீ அழ... சீ எனக்கு இதெல்லாம் கொஞ்சம் கூடப் பிடிக்காது. கண்ணைத் துடை!" என்று அடிக்குரலில் ரகசியமாக அதட்டினான்.

ரவியும் விஜியும் திகைத்துப் போய் நிற்க, "போலாம்பா, டிரைவர்! வண்டியை சீக்கிரம் கிளப்பு. நல்ல வேளை தப்பிவிடும்" என்று மங்களம் கம்பீரமாக உத்தரவிடவும் வண்டி வேகமாகக் கிளம்பியது. பின்புறக் கண்ணாடி வழியே கைகளை ஆட்டியபடி சென்ற ரம்யா, கண் பார்வையில் இருந்து மறைந்ததும், வண்டி அங்கிருந்து போய் வெகுநேரமாகி விட்டது என்றுணர்ந்த விஜி உள்ளே ஓடினாள்.

(தொடரும்)

பணத்தின் மூலப் பொருள்
காகிதம்தானே?
கற்பூரம் அல்லவே?
பின் ஏன்
கரைந்து கரைந்து போகிறது?
— வி. தேனருவி


உங்கள் குழந்தைக்கு நீங்கள் கொடுக்கும் ஆரோக்கிய பானத்தினால், அவன் சுறுசுறுப்பாக இருக்கிறான். ஆனால், அவனுடைய வருங்காலத்திற்கு
இது வலுவான அடித்தளமும் அமைக்கிறதா ?
ஒரு குழந்தைக்கு கிடைக்கும், உடலுக்கு வலுவூட்டும் சத்துணவுகளினால் உறுதியான அடித்தளம் உருவாகிறது என்று, உங்களது டாக்டர் உங்களிடம் தெரிவிப்பார். உடலுக்கு வலுவூட்டும் இந்த சத்துணவுகள் புரோட்டீன்கள்தான். ஏனென்றால், புரோட்டீன்கள், தசை திசுக்களுக்கும், உடலின் முக்கிய திரவப் பொருட்களுக்கும் வலுவூட்டி, அவற்றைப் பராமரிக்கவும் உதவுகின்றன. அதுமட்டுமல்ல, ஜீரணிக்கவும், நோய் எதிர்ப்புத் தன்மையை உருவாக்குவதற்கும் இவை உதவுகின்றன. எனவே, வளரும் குழந்தைகளுக்கு, புரோட்டீன் சேர்ந்த உணவை டாக்டர்கள் எப்போதும் பரிந்துரைப்பது ஆச்சர்யமில்லை.
போனஸ் கூடுதல் புரோட்டீன் அளிக்கிறது
PROTEIN
இயற்கையின் செழுமையான வளங்களில் ஒன்றான சோயாவிலிருந்து எடுக்கப்பட்ட போனஸ், உங்கள் குழந்தைக்கு கூடுதல் புரோட்டீன் அளிக்கிறது. உண்மையில், போனஸில் உள்ள 26% புரோட்டீன் அளவு, மற்ற ஆரோக்கிய பானங்களைவிட அதிகமாகும். எனவே, இரண்டு கிளாஸ் போனஸ், உங்கள் குழந்தைக்கு அதனுடைய அன்றாட புரோட்டீன் தேவையில்* அநேகமாக பாதி அளவை வழங்குகிறது.
போனஸ் அளிக்கிறது இன்னும் அதிகம்
போனஸில் கூடுதல் புரோட்டீனோடுகூட, போனஸில், கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச் சத்துக்கள், ஃபைபர்கள், விட்டமின்கள், கால்ஸியம் மற்றும் வேறு மினரல்கள் இருக்கின்றன. வலுவான அடித்தளம் அமைப்பதோடல்லாமல், ஒரு வளரும் குழந்தைக்கு தேவைப்படும் எல்லா முக்கிய சத்துணவுகளையும் அளிக்கும் ஒரு ஆரோக்கிய பானம் உங்களுக்கு கிடைக்கிறது.
வலுவான அடித்தளம், சூப்பர் சுவை
இப்போது நீங்கள், பிளெயின் போனஸ் அல்லது சாக்லேட் போனஸிலிருந்து தெரிவு செய்யலாம். எதுவானாலும், அதன் சுவையை அவன் மிகவும் விரும்புவான். எனவே, இன்றே போனஸை வாங்கவும். உங்கள் குழந்தைக்கு, ஒரு வலுவான அடித்தளம் அளிக்கவும்.
WITH EXTRA PROTEIN
NEW
Bonus
NEW
Nestlé
Bonus
Chocolate
BUILD THEM UP WITH BONUS
* 46% of Protein requirement for age group 4-6 years. (ICMR Report 1994)

திருமண மலர்

மணமகள் தேவை

■ Alliance invited from Tanjore Vadama, employed, non-Srivastha girls for boy Swathi, 33 yrs., employed as Senior Manager (Systems) in reputed firm, Madras. Salary Rs. 6500/-. Box No. 13138

● எஸ்.ஸி, ஆதிதிராவிடர், எல்.ஐ.சி. அதிகாரி 35/168, சம்பளம் ரூ. 8000/- இவருக்கு பெண் தேவை. ஜாதி பேதமில்லை. பெட்டி எண் : 13149

■ Proposals invited for well settled Iyer groom Vadamal, 48, Ayilyam, looking after major Madras based companies and other All India Organisations as Trade Union Leader, whose marriage postponed due to delay in sister's marriage from employed/unemployed for a very simple marriage. Subsects no bar. Box No. 13150

■ Vadagalai Iyengar 28, Poosam, Kousikam, 171 cms, Central Govt. employed Rs. 5000/- good future carrier wise, needs good looking, soft spoken, accommodative employed girsl preferably in Govt/Bank/Public Secots. Subsect no bar. Box No. 13151

● ஐயர், பிரஹசரணம், கௌண்டின்யம், பரணி, 34, பி.எஸ்ஸி, 5.6" சொந்த தொழில் வீடு, சொத்து வசதிகள் கொண்ட ரூ. 4500/- மாத வருமானம் உள்ள ஆரோக்கியமான ஆணுக்கு குடும்பப்பாங்கான, லட்சணமான, அனுசரணையான ஆரோக்கியமான குறைந்தது +2 வரை படித்த (ஆசிரியை தேர்ச்சி பெற்ற) பெண் தேவை. பெட்டி எண் : 13152

● பண்டாரம், 27, பி.எஸ்ஸி, 6000/- மணமகனுக்கு பட்டதாரியான பணிபுரியும் பெண் தேவை. தேசிகர், ஓதுவார், சைவப் பிள்ளை, வீரசைவர் சம்மதம். பின்னணிக் குறிப்புகள் அனுப்பவும். பெட்டி எண் : 13153

■ Vadagalai Iyengar 28, Bharani, Bharadwaj, 174 cms., smart looking, own business, Rs. 7000/- p.m. bright future, good family back ground, needs brides good looking accommodative employed/unemployed. Subsect no bar. Box No. 13154

■ Vadagalai Iyengar Athreya Chitrai (2) B.Sc., B.L., 33/170/5,000/- Central Government Madras seeks Madras based graduate working girls above 160 cms in Bank/Lic/Central. Phone 2367434, Madras. Box No. 13155

■ Alliance from well educated, goodl looking girl, respectful family traditions for fair, handsome, Tirunelveli Saiva Pillai boy 33/170cms/M.Com., M.Phil./M.Ed./Rs. 6000/- Central Government School P.G. Teacher (Commerce). Reply with bio-data and horoscope to Box No. 13156

● அய்யர், கௌசிக கோத்ரம் 32/5000 தனியார் நிறுவனம். விடோயர் 5 வயதில் மகள் உண்டு. பரந்த மனப்பான்மையுள்ள 30 வயதிற்குட்பட்ட, வேலைக்கு செல்லக்கூடிய தகுதியுடைய பெண் மிகவும் எளிமையான குடும்பத்தைச் சார்ந்தவராய் இருத்தல் நலம். பெட்டி எண் : 13157

■ Saiva Vellala Pillai, age 40, bachelor, salary Rs. 12,000/- per month, seeks good looking, employed girl from the same caste/Kargarhar Pillai. Box No. 13158

● வடமாள், ஸ்ரீவத்ஸ கோத்ரம், ஆயில்யம், 29, 5.2" பி.காம், தனியார் கம்பெனி ரூ. 1500/- சம்பளம் குடும்பப்பாங்கான +2 வரை படித்த உத்தியோகம் பார்க்கும் அல்லது பார்க்காத பெண் தேவை. வரதட்சணை ஏற்பதற்கில்லை. தொடர்பு கொள்க. பெட்டி எண் : 13159

■ Widow Iyer educated unencumbered preferably employed between 28 & 34 for Iyer Revathi Bharadwaja, 38/5.4"/3000 Computer Private Company bachelor. Mother devotee. Box No. 13160

● தமிழ் ஐயர், வடமாள், ஹரித கோத்ரம், மிருகசீரிஷம், 29/5.8"/3500/- மாநில அரசு, சென்னையில் வேலை, பி.ஏ., டி.எம்.இ., வரனுக்கு அரசு/வங்கி/எல்.ஐ.சி. வேலையில் உள்ள மணமகள் தேவை. பெட்டி எண் : 13161

■ Vadamal, Koundinya, Magam, B,Com, 37 years Bombay employed own flat, 7500/-. Boy seeks fair, graduate girl with or without employment from respectable family. Reply with horoscope and family details to Box No. 13162

● பலிஜா நாயுடு, வயது 29, 5.6" ஒரே பையன் பி.காம்., சொந்த வீடு, தனியார் கம்பெனியில் வேலை பார்க்கும், மாத வருமானம் ரூ. 4500/- அதே இனத்தைச் சேர்ந்த வேலையில் இல்லாத கௌரவமான குடும்பப்பாங்கான அழகான +2 அல்லது பட்டதாரி பெண் தேவை. ஜாதகம், மற்ற விவரங்களுடன் எழுதவும். நட்சத்திரம் கேட்டை. பெட்டி எண் : 13163

● தாய் பிராமின், தந்தை செட்டியார், பிராமின் முறை வாழ்க்கை சதயம், +2, 28/5.9"/3500/- தனியார் நிறுவனம் ஓட்டுனர் பணியில் உள்ள தீய பழக்கம் இல்லாத மணமகனுக்கு பிராமின் இனத்தில் மணமகள் தேவை. உடன் திருமணம். விவரங்களுக்கு பெட்டி எண் : 13164

● மகம், கௌசிகம், 29 வயது, 175 செ.மீ. உயரம், சிவப்பு நிறம். இந்திய கப்பற்படையில் பணி. ரூ. 3500/- உடன் பிற சலுகைகள். தனியாக எல்.எல்.பி 3ஆம் ஆண்டு. சென்னையில் சொந்த வீடு. பிராமினில் எப்பிரிவும் சம்மதம். டிகிரியுடன் வேலை பார்க்கும் பெண் தேவை. பெட்டி எண் : 13165

■ Vadamal, Athreya, Anusham, B.Sc., 36/172, Private Firm Madras Rs. 2750/- own house. Tanjorean, seeks home loving bride. Horoscope and family details to Box No. 13166

● பி.எஸ்ஸி படிப்பு, சைவம், சாட்டு கருணீகர், 31 வயது,

அரசுப் பணி நிரந்தரம். மாத வருமானம் ரூ. 1500/- சொந்த வீடு. நல்ல நடுத்தர குடும்பம். மாநிறம் உள்ள வரனுக்கு இதே இனத்தில் படித்த ஓரளவு வசதியுள்ள குடும்பப்பாங்கான பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 13167

● சௌராஷ்டிரா குலம் வயது 46, அரசு உத்தியோகம், மாதம் 10,000/- வருமானமுள்ள மனைவி இழந்த வாலிபருக்கு 43 வயதுக்குள் மணமகள் தேவை. வேலையிலுள்ள (அ) இல்லாத உயரம் 5 அடிக்குள் இருக்க வேண்டும். பெட்டி எண் : 13168

● தஞ்சாவூர் கள்ளர், 31, 5.4" எம்.காம்., (எம்.பி.ஏ.) சிவப்பு நிறம். ரூ. 7200. டெல்லியில் நிரந்தரப் பணியிலுள்ள மணமகனுக்கு. தஞ்சாவூர் கள்ளர் இன 25 வயதுக்குள், பட்டப்படிப்புடன் வேலையில் உள்ள/செல்லக்கூடிய (சுருக்கெழுத்து தெரிந்திருத்தல் நலம்) அழகான நிறமுடைய மணமகள் தேவை. பெட்டி எண் : 13169

■ Alliance invited from tall fair girls for Vadama boy age 30 Moudgalya Gothram, Punartham second padam, M.Com., 6.2" tall very fair Offier Oriental Insurance Co., settled in Bangalore with local gigantism in lower limbs. Reply with horoscope to Box No. 13170

● தென்கலை ஐயங்கார், நைத்ருப காஸ்யப கோத்ரம், கார்த்திகை நட்சத்திரம், பாட்டாளில் வேலை. 5000/-, 30. 162 செ.மீ., +2 உள்ள வரனுக்கு மணமகள் தேவை. Kalai no bar. பெட்டி எண் : 13171

■ Alliance invited for Thengalai Iyengar boy, Kousikam, Bharani, B.Com., CA Inter passed, doing own Businness, 32/5.5" earning Rs. 8000/- p.m. seeks preferably employed Thengalai girls. Box No. 13172

Iyengar, Koundinya, Poosam, DOB 3/6/1965/173cms, Inspector of Central Excise, Madras, M.A., B.L., seeks alliance from girls working in Govt. or reputed organisations. Please reply with bio-data to Box No. 13173

● அகமுடைய முதலியார், மேஷ ராசி, ஜாதகம் இல்லை, வயது 32, உயரம் 171 செ.மீ. படிப்பு 10 வரை, உடல் நலம் ஆரோக்யம்; நிறம் : சிவப்பு, (பாஸ்போர்ட் எண். V-620535) எந்த ஆதரவும் எந்த வசதியும் இல்லாத இளகிய மனம் படைத்த இவருக்கு. அன்பும், பாசமும் கொண்ட வேலை வாங்கிக் (விசா எடுத்துக்) கொடுத்து வீட்டோடு மாப்பிள்ளையாக அழைத்துக் கொள்ளும் சிங்கப்பூர், மலேஷியா, இந்தியா, மற்ற நாடுகளைச் சார்ந்த தமிழ் தெரிந்த மணமகள் தேவை. எம்மதமும் சம்மதம். விதவை, விவாகரத்தானவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண் : 13174

■ Alliance invited from non-Srivastava, Vadagalai Iyengar Govt. well employed girl transferable Trichy. For Ashwini boy Chemplast group Trichy B.Sc., M.A. 30, 5000, 180. Thengalai acceptable. Send horoscope to Box No. 13175

■ Vadagalai, Srivatsa, Avittam 29/175, B.Sc., PGDCA, ICWA (Finalist) State Govt/3700/- + Madras seeks employed bride. Box No. 13176

■ Palghat Iyer boy Brahacharanam, Nydrupa Kasyapa Gothram, 34, 6', B.Com, Sales Executive in a repted company, well settled at Hyderabad, seeks alliance from homely, good looking girls. Apply with horoscope to Box No. 13177

● பலிஜா நாயுடு, டி.எம்.இ., வயது 43, 5.3", அரசுப் பணியில் ரூ. 6000/- குழந்தை வாரிசு இல்லாத வாலிபருக்கு (இளமை தோற்றம்) இரண்டாம் தாரமாக மணமகள் தேவை. அன்பும், பண்பும் நிறைந்த பரந்த மனப்பான்மையுள்ள வேலைக்கு செல்லும்/செல்லாத பெண்கள் விண்ணப்பிக்கலாம். குழந்தை இல்லாத விதவைகள்/விவாகரத்து பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். ஜாதி பேதமில்லை. பெட்டி எண் : 13178

● தென்கலை ஐயங்கார், சாண்டில்ய கோத்ரம், மிருகசீரிஷம் 1ஆம் பாதம், +2. 32 வயது. சென்னையில் பிரபல பத்திரிகை அலுவலகம் ஒன்றில் நிரந்தர பணி ரூ. 3500/- வருமானம் பெறும் பையனுக்கு நல்ல நிரந்தர வேலையிலுள்ள மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 13179

■ Good looking domestically trained preferably graduate girl for Kerala Iyer boy fair medium built 31, around 140 cm/3200, B.Com, Vadama, Kausika, Thrikketa, employed Railways Baroda and owning house. Reply with details to Box No. 13180

● பாரத்வாஜ கோத்ரம், வடமாள், 34 வயது, உயரம் 5.6", ரூ. 2500/-, தனியார் துறையில் அக்கவுண்ட்ஸ் அஸிஸ்டண்ட்டாக பணிபுரியும் வரனுக்கு வேலைக்குச் செல்லும் மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 13181

■ Bride wanted for 32 years old boy. Star Thirovonam, 4th padam. Srivatsa Gothram, Tenkalai Iyengar boy freelance Computer Personnel. Earning around Rs. 5000/- p.m. in North India. Box No. 13182

■ Wanted bride for Tirunelveli Iyer boy Vadamal, Srivatsa Gothram, Uthirattathi, 35, 5.11", B.Com earning Rs. 7000/- in a reputed concern Bombay. Left eye injured in an accident. Normal activities. No demands. Employed girls preferred. Reply with horoscope and detils to Box No. 13183

■ Alliance invited for Vadamal, Vadoola, Anusham 4th, 28/160/4500/B.Com., M.L.S., fair, well employed in Neyveli Lignite Corporation seeks, good looking graduate girls. Reply with horoscope and family particulars to Box No. 13184


■ 39 years old Law graduate Bhardwajam, Visakam, Bank employed owning house seeks suitable girls. Apply Box No. 13185

■ Hindu Adi-Dravada, B.Tech., M.B.A., 172/29, well mannered handsome boy Systems Analyst in U.S.A., H1-Visa seeks well qualified fair, good looking girl from decent family. Send horoscope to Box No. 13186

● முக்குலத்தோர் தேவர் அகம்படியர் வயது 30, மாநிறம், படிப்பு +2, சொந்த டெம்போ டிரைவர், மாத வருமானம் 7000/- பூச நட்சத்திரம். 25 வயதுக்குட்பட்ட சுமாரான படிப்பும் நல்ல சிவந்த நிறமுள்ள மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 13187

● பிராமணர், அரசு பணியில் ஓய்வு பெற்று மாதம் ரூ. 2000/-த்துக்கு மேல் பென்ஷன் பெறுபவர். 60 வயதை கடந்தவர். மனைவியை இழந்தவர். 50 வயதுக்கு மேற்பட்ட, பிரச்னை இல்லாத, விதவை, விவாகரத்து பெற்றவர், அரசு பணியில் ஓய்வு பெறும் நிலையில் உள்ளவர்களுக்கு துணையாக நான் இருக்க, விருப்பம் உள்ளவர் தொடர்பு கொள்ளலாம். பெட்டி எண் : 13188




Stayfree
SilkyDry

திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்யக் கட்டணம் ரூ. 100/- தொகையை, 'மங்கையர் மலர்' பெயருக்குச் சென்னையில் மாற்றலாகக்கூடிய டிமாண்ட் டிராப்டாக மட்டுமே அனுப்ப வேண்டும். மணியார்டரோ, போஸ்டல் ஆர்டரோ ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஒரு விளம்பரத்தில் ஒரு வரனுக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தர வேண்டும். திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்பவர்களின் விலாசங்களைக் கொடுப்பதற்கில்லை. விளம்பரங் களுக்குப் பதில் அனுப்புபவர்கள், 'விளம்பரதாரர், பெட்டி எண் : C/o. மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097' என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். தபால் பெட்டி எண்ணிற்கு வரும் கடிதங்களை அதற்குரிய விலாசத்திற்கு 15 நாட்களுக்கு ஒருமுறை அனுப்பி வைக்கப்படும். தபால் செலவிற்குத் தனிக் கட்டணம் எதுவும் கிடையாது. இந்த இதழில் பிரசுரமாகும் பெட்டி எண்களுக்குப் பதில்கள் அக்டோபர்'96 31ஆம் தேதிக்குள் எங்களுக்கு வந்து சேர வேண்டும். திருமண தகவல் நிலையங்கள் அனுப்பி வைக்கும் தபால்களை எங்கள் அலுவலகம் ஏற்றுக் கொள்வதில்லை. தனிப்பட்ட எந்தக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

● வெள்ளாள பிள்ளை வயது 34, கிருத்திகை நட்சத்திரம், எஸ்.எஸ்.எல்.சி படித்த ரயில்வேயில் வேலை பார்க்கும் ரூ. 3500/- வருமானமுள்ள மணமகனுக்கு நல்ல குடும்பப் பாங்கான பெண் தேவை. உட்பிரிவும் சம்மதம். பெட்டி எண் : 13189

■ Alliance invited from cultured educated girls for young fair, tall boy, Doctorate in Agricultural Science, 32 yrs. well employed. Vadamal, Srivatsa Gothram, Uthirattathi, Mars in 7th, correspondence with horoscope and details to Box No. 13190

● பலிஜா நாயுடு பி.காம்., 35, சிறுவயதில் Spastic காரணமாக வீட்டிற்கு வெளியே செல்லும் போது மட்டும் சற்றே உதவி தேவை. வாகனம் உண்டு. டாக்டரின் தவறினால் ஒரு கண் இல்லை. ஊனம் வெளியே தெரியாது. நல்ல சிவப்பு, ஆரோக்கியம். கனிவு உள்ளமுள்ள பெற்றோர் பம்பாயில் உயர் பதவியிலிருந்தவர். சென்னை அடையாரில் பெரிய சொந்த வீடு. பம்பாயில் ஃப்ளாட்.. தமக்கையும், சகோதரர்களும் வசதியான பணியில் உள்ளனர். தம்பியை மிகவும் நேசிப்பவர்கள். மேல் நடுத்தர வகுப்பு வசதியுள்ள குடும்பம். நல்ல குடும்பத்து, படித்த சேவை மனப்பான்மை கொண்ட, ஆடம்பரம் விரும்பாத, நாகரீகமான 'நல்ல பழக்கங்களும், கூட்டுக் குடும்பச் சூழலில் அனுசரித்து, தமிழ் கலாச்சாரத்துடன் வாழும் அடக்கமும் கொண்ட வரன் தேவை. எங்கள் Spastic மகனுக்கும் அவனுக்கு வாய்க்கக் கூடிய வரனுக்கும் அடிப்படை தேவைக்கான வருவாய் உறுதியுள்ளது. அவனே நடத்தக்கூடிய சிறு தொழிலோ ஏஜென்ஸியோ ஏற்பாடு செய்ய உள்ளோம். அதில் அவனுடைய மனைவியும் ஈடுபடும் ஆற்றல் இருப்பின் நல்லது. ஜாதி, மதம், விதவை என்ற வேறுபாடில்லை. சற்றே ஊனமுற்றவர்களும், வெளிநாட்டவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண் : 13191

■ Alliance invited for Ashtasahasram, Barathawaja, Poorattathi, PUC, 36, 165 cm., employed as Manager Private Firm. Rs. 2500/- p.m. Sub sects no bar. Reply with horoscope to Box No. 13192

■ Tamil Brahmin divorcee in forties earning Rs. 1.5 lacs p.a. propertied seeks a loving and caring bride with or without encumbrance from large affectionate families. No dowry or caste bars. Box No. 13193

■ Alliance for fortunate Meena Lagna Bharadwaja Vadama, Hastham 7th Mars, 31/170, B.Com., I.R.P.M. fair multiple propertied influential industrialist Rs. 10,000/- p.m. from fair, tall, educated employable girls below 26 of respectable family invited. Box No. 13194

■ Iyer, Brahacharanam, Athreya, Bharani, 33, B.Sc., Officer Private Firm, Coimbatore Rs. 4000/- p.m. requires graduate employed girl. Box No. 13195

■ Tamil Iyer, Kasyaba, Brahacharanam, Anusham, DEE/31/175/6000/- own Business in Madras (Photography). Seeks alliance from good looking, graduate, Brahacharanam girls. Reply with horoscope and full details to Box No. 13196

■ Wanted fair, good looking, Gr./PG., Iyengar girl, below 30 , for Vadagalai boy Shadamarshana, Rohini, M.A., PhD., Dip. in Computer 36/5.7",8000/- Company Executive boy. Reply with horoscope to Box No. 13197

■ Bharadwajam, Pooram, 28/160/8000 Electronics Engineer renowned institution seeks fair, home loving professionally qualified and employed graduate girl from respectable families of Vadhiama, Vadama sects. Box No. 13198

■ Wanted fair looking graduate girl. non-Sangirithi Gothram, for B.Com graduate boy working as Stenographer in Muscat, drawing salary of Rs. 15,000/- p.m. complexion fair, 5.4", date of birth 17.12.67. Subsect no bar. Box No. 13199

● சைவ வெள்ளாளர் வயது 26, உயரம் 172 செ.மீ. பி.எல்., அட்வகேட், சென்னை ஹைகோர்ட் வசதியான மணமகனுக்கு சைவ அழகான எம்.பி.பி.எஸ். பட்டதாரி மணப் பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண் : 13200

